**Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.**

©

**Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.**

*வெளியீடு :* 23-1-2012 Issued : 23-1-2012

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**செவ்வாய்க்கிழமை, ஆகஸ்ட் 23, 2011—தொகுதி 9—எண் 2**

**Tuesday, the 23rd August 2011—Volume 9—No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009**

விலை ரூ. **3.00]** **[Price Rs. 3.00**

## 23–8–2011

## உள்ளடக்கம்


*பக்கங்கள்*

**1. வினாக்கள்–விடைகள்—**

உடுக்குறியிட்ட வினாக்கள் 355-394

**2. சிறப்புக் கவன ஈர்ப்பு—**

பவானி தொகுதி, வரதநல்லூர் ஊராட்சி, தாளகுளம் ஏரியில் ஏராளமான மீன்கள் திடீரென்று இறந்ததால் ஏற்பட்டுள்ள நிலை 395-398

*திரு. பி.ஜி. நாராயணன் 395-396 398

*மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால் 396-398

**3. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)—**

தமிழ்நாடு தமிழ்ப் புத்தாண்டு (விளம்புகை) நீக்கச் சட்டமுன்வடிவு, 2011 399-400

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன் 399, 400

திரு. சு. குணசேகரன் 399

திரு. அ. சவுந்தரராசன் 394, 400

**4. மானியக் கோரிக்கைகள், 2011–2012, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 41– வருவாய்த் துறை

(ஆ) கோரிக்கை எண் 51–இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

(இ) கோரிக்கை எண் 9–பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை 400-535

*மாண்புமிகு திரு. பி. தங்கமணி 401, 409, 419 422, 454, 470, 473, 474 483, 485 502-533

*பக்கங்கள்*

**மானியக் கோரிக்கைகள், 2011–2012, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

*(அ) கோரிக்கை எண் 41– வருவாய்த் துறை*

*(ஆ) கோரிக்கை எண் 51–இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு*

*(இ) கோரிக்கை எண் 9–பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை*

| | |
|---|---|
| *மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்* | 412,419,439, 447,448,450 488-501 |
| *திரு. மு. அருண் சுப்பிரமணியன்* | |
| **மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி* | 420-427 |
| **மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்* | 425 |
| **திரு. ந. சுப்பிரமணியன்* | 426 |
| **முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா* | 428-437 |
| *திருமதி மனோரஞ்சிதம்* | 437-442 |
| **திரு. பி.வி. கதிரவன்* | 442-446 |
| **திரு. ப. பார்த்தசாரதி* | 414-415, 446-453 |
| **திரு. துரை மணிவேல்* | 407-408, 453-459 |
| *திரு. ஏ. லாசர்* | 459-467 |
| *திரு. சு. குணசேகரன்* | 468-481 |
| *மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா* | 406, 416, 473 |
| *திரு. எஸ்.பி. முத்துக்குமரன்* | 475-476 |
| | 481-488 |
| | 404, 412 ,418 |





*பக்கங்கள்*

**5. அறிவிப்புகள்—**

| | |
|---|---|
| *(அ) சட்டமன்றப் பத்திரிகையாளர்களுக்குப் பேனா, சுருக்கெழுத்துக் குறிப்பேடுகள் வழங்குதல்* | 468 |
| *(ஆ) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்று நூறு நாட்கள் நிறைவடைந்ததை 24-8-2011 அன்று பேரவையில் கொண்டாடுதல்* | 500 |

**6. அரசினர் தீர்மானங்கள்—**

| | |
|---|---|
| *(அ) பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132ஆகியவற்றைத் தளர்த்துதல்* | 535-536 |
| *(ஆ) விதி 32–ஐத் தளர்த்துதல்* | 543 |

**7. அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)—**

| | |
|---|---|
| *தமிழ்நாடு தமிழ்ப் புத்தாண்டு (விளம்புகை) நீக்கச் சட்டமுன்வடிவு, 2011* | 536-542 |
| *திரு. எஸ்.பி. சண்முகநாதன்* | 536-542 |
| *முனைவர் செ.கு. தமிழரசன்* | 536-538 |
| **திரு. அ. சவுந்தரராசன்* | 538 |
| *மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா* | 538-541 543-544 |

**8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்**

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2042, ஆவணி 6

## 2011 ஆகஸ்ட் 23, செவ்வாய்க்கிழமை

*சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. டி. ஜெயக்குமார்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"சூழாமல் தானே முடிவுஎய்தும் தம்குடியைத்*
*தாழாது உஞற்று பவர்க்கு."*

*தம்மைச் சார்ந்த குடிகளை உயர்த்தும் செயல்களில் காலம் தாழ்த்தாமல் ஈடுபட்டு முயலுகிறவர்களுக்குத் தாமாகவே வெற்றிகள் வந்து குவிந்துவிடும்.*

## 1. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 48, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாப்பா சுந்தரம், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**48—**

### பேருந்து நிலையம்

***1335—திரு. அ. பாப்பா சுந்தரம்:**

*மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*குளித்தலை தொகுதி, குளித்தலை நகராட்சியில் பேருந்து நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

[2011 ஆகஸ்ட் 23

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*குளித்தலை நகராட்சியில் அருள்மிகு பேராளகுந்தாளம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமான புல எண்கள் 107/1ஏ, 107/1பி மற்றும் 89/9—இல் உள்ள 1.22 ஏக்கர் நிலத்தை இந்து சமய அறநிலையத் துறையிடமிருந்து 30 ஆண்டுகளுக்கு குத்தகை அடிப்படையில் பெற்று பேருந்து நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாப்பா சுந்தரம் அவர்கள்.*

**திரு. அ. பாப்பா சுந்தரம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை ஆளாக்கிய தெய்வமாகிய தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், குளித்தலையிலே பேருந்து நிலையம் அமைப்பதற்கு ஆவன செய்யப்படும் என்று சொன்ன செய்திக்கு மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பேருந்து நிலையம் அமைய இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்ன இடத்தில் 1.22 ஏக்கர் நிலம் உள்ளது. குளித்தலை வளர்ந்து வரும் நகரமாக இருப்பதாலும், அங்கே நீதிமன்றங்கள், உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் 20 தனியார் பள்ளிகள் இருப்பதாலும், அந்த இடம் கோவை—திருச்சி நான்கு வழிச் சாலையில் இருப்பதாலும், 30,000 பேருக்கு மேல் மக்கள் அங்கு வாழ்வதாலும், அதிகமான எண்ணிக்கையில் பேருந்துகள் வந்து செல்வதாலும் அந்த இடம் போதுமானதாக இல்லை என்பதால், மாண்புமிகு அம்மா அவர்களின் சென்ற ஆட்சியில் இதுபற்றி ஆராய்ந்து, தேர்வு செய்த அதே ஊரிலே கடம்புரீஸ்வரர் ஆலயத்திற்குச் சொந்தமான நிலத்தில் பேருந்து நிலையம் கட்டுவதற்குத் தேர்ந்தெடுத்தார்கள். அதற்குச் சில பேர் தடையாணை பெற்று, நிறுத்திவிட்டார்கள். ஆகவே, இந்த இடத்திலிருந்து மாற்றி, வேறு இடத்தில் கட்டுவதற்கு ஆய்வு செய்யப்படுமா என்பதை உங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*



2011 ஆகஸ்ட் 23]

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலை இரண்டாம் நிலை நகராட்சி; 24 வார்டுகளை உள்ளடக்கியுள்ளது. 27,900 மக்கள்தொகை கொண்ட இந்த நகராட்சியைச் சுற்றிலும் உள்ள நிலங்கள் கோயிலுக்குச் சொந்தமான நிலங்களாக இருக்கின்றன. இந்த நிலத்தைத் தவிர்த்து சுங்கவாயல் என்ற இடத்தில் 2.89 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்த வேண்டுமென்று முயற்சி செய்தபோது, இந்து சமய அறநிலையத் துறை, 2002—ல் இந்த நிலத்தினுடைய விலை மதிப்பு 89 இலட்சம் ரூபாய் என்று சொன்ன காரணத்தினால், அதற்குரிய நிதி ஆதாரம் அந்த நகராட்சியில் இல்லாத காரணத்தினால், அப்போது அரசிடம் மானியமாகக் கேட்டது. அரசு மானியம் வழங்காத காரணத்தினால் அதைக் கைவிட்டுவிட்டு, 1964—இல் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பேருந்து நிலையத்தில் தொடர்ந்து நல்ல வசதிகளை ஏற்படுத்தி, இதே பேருந்து நிலையத்தில் பேருந்துகள் வந்து செல்வதற்குரிய சூழ்நிலையை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாப்பா சுந்தரம் அவர்கள்.*

**திரு. அ. பாப்பா சுந்தரம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. இருந்தாலும் அந்த இடம் போதுமானதா என்பதை மறுபரிசீலனை செய்து, அதே ஊரில் வேறு இடத்தில் கடம்புரீஸ்வரர் ஆலய நிலம் இருப்பதால், அதையும் ஆய்வு செய்து அந்த நிலத்தில் பேருந்து நிலையம் கட்டித் தர வேண்டுமென்று உங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அன்போடு கேட்கிறார்கள். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மூத்த உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை இந்த அரசு நிச்சயமாகப் பரிசீலித்து*

[2011 ஆகஸ்ட் 23

ஏற்றுக்கொள்ளும். அதற்கு அவரும் உறுதுணையாக இருந்து எங்கு நிலம் இருக்கிறது என்பதை உறுதிப்படுத்தி, அதை அரசிடம் கூறினால் உடனடியாக அந்த நிலத்தைக் கையகப்படுத்தி, அவருடைய சிந்தனைக்கேற்றவாறு பேருந்து நிலையம் அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாப்பா சுந்தரம், நிலம் எங்கே இருக்கிறது?*

**திரு. அ. பாப்பா சுந்தரம்:** அதே கடம்புரீஸ்வரர் ஆலயத்திற்குச் சொந்தமான நிலம் இந்த நான்கு வழிச் சாலையிலே வேறு இடத்தில் நிறைய இருக்கிறது. அந்த ஊரிலே 50 ஏக்கர் வரையிலே நிலம் இருக்கிறது. எனவே, வேறு இடத்தைத் தேர்வு செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொண்டு, மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.*

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி நகரத்திற்குட்பட்டுள்ள பேருந்து நிலையம் 1964 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட பேருந்து நிலையம் ஆகும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை நன்கு அறிவார்கள். ஒன்றுபட்ட மாவட்டமாக இருந்தபோது கழகத்தினுடைய பொறுப்பாளராக இருந்தவர் அவர். இன்றைக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து பேருந்து நிலையம் வரவேண்டுமென்றால் 30 நிமிடங்கள் ஆகின்றன. 5 கிலோ மீட்டர் தூரம்தான்; இருசக்கர வாகனங்கள், சரக்கு வாகனங்கள் பல நெருக்கடிகளை ஏற்படுத்தி இருக்கின்றன.

சமீபத்தில்கூட, புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்காக இடம் தேர்வு செய்கின்ற பணியை மாவட்ட ஆட்சியர் துவக்கினார். ஆக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் காலத்திலாவது ஒரு புதிய பேருந்து நிலையம்—பக்கத்திலே கிருஷ்ணகிரியிலே ஒரு புதிய பேருந்து நிலையம் இருக்கிறது, சேலத்திலே புதிய பேருந்து நிலையம் இருக்கிறது—



2011 ஆகஸ்ட் 23]

தருமபுரியில் மட்டும் இருக்கின்ற பழைய பேருந்து நிலையத்தை மாற்றி ஒரு புதிய புறநகர்ப் பேருந்து நிலையத்தைக் கட்டித் தர முன்வருவாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையிலே நகர்ப்புற உள்கட்டமைப்பினுடைய மேம்பாட்டிற்காக 750 கோடி ரூபாயை ஒதுக்கி, அனைத்து நகர்ப் பகுதிகளிலும் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதற்கு முதன்முறையாக தமிழகத்தினுடைய வரலாற்றில் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டத்தின் ஒரு பகுதிதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற புதிய நகரப் பேருந்து நிலையம்கூட. ஆனால், இதைவிட மிக முக்கியமான பல பகுதிகளையும் கருத்திற்கொண்டு, தருமபுரி நகருக்கும் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு எடுத்துச் செயல்படுத்தும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.*

**திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அள்ள, அள்ளக் குறையாத அட்சயப் பாத்திரமாக இன்றைக்கு தமிழ்நாட்டு மக்களுக்கு நலத் திட்டங்களை அள்ளி, அள்ளி வழங்கிக்கொண்டு வருகிறார்கள். சென்னையிலிருந்து கன்னியாகுமரி செல்லக்கூடிய தேசிய நெடுஞ்சாலையில், என்னுடைய திருமங்கலம் நகரத்து மையத்தில் வெளியூர் பேருந்துகளெல்லாம் சாலையின் நடுவில் நின்றுகொண்டிருக்கின்றன. அதனால், பல விபத்துகளும், விபரீதங்களும் ஏற்படுகிற காரணத்தினால், திருமங்கலத்தில் ஒருங்கிணைந்த வெளியூர் பேருந்து நிலையத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அம்மா அவர்களின் அனுமதியோடு அமைத்துத் தர முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

[2011 ஆகஸ்ட் 23

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கேள்விக்கு 'பரிசீலனை செய்யப்படும்' என்பதை பதிலாக மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ச. சுந்தரராஜ் அவர்கள்.

**டாக்டர் ச. சுந்தரராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ந்து வருகின்ற நகராட்சிப் பகுதிகளில் மக்கள்தொகைக்கேற்ப பேருந்து நிலையம் விரிவுபடுத்தப்படாமல் இருப்பதால், பல்வேறு இன்னல்களுக்கு மக்கள் ஆளாகி வருகிறார்கள். ஆகவே, வளர்ந்து வருகின்ற நகராட்சிப் பகுதிகளில் அதன் ஜனத்தொகைக்கேற்ப, முக்கியத்துவம் கருதி இதுபோன்று பேருந்து நிலையங்களை விரிவாக்கம் செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ந்து வருகின்ற இந்தச் சூழ்நிலையில் இரண்டு, மூன்று பிரச்சினைகள் தமிழகம் முழுவதும் இருக்கின்றன. இதுபோன்ற நகரப் பேருந்து நிலையங்கள் அமைத்தல், நகரத்திலே விழுகின்ற குப்பைகளை அகற்றி, வேறு இடங்களுக்குக் கொண்டு செல்வதற்கு, அந்த இடங்களிலே போதிய இடம் இல்லாமை, அதைப்போல கழிவு நீரை அகற்றி, அதைச் சுத்தப்படுத்துவதற்கு நிலம் கையகப்படுத்துதல், இப்படி அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய நிலையிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு விரிவான திட்டத்தை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்தின் அடிப்படையிலே, தமிழகம் முழுவதும் இருக்கின்ற இப்படிப்பட்ட தேவைகள் கால, நேரம் கருதி முழுமையாக நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். அருள்செல்வன் அவர்கள்.



2011 ஆகஸ்ட் 23]

**திரு. ஆர். அருள்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2006 ஆம் ஆண்டு, நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆட்சியில் இருந்தபோது மயிலாடுதுறையிலே பேருந்து நிலையத்துக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. பிறகு, இந்த ஆண்டு நாம் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் மரியாதைக்குரிய அமைச்சர் அவர்கள் வந்து ஆய்வு செய்தார்கள். அந்த இடத்தை எல்லாம் ஆய்வு செய்தார்கள். ஆய்வு செய்து வந்த பிறகு, கட்டாயமாக அந்த இடத்தில் பேருந்து நிலையம் வரும் என்று எனக்கு நம்பிக்கை இருக்கிறது. இருந்தாலும், எப்போது வரும் என்பதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே கேள்வி நேரத்தில் வேறு கருத்துகளைச் சொல்ல வேண்டாம் என்று சொன்னாலும்கூட, கட்டாயத்தின் அடிப்படையிலே இந்தக் கருத்தை நான் சொல்லவேண்டியிருக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2001–2006 இல் கொண்டுவந்த அடிப்படை வசதிகளை மேம்படுத்தக்கூடிய எல்லாத் திட்டங்களையுமே கடந்த ஆட்சியாளர்கள் முடக்கி வைத்துவிட்டார்கள். அதனுடைய ஒரு பகுதிதான் இந்தப் பேருந்து நிலையம். எனவே, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திருக்கரங்களால் உருவாக்கப்பட்ட அந்தத் திட்டம் விரைவாக நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்கள்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடுமலை சட்டமன்றத் தொகுதியில், பொள்ளாச்சி–பழனி பிரதான சாலையில், உடுமலையின் மையப் பகுதியில், ஒரு பேருந்து நிலையம் இப்போது செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. இந்தப் பேருந்து நிலையத்தை விரிவாக்கம் செய்யவேண்டுமென்று 2001–2006 ஆம் ஆண்டுகளில்

[2011 ஆகஸ்ட் 23

இதய தெய்வம் அம்மா அவர்களுடைய கடந்த ஆட்சியிலே அதற்கான பணிகள் தொடங்கப்பட்டு, அதற்கு அருகிலே 2 ஏக்கர் நிலம், அங்கு குடியிருந்த மக்களெல்லாம் அப்புறப்படுத்தப்பட்டு, வேறு இடத்தில் குடியமர்த்தப்பட்டு, தயார் நிலையில் உள்ளது. பொதுப் பணித் துறைக்கும், வருவாய்த் துறைக்கும் சேர்ந்த அந்த நிலத்தை உடனடியாக நிலப் பரிவர்த்தனை செய்து, இதய தெய்வம் அம்மா அவர்களுடைய இந்தப் பொற்கால ஆட்சியில் அங்கே பேருந்து நிலைய விரிவாக்கப் பணிகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாகத் தொடங்கி வைப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு அளித்த பதிலைப் போலவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால் தொடங்கி வைக்கப்பட்ட எல்லா திட்டங்களுமே இந்த ஐந்தாண்டுகளுக்குள்ளாக நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, நகரக் கட்டமைப்பு வசதிக்காக 750 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்து, ஒருங்கிணைந்த பேருந்து நிலையங்கள் எல்லாம் கட்டப்படுகின்றன. அதைப்போல, இன்றைக்கு பேரூராட்சிகள் மற்றும் ஊரகப் பகுதிகளில், வளர்ந்து வரக்கூடிய சிறு நகரங்களில் ஊராட்சி அமைப்புகள் இருக்கின்றன. அங்கும் மக்களின் தேவைக்காக பேருந்து நிலையங்கள் அவசியம் தேவைப்படுகின்றன. எனவே, பேரூராட்சிகளிலே, ஊரகப் பகுதிகளில் இருக்கக்கூடிய, வளர்ந்திருக்கக்கூடிய சிறு நகரங்களிலே ஒருங்கிணைந்த பேருந்து நிலையங்களைக் கட்டுவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய ஆசைப்படுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.



2011 ஆகஸ்ட் 23]

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல, நகர் உள்கட்டமைப்பு வசதிகள் என்பது அனைத்து நகராட்சிகளையும், அனைத்துப் பேரூராட்சிகளையும் உள்ளடக்கியதுதான். மாநகராட்சிக்கென்று, சென்னை மாநகராட்சிக்கென்று தனியாக 500 கோடி ரூபாய் உள்கட்டமைப்பு வசதிக்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து மற்ற 9 மாநகராட்சிகளையும், 150 நகராட்சிகளையும், 559 பேரூராட்சிகளையும் உள்ளடக்கிய நகர் உள்கட்டமைப்புக்காக இந்த 750 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கி புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தத் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே, தேவையின் அடிப்படையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்து ஏற்றுக்கொள்ளக்கூடியதுதான். ஏனென்று சொன்னால், தற்போது கிராமங்களிலே இருக்கின்ற எல்லோருமே சிறு நகரங்களில் குடியேறுகிறார்கள். சிறு நகரங்களில் இருக்கின்றவர்கள் எல்லாம் பெருநகரங்களில் குடியேறிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கல்வி வசதி பெற, வேலைவாய்ப்பு பெற அவர்களுடைய வியாபார நோக்கத்தின் அடிப்படையிலே, பல்வேறு வகையிலே குடிபெயர்ந்திருக்கின்ற இந்தச் சூழ்நிலையில், அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற வகையிலே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பெரும் திட்டங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே, ஒவ்வொன்றாக அந்தந்தப் பகுதியில் உள்ள மக்களின் தேவைக்கேற்ப நிச்சயமாக இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சோழன் சித. பழனிச்சாமி, திரு. கே.பி.பி. பாஸ்கர், டாக்டர் சி. விஜயபாஸ்கர் ஆகியோர் இதே பொருள் குறித்து துணை வினாக்கள் எழுப்பக் கேட்டிருக்கின்றார்கள். எனவே, அவர்களுடைய தொகுதிகளில் பேருந்து நிலையம் அமைக்கவேண்டுமென்ற அந்தக் கோரிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கொடுத்துவிடுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வினா வரிசை எண் 49, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

[2011 ஆகஸ்ட் 23

**49—**

**பலவகை தொழில்நுட்பக் கல்லூரி**

***77—திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி:**

*மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பொள்ளாச்சியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சியில் பலவகை தொழில் நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு, உரிய ஆய்வுக்குப்பின், தேவை இருப்பின் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி அவர்கள்.*

*முற்பகல் 10—15*

**திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொங்கு மண்டலம், பொள்ளாச்சி தொகுதி, எப்போதும் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய எஃகு கோட்டை. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் கோட்டையிலே, பொள்ளாச்சி தொகுதியில், வெட்டுவாவி என்னும் சிறு கிராமத்தில் கிளைக் கழகச் செயலாளராகவும், அம்மா பேரவை ஒன்றியப் பொறுப்பிலும், இளைஞர் அணி ஒன்றியச் செயலாளராகவும், பின் ஒன்றியக் கழகத்தினுடைய செயலாளராகவும் பொறுப்பு வகித்து, பின்னர் பொள்ளாச்சி சட்டமன்ற வேட்பாளராக மாண்புமிகு அம்மா அவர்களால் நிறுத்தப்பட்டு, அங்கே மாண்புமிகு அம்மா அவர்கள் திருவாய் மலர்ந்து வாக்கு கேட்டதன்பேரில் தேர்தலில் வெற்றி பெற்று சட்டமன்ற உறுப்பினரான, எனக்கு சரித்திரப்புகழ் பெற்ற இந்தச் சட்டமன்றத்தில் பேச வாய்ப்பளித்த எங்கள் நெஞ்சமெல்லாம் நிறைந்த, எங்கள் இதயக் கமலத்தில் உள்ள இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சி நடக்கின்ற இந்த இனிய வேளையில், பொள்ளாச்சியிலிருந்து இங்கு வந்து சரித்திரப் புகழ்மிக்க இந்தச் சபையிலே பேசுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக்*



2011 ஆகஸ்ட் 23]

*கொடுத்த 1½ கோடி உறுப்பினர்களைக் கொண்ட மாபெரும் இயக்கத்தை ஒரு இராணுவக் கட்டுக்கோப்புடன் வழிநடத்திச் செல்லும் ஒப்பாரும் மிக்காரும் அற்ற எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் மலர்ப் பாதம் பணிந்து, கோடானுகோடி நன்றி மலர்களை முதலில் காணிக்கையாக்கிக்கொள்கின்றேன். எனக்காக இரட்டை இலைச் சின்னத்திலே வாக்களித்து வெற்றிபெறச் செய்த பொள்ளாச்சி தொகுதியின் நல்ல உள்ளங்கள் அத்துணைப் பேருக்கும் நன்றியினைக் காணிக்கையாக்கிக் கொள்கின்றேன்.*

*பொள்ளாச்சி பகுதி தொழிலாளர்கள் நிறைந்த பகுதி. அந்தப் பகுதியிலிருந்து 40 கி.மீ. தூரம் சென்றால்தான் தொழில்நுட்பக் கல்லூரிகளை அடைய முடியும். கோவையிலும், உடுமலையிலும்தான் அந்தக் கல்லூரிகள் இருக்கின்றன. 25 ஆண்டுக்கால கனவாக இருக்கின்ற அந்தப் பொள்ளாச்சி பகுதிவாழ் மக்களுடைய கோரிக்கையை இந்த அரசு கனிவுடன் பரிசீலித்து, பள்ளிகள், கல்லூரிகளின் வளர்ச்சிக்கு எவ்வளவோ திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகின்ற மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, இந்த இனிய வேளையிலே அந்தப் பகுதியிலே உள்ள அந்தக் குறையைக் களைய வேண்டுமென்று கேட்டு அமர்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாவட்டத்தில் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் இரண்டும், அரசு நிதியுதவி பெறும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் 6—ம், சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் 18—ம் ஆக மொத்தம் 26 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் இருக்கின்றன. மேற்காணும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு 10,650 இடங்கள் மாணவர் சேர்க்கைக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. இவற்றில் சேர்க்கப்பட்டுள்ள இடங்கள் 8,443 ஆகும். ஆகவே, ஏற்கெனவே காலியாக உள்ள 2,207 இடங்கள் இருக்கிற காரணத்தினால் மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கிற அந்தத் தொகுதியைச் சார்ந்தவர்கள், அங்கே இருக்கக்கூடிய அந்தக் கல்லூரிகளில் சேர்ந்து படித்துப் பயன்பெற வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[2011 ஆகஸ்ட் 23

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.*

**திரு. எம். ஆறுமுகம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கோவை மாவட்டத்தில் 26 பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் செயல்பட்டு வருவதாகவும், அதில் 8 ஆயிரத்திற்கும் அதிகமான மாணவர்கள் பயின்று வருவதாகவும் குறிப்பிட்டுச் சொன்னார்கள். கோவை மாவட்டத்தில் ஒரு பகுதியில்தான் அதிகமான கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. பொள்ளாச்சி, வால்பாறை, கிணத்துக்கடவு இதுபோன்று இருக்கக்கூடிய பகுதிகளில் . . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *சென்னையிலிருந்து திருச்சி போக வேண்டுமென்றால், தாம்பரம், செங்கல்பட்டு, மதுராந்தகம், திண்டிவனம், விழுப்புரம், அதன்பிறகு உளுந்தூர்பேட்டை என இப்படியா சொல்வது, சுருக்கமாகக் கேளுங்கள்.*

**திரு. எம். ஆறுமுகம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கோயம்புத்தூர் மாவட்டத்தைவிட்டுத் தாண்டவேயில்லை. அதற்குள்ளாக தாங்கள் திருச்சி, குளித்தலை என்று போய்விட்டீர்கள் என்றால் நான் என்ன செய்வது? ஆகவே, கோவை மாவட்டத்தில் பொள்ளாச்சி, வால்பாறை, கிணத்துக்கடவு, இதுபோன்று இருக்கக்கூடிய பகுதிகளில் அரசு தொழில்நுட்பக் கல்லூரிகள் இல்லை. அதை அரசு ஆய்வு செய்து அமைத்துக்கொடுக்க வேண்டும். அதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Very good. *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோவை மாவட்டத்தைத் தாண்டவே அவசியமில்லை. அங்கு ஏற்கெனவே அரசின் சார்பாக இரண்டு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஆகவே, அங்குள்ள மாணவர்கள் அந்த மாவட்டத்தை விட்டு வெளியே சென்று படிக்க வேண்டிய அவசியம் இல்லை. அங்கே இடங்கள் காலியாக இருக்கின்றன. அங்கேயே மாணவர்களைப் படிக்க வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)*



2011 ஆகஸ்ட் 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *யார், குணசேகரனா, சின்னராஜா? (குறுக்கீடு) திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.*

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம் தொகுதி, மலையைச் சார்ந்திருக்கின்ற பகுதி. பெரும்பாலும் ஆதி திராவிடர்கள், மலைவாழ் மக்கள், தாழ்த்தப்பட்டோர், மிகவும் தாழ்த்தப்பட்டோர் ஆகியோர் வாழ்கிற பகுதி. கல்லூரிக்குச் செல்லவேண்டுமென்று சொன்னால், 90 கி.மீ. தூரத்தில் உள்ள கோவைக்குச் செல்லவேண்டிய ஒரு சூழ்நிலை. ஆகவே, விவசாயிகள் வாழ்கிற பகுதியாக இருக்கின்ற இந்தப் பகுதியிலே, அங்குள்ள மாணவர்கள் கல்லூரிக்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால் கோவைக்குத்தான் செல்லவேண்டும். கோவையை ஒட்டியிருக்கிற பகுதியில்தான் அதிக தொழில்நுட்பக் கல்லூரிகள் எல்லாம் இருக்கின்றன. ஆகவே, அதைக் கருத்தில்கொண்டு, ஒதுக்குப்புறமாக இருக்கிற, மலைவாழ் மக்கள் வாழ்கிற அந்தப் பகுதியில் ஒரு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரியைக் கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

*முற்பகல் 10—20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய கருத்தைப் பொறுத்தவரையில் தேவை இருப்பின் அரசு இதைப் பற்றிச் சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார் அவர்கள்.*

**திரு. டி. சுரேஷ்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் சட்டமன்றத் தொகுதி விவசாயிகள் நிறைந்த பகுதி. அங்கே ஒரு விவசாயக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

[2011 ஆகஸ்ட் 23

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பது மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாதது. எனவே, தனிக் கேள்வி போடவும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, மாண்புமிகு உறுப்பினர் திரு. பு. வெற்றிவேல், மூலக் கேள்வி பொள்ளாச்சியைப் பற்றியது. நீங்கள் ஆர்.கே. நகர், அரக்கோணம் தொகுதிகளைச் சார்ந்தவர்கள். ஆர்.கே. நகரும், அரக்கோணமும் அங்கேயிருந்து எவ்வளவு தூரத்தில் உள்ளன?

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் குறிப்பாக, வட சென்னையில் பெரம்பூர், இராயபுரம், ஆர்.கே. நகர், மாதவரம் ஆகிய 4 தொகுதிகளும் சந்திக்கின்ற அந்த இடம் பட்டியலின மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள், ஏழையெளிய மக்கள், முறைசாரா தொழிலாளர்கள் அதிகம் வாழக்கூடிய பகுதி. அங்கே அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி இல்லை. அந்தப் பகுதியிலே ஒரு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரியை இந்த 4 தொகுதிகளும் சந்திக்கின்ற கண்ணதாசன் நகர் பகுதியிலே நாம் அமைத்தால், பக்கத்து மாவட்டமான திருவள்ளூர் மாவட்டத்திற்கும் அது பயனுள்ளதாக இருக்கும், வட சென்னை மாவட்டத்திற்கும் அது பயனுள்ளதாக இருக்கும். அப்படி ஒரு கல்லூரி அமைக்கப்படுமா என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலளிப்பதற்கு முன்பு, திரு. சு. ரவி, ஒரு நிமிடத்தில் நீங்கள் கேட்க வேண்டியதைக் கேளுங்கள். மொத்தமாகச் சேர்த்து அமைச்சர் பதில் சொல்லிவிடுவார்.

**திரு. சு. ரவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா அவர்கள் பொற்பாதம் பணிந்து, கேள்வியைக் கேட்கிறேன். எங்கள் அரக்கோணம் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி. அரசுத் துறையின் சார்பில் எவ்விதக் கல்லூரியும் அரக்கோணம் தொகுதியில் இல்லை. ஆகையால் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரியை அரக்கோணம் தொகுதியிலே அமைக்க அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2011 ஆகஸ்ட் 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பு. வெற்றிவேல் அவர்கள்.

**திரு. பு. வெற்றிவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துகருப்பண்ணசாமி அவர்கள், பொள்ளாச்சி தொகுதி கழகத்தினுடைய எஃகுக் கோட்டை என்று குறிப்பிட்டார். ஆனால் சென்னைதான் இன்று கருணாநிதி உட்பட அனைவரையும் இந்த மாவட்டத்தை விட்டே ஓட வைத்தது என்பதை இந்த நேரத்திலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் அநேகருடைய கோரிக்கையும் தங்களுடைய தொகுதியிலே ஒரு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி தொடங்கப்பட வேண்டும் என்பதுதான். தமிழகத்திலே மட்டும் இன்றைக்கு அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் 30—ம், அரசு உதவி பெறும் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் 34—ம், சுயநிதிப் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் 366—ம், மொத்தம் 430 பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் இருக்கின்றன. சென்னையில் மட்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதற்கிணங்க, அரசாங்கத்தின் சார்பாக நடத்தப்படுகின்ற பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் 8—ம், அரசு உதவி பெறும் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் 2—ம், சுய உதவி பெறும் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் 2—ம் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்கூட அரக்கோணம் பற்றிக் கேட்டார்கள். அவருடைய தொகுதியிலே சுயநிதியில் தொடங்கப்பட்டிருக்கிற பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் ஏறக்குறைய 23 இருக்கின்றன. இந்தக் கல்லூரிகளில் இன்னும் மாணவர்கள் படிப்பதற்கு வசதியாக காலியிடங்கள் இருக்கின்றன. ஆகவே, அதைப் பயன்படுத்திக்கொண்டு மாணவர்கள் அங்கே பயின்று பயன் பெற வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 50, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

[2011 ஆகஸ்ட் 23

**50—**

## கட்டட வசதி

***1751—திரு. அ. கணேஷ்குமார்:**

*மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*செஞ்சி தொகுதி, மேல்மலையனூர் ஒன்றியம், கொழப்பலூர் நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*செஞ்சி தொகுதி, மேல்மலையனூர் ஒன்றியத்தில் உள்ள கொழப்பலூர் முழுநேர நியாய விலைக் கடை தற்போது வாடகைக் கட்டடத்திலே செயல்பட்டு வருகிறது. இந்நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்டுவதற்குத் தேவையான சொந்த இடமோ, நிதி வசதியோ சங்கத்திற்கு இல்லை. இவ்வாறு சொந்தக் கட்டடம் இல்லாத நியாய விலைக் கடைகளுக்கு அரசு கட்டடம் கட்டித் தரக்கோரி திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.*

**திரு. அ. கணேஷ்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுக்கு நன்றி. அந்த மேல்மலையனூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட கொழப்பலூர் கிராமத்தில், கிராமத்துப் பொதுமக்களே 10 செண்ட் இடத்தைக் கண்டறிந்து பொதுவான இடத்தைத் தேர்வு செய்து வைத்திருக்கிறார்கள். அதற்கு நிதியாதாரம் வழங்கி, மாவட்ட ஆட்சியர் அவர்கள் மூலமாகவோ, திட்டப் பணி அலுவலர் அவர்கள் மூலமாகவோ, ஏதோ ஒரு வகையில் ஆவன செய்து, அங்கு கட்டடம் கட்டித் தருவதற்கு தயவுகூர்ந்து பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*



2011 ஆகஸ்ட் 23]

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய ஆர்வம் மிகுதியாக இருப்பதால் மாண்புமிகு உறுப்பினர் சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து கட்டிக் கொடுப்பாரேயானால் மிகவும் சிறப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 51, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். சாந்தி, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

*முற்பகல் 10—25*

**51—**

## சுற்றுச்சூழல் பாதுகாப்பு

***570—திருமதி ஆர். சாந்தி:**

*மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை ஒன்றியத்திலுள்ள மலையில் மரங்கள் வெட்டுவதைத் தடுப்பதற்கும், பசுமையைக் காப்பதற்கும் அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) கொல்லிமலை ஒன்றியத்திலுள்ள மலையில், மரங்கள் வெட்டுவதைத் தடுப்பதற்கு, தமிழ்நாடு வனச் சட்டத்தின்படியும், தமிழ்நாடு மலைதள பாதுகாப்புச் சட்டத்தின்படியும், உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், வனம் மற்றும் தனியார் காடுகள் பகுதிகளில் சட்டத்திற்குப் புறம்பாக மரங்கள் வெட்டப்படுவதைத் தடுப்பதற்கு, வனப் பணியாளர்கள் தீவிர கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். கொல்லிமலை வனப் பகுதிகளில், தமிழ்நாடு காடுகள் வளர்ப்பு மற்றும் வேங்கைத் தோட்டங்கள் எழுப்பும் திட்டங்களின் மூலம் 75,000 மரக்கன்றுகள் நடப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேலும், இப்பகுதிகளில் பசுமையை அதிகரிக்கும்*

[2011 ஆகஸ்ட் 23

*பொருட்டு, தனியார் நிலங்களில் வனத் துறைமூலம், 3,60,000 மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டுள்ளன. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பசுமையைக் காப்பதற்காக நிதிநிலை அறிக்கையிலே, தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் இரண்டாம் கட்டப் பணிகளின் தொடர்ச்சியாக, ஜப்பான் நாட்டின் நிதியுதவியுடன் 686 கோடி ரூபாய் மதிப்பீட்டில், பல்லுயிரினப் பாதுகாப்பு மற்றும் பசுமைத் திட்டம் தொடங்கப்படுமென்று அறிவித்துள்ளார்கள். இதன்மூலம் கொல்லிமலை வனப்பகுதியிலே 2011–2012 ஆம் ஆண்டில் 1,25,000 மரக்கன்றுகள் நடவு செய்வதற்கான இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்பதைக் கூறிக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள். டாக்டர், மூலக் கேள்வி கொல்லிமலையைப் பற்றியது. நீங்கள் என்ன கேட்கப்போகிறீர்கள்?*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி**: *என்னவென்று கேட்கிறீர்களா? பசுமையைக் காப்பதற்காக. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே (குறுக்கீடு) . . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். சாந்தி அவர்கள்.*

**திருமதி ஆர். சாந்தி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வனத் துறையின் அனுமதி இல்லாமல், சமூக விரோதிகள் கடந்த தி.மு.க. ஆட்சியில் நிலங்களை அபகரித்ததோடு மட்டுமல்லாமல், கொல்லிமலையிலிருந்து அலுமினியம் பாஸ்பேட் தாதுவை வெட்டியெடுக்கும்போது, மரங்களும் வெட்டப்பட்டு, அந்த அலுமினியம் பாஸ்பேட்டோடு சேர்த்து மரங்களும் கடத்தப்பட்டன. இந்தப் புகார்கள் பத்திரிகைகளிலும் வெளிவந்தன, வழக்கும் பதிவு செய்திருக்கிறார்கள். ஆனால், அதன்மீது எந்தவொரு மேல்நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இது வெறும் கண்துடைப்பாக மட்டுமே இருந்தது. எனவே, இது சம்பந்தமாக கடும் நடவடிக்கை எடுத்து, மரம் வெட்டுதலைத் தடுக்க அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*



2011 ஆகஸ்ட் 23]

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொல்லிமலைப் பகுதியிலே, 1,89,084.64 ஏக்கர் பரப்பளவில் காப்புக் காடு உள்ளது. காப்புக் காடுகளிலுள்ள வனச் செல்வங்கள் பாதுகாப்புப் பணிமூலம் வனப் பணியாளர்களால் பாதுகாக்கப்பட்டு, பசுமையைக் காப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பல்வேறு வனத் திட்டங்களின்கீழ், வனப் பகுதிகளில் இடைநடவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. காப்புக் காடுகளில், தீத் தடுப்புப் பணிகள், கால்நடைகளை மேயவிடாமல் தடுத்தல் போன்ற வனப் பாதுகாப்புப் பணிகளில் வனப் பணியாளர்கள் மற்றும் வனக் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டு, வனங்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வனம் இல்லாத இதர பகுதிகளில் பசுமையை அதிகரிப்பதற்கு தனியார் நிலங்களில் மரங்களை நடவு செய்து பசுமையைக் காக்கும் செயல் வனத் துறைமூலம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. கொல்லிமலைப் பகுதியில் சட்டத்திற்குப் புறம்பாக மரங்களை வெட்டிய நபர்கள்மீது தமிழ்நாடு வனச் சட்டம் மற்றும் தமிழ்நாடு மலைதள பாதுகாப்புச் சட்டம் ஆகியவற்றின்கீழ் 2005–2006 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டுவரை மொத்தம் 35 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, குற்றவாளிகள்மீது தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கொல்லிமலை வனப் பகுதியைப் பொறுத்தவரை, அதை பசுமையாக்குவதற்கு வேங்கை மரங்கள் நடப்பட்டு, அந்தத் திட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இங்கே உறுப்பினர் அவர்கள் கூறிய அளவிற்கு அந்தத் தவறுகள் நடைபெற்றால், துறைமூலம் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். சாந்தி அவர்கள்.*

**திருமதி ஆர். சாந்தி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுரைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாட்டில் 34 சதவிகிதம் இருக்க வேண்டிய வனப் பரப்பளவு தற்போது 17 சதவிகிதம் மட்டும்தான் உள்ளது. எனவே, நம் நாட்டில், ஊட்டி, ஏற்காடு, கொடைக்கானல் . . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உங்களுடைய கேள்வி மூலக் கேள்விக்குத் தொடர்பற்றது. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.*

[2011 ஆகஸ்ட் 23

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Oxygen Tank of Asia என்று அழைக்கப்படக்கூடிய நீலகிரி மாவட்டத்தில், கூடலூர் வழியாக கேரளாவிலிருந்து வரக்கூடியவர்கள் தொடர்ந்து மரங்களை வெட்டிச் செல்லக்கூடிய ஓர் அவல நிலை இருந்துகொண்டிருக்கிறது. ஏறக்குறைய 50,000 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலம்பூர் கோகிலம் என்று சொல்லப்படக்கூடிய ஒரு ஜமீன் பூமி அரசினுடைய வன இலாகாவில் இப்பொழுது உள்ளடங்கியிருக்கிறது. எனவே, அந்தப் பகுதியில் தொடர்ந்து மரங்கள் வெட்டப்படுவதைத் தடுப்பதற்கு அரசு தீவிர நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பல்வேறு வகைகளில் மரங்கள் வெட்டப்பட்டு, கடத்தப்பட்டன. ஆனால், இன்றைக்கு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பதவியேற்ற பின்பு, இந்தக் குற்றங்களெல்லாம் குறைக்கப்பட்டு, இன்றைக்கு வனத் துறைமூலம் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட விரோதமாக வெட்டப்படுகின்ற மரங்களை உறுதியாகத் தடுப்பதை நான் வரவேற்கின்றேன். அதே நேரத்தில், தனியார் வைத்திருக்கின்ற மரங்கள், குறிப்பாக வெட்டுவதற்கென்றே வளர்க்கின்ற சில்வர் ஓக் போன்ற மரங்களைக்கூட ஊட்டியில் வெட்ட அனுமதிப்பதில்லை என்று சொல்கிறார்கள். இது அங்கு இருக்கின்ற தச்சுத் தொழிலையும், மற்ற தொழில்களையும் பாதிக்கின்றது. அந்த மரத்தை நட்டவர்களையும் பாதிக்கின்றது. ஆகவே, அதற்கு விழித்தளர்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.



2011 ஆகஸ்ட் 23]

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் காடுகளில் மரங்களை வெட்டுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலே ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. அவர்களுடைய அறிவுரையின்பேரில் அனுமதி கொடுக்கப்பட்டு, அந்த மரங்களை வெட்டுவதற்கு அனுமதிக்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 52, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**52—**

## புதிய தேர்

***1395—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அந்தியூர் தொகுதி அருள்மிகு பத்ரகாளி அம்மன் திருக்கோயிலுக்குப் புதிய தேர் செய்ய அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சீராக இல்லாத தேர்கள், சிதிலமடைந்த கோயில்கள் எல்லாம் சீரமைத்துத் தரப்படும் என்ற கருத்தினை இந்த அவையிலே சொல்லியிருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே, ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், அந்தியூர் அருள்மிகு பத்ரகாளியம்மன் திருக்கோவிலுக்குப் புதிதாக மரத்தேர் செய்யும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி 29–6–2011 அன்று திறக்கப்பட்டு கோயம்புத்தூர் இணை ஆணையர் அலுவலக பரிசீலனையில் உள்ளது. விரைவில் அங்கீகாரம் வழங்கி பணி துவங்கப்படும் நிலையில் உள்ளது என்பதை இந்த அவையில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன் அவர்கள்.

[2011 ஆகஸ்ட் 23

**திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இறைவனிடம் கையேந்துங்கள், அவர் இல்லையென்று சொல்லுவதில்லை" என்ற பாடலுக்கொப்ப, எங்கள் தாய் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்தில் தொகுதி மக்கள் கோரிக்கைகளை முன்வைக்கின்றபொழுது, இல்லையென்று எப்போதுமே கூறியதே இல்லை என்பதை இந்த அவையிலே பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர் சட்டமன்றத் தொகுதியிலுள்ள அருள்மிகு பத்ரகாளியம்மன் திருக்கோயிலானது, 100 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமையான, பிரசித்திபெற்ற கோயிலாகும். இங்கே, வருடா, வருடம் 'குண்டம்' மற்றும் 'தேர்த் திருவிழா' விமரிசையாக நடைபெற்று வருகிறது. இதுவரையில் இந்தக் கோயில் தேரோட்டம் நின்றதே இல்லை. சுற்றியுள்ள 50 கிராமங்களிலுள்ள மக்கள் இந்தத் தேர்த் திருவிழாவில் கலந்துகொண்டு வருகின்றார்கள். ஆனால், கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியிலே, தேர் பழுதடைந்துவிட்டது எனக் கூறி தேரைச் செப்பனிடாமல் தேரோட்டத்தை நிறுத்திவிட்டனர். இந்தச் செயலானது அந்தப் பகுதி மக்களுக்கு மிகவும் வருத்தத்தைத் தந்துள்ளது.

மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தக் கோயிலுக்குப் புதிதாக தேர் செய்ய உத்தரவு வழங்கியுள்ளார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இதற்காக என் சார்பாகவும், தொகுதி மக்கள் சார்பாகவும் கோடானுகோடி நன்றியினை மாண்புமிகு தமிழகத்தின் ஈடு இணையற்ற முதல்வர் எங்கள் தாய், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பித்து, அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன். இதுவரை நீங்கள் துணைக் கேள்வி எதுவும் கேட்கவில்லை. இன்று உங்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

**திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலி தொகுதியில் தொன்மை வாய்ந்த பேர்ப்பனியான்குப்பம் கிராமத்தில் அமைந்துள்ள அனந்தீஸ்வரர் திருக்கோயிலில் பல்லாண்டு காலமாக தேர் பழுதடைந்துள்ளது.



2011 ஆகஸ்ட் 23]

அந்தத் தேரினை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தலைமையில் இருக்கின்ற இந்த அரசு புதுப்பித்துத் தருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு அம்மா அவர்கள் இந்த அவையிலே, அனைத்துக் கோயில்களிலுள்ள தேர்களும் திருப்பணி செய்யப்படும் என்ற உறுதியை இங்கே அளித்திருக்கிறார்கள். அதனடிப்படையில் உறுப்பினர் அவர்கள் சொல்லிய அந்தத் தேர் சீரமைத்துத் தரப்படும் என்பதை உங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10—35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள். நீங்களும் இதுவரை துணைக் கேள்வி கேட்கவில்லை. அதனால் உங்களுக்கும் வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

**திரு. எல். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய தொகுதி ஸ்ரீரங்கம். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுடைய தொகுதி ரிஷிவந்தியம் தொகுதியாகும். அந்த ஸ்ரீரங்கம் கோயில் உருவாவதற்கு முன்பாகவே, ஆதி திருவரங்கம் என்ற கோயில் உருவாகியிருக்கிறது. அங்கே தேர் இல்லை. புதிய தேர் அமைத்துத் தரப்படுமா என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாகத் தேர் வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் அறிவுரையின்படி, அவர்களுடைய கேள்வி பரிசீலனை செய்யப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரியப்படுத்திக்கொள்கின்றேன்.

[2011 ஆகஸ்ட் 23

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 53, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் மற்றும் மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. இராஜேந்திரன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

**53—**

**கால்வாய்**

*__4416__—**திரு. ரா. சரத்குமார்:**
**திரு. பி.ஜி. இராஜேந்திரன்:**

*மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருநெல்வேலி மாவட்டம், ஜம்பு நதியில் மேல்மட்டக் கால்வாய் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) ஜம்பு நதி மற்றும் ராமநதி உபரி நீர் மேல்மட்டக் கால்வாய்த் திட்டத்திற்கு ரூ.887 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.*

**திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் திரு. பி.ஜி. இராஜேந்திரன் அவர்களுக்கு வாய்ப்புக் கொடுக்க நான் விட்டுக்கொடுக்கக் காத்திருக்கிறேன். ஏனென்றால், பெரும்பாலான பகுதிகள் அவருடைய தொகுதியிலே வருகின்றன.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. இராஜேந்திரன் அவர்கள் முதலில் பேசட்டும். (குறுக்கீடு) இல்லை, திரு. பி.ஜி. இராஜேந்திரன், முன் வரிசையிலுள்ள திரு. ரா. சரத்குமார் முதலில் பேசிவிடட்டும். (சிரிப்பு) நீங்கள் முதலில் பேசிவிடுங்கள்.*



2011 ஆகஸ்ட் 23]

**திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. ஏறத்தாழ 35 ஆண்டுக்காலமாக தென்காசி மற்றும் ஆலங்குளம் தொகுதி மக்களின் ஒரு கனவுத் திட்டமாக இருந்துவந்த இந்தத் திட்டம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 23–6–2005 அன்று திருநெல்வேலியில் நடைபெற்ற ஒரு விழாவில் சொல்லப்பட்டு அடிக்கல் நாட்டப்பட்டது. இந்தத் திட்டத்தைச் சென்ற மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி கிடப்பில் போட்டிருந்தது. ஆனால், மீண்டும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் இந்த நல்லரசு அமைந்தவுடன் இத்திட்டம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது. என் சார்பிலும் தென்காசி மற்றும் ஆலங்குளம் தொகுதிகளினுடைய மக்களின் சார்பிலும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இரண்டாவது பசுமைப் புரட்சியை அறிவித்திருக்கின்ற இந்தச் சூழ்நிலையில், இந்த ஆட்சியில் இதுபோன்ற திட்டங்கள் செயல்படுத்தப்படுவது உண்மையிலேயே மகிழ்ச்சி அளிக்கிறது. இதிலே ஒரு துணைக் கேள்வி இருக்கிறது. மதிப்பீட்டுக்கு எப்போது நிருவாக ஒப்புதல் வழங்கி ஆணை வெளியிடப்படும்? இப்பணி எப்போது துவங்கும்? எப்போது முடிவடையும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நான் கேட்க விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. இராஜேந்திரன் அவர்கள்.*

**திரு. பி.ஜி. இராஜேந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மைனாரிட்டி தி.மு.க. தீய சக்தி ஆட்சியைத் தீர்த்துக்கட்டி, ஆலங்குளம் தொகுதி மக்களுக்கு முதன்முதலாக தீயணைப்பு நிலையம் தந்து, அதனை இந்த அவையிலே அறிவித்த எங்கள் தாயே, கரியம் பாப்பாக்குடி, ஆலங்குளம், கீழப்பாவூர் ஒன்றியம், ஆலங்குளம் தொகுதி மக்களுக்கு, என்னுடைய கோரிக்கையை ஏற்று உள்ளாட்சி மானியக் கோரிக்கையில், நீண்டநாள் பிரச்சினையான தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டம் தந்து தாகம் தீர்த்த தீர்க்கதரிசி அம்மா அவர்களே, 23–6–2005 அன்று மாண்புமிகு அம்மா அவர்கள் நெல்லைச் சீமைக்கு வந்தபோது, வ.உ.சி. மணிமண்டபம் திறந்து வைத்து, சுமார் 300 கோடி ரூபாய்க்குமேல் ஏழையெளிய மக்களுக்கு நலத் திட்ட உதவிகளை வழங்கி, சுமார் 3 கோடியே 69 இலட்சம் மதிப்பீட்டில்*

[2011 ஆகஸ்ட் 23

*ஜம்பு நதி மேல்மட்டக் கால்வாய் அமைத்திட மாண்புமிகு அம்மா அவர்கள் தனது பொற்கரங்களால் அன்றைக்கு அடிக்கல் நாட்டினார்கள். அதன்பின் வந்த மைனாரிட்டி தி.மு.க. அரசின் தென்காசி சட்டமன்ற உறுப்பினரான துரோகி கருப்பசாமி பாண்டியன் அவர்களும், மணல் கொள்ளையன் முன்னாள் சபாநாயகர் ஆவுடையப்பன் அவர்களும் சேர்ந்து இந்தத் திட்டத்தை ஓரம் கட்டிவிட்டார்கள். ஆகவே, ஏழை விவசாயிகளின் வாழ்வில் ஒளியேற்றிட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் "பரிசீலிக்கப்படும்" என்று சொன்னார்கள். இந்தத் திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டு வந்ததால், கண்டிப்பாக நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக அன்புடன் கேட்க விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கரங்களால் தீட்டப்பட்டவை இத்திட்டங்கள். எனவே, உடனடியாக விரைந்து நடவடிக்கை எடுத்து முடிக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே நான் உங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 54, மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

**54—**

## பட்டு வர்த்தக மையம்

***759—திரு. ர.ம. பாபு முருகவேல்:**

*மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணி தொகுதியில் பட்டு வர்த்தக மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2011 ஆகஸ்ட் 23]

**மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதியில் பட்டு வர்த்தக மையம் அமைப்பது தொடர்பாக உரிய ஆய்வு செய்து, அமைக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பின், பட்டு வர்த்தக மையம் அமைப்பது குறித்து மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10–40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.*

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கடந்த ஆட்சியிலே பட்டு வர்த்தக மையம் அமைக்கின்றோம் என்கின்ற பெயரிலே ஓர் அறிவிப்பை வெளியிட்டு, அதைத் தொடர்ந்து அதிகாரிகளைக் கூட்டிச் சென்று நிலத்தையும் பார்வையிடுகிறோம் என்கின்ற பெயரிலே விளம்பரம் மட்டுமே தேடிக் கொண்டார்களே தவிர, அந்தப் பட்டு வர்த்தக மையம் அமைவதற்கு ஒரு சிறிய முயற்சிகூட மேற்கொள்ளப்படவில்லை. அதோடுமட்டுமல்லாமல் ஆரணி தொகுதி ஏதோ மாகேயிலோ, ஏனாமிலோ இருப்பதைப்போல, கடந்த தி.மு.க. ஆட்சியிலே எந்தவிதமான நலத் திட்டங்களும் ஆரணிக்கு வந்து சேரவில்லை. எனவே, மக்கள் நலனில் அக்கறையுள்ள இந்த அரசு, ஆரணி தொகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான பட்டு வர்த்தக மையத்தை உடனே அமைத்துத் தர வேண்டும். ஏனெனில், ஏறத்தாழ 70,000 மக்கள் பயனடையக்கூடிய ஒரு நல்ல திட்டம் இது. அதைக் கொண்டு வந்து மக்களின் நலனிலே அக்கறையுள்ளதை மீண்டும் நிரூபித்துக் காட்ட வேண்டுமென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அமைச்சர் அவர்களுக்குத் தெரியப்படுத்த விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

[2011 ஆகஸ்ட் 23

**மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணி பகுதியிலே 6 பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இவற்றிலே 3 பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் அசல் சரிகையுடனும், 3 பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில்* Half fine *சரிகையுடனும் பட்டுச் சேலைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதற்குத் தேவையான பட்டு நூல், தமிழ்நாடு பட்டுக் கூட்டுறவு இணையத்தின் சார்பாக கிளை விற்பனை நிலையம் அமைத்து, அதன்மூலம் அவை ஆரணியில் வழங்கப்பட்டு வருகின்றன. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.*

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவிப்புக்கு மிக்க நன்றி.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் அவர்கள்.*

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓமலூர், பஞ்சிகாளைப்பட்டி, ஜலகண்டாபுரம், நங்கவள்ளி மற்றும் சேலம் மாநகரத்தையொட்டியுள்ள எல்லா இடங்களிலும் ஏறக்குறைய ஆயிரக்கணக்கான பட்டுத் தறிகள் உள்ளன. அதைப்போல, என்னுடைய சேலம் வடக்குத் தொகுதியில் உள்ள அம்மாபேட்டை பகுதியிலே தமிழகம் முழுவதற்கும் தேவையான பட்டு வேஷ்டிகள் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகின்றன. சேலம் நகரை ஒட்டியிருக்கின்ற 23 ஏக்கர் பரப்பளவுள்ள கூட்டுறவு நூற்பாலை பல ஆண்டுகளாக மூடிக்கிடக்கின்றது. கடந்தகால ஆட்சியாளர்களின் கண்களில் படாத ஒரே சொத்து அதுதான். அதிலே இந்த பட்டு வர்த்தக மையம் அமைக்கப்படுமா என்பதைப் பேரவைத் தலைவர் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.*



2011 ஆகஸ்ட் 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் கூட்டுறவு நூற்பாலையைத் திறப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள். அதற்குத் தேவையான நடவடிக்கைகள் நிச்சயமாக எடுக்கப்படுமென்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, அங்கே பட்டு வர்த்தக மையம் அமைவதற்கும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 55, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**55—**

**கூட்டுறவு உணவகங்கள்**

***1734—திரு. இரா. காமராஜ்:**

*மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெடுஞ்சாலைகளில் போக்குவரத்துக் கழகங்களின்மூலம் கூட்டுறவு உணவங்கள் நடத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*தற்போது நிதிப் பற்றாக்குறையின் காரணமாக நெடுஞ்சாலைகளில் கூட்டுறவு உணவகங்கள் அமைக்கும் திட்டம் ஏதும் போக்குவரத்துக் கழகங்களிடம் இல்லை. வருங்காலங்களில் நெடுஞ்சாலைகளில் உணவகங்கள் அமைப்பது குறித்து நிதிநிலைமைக்கேற்ப மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ் அவர்கள்.*

[2011 ஆகஸ்ட் 23

**திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை வாழவைக்கும் தெய்வம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, 14–வது சட்டமன்றப் பேரவையில் என்னுடைய முதல் உடுக்குறியிட்ட வினாவினைத் தொடங்குகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிதிநிலைக்கேற்றவாறு பின்னர் பரிசீலிக்கப்படுமென்று பதில் அளித்திருக்கிறார்கள். நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் நிதிநிலை நிச்சயமாகச் சரியாகிவிடும். பின்னர் அதனை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்கிற வேண்டுகோளை வைப்பதோடு, கடந்தகால ஆட்சியாளர்கள் நெடுஞ்சாலைகளில் பயணம் செய்கிற பயணிகளைக்கூட விட்டுவைக்கவில்லை. தங்களுடைய பினாமிகள் பெயர்களில் சன், சூர்யா முதலிய அடைமொழிகளோடு சாலையோர உணவுக் கடைகளையும் நடத்திக்கொண்டு, அந்தக் கடைகளில்தான் பேருந்துகளை நிறுத்த வேண்டும் என்று கட்டாயப்படுத்தி, அங்கே தரமற்ற, சுகாதாரமற்ற உணவுப் பொருட்களை பயணிகள் அதிக விலை கொடுத்து வாங்குகிற நிலைக்கு ஆளாக்கியிருந்தார்கள். எனவே, உடனடியாக கூட்டுறவு உணவகங்களை அமைக்க முடியவில்லையென்று சொன்னாலும், இவற்றையெல்லாம் ஆய்வு செய்து அமைச்சர் அவர்கள், நெடுஞ்சாலைகளிலே பயணம் செய்கிறவர்கள் சுவையான நல்ல உணவைச் சாப்பிடுவதற்கு ஆவன செய்வார்களா என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10–45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுவையான உணவு கேட்கிறார்; கொடுத்து விடுங்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்துகள் அனைத்தும் உண்மை. கடந்த ஐந்தாண்டுக் கால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் பேருந்துகள் செல்கின்ற வழியில், நெடுஞ்சாலை உணவகங்களை கடந்தகால ஆட்சியாளர்கள் அமைத்து, ஒரு கட்டுப்பாடில்லாத விலையை நிர்ணயித்து விற்கக்கூடிய ஓர் அவல நிலை இருந்தது. மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்று, போக்குவரத்துத் துறைக்கு இட்ட கட்டளையின்படி, தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள தனியார்



2011 ஆகஸ்ட் 23]

உணவகங்களில் எங்கெல்லாம் அதிகமான விலைக்கு விற்கப்படுகிறதோ——குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால், கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் ஒரு லிட்டர் தண்ணீர் பாட்டில் 8 ரூபாய் 50 பைசாவுக்கு கடைகளுக்கு விநியோகிக்கப்பட்டபோது, அவை 22 ரூபாய், 25 ரூபாய் அளவிற்கு பொது மக்களிடத்தில் விற்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்பு, மாண்புமிகு அம்மாவினுடைய உத்தரவினை ஏற்று, தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள உணவகங்களில் அதுபோன்று அதிகப்படியான விலைக்கு விற்கப்படுவதைத் தடுக்க போக்குவரத்துத் துறையால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, அவை தண்ணீர் பாட்டில்களாக இருந்தாலும் சரி, அல்லது Cool Drinks–ஆக இருந்தாலும் சரி, M.R.P. என்ன இருக்கிறதோ அந்த விலைக்கு விற்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. தொடர்ந்து எங்கேயாவது அதிகப்படியான விலைக்கு தரமற்ற உணவுகளை விற்றால், அதுகுறித்து அவையினுடைய கவனத்திற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் கொண்டு வந்தால், மாண்புமிகு அம்மாவினுடைய அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய தங்க நாற்கரச் சாலைத் திட்டத்தின்கீழ், மராட்டிய மாநிலம் புனேவை அடுத்து, 5 தேசிய நெடுஞ்சாலைகள் சங்கமிக்கின்ற தேசிய நெடுஞ்சாலைகளுடைய சங்கமமாக கிருஷ்ணகிரி விளங்குகிறது. அந்த நெடுஞ்சாலையிலே உள்ள தனியார் விடுதிகள் தரமற்ற உணவை வழங்குவதால், அதை உட்கொள்கின்ற பயணிகளுக்கு உடல் கெடுதல் ஏற்படுகிறது. ஆகவே, நம்முடைய போக்குவரத்துத் துறையின் சார்பாக கூட்டுறவு உணவகங்களை ஏற்படுத்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஐந்தாண்டுக் கால தி.மு.க. அரசில், கருணாநிதி அரசில், போக்குவரத்துத் துறை என்ற ஒரு துறை

[2011 ஆகஸ்ட் 23

செயல்பட்டதா என்று கேள்வி கேட்கின்ற அளவிற்குப் போக்குவரத்துத் துறையைச் சீரழித்துவிட்டார்கள். இப்பொழுது மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், ஒவ்வொரு மாதமும் போக்குவரத்துத் துறைத் தொழிலாளர்களுக்குச் சம்பளம் வழங்குவதற்கு நிதியை வழங்கி, போக்குவரத்துத் துறை தொழிலாளர்களுடைய வாழ்க்கையில் விளக்கேற்றுகின்ற முதல்வராக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்று தமிழகத்தில் நல்லாட்சி நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கூட்டுறவு உணவகங்களை ஏற்படுத்தக்கூடிய சூழ்நிலையில் இப்பொழுது போக்குவரத்துக் கழகத்தினுடைய நிதிநிலை இல்லை. விரைவில் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய ஆட்சியில் நிதி நிலை சீராகும். போக்குவரத்துத் துறை மேம்படும். அப்போது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆய்வுகளை மேற்கொண்டு, உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 56, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சீனிவாசன், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**56—**

## நியாய விலைக் கடை

*__646—திரு. ஆர். சீனிவாசன்:__

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு தொகுதி, கணியம்பாடி ஒன்றியம், கம்மசமுத்திரம் கிராமம், பகுதிநேர நியாய விலைக் கடையை முழுநேரக் கடையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. புத்திசந்திரன், உணவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதி, கணியம்பாடி ஒன்றியம், கம்மவான்பேட்டை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டின்கீழ் மேட்டுப்பாளையம் தாய்க் கடை செயல்பட்டு வருகிறது. மேற்படி



2011 ஆகஸ்ட் 23]

தாய்க் கடையிலுள்ள 889 குடும்ப அட்டைகளிலிருந்து 550 குடும்ப அட்டைகளைப் பிரித்து, 550 குடும்ப அட்டைகளுடன் கம்மசமுத்திரம் பகுதிநேர நியாய விலைக் கடை 9–7–1990 அன்று துவக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது. மேற்படி கம்மசமுத்திரம் பகுதிநேர நியாய விலைக் கடையை, முழுநேர நியாய விலைக் கடையாக மாற்றுவதற்கு தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சீனிவாசன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, அவசரப்படாதீர்கள்.

**திரு. ஆர். சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகத்திலே பிறந்து இந்த ஜெகத்தை ஆளும் எங்கள் மகராசியாம், இருக்கின்ற பிடிசோற்றைத் தனக்கென்று எண்ணாமல், தமிழக மக்களுக்காக வாரிக் கொடுக்கின்ற கோயிலாம், நமது கழகத்தின் பொற்கோயில், மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை இந்த உலகிற்கு அறிமுகம் செய்த மாண்புமிகு அம்மா அவர்களின் பெற்றோர்களுக்கும் முதற்கண் எனது நன்றியைக்கூறி சிரம் தாழ்த்தி வணங்குகிறேன்.

*முற்பகல் 10–50*

தமிழகத்தின் கடைக்கோடித் தொண்டனான என்னை அடையாளம் கண்டு, ஆற்காடு நகர, வட்ட மேலவைப் பிரதிநிதி, வட்ட கழகச் செயலாளர், மாவட்டக் கழகத் துணைச் செயலாளர், நகரக் கழகச் செயலாளர், நகர் மன்ற உறுப்பினர் போன்ற பொறுப்புகளைத் தந்து, கழகப் பணியாற்றி வந்த எனக்கு, ஆற்காடு சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட அனுமதி வழங்கி, மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியோடு, என்னை மாபெரும் வெற்றி பெறச் செய்த நடமாடும் மனித தெய்வம், எங்கள் சிங்கநிகர்த் தலைவியாம், தானைத் தலைவி, சமூக நீதி காத்த வீராங்கனை, மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றி கலந்த பாச மலர்களை மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களில் காணிக்கையாக்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையை ஏற்று, ஆற்காடு சட்டமன்றத் தொகுதி வேட்பாளராகப் போட்டியிட்ட எனது

[2011 ஆகஸ்ட் 23

வெற்றிக்காக, அல்லும் பகலும் அயராது பாடுபட்டு உழைத்த கழகத் தோழர்களுக்கும், கூட்டணிக் கட்சித் தொண்டர்களுக்கும், பெரியோர்களுக்கும், பெற்றநல் தாய்மார்களுக்கும், வாக்களித்த வாக்காளப் பெருமக்களுக்கும் எனது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆற்காடு சட்டமன்றத் தொகுதி, கணியம்பாடி ஒன்றியத்துக்கு உட்பட்ட கம்மசமுத்திரம் கிராம கூட்டுறவு பகுதிநேர நியாய விலைக் கடையைத் தரம் உயர்த்தி, முழுநேர கூட்டுறவு நியாய விலைக் கடையாக மாற்ற நடவடிக்கை மேற்கொண்ட மனிதநேயம் கொண்ட எங்கள் மாதரசி, தங்கத் தாரகை, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவிக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. டில்லி பாபு. நீங்கள் இதுவரை 5 துணைக் கேள்விகள் கேட்டிருக்கிறீர்கள். இது 6 ஆவது துணைக் கேள்வி. (குறுக்கீடு) சொல்லுங்கள்.*

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய மக்களுக்கான கேள்விகளைத்தான் நான் கேட்டுக்கொண்டிருக்கின்றேன். எனது தொகுதிக்கான கேள்வி அல்ல. தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய மலைப் பகுதிகளில் வாழக்கூடிய மலைவாழ் மக்கள், குறிப்பாக 70 குடும்ப அட்டைகள் அல்லது 80 குடும்ப அட்டைகள் உள்ள கொல்லிமலை, வெள்ளிமலை, பச்சைமலை, ஆனைமலை, பவளமலை இப்படி இருக்கக்கூடிய பல்வேறுபட்ட மலைப் பகுதிகளில் 8 கி.மீ., 10 கி.மீ. அல்லது 12 கி.மீ. தூரம் நடந்து வந்தால்தான் ரேஷன் கடைகளிலே பொருட்களை வாங்க முடியும். அப்பேற்பட்ட கிராமங்களுக்கு—எனது தொகுதியிலேகூட மண்ணூர் கிராமத்திலிருந்து 10 கி.மீ. தூரம் நடந்து சித்தேரிக்கு வந்துதான் பொருட்களை வாங்க வேண்டிய அவல நிலை இருக்கிறது. சிறப்பு நிகழ்வாகக் கருதி புதிய பகுதிநேரக் கடைகளை அளிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*



2011 ஆகஸ்ட் 23]

**மாண்புமிகு திரு. புத்திசந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க—மலைப் பகுதிகளில் குடும்ப அட்டைகளைத் தனியாகப் பிரிப்பதற்கு அரசாணை உண்டு—புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் எடுத்துச் சொல்லி, நிச்சயமாக மலைப் பகுதிகளிலே பகுதிநேர நியாய விலைக் கடையாக இருந்தாலும் சரி, முழுநேர நியாய விலைக் கடையாக இருந்தாலும் சரி, அமைத்துக் கொடுக்க ஆவன செய்யப்படும் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.சி.டி. பிரபாகர் அவர்கள்.*

**திரு. ஜே.சி.டி. பிரபாகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செய்யத்தக்க திராணி இருக்கும்போது அதைச் செய்யத்தக்கவர்களுக்குச் செய்யாமல் இராதே" என்றும், "ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான்" என்றும் பரிசுத்த வேதாகமம் சொல்லுகிறது. நல்ல பணிகளை நாளும் நிறைவேற்றுவதன் மூலமாக புண்ணியங்களைச் சேர்த்து வருகிற புனிதத் தலைவி, புரட்சித் தலைவி வில்லிவாக்கம் தொகுதி, பலராமபுரம் தொழுநோயாளிகள் ஒரு பிரச்சினையைக் கொண்டு வந்தார்கள். நடந்து சென்று நியாய விலைக் கடையிலே ரேஷன் பொருட்களை வாங்குவதற்கு எங்களுக்குச் சிரமமாக இருக்கிறது; எனவே, எங்களுக்காக ஒரு கடை தனியாக வேண்டுமென்று கேட்டார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு 2 மாதங்களுக்கு முன்பாக, அன்றைய மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் மூலமாக அந்தச் செய்தி தெரிவிக்கப்பட்டு, கருணை உள்ளத்தோடு அம்மா அவர்கள் அளித்த உத்தரவின்பேரிலே 24 மணி நேரத்தில் கடை பார்க்கப்பட்டு, 48 மணி நேரத்திலே Video Conferencing மூலமாக அந்த மக்களுக்கென்று தனியாக ஒரு கடையைத் திறந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டில் இதுவரை இல்லாத ஒரு சாதனை; இந்தியத் திருநாட்டில் தொழு நோயாளிகளுடைய கஷ்டத்தைப் போக்குவதற்காக, சிரமத்தை நீக்குவதற்காக ஒரு கடை தமிழ்நாட்டிலேதான் முதன் முதலிலே நம்முடைய புனிதத் தலைவி, புரட்சித் தலைவி அம்மா

[2011 ஆகஸ்ட் 23

அவர்களுடைய திருக்கரங்களாலே, Video Conferencing மூலமாக திறந்து வைக்கப்பட்டது. அன்னை தெரசா வந்துபோன பகுதி அந்த பலராமபுரம்—வில்லிவாக்கம் பகுதி. அந்தப் பகுதி மக்கள் அன்றைக்குச் சொன்னார்கள், 'அன்னை தெரசாவைப் பார்த்த மகிழ்ச்சியைப் போல் புரட்சித் தலைவி அம்மா அவர்களை Video Conferencing—லே பார்த்து நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம்' என்று சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் கடை இன்றைக்கு நன்றாக இயங்கி வருகிறது. அதற்குப் பக்கத்திலே இருக்கக்கூடிய வள்ளியம்மை நகர், காமராஜ் நகர், அம்மன்குட்டை பகுதி மக்கள், "அந்தக் கடையிலே நாங்களும் வாங்கிக் கொள்கிறோம்; அது பகுதி நேரக் கடையாக ஒரு நாள் இயங்குகிறது; நாங்களும் வாங்கிக் கொள்கிறோம்; எங்களுக்கு ஆட்சேபணை இல்லை" என்று அவர்கள் விரும்புகிறார்கள். அந்தக் கடையை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொடுத்ததற்காக அம்மா அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதை முழுநேரக் கடையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக நான் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. புத்திசந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதன்பேரில், இதுகுறித்து விசாரணை செய்து சாத்தியக்கூறுகள் இருப்பின் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.

**திரு. ந. நஞ்சப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள அனைத்துப் பகுதிநேர நியாய விலைக் கடைகளையும் முழுநேர நியாய விலைக் கடைகளாக மாற்ற அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.



2011 ஆகஸ்ட் 23]

**மாண்புமிகு திரு. புத்திசந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அனைத்துப் பகுதி நேர நியாய விலைக் கடைகளையும் முழுநேரக் கடைகளாக்க அரசு ஆவன செய்யுமா என்று கேட்டிருக்கிறார்கள். அதனதன் தன்மைக்கேற்ப அவற்றை முழுநேரக் கடைகளாக்க சாத்தியக்கூறுகள் இருப்பின் இந்த அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளவங்கோடு தொகுதியில் கடையாலுமூடு பகுதியில் மலையோரப் பகுதிகள் இருக்கின்றன. அங்கேயும் இதே பிரச்சினை இருக்கிறது. மக்கள் வெகுதூரம் சென்று, பொருட்களை நியாய விலைக் கடைகளில் வாங்கச் செல்ல வேண்டியிருக்கிறது. அவ்வாறு கார்டுகளின் எண்ணிக்கையைக் குறைத்து, அங்கே அதிகமான ரேஷன் கடைகளை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும், விடுபட்ட நியாய விலைக் கடைகள் அனைத்திலும் மின் தராசு அமைக்கவேண்டுமென்ற என் கோரிக்கையை ஏற்று, அரசு எடுத்த முயற்சிக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன் அவர்கள்.

**திரு. சி. மைக்கேல் ராயப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது ராதாபுரம் தொகுதி மிகவும் அதிகமான கிராமங்கள் உள்ள தொகுதியாகும். இங்குள்ள நியாய விலைக் கடைக்கு ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் சுமார் 2 கிலோ மீட்டர், 3 கிலோ மீட்டர் தூரம் சென்றுதான் பொருட்களை வாங்க வேண்டியிருக்கிறது. எனவே, அந்தக் கிராமங்களில் பகுதிநேர நியாய விலைக் கடைகள் அமைத்துத் தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. புத்திசந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டுக்கொண்ட இந்தக் கேள்விகளுக்கு நான் முதலில் சொன்ன பதில்தான். அந்தப்

[2011 ஆகஸ்ட் 23

பகுதியிலே இருக்கின்ற மக்களுடைய கோரிக்கைகளுக்கேற்ப, மனுக்கள் வரப்பெற்றால் பகுதிநேரக் கடைகள் அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. நாகராஜன் அவர்கள். உங்களுக்கு இது முதல் துணைக் கேள்வி.

**திரு. கே.பி. நாகராஜன்:** வணக்கத்திற்குரிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வணங்கும் அன்னை, நடமாடும் மக்கள் தெய்வம், போற்றுதலுக்குரிய மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர், கழகத்தினுடைய நிரந்தரப் பொதுச் செயலாளர் மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்பாதங்களிலே (மேசையைத் தட்டும் ஒலி) கோடானுகோடி மலர்களை வைத்து, என்னுடைய நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள், புதிதாக தொகுதி சீரமைப்பிலே உருவாக்கப்பட்ட மயிலம் சட்டமன்றப் பேரவைத் தொகுதியிலே என்னை வேட்பாளராக அறிமுகப்படுத்தி, 21 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்திலே என்னை வெற்றி பெறச் செய்து, இந்த 14—வது மாமன்றத்திலே எனக்கு பேச வாய்ப்பளித்தமைக்கு மீண்டும் ஒரு முறை மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி என்னுடைய கேள்வியைத் தொடங்குகிறேன்.

எனது தொகுதியிலே பெரியதச்சூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலேயிருந்து, 2 கிலோ மீட்டர் தொலைவிலே இருக்கக்கூடிய விநாயகபுரம் என்ற கிராமத்திலே பகுதிநேர நியாய விலைக் கடையை உருவாக்குவதற்காக கடந்த மைனாரிட்டி தி.மு.க. அரசிலே எல்லா விதிகளும் சரி செய்யப்பட்டு, அங்கே இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்ததனால் அந்தக் கடை செயல்படாமல் நிறுத்தப்பட்டுள்ளது. அங்கே 130 குடும்ப அட்டைகள் உள்ளன. 150 குடும்ப அட்டைகள் இருந்தால்தான் அது நடைமுறைப்படுத்தப்படும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சொல்லியுள்ளார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே அதற்குரிய அனைத்து விவரங்களும் சரியான முறையிலே கொடுக்கப்பட்டுள்ளது. 130 குடும்ப அட்டைகள் இருக்கக்கூடிய அந்தப் பகுதியில் பகுதிநேர நியாய விலைக் கடை செயல்பட அம்மா அவர்கள் அரசு பரிசீலனை செய்து அதற்கு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.



2011 ஆகஸ்ட் 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. புத்திசந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதன்பேரில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, சாத்தியக்கூறுகள் இருப்பின் ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்வி கேட்டவர்களுக்குத்தான் இன்னொரு துணைக் கேள்வி. உங்களுக்கு ஒரு துணைக் கேள்வி கேட்கத்தான் அனுமதி கொடுக்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்கும், ஏழை எளிய மக்களுக்கு நியாயமான விலையில் உணவுப் பண்டங்கள், அத்தியாவசியப் பண்டங்கள் கிடைப்பதற்காகத்தான் நியாய விலைக் கடைகள் தோற்றுவிக்கப்பட்டன.

அந்த அடிப்படையில் நியாய விலைக் கடைகள் அதிக தூரத்தில் இருக்கிற காரணத்தால் பகுதிநேரக் கடைகள் நூற்றுக் கணக்கிலே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அந்தப் பகுதிநேரக் கடைகளை எல்லாம் முழுநேரக் கடைகளாக மாற்ற திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன். ஏனென்று சொன்னால், உணவுப் பொருட்கள் விநியோகத்திற்கான அடிப்படைக் கட்டமைப்புகளை வலுவாக மாற்றினால்தான் அரசினுடைய கொள்கையான நுகர்வோருக்கு நியாயமான விலையில் உணவுப் பொருட்களைக் கொடுப்பதற்கான வாய்ப்புகள் ஏற்படும். எனவே, அந்த அடிப்படையில் அனைத்துப் பகுதிநேரக் கடைகளையுமே முழுநேரக் கடைகளாக மாற்றுவதற்குத் திட்டம் இருக்கிறதா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11—00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

[2011 ஆகஸ்ட் 23

**மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் தமிழகத்தில் இருக்கின்ற பகுதி நேரக் கூட்டுறவுக் கடைகளை முழு நேரக் கூட்டுறவுக் கடைகளாக மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கின்றதா என்று கேட்கிறார்கள். ஒரு முழு நேரக் கடை செயல்படவேண்டுமென்றால், 500 குடும்ப அட்டைகள் கண்டிப்பாக இருக்கவேண்டுமென்று அரசினுடைய ஆணையிருக்கிறது. பகுதிநேரக் கடைகள் வேண்டுமென்று பொதுமக்கள் கோரிக்கைகளை வைக்கின்றபோது, தாய்க் கடையிலேயிருந்து, ஒன்றரை கிலோ மீட்டர் தூரம் இருக்கவேண்டும். பகுதிநேரக் கடைகளுக்குக் குறைந்தது 150 குடும்ப அட்டைகள் இருக்கவேண்டுமென்று அரசினுடைய ஆணையிருக்கிறது. பொது மக்களுடைய வேண்டுகோளையேற்று, 150 குடும்ப அட்டைகள் இருக்கின்ற பகுதிகள், தாய்க் கடையிலேயிருந்து ஒன்றரை கிலோ மீட்டர் தூரத்திலே இருக்கின்ற பகுதிகளில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே பகுதிநேரக் கடைகளைத் திறக்க அனுமதி வழங்கலாமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவுரை வழங்கியிருக்கிறார்கள். 150 குடும்ப அட்டைகளுக்குக் குறைவாக இருக்கின்ற பகுதிகளிலே பகுதிநேரக் கடைகள் வேண்டுமென்று பொது மக்கள் கோரிக்கைகள் வைக்கின்றபோது,—அவர்களுடைய வசதியைப்பொறுத்து, ஒன்றரை கிலோ மீட்டர் தூரத்திற்குக் குறைவாக இருக்கின்ற பகுதிகளிலே, 150 குடும்ப அட்டைகளுக்குக் குறைவாக இருக்கின்ற பகுதிகளிலே அவர்களுடைய கோரிக்கைகள் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகப் பரிந்துரை செய்யப்பட்டு அரசினுடைய கவனத்திற்கு வருகின்றபோது, அரசின் சார்பிலே உரிய ஆணைகள் வழங்கப்பட்டு, அவர்களுக்கும் பகுதிநேரக் கடைகளைத் திறந்து வைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்கெனவே உரிய அறிவுரைகளை வழங்கியிருக்கிறார்கள் என்பதை இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]



2011 ஆகஸ்ட் 23]

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### பவானி தொகுதி, வரதநல்லூர் ஊராட்சி, தாளகுளம் ஏரியில் ஏராளமான மீன்கள் திடீரென்று இறந்ததால் ஏற்பட்டுள்ள நிலை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பவானி தொகுதி, வரதநல்லூர் ஊராட்சி எல்லைக்குட்பட்ட தாளகுளம் ஏரியில் ஏராளமான மீன்கள் திடீரென்று இறந்ததால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. நாராயணன் அவர்கள் சட்டமன்றப் பேரவை விதி 55–ன்கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து மாண்புமிகு உறுப்பினர் சுருக்கமாக மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம்.

***திரு. பி.ஜி. நாராயணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் காவல் தெய்வம், எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி இந்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பினை அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். பவானி தொகுதியில் வரதநல்லூர் ஊராட்சி எல்லைக்குள் தாளகுளம் ஏரி உள்ளது. கடந்த மூன்று நாட்களுக்கு முன்பு ஏரித் தண்ணீரில் விஷத்தை யாரோ கலந்துவிட்டார்கள். இதனால் அந்த ஏரித் தண்ணீரில் வாழும் மீன்கள் அனைத்தும் இறந்தது குறித்து அந்தப் பகுதியில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை பற்றி மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

பல்வேறு சிறப்புத் திட்டங்கள் மற்றும் சட்டங்களால் தமிழகத்தை வாழ வைத்துக்கொண்டிருக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனைத்து உயிரினங்களும் துன்பமின்றிப் பாதுகாப்பாக வாழவேண்டுமென்று எண்ணுகிறார்கள். ஏரித் தண்ணீரில் நச்சுத் தன்மைக்கொண்ட பொருள் ஏதாவது கலக்கப்பட்டுள்ளதா என்பதை அறிய உரிய விசாரணை செய்து அதற்குக் காரணமானவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நச்சுத் தன்மைவாய்ந்த தண்ணீர் அங்கேயிருப்பதால் அந்தப் பகுதியில் மேய்ந்து கொண்டிருக்கும் கால்நடைகள் அந்த நீரை அருந்தினால் அவை பாதிக்கப்படும் சூழ்நிலை இருப்பதால், நச்சுத்

தன்மையைப் போக்குவதற்கு உரிய வழிவகை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். இந்தச் சம்பவம் நடந்ததைக் கேள்விப்பட்டதும், உடனே மாவட்ட ஆட்சித் தலைவர், கோட்டாட்சியர், வட்டாட்சியர், வட்டார வளர்ச்சி அலுவலர் போன்ற சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகள் அத்துணைபேரும் சம்பவ இடத்திற்கு வந்து விட்டார்கள். நானும், சம்பவ இடத்திற்குச் சென்று பார்வையிட்டேன். இது எதைக் காட்டுகிறது என்று சொன்னால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இயந்திரம் வேகமாகவும், சுறுசுறுப்பாகவும் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதைத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, மீன்கள் இறந்துவிட்டதால் ஏற்கெனவே அந்த ஏரியைக் குத்தகைக்கு எடுத்த நபருக்கு உரிய நிவாரணம் வழங்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11–05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளமான தமிழகத்தை வறட்சி மாநிலமாக்கி, தன் குடும்பத்திற்காகச் சுரண்டிக் கொடுத்த தீய சக்தியை வீழ்த்தி, மூன்றாம் முறையாக தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதைக்கு அழைத்துச் செல்லும் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மனதால் கற்பனை செய்யமுடிந்த எதையும், இதயத்தால் நம்ப முடிந்த எதையும், சாதிக்க முடியும் என்று சாதித்துக் காட்டிய மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களை மீண்டும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் ஒன்றியம், சுனாமிப் பேரலையின் கோர அரக்கனுக்குப் பல ஆயிரக்கணக்கான இன்னுயிர்களைக் காவு கொடுத்த அக்கரைப்பேட்டை என்னும் மீனவக் கிராமத்தில் பிறந்த எளியனாகிய என்னை, வரலாற்றுப் பாரம்பரியமிக்க இந்த மாமன்றத்திற்குக் கொண்டு வந்து, முகவரி தந்த, சரித்திரம் தன் சந்தன எழுத்துக்களால், சாமரம் வீசி கவுரப்படுத்திக் கொண்டிருக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களுக்கு முதலில் எனது நன்றியைத் பொற்பாதங்களில் பணிந்து சமர்ப்பித்துக்கொள்கின்றேன்.





சுனாமிப் பேரலைகள் தமிழகத்தைத் தாக்கியபோது மருத்துவமனையில் படுத்துக்கொள்ளாமல், சுனாமியைவிட வேகமாக வந்து நிவாரணப் பணியாற்றிய தங்களைப்பற்றி நினைக்கும்போதெல்லாம், இரத்தத்திற்குப் பதிலாக நன்றியினால் நிரம்பி வழியும் எங்கள் மீனவ மக்களின் இதயம், தங்களை அன்னை தெரசாவாகப் பார்க்கிறது, அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகம் இப்போது தங்கள் தலைமையின்கீழ் ஒரு தொலைநோக்குப் பார்வையுடன் சென்று கொண்டிருக்கிறது என்பதை தமிழக நலம் விரும்பும் வரலாற்று அறிஞர்கள் வரவேற்கிறார்கள். ஆனால், தங்கள் வரலாறுதான் தமிழக வரலாறு என்று நினைத்துக்கொண்டிருக்கும் ஒருசிலர் மக்களைத் திசை திருப்ப நினைக்கிறார்கள். நெருப்பாற்றை பஞ்சுப் பாலம் கொண்டு கடக்க நினைக்கும் இவர்களது எண்ணம் ஒருபோதும் ஈடேறப் போவதில்லை. “இராமன் செய்ததைச் செய், கிருஷ்ணன் சொன்னதைச் செய்” என்பார்கள். ஆனால், மாண்புமிகு அம்மா, நாங்கள் எப்போதும் கிஞ்சித்தும் துரோகத்திற்கு இடமின்றி உண்மையாக, உளப்பூர்வமாகத் தங்கள் கண் அசைவையே கட்டளையாக ஏற்று நடப்போம், அம்மா!

அம்மா! அமெரிக்கர்களுக்கு காசு சுகமானது, பிரெஞ்சுக்காரர்களுக்கு உணவு சுகமானது, ஜப்பானியர்களுக்கோ உழைப்பு சுகமானது, ஆனால், தமிழக மக்களுக்கு என்றும் நீங்கள் முதல்வராக இருப்பது சுகமானது, அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, மாண்புமிகு அம்மா அவர்களை நன்றியோடு மீண்டும் வணங்கி எனது பதிலுரையைத் தொடங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானி தொகுதி, வரதநல்லூர் ஊராட்சி எல்லைக்குட்பட்ட தாளகுளம் கிராமத்திலுள்ள தாளகுளம் ஏரியானது, ஊராட்சிக்குச் சொந்தமான ஏரியாகும். இந்த ஏரிக்கு மேட்டூர் வலது கரை வாய்க்காலில் இருந்து தண்ணீர் வருகிறது. ஏரியின் மீன்பாசி ஏலமானது ஊராட்சியின்மூலம் ஊராட்சி ஒன்றிய ஆணையரால் விடப்படுகிறது. இந்த ஆண்டிற்கான 1,421 பசலி, மீன்பாசி குத்தகை வரதநல்லூரைச் சேர்ந்த திரு. சுப்பிரமணி, த./பெ. கருப்பண்ணக் கவுண்டர் என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

தாளகுளம் ஏரியில் 15–8–2011 அன்று மீன்கள் இறந்ததாகப் புகார் பெறப்பட்டு, ஊராட்சி ஒன்றிய ஆணையர் மற்றும் காவல் துறைமூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. காவல் துறைமூலம் நீரின் மாதிரி (water sample) எடுக்கப்பட்டு கோயம்புத்தூர் தடய அறிவியல் ஆய்வகத்திற்குப் பரிசோதனைக்காக அனுப்பப்பட்டது. இந்த ஏரியில் சுமார் 500 கிலோ மீன்கள் இறந்ததாக ஊராட்சி

[திரு. கே.ஏ. ஜெயபால்] [2011 ஆகஸ்ட் 23

ஒன்றிய ஆணையர் தெரிவித்துள்ளார். காவல் துறை உதவியுடன் ஊராட்சி ஒன்றிய அலுவலர்கள் இறந்த மீன்களை கடந்த 16–8–2011 அன்றே குழிதோண்டிப் புதைத்துள்ளனர். ஏரியின் தண்ணீரை பொதுமக்கள் மற்றும் கால்நடைகள் பயன்படுத்தாமல் இருக்கும்பொருட்டு காவல் துறை மற்றும் வருவாய் துறையின்மூலம் ஏரிப் பகுதியில் ரோந்துப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்கூறிய ஏரியில் ஈரோடு மீன் துறை உதவி இயக்குநர் (உள்நாட்டு மீன் வளம்), அவர்களால் 21–8–2011 அன்று நேரடி ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. 15–8–2011 அன்று ஏரியின் நீர் மட்டம் மிகக் குறைவாக இருந்ததால், மீன்கள் இறந்ததைத் தொடர்ந்து ஏரிக்கு நீர் திறந்துவிடப்பட்டு, நீர் மட்டம் அதிகரிக்கப்பட்டது. 15–8–2011 தேதிக்குப் பின்னர் மீன்கள் ஏதும் இறக்கவில்லை. மேலும், தற்போது நீரில் மீன்கள் உயிருடன் உள்ளதும் தெரிய வருகிறது. ஈரோடு மாவட்ட ஆட்சியர் அவர்களும் 20–8–2011 அன்று மாலை ஏரியை ஆய்வு செய்தார். கோயம்புத்தூர் தடய அறிவியல் ஆய்வக அறிக்கையில் மேற்காணும் ஏரியின் தண்ணீரில் விஷம் ஏதுமில்லை (Poison not detected) என தெரிவிக்கப்பட்டுள்ளது. 15–8–2011 அன்று, ஏரியில் தண்ணீர் குறைவாக இருந்ததால் தண்ணீரில் பிராணவாயு குறைபாடு (oxygen depletion) ஏற்பட்டு மீன்களுக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டு இறந்திருக்கலாம்.

மேலும், தற்போது ஏரிக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டு நீர் மட்டம் அதிகரித்துள்ளதால், பிராணவாயு அளவு அதிகரித்து மீன்கள் இறப்பு அதற்குப் பின்னர் நிகழவில்லை என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. நாராயணன் அவர்கள்.

**திரு. பி.ஜி. நாராயணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரையில், ஏரித் தண்ணீரில் விஷம் கலக்கப்படவில்லை என்று சொன்னார்கள். இந்த அறிவிப்புக்குப் பிறகு குறிப்பிடப்பட்ட பகுதியிலுள்ள பதற்றங்கள் நிச்சயமாகக் குறையும். இந்த கவன ஈர்ப்பு அறிவிப்பு கொண்டுவர எனக்கு வாய்ப்புக் கொடுத்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2011 ஆகஸ்ட் 23]

# 3. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

## தமிழ்நாடு தமிழ்ப் புத்தாண்டு (விளம்புகை) நீக்கச் சட்டமுன்வடிவு, 2011

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ்ப் புத்தாண்டு (விளம்புகை) நீக்கச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ்ப் புத்தாண்டு (விளம்புகை) நீக்கச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் இந்தச் சட்டத்தை நிலைக் குழுவிற்கு அனுப்பி இன்னும் சற்று ஆய்வுகளை மேற்கொண்டு செயல்படுத்தினால் சிறப்பாக இருக்குமென்று கருதுகிறோம். எனவே, இந்தச் சட்டத்தை அறிமுக நிலையில் எதிர்த்து, நிலைக் குழுவிற்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

***திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை பண்பாடு தொடர்பான பிரச்சினை. ஏற்கெனவே சட்டமன்றத்தில் இதுகுறித்துப் பேசி, ஒரு தீர்மானத்தையும் அவர்கள் நிறைவேற்றியிருக்கிறார்கள். இதை நீங்கள் சற்று ஆய்வு செய்து...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இந்தச் சட்ட முன்வடிவை அறிமுக நிலையில் ஆதரிக்கிறீர்களா அல்லது எதிர்க்கிறீர்களா என்பதை மட்டும் சொல்லிவிட்டு, அமருங்கள். சட்டமுன்வடிவை ஆய்வு செய்யும்போது மற்ற கருத்துகளைத் தெரிவிக்கலாம்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை நிலைக் குழுவிற்கு அனுப்பி, அதற்குப் பிறகு விவாதித்து முடிவெடுக்கலாம் என்று அறிமுக நிலையில் நான் இதை ஆட்சேபிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 4. மானியக் கோரிக்கைகள், 2011–2012, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 41– வருவாய்த் துறை**

**(ஆ) கோரிக்கை எண் 51– இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு**

**(இ) கோரிக்கை எண் 9 – பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை**

. . .

### (அ) கோரிக்கை எண் 41 – வருவாய்த் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2011–2012 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 41 –வருவாய்த் துறை. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“வருவாய்த் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.4,115,58,42,000/–, மூலதனக் கணக்கில் ரூ.382,61,04,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்”

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 48, திரு. வி.சி. சந்திரகுமார்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“வருவாய்த் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,115,58,42,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.382,61,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1186, திரு. அ. கணேஷ்குமார்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“வருவாய்த் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,115,58,42,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.382,61,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ. 100/– குறைக்க வேண்டும்.”

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2145, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய்த் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,115,58,42,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.382,61,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ. 100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2454, திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய்த் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,115,58,42,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.382,61,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 736, திரு. ம. கலை அரசு.

**திரு. ம. கலை அரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், அண்பூண்டி கிராமத்தில் பல ஆண்டுகளாக வீடுகளைக் கட்டிக் கொண்டிருக்கும் 50–க்கும் மேற்பட்ட ஏழை மக்களுக்கு பலகாலமாக வீட்டுமனைப் பட்டா வழங்காமல் இருப்பதால், அவர்களுக்குப் பட்டா வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய்த் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,115,58,42,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.382,61,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 968, திரு. சி. மைக்கேல் ராயப்பன்.



**திரு. சி. மைக்கேல் ராயப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமிப் பேரலையின் காரணமாக பாதிக்கப்பட்ட திருநெல்வேலி மாவட்டம், லெவிஞ்சிபுரம், விஜயாபதி, கூத்தன்குழி, நவ்வலடி, உவரி, க. உவரி, குப்பம் ஆகிய ஊராட்சிகளுக்குட்பட்ட பகுதிகளைச் சார்ந்த மக்களுக்கு EJRP மற்றும் RGRP திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென மாவட்ட நிருவாகத்தால் பரிந்துரை செய்யப்பட்டு, நிலுவையில் உள்ள நபர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய்த் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,115,58,42,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.382,61,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1554, திரு. வி. முத்துக்குமார்.

**திரு. வி. முத்துக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விருத்தாசலம் தொகுதியில் உள்ள வருவாய்க் கிராமங்களில் கிராம நிருவாக அலுவலர்கள், அவர்கள் பணிபுரியும் கிராமங்களிலேயே தங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய்த் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,115,58,42,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.382,61,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1568, திரு. அ. சவுந்தரராசன்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வருவாய்த் துறையில் பணிபுரியும் ஊழியர்களின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*"வருவாய்த் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,115,58,42,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.382,61,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1670, திரு. எஸ்.பி. முத்துக்குமரன்.

**திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டை சட்டமன்றப் பேரவைத் தொகுதியில் சுமார் 30,000–க்கு மேற்பட்டோர் மனைப் பட்டா கோரி காத்திருக்கின்றனர். அவர்களுக்கு மனைப் பட்டா வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*"வருவாய்த் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,115,58,42,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.382,61,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1746, திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குமரி மாவட்டத்தில் வருவாய்த் துறையில் தாலுகா அலுவலகம், கோட்டாட்சியர் அலுவலகம் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் பணியாளர் பற்றாக்குறை காரணமாக பொதுமக்களின் அவசரப் பணிகள் முடங்கி பிரச்சினைகள் ஏற்படுவதைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*"வருவாய்த் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,115,58,42,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.382,61,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1771, திரு. எஸ்.ஆர். பார்த்திபன்.



**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், மேட்டூர் நகரில் பல ஆண்டுகளாக வசித்து வருபவர்களுக்குப் பட்டா வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*"வருவாய்த் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,115,58,42,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.382,61,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1778, செல்வி கே. பாலபாரதி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1822, திரு. எஸ். ஜாண் ஜேக்கப்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வருவாய்த் துறை அலுவலகங்களில் தேவைக்கேற்ப பணியாளர்கள் இல்லாத காரணத்தால் பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, போதிய பணியாளர்களை நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*"வருவாய்த் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,115,58,42,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.382,61,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1843, திரு. து. முருகேசன்.

**திரு. து. முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செங்கல்பட்டு தொகுதி, 69 சாஸ்திரம் பாக்கம் கிராமம், மேய்க்கால் புறம்போக்கு சர்வே எண் 15/2 0.70 சென்ட் நிலம் கால்நடைகளுக்கு ஒதுக்கப்பட்ட இடமாகும். மேலும், இந்தக் கிராமத்தில் சர்வே எண் 19.55 வரை சுமார் 40 ஏக்கர் நிலம் இருப்பதாகத் தெரிவிக்கிறார்கள். இதில், இப்போது 15/2–ல் உள்ள 0.70 சென்ட் நிலத்தை அத்துமீறி ஆக்கிரமிப்பு செய்துள்ளதை அகற்ற

நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய்த் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,115,58,42,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.382,61,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1902, திரு. ந. நஞ்சப்பன்.

**திரு. ந. நஞ்சப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் விவசாயிகள் நீண்டகாலமாகச் சாகுபடி செய்யும் அனைத்து நிலங்களுக்கும் பட்டா வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய்த் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,115,58,42,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.382,61,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1947, திரு. க. பாலகிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1977, திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மக்கள் நலத் திட்டங்கள் பயனாளிகளுக்கு எளிதாகக் கிடைக்கும் வகையில் நிபந்தனைகளைத் தளர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய்த் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,115,58,42,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.382,61,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2028, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்துறைப்பூண்டி தொகுதி, களப்பாள் ஊராட்சியைத் தலைமையிடமாகக் கொண்டு வருவாய் வட்டம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய்த் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,115,58,42,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.382,61,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2085, திருமதி ர. சுபா.

**திருமதி ர. சுபா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அனைத்து பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கும் சாதிச் சான்றிதழ் மற்றும் வருமானச் சான்றிதழ் விரைவில் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய்த் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,115,58,42,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.382,61,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ. 100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2326, திரு. ப. பார்த்தசாரதி.

**திரு. ப. பார்த்தசாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விருகம்பாக்கம் தொகுதி முழுவதும் வீட்டுமனைப் பட்டா இல்லாமல் சுமார் 20 ஆண்டுக் காலமாக மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய்த் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,115,58,42,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.382,61,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2335, திரு. கு. நல்லதம்பி.

**திரு. கு. நல்லதம்பி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எழும்பூர் தொகுதிக்கு உட்பட்ட சேத்துப்பட்டு, ஜெகநாதபுரம். எம்.எஸ். நகர், பிருந்தாவனம், சாலைமாநகர் ஆகிய பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய்த் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,115,58,42,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.382,61,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2602, திருமதி எஸ். விஜயதரணி.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விளவங்கோடு தொகுதியில் கடையாலுமூடு பேரூராட்சிக்குட்பட்ட சிற்றாறு அணை ஓரங்கள், நீர்வழிப் புறம்போக்கு, சாலையோர, மலையோர, வன ஓரப் பகுதிகளில் வசிக்கும் ஏழை எளிய மக்களுக்கு மாற்று இடங்களில் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கி, இலவச வீடுகளும் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வருவாய்த் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,115,58,42,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.382,61,04,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



## (ஆ) கோரிக்கை எண் 51–இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 51–இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.704,78,48,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 49, திரு. வி.சி. சந்திரகுமார்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.704,78,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1326, திரு. வி. முத்துக்குமார்.

**திரு. வி. முத்துக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.704,78,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1187, திரு. அ. கணேஷ்குமார்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.704,78,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1798, செல்வி கே. பாலபாரதி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1828, திரு. எஸ். ஜாண் ஜேக்கப்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குமரி மாவட்டத்தில் மழைக் காலங்களில் இயற்கைச் சீற்றத்தால் கடலோரக் கிராமங்கள் மிகவும் பாதிப்பு அடைகின்றன. அதனைத் தடுப்பதற்கு தூண்டில் வளைவுகள் அமைப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.704,78,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1903, திரு. ந. நஞ்சப்பன்.

**திரு. ந. நஞ்சப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடும் வறட்சி, பெரும் புயல், பெருமழை ஆகியவற்றால் ஏற்படும் பாதிப்புகளைச் சமாளித்திட வரும்முன் காத்திடும் வகையில் தொலைநோக்குப் பார்வையுடன் திட்டங்களை வகுத்திட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.704,78,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2084, திருமதி ர. சுபா.

**திருமதி ர. சுபா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இயற்கைச் சீற்றத்தினால் ஏற்படும் துயரங்களை விரைவில் துடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.704,78,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2169, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் இயற்கைச் சீற்றத்தினால் பாதிக்கப்படுகின்ற வீடுகளுக்கு, உடைமைகளுக்கு வழங்கப்படும் நிவாரணத் தொகையை உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.704,78,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2304, திரு. ர.ம. பாபு முருகவேல்.

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆரணி தொகுதியில் இயற்கைச் சீற்றங்களால் வீடு இடிந்து பாதிப்புக்குள்ளாகும் மக்களுக்கு வீடுகள் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோ704,78,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2550, திரு. எஸ்.பி. முத்துக்குமரன்.

**திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மழை வெள்ளக்காலங்களை முன்கூட்டியே பொதுப் பணித் துறைமூலம் கண்டறிந்து தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.704,78,48,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

## (இ) கோரிக்கை எண் 9—பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 9— பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.499,89,62,000/—, மூலதனக் கணக்கில் ரூ.36,09,32,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/— ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 29, திரு. வி.சி. சந்திரகுமார்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற



ரூ.499,89,62,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.36,09,32,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 485, திரு. ஆர். சுந்தர்ராஜன்.

**திரு. ஆர். சுந்தர்ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.499,89,62,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.36,09,32,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/—ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1393, திரு. வி. முத்துக்குமார்.

**திரு. வி. முத்துக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.499,89,62,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.36,09,32,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1162, திரு. அ. கணேஷ்குமார்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற

*ரூ.499,89,62,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.36,09,32,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *2184*, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*“பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.499,89,62,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.36,09,32,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *2478*, திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொள்கை பற்றி” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*“பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.499,89,62,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.36,09,32,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *449*, திரு. பி.வி. கதிரவன்.

**திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “வாடகைக் கட்டடங்களில் இயங்கும் கள்ளர் சீரமைப்புப் பள்ளி விடுதிகளான தேனி மாவட்டம், கூடலூர் பெண்கள் விடுதி, இராயப்பன்பட்டி ஆண்கள் விடுதி, கடமலைக்குண்டு பெண்கள் விடுதி, திண்டுக்கல் மாவட்டம் ஆண்கள் மற்றும் பெண்கள் விடுதிகள்





ஆகியவற்றுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*“பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.499,89,62,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.36,09,32,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”*

*முற்பகல் 11–15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1727*, திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்.

**திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “சேலம் மாநகர், 32–வது கோட்டம், ஜாமியா மசூதி பின்புறம் உள்ள சிறுபான்மையினருக்கு புதிய வீடு கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*“பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.499,89,62,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.36,09,32,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1788*, செல்வி கே. பாலபாரதி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *1808*, திரு. எஸ். ஜாண் ஜேக்கப்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டோருக்குக் கிடைக்கின்ற சலுகைகள், இந்து மதத்தைச் சார்ந்த பிற்படுத்தப்பட்டோருக்கு வழங்குவதுபோல், கிறித்துவ மதம் சார்ந்த பிற்படுத்தப்பட்டோருக்கும் கிடைக்கச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.499,89,62,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.36,09,32,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1928, திரு. சி. மைக்கேல் ராயப்பன்.

**திரு. சி. மைக்கேல் ராயப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள சுயநிதிக் கல்லூரிகளில் பயிலும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித் தொகை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.499,89,62,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.36,09,32,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1945, திரு. க. பாலகிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1970, திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தனியார் துறைகளில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் உள்ளிட்ட அனைவருக்கும் வேலைவாய்ப்பில் இட ஒதுக்கீடு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.499,89,62,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.36,09,32,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1993, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்துறைப்பூண்டி தொகுதி, நெடும்பலம் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.499,89,62,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.36,09,32,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2062, திரு. க. தினகரன்.

**திரு. க. தினகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சூலூரில் பிற்படுத்தப்பட்ட மாணவியர் விடுதி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.499,89,62,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.36,09,32,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2064, திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்த முஸ்லிம் மக்கள் ஹஜ் புனித யாத்திரை செல்ல மானிய உதவியும், விசா போன்ற காரியங்களுக்கு சிறப்பு ஏற்பாடுகளையும் தமிழ்நாடு அரசு செய்து கொடுப்பதுபோல், கிறித்துவ சமுதாய மக்கள் இஸ்ரேலுக்குப் புனிதப் பயணம் செல்ல சிறப்பு உதவித் திட்டம் மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.499,89,62,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.36,09,32,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2308, திரு. ர.ம. பாபு முருகவேல்.

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆரணி நகராட்சிக்குட்பட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதியில் மாணவ, மாணவியருக்கு ஏற்படும் சுகாதாரச் சீர்கேடுகளைக் களையவும், கழிப்பறை வசதிகள் மற்றும் மின்விளக்குகள் சீரமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.499,89,62,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.36,09,32,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2342, திரு. எஸ்.பி. முத்துக்குமரன்.

**திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டை தொகுதியில் உள்ள வெட்டன்விடுதியில் மேல்நிலைப் பள்ளியில் படிக்கும் மாணவர்கள் நலன் கருதி புதியதாக பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.499,89,62,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.36,09,32,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை மற்றும் இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு ஆகியன பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளது. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளது. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை@@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

@ 545 முதல் 601 வரையிலான பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

@@ 602 முதல் 660 வரையிலான பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். இன்று மூன்று மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பெற்றுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் மூன்று மானியக் கோரிக்கைகளின்மீதும் சேர்த்தே பேசலாம். முதலில் விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் தேமுதிகவைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன் அவர்கள்.

**திரு. மு. அருண் சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கறிஞர் தொழிலைச் செய்துவந்த மு. அருண் சுப்பிரமணியன் ஆகிய எனக்கு, தெய்வத்தின் அருளோடும், தமிழக மக்களின் ஆதரவோடும் ஆரம்பிக்கப்பட்ட தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் திருவள்ளூர் மாவட்டப் பொருளாளராகவும், திருவள்ளூர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளராகவும், நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற வேட்பாளராகவும் போட்டியிட வாய்ப்புக் கொடுத்து, அடுத்து வந்த சட்டமன்றத் தேர்தலில் திருத்தணி சட்டமன்ற வேட்பாளராக நிறுத்தி வெற்றிபெறச் செய்த கழகத்தின் நிரந்தரத் தலைவர் "இயன்றதைச் செய்வோம் இல்லாதவர்க்கு" *(மேசையைத் தட்டும் ஒலி)* என்ற தாரக மந்திரத்தை எங்களுக்கு ஊட்டி வளர்க்கும் எங்கள் அண்ணன், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் கேப்டன் அவர்களை வணங்குகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

காஞ்சிபுரத்தில் பிரம்மாண்டமாக நடைபெற்ற வேட்பாளர் அறிமுகக் கூட்டத்தில் திருத்தணி வேட்பாளராக என்னை அறிமுகப்படுத்தி, வெற்றிபெற வாழ்த்துக்கூறிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன்.

என் வெற்றிக்காகப் பாடுபட்ட தே.மு.தி.க. திருத்தணி சட்டமன்றத் தொகுதி நிருவாகிகளுக்கும், தொண்டர்களுக்கும், அனைத்துக் கூட்டணிக் கட்சி நிருவாகிகளுக்கும், தொண்டர்களுக்கும், திருத்தணி சட்டமன்றத் தொகுதியின் அனைத்து வாக்காளர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வருவாய்த் துறையைப்பற்றிப் பேசவேண்டும். வருவாய்த் துறையின் மிக முக்கியமான பணிகளில் ஒன்றான, தமிழகத்தில் தொழில்பூங்கா–சிப்காட் அமைக்க நிலம் கையகப்படுத்துதல், குடிநீர்த் திட்டங்களைச் செயல்படுத்திட நிலம் கையகப்படுத்தி வழங்குதல், நிலக்கரிச் சுரங்கம் வெட்டி அனல் மின் நிலையங்கள் அமைக்க என்.எல்.சி. போன்ற



நிறுவனங்களுக்குத் தேவையான நிலம் கையகப்படுத்திக் கொடுத்தல், தமிழக வீட்டு வசதி வாரியம்மூலம் வீடுகட்ட நிலம் கையகப்படுத்தி வழங்குதல் மற்றும் பல அரசுத் திட்டங்களுக்கு நிலம் கையகப்படுத்திக் கொடுத்தல், அத்துடன் வருவாய்த் துறை தனித் தாசில்தார்கள்மூலம் கையகப்படுத்திய நிலங்களில், நில உரிமையாளர்களுக்கு நிலத்தின் மார்க்கெட் விலை வழங்கிட, நில உரிமையாளர்கள் தொடுக்கும் நீதிமன்ற நில எடுப்பு வழக்குகளை முடிக்க, சட்டத் துறை நியமனம் செய்யும் அரசு வழக்கறிஞரின் உதவியுடன் நீதிமன்ற நில எடுப்பு வழக்குகளில் எதிர்மனு தாக்கல் செய்து தீர்வு காணல், நீதிமன்ற இறுதித் தீர்ப்பின்படி, நிதித் துறையை அணுகி, நிதியைப் பெற்று, நில உரிமையாளர்களுக்குக் கிடைக்க உரிய நீதிமன்றத்தில் பணம் செலுத்துதல் இவை யாவும் வருவாய்த் துறையின் பணிகள் என்பதைத் தெரிவித்துக்கொண்டு என் கன்னிப் பேச்சைத் துவங்குகிறேன்.

*முற்பகல் 11–20*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரிச் சுரங்கம் மற்றும் அனல் மின் நிலையம் அமைக்க நிலம் எடுத்தல். இந்த உன்னதமான, தொலைநோக்குத் திட்டம் தமிழக மாண்புமிகு முதல்வர் அவர்கள், முதல்முறையாகத் தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றபோது, அவரால் மத்திய அரசின் அனுமதியுடன் கொண்டுவரப்பட்ட நல்ல திட்டம். இப்போது மின்சாரம் இல்லையே, மின்சாரம் இல்லையே என்று அவதிப்படக்கூடாது என்ற தொலைநோக்கோடு, ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரிச் சுரங்கம் மற்றும் அனல் மின் நிலையத் திட்டம் இப்போதைய மாண்புமிகு முதல்வர் அவர்களால் சுமார் 18 ஆண்டுகளுக்கு முன்பே கொண்டுவரப்பட்ட ஒரு நல்ல திட்டம். அதற்காக தமிழக அரசு 10,000 ஏக்கர் நிலங்களை முந்திரித் தோப்போடு கையகப்படுத்தியது. அந்தத் திட்டம் தி.மு.க. ஆட்சியிலே கிடப்பில் போடப்பட்டது. அதற்காக வருவாய்த் துறை தனித் தாசில்தார்மூலம், ஏறக்குறைய 22 தாசில்தார்கள்மூலம், ஒரு சென்ட் நிலம் ரூ.100 முதல் ரூ.220 வரையும், குறைந்தபட்சம் நஷ்ட ஈடு கொடுத்ததோடு மட்டுமல்லாமல், ஒரு முந்திரி மரத்திற்கு ரூ.50 முதல் ரூ.350 வரை நஷ்ட ஈடாகக் கொடுத்து 10,000 ஏக்கர் நிலமும், முந்திரி மரங்களும் 1998–1999–இல் கையகப்படுத்தப்பட்டு, நியாயமான நஷ்ட ஈடு கோரி 50 கிராமங்களில் உள்ள நில உரிமையாளர்களால் போடப்பட்ட நில எடுப்பு வழக்குகளில் இதுவரை பதில் மனுகூட கடந்த தி.மு.க.

ஆட்சியிலே நீதிமன்றத்திலே தாக்கல் செய்யப்படவில்லை. N.L.C., நிறுவனமும், T.I.D.C.O., நிறுவனமும், வருவாய்த் துறையும் காலத்தைக் கடத்தி, மக்களைப் பெரும் துன்பத்திற்கு ஆளாக்கியுள்ளன. ஜெயங்கொண்டம் நில எடுப்பு தனிக் கோர்ட் நீதிபதி அவர்களைக் கேட்டால் யாரை நஷ்ட ஈடு வழங்க உத்தரவிடுவது என்று தெரியவில்லை; N.L.C., நிறுவனத்தையா? T.I.D.C.O., நிறுவனத்தையா? அல்லது தமிழக வருவாய்த் துறையையா? பதில் மனு போடாததால் இந்தப் பெரும் குழப்பம். இதனைக் கடந்த தி.மு.க. ஆட்சி திட்டமிட்டே செய்தது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தை மீண்டும் கையிலெடுத்து, போர்க்கால நடவடிக்கையாக நிறைவேற்றி, தமிழக மக்களின் மின் பற்றாக்குறையைப் போக்கிடவும், நிலம் கொடுத்த மக்கள் பயன்பெறவும் உரிய நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை இந்த மாமன்றத்தின் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அருண் சுப்பிரமணியன், அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லும்போது நீங்கள் அமர வேண்டும். பிறகு நீங்கள் மறுபடியும் பேசலாம்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரிச் சுரங்கம் மற்றும் அனல் மின் நிலையத் திட்டத்திற்காக எடுக்கப்பட்ட நில எடுப்புக்கு நஷ்ட ஈடு வருவாய்த் துறையிடம் கேட்பதா? T.I.D.C.O. நிறுவனத்திடம் கேட்பதா? N.L.C. நிறுவனத்திடம் கேட்பதா என்று கேட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வழக்கறிஞராக இருக்கின்றார்கள். வருவாய்த் துறை என்பது நிலம் எடுத்துத் தருகின்ற துறை என்பது அவருக்கு நன்றாகத் தெரியும். யாருக்காக எடுக்கின்றார்களோ, எதற்காக எடுக்கின்றார்களோ அந்த உரிமையாளர்களிடத்தில்தான் நாம் நஷ்ட ஈடு கேட்கமுடியும் என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன் அவர்கள்.



**திரு. மு. அருண் சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்திலே, நிலுவையில் இருக்கின்ற வழக்குகளிலே, நிலம் யாரிடம் இருக்கிறதோ அவர்கள் பதில் மனுவைத் தாக்கல் செய்திருக்கவேண்டும். பதில் மனுவைத் தாக்கல் செய்யாத ஒரே காரணத்திற்காக நீதிபதி அவர்கள் இந்த நிலத்திற்கு நஷ்ட ஈடு வழங்குமாறு நாங்கள் யாரிடம் உத்தரவிடுவது என்று தெரியவில்லை என்று சொன்னதை நான் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். ஆக, பதில் அளித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக, இருங்காட்டுக்கோட்டை, திருப்பெரும்புதூர்—ஓரகடம் சிப்காட் தொழிற்பூங்கா அமைக்க நிலம் ஆர்ஜிதம் செய்தல். இந்தத் திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இரண்டாவது முறையாக முதல்வராகப் பொறுப்பேற்றவுடன், அவர்களின் தொலைநோக்குப் பார்வையில் உதித்த ஒரு மகத்தான நல்ல திட்டம். இளைஞர் சமுதாயத்திற்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தவேண்டும் என்ற நோக்கத்தோடும், பன்னாட்டு நிறுவனங்கள் தமிழகத்தை நோக்கி வரவும், பலநோக்கோடு கொண்டுவரப்பட்ட இந்தத் திட்டம், இந்தியாவிலேயே முதன்மையான தொழிற்பூங்காவாக தமிழ்நாட்டிலுள்ள இருங்காட்டுக்கோட்டை, திருபெரும்புதூர் தொழிற் பூங்கா விளங்குகிறது. இந்தத் தொழிற்பூங்காவில்தான், கையகப்படுத்தப்பட்ட நிலத்தை தொழிற்சாலைகளுக்கு விற்றல், வேலைவாய்ப்பைக் கொடுத்தல், தொழிற்சாலைகளில் பங்கு, கம்பெனிகளில் இருக்கின்ற scrap—ஐ குறைந்த விலைக்கு contract எடுத்தல், இவற்றால் பல ஆயிரம் கோடி ரூபாய் தி.மு.க.வில் ஒரே குடும்பம் சம்பாதித்தது என்பது எல்லோருக்கும் தெரியும். இந்தத் திட்டத்திற்காக, ஒரு சென்ட் நிலத்திற்கு ரூபாய் 100 முதல், ரூபாய் 230 வரை நஷ்டஈடு கொடுத்து, வருவாய்த் துறையால் சிப்காட் நிறுவனத்திற்காகக் கையகப்படுத்தப்பட்ட சுமார் 16 ஆயிரம் ஏக்கர் நிலம் சம்பந்தப்பட்ட 10 ஆயிரம் நில எடுப்பு வழக்குகளில், பாதி வழக்குகளில் சென்னை உயர் நீதிமன்றத்தில் 8–12–2007, 8–1–2008, 3–12–2009, 8–12–2009, 31–8–2010 ஆகிய தேதிகளில் இறுதித் தீர்ப்பு அளிக்கப்பட்டது. கடந்த தி.மு.க. ஆட்சியில் பணத்தை நீதிமன்றத்தில் செலுத்தாமல், அதனைக் கிடப்பிலே போட்டுவிட்டார்கள். மீதமுள்ள 2,000 வழக்குகள் மேல்முறையீடு செய்யாமலே கிடப்பில் உள்ளன.

*முற்பகல் 11–25*

*ஒரகடம் பகுதியைப் பொறுத்தளவிலே—காஞ்சிபுரம் மாவட்டத்தில் 20 கிராமங்களுக்குச் சொந்தமான 1,200 நில எடுப்பு வழக்குகள் காஞ்சிபுரம் சார்பு நீதிமன்றத்திலே விசாரணையின்றி உள்ளன. மாண்புமிகு நீதிபதி அவர்களை விரைவாக வழக்குகளை முடிக்கக் கேட்டால், "சிப்காட் தரப்பிலும், வருவாய்த் துறை தரப்பிலும் பதில் மனுகூட தாக்கல் செய்யப்படாமல் உள்ளது; இது மிகவும் வருந்தத்தக்கது" என்று கூறுகிறார். இதெல்லாம் தி.மு.க. ஆட்சியில்தான் நடந்தது. இந்த நிலையில் வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள இயலாது என்றும் சொல்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுத்து, அந்த நல்ல திட்டத்திற்காக குறைந்த விலைக்கு நிலங்களைக் கொடுத்த விவசாயிகளைக் காப்பாற்ற வேண்டுமென்று இந்த மாமன்றத்திலே நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன் அவர்கள், ஒரு நிமிடத்தில் முடித்துவிடுங்கள்.*

**திரு. மு. அருண் சுப்பிரமணியன்:** *நான் நல்ல திட்டங்கள் குறித்துப் பேசுகிறேன். அதுவும், நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் கொண்டுவந்த திட்டங்கள் குறித்துத்தான் பேசுகிறேன். அடுத்து, கிருஷ்ணா நதிநீர்த் திட்டத்திற்காக நிலம் கையகப்படுத்தப்பட்டது குறித்துப் பேச விழைகிறேன். இத்திட்டம் மாண்புமிகு தமிழக முன்னாள் முதல்வர், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் தொலைநோக்குப் பார்வையோடு கொண்டுவரப்பட்ட ஒரு திட்டம். இந்தத் திட்டம் சரியாக நிறைவேற்றப்பட்டு, எதிர்பார்த்த அளவிற்கு சென்னை மாநகர மக்களின் குடிநீர்ப் பிரச்சினை தீர்த்து வைக்கப்பட்டுள்ளது என்பதும் தெரிந்த விஷயமே. இந்தத் திட்டத்திற்கு நிலம் வழங்கிய திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள 20 கிராமங்களைச் சார்ந்த விவசாயிகள், அதாவது, 10 சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட 20 கிராம விவசாயிகள், தங்கள் நிலத்திற்கான நஷ்ட ஈட்டை, 30–4–2008 அன்று சென்னை உயர் நீதிமன்ற பெஞ்ச் அளித்த இறுதித் தீர்ப்பின்படி பெறவில்லை. கடந்த தி.மு.க. ஆட்சியில் நிலத்திற்கான நஷ்ட ஈட்டுப் பணத்தைக் கோர்ட்டில் கட்டாமல் கிடப்பிலே போட்டுவிட்டார்கள். இந்தத் திட்டம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் கொண்டுவரப்பட்ட திட்டம் என்ற காரணத்தால், தி.மு.க. ஆட்சியில் இதற்காக எந்தவிதமான நடவடிக்கையையும் எடுக்கவில்லை. முக்கியமாக, கமிஷன் வரக்கூடிய திட்டம் இதுவல்ல என்பதாலேயே இதனைக் கிடப்பில் போட்டுவிட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, ஆட்சி மாற்றத்தைக் கொண்டுவந்த இந்த மக்களுக்காக இந்தப் பிரச்சினையிலே ஒரு நல்ல முடிவை எடுக்க வேண்டுமென்று இந்த அவையிலே கேட்டுக்கொள்கிறேன்.*



*கடைசியாக, திருமழிசை வீட்டு வசதித் திட்டம். இந்தத் திட்டம் . . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, சிப்காட் நில எடுப்பு குறித்துப் பேசினார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, இதுகுறித்து பட்ஜெட்டிலேகூட அறிவித்திருக்கிறது. நில வங்கியை ஏற்படுத்தி, விவசாயிகள், அதேபோல, தொழில் முதலீட்டாளர்கள், இரண்டு தரப்பினருக்கும் நன்மை ஏற்படக்கூடிய வகையிலே மாண்புமிகு அம்மா அவர்கள் திட்டத்தைத் தீட்டியுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன் அவர்கள், சீக்கிரம் உரையை முடியுங்கள்.*

**திரு. மு. அருண் சுப்பிரமணியன்:** *திருமழிசை வீட்டு வசதித் திட்டம். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் முதன்முறையாக தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றபோது, ஒரு நல்ல திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதாவது, சென்னையிலே வீடு இல்லாதவர்களுக்கு வீடு வழங்க வேண்டுமென்ற ஒரு நல்ல திட்டத்தை, தொலைநோக்குப் பார்வையோடு கொண்டு வந்தார்கள். இத்திட்டத்தில் பூந்தமல்லி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருமழிசையிலே 2,000 ஏக்கர் நிலத்தை எடுத்து, வீட்டு வசதி வாரியத்தின்மூலம் வீடுகள் கட்டித் தரப்பட வேண்டும் என்று நம்முடைய முதல்வர் அவர்கள் ஆணையிட்டிருந்தார்கள். அதனடிப்படையில் 500 ஏக்கர் நிலம் மட்டும் ஆர்ஜிதம் செய்யப்பட்டது; அதற்காக நஷ்ட ஈடும் வழங்கப்பட்டது. மீதமுள்ள 1,500 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்படாமலே—அந்தத் திட்டத்திற்காகக் கையகப்படுத்த திட்டமிட்ட 2,000 ஏக்கர் நிலத்தில்*

1,500 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தாமலே, தி.மு.க. ஆட்சியிலே ஒரு அரசாணையை வெளியிட்டார்கள். மீதமுள்ள 1,500 ஏக்கர் நிலத்தை ஆர்ஜிதம் செய்வது நிறுத்தப்பட்டது என்றுதான் சொன்னார்கள். இப்படிப்பட்ட ஒரு குழப்பமான அரசாணையினால், அவர்களது நிலம் அவர்களுக்குப் போய்ச் சேரவுமில்லை; அந்த நிலத்தை அரசாங்கம் எடுத்துக்கொள்ளவுமில்லை; வீட்டு வசதி வாரியமும் பயன்படுத்தமுடியாத நிலையிலே இருக்கிறது. ஆகவே, ஒரு தெளிவான முடிவை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், திருமழிசையில் 1,500 ஏக்கர் நிலம் என்று சொல்கிறார். கிட்டத்தட்ட 311 ஏக்கர் நிலத்தைத்தான் வீட்டு வசதி வாரியம் கையகப்படுத்தியிருக்கிறது என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன் அவர்கள்.

**திரு. மு. அருண் சுப்பிரமணியன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. 2,000 ஏக்கர் நிலத்தை எடுக்க வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் திட்டமிட்டு, அதற்காக ஒரு திட்டத்தையும் வகுத்துக் கொடுத்தார்கள். அதிலே ஏறக்குறைய, அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல், 350 ஏக்கர் நிலத்தை மட்டும் எடுத்துக் கொண்டு, மீதம் உள்ள நிலத்தை எடுக்கவில்லை. அதாவது, மீதமுள்ள நிலத்தை மக்களிடத்திலாவது கொடுத்திருக்க வேண்டும். இல்லையென்றால், அரசாங்கமாவது எடுத்து, வீட்டு வசதி வாரியத்திடம் கொடுத்திருக்கலாம். ஏதாவது ஒன்று உருப்பட்டிருக்கும். ஆனால், அந்த நிலம் எடுப்பது நிறுத்தப்பட்டது என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். அந்த G.O.–வை மாற்றி . . .

முற்பகல் 11–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிலத்தை எடுத்ததற்கே அங்குள்ள விவசாயிகள் எதிர்ப்புத் தெரிவித்தார்கள். 1,500 ஏக்கர் நிலம் எடுத்திருப்பதாகச் சொல்கிறார்கள். அப்படி வீட்டு வசதி வாரியம், அந்த 1,500 ஏக்கர் நிலத்தை எடுக்கவில்லை. மாண்புமிகு உறுப்பினர் விவரமாகச் சொன்னால், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை, நான் நாளை மறுநாள் என்னுடைய மானியக் கோரிக்கைக்கான பதிலுரையில் விவரமாகத் தெரிவிக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன், விவரமாக அமைச்சரிடம் எழுதிக் கொடுங்கள்; நடவடிக்கை எடுப்பார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. சுப்பிரமணியன் அவர்கள். (குறுக்கீடு) சொல்லுங்கள்.

**திரு. மு. அருண் சுப்பிரமணியன்:** கடந்த தி.மு.க. ஆட்சியிலே, நல்ல திட்டங்களுக்கு நிலம் கொடுத்த விவசாயிகளை, அவருடைய பாணியிலே சொல்லப்போனால், "ஓடினாள், ஓடினாள் வாழ்க்கையின் ஓரத்திற்கே ஓடினாள்" என்று அவர் ஒரு கதை வசனம் எழுதியிருக்கிறார். அந்த அடிப்படையிலே, அரசின் நல்ல திட்டங்களுக்கு நிலம் கொடுத்த விவசாயிகளை, திரு. கருணாநிதி அவர்கள், "ஓட்டினார், ஓட்டினார் வாழ்க்கையின் ஓரத்திற்கே ஓட்டினார்; இறுதியில் அவரே ஆட்சியைவிட்டு ஓடிவிட்டார்." ஆகவே, நல்ல திட்டங்களுக்கு நிலம் கொடுக்கின்ற தமிழக விவசாயிகளைப் பாதுகாத்து, பேணிக்காக்கின்ற வகையிலே, அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்கும் அவர்கள் கொடுக்கின்ற நிலங்களுக்குச் சரியான மார்க்கெட் விலை கொடுப்பதற்கும் இந்த நல்லாட்சி, நல்ல அரசு, நல்ல நடவடிக்கையைத் துரிதமாக எடுத்து, இனிமேல் அரசுக்கு நிலம் வேண்டுமென்று சொன்னால், அந்த நிலங்களை அவர்களே, தாமாக முன்வந்து கொடுக்கின்ற ஒரு நிலையை உருவாக்க வேண்டுமென்று இந்த மாமன்றத்திலே என்னுடைய உரையைப் பதிவு செய்து, இந்த அவையிலே பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு கேப்டன் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய பணிவான வணக்கத்தையும், நன்றியையும் மீண்டும் ஒருமுறை தெரிவித்துக்கொண்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. சுப்பிரமணியன் அவர்கள்.

*__திரு. ந. சுப்பிரமணியன்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்றாவது முறையாக முதலமைச்சர் பதவியை ஏற்று, 100 நாட்கள் மாமன்றத்தில் மாணிக்க மகுடமாய் வீற்றிருக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர், (மேசையைத் தட்டும் ஒலி) கழக நிரந்தரப் பொதுச் செயலாளர் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து, வணங்கி என் பேச்சைத் தொடங்குகிறேன், அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

மாசற்ற மாணிக்கமாய், மங்கையருக்கு ஒளி விளக்காய்;
தமிழ் மக்களைக் காக்கும் தனிப்பெரும் தாயே;
ஏழைகளின் கண்ணீரைத் துடைத்திட்டு ஏற்றம் பல நலம் தரும் தங்கத் தாயே;
முத்தான உங்கள் ஆணையால்;
நல்சத்தான ஆக்கத்தைப் பெற்றுவிட்டீர் அம்மா;
முன்வைத்த பாதையில் பின்வாங்காது;
முடியும் என்ற இலட்சியம் கொண்ட அம்மா;
போராட்டம் கோடிபல வந்திடினும்;
அதை சீராட்டமாய் மாற்றுவீர் என் தாயே;
துவண்டுள்ள தமிழகம் நின்பெரு ஆட்சியால்;
துளிர்விடுகிறது பசுமையாய் இப்போது அம்மா;
எங்கும் வெற்றி தாயே, நீங்கள் எதிலும் வெற்றி;
வீரத்தின் விளைநிலமாய் அன்பிற்கு உறைவிடமாய்;
கல்வி, செல்வம், வீரமாய் நிற்கும் தாயே;
காப்பதற்கு தெய்வமும் நீங்களே அம்மா;
ஏழையருக்கு வாழ்வளிக்க வந்த அம்மா;
நலத்திட்டம் செய்வதில் உங்களுக்கு இணையாகுமா;
ஏழை, எளியோர்க்கு கறவை மாடு, ஆடு என வழங்கி;
எழுத்தறிவு மாணவருக்கு ஊக்கத் தொகை கணிப்பொறி என அளித்து;
ஆண்டுக்கு நான்கு சீருடை என வழங்கிய அன்னையே;
பசியோடு நல்வயிறு உண்ண விலையில்லா அரிசி என உயிர் கொடுத்து;
பல்துறை ஊழியர்களுக்கு ஓய்வூதியம் மாறும் என நல்கிய என் அன்னையே;
இதைவிடவா தங்கள் ஆட்சிக்கு ஓர் சான்று தேவை.
கடையேழு வள்ளலை அன்று கேள்விப்பட்டோம் அம்மா,



அந்த வள்ளல்களும் தோற்றார் நின் புகழால்
நன்றி என்ற மூன்றெழுத்துக்கு நாங்கள் உள்ளோம்
நலம் தரும் அருளுக்கு அம்மா, நீவிர் உள்ளீர் அம்மா.

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு தொகுதியில் உள்ள முக்கூர் கிராமத்தில் சாதாரண விவசாயக் குடும்பத்தில் மகனாகப் பிறந்த நான், ஆரம்பக்காலத்தில் இருந்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினராகச் சேர்ந்து, 1982 ஆம் ஆண்டு கிளைக் கழகச் செயலாளராகவும், 1987 ஆம் ஆண்டு அம்மாவின் தலைமையின்கீழ், அம்மாவின் ஆசியோடு ஒன்றியக் கழக இணைச் செயலாளராகவும், ஒன்றியக் கழகத் துணைச் செயலாளராகவும், ஒன்றியக் கழகச் செயலாளராகவும், ஒன்றியக் குழு உறுப்பினராகவும், செய்யாறு ஒன்றியக் குழு தலைவராகவும், பின்பு கழகப் பொதுக் குழு உறுப்பினராகவும், தற்பொழுது திருவண்ணாமலை வடக்கு மாவட்ட கழகச் செயலாளராகவும் பணியாற்றி வருகிறேன் அம்மா!

முற்பகல் 11–35

நடந்து முடிந்த ஆரணி நாடாளுமன்றத் தேர்தலில் வேட்பாளராக அம்மா அவர்கள் என்னை அறிமுகப்படுத்தியதோடு, நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் திருவண்ணாமலை வடக்கு மாவட்டத்தில் போளூர், ஆரணி, வந்தவாசி, செய்யாறு ஆகிய நான்கு தொகுதிகளில் போட்டியிட்ட கழக வேட்பாளர்கள் மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களையும் ஆதரித்து, வெயிலையும் பொருட்படுத்தாமல் செய்யாறு தொகுதிக்கு வந்து வாக்குகளைச் சேகரித்து, பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்த, திருவண்ணாமலை வடக்கு மாவட்டத்தின் அனைத்துத் தொகுதிகளிலும் வெற்றியினைத் தேடித் தந்த கருணை உள்ளம் கொண்ட தாயே!

என்னை செய்யாறு சட்டமன்றத் தொகுதி உறுப்பினராக்கி, இம்மாமன்றத்தில் வருவாய்த் துறை மானிய கோரிக்கையில் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என் கோடானுகோடி நன்றியினைக் காணிக்கையாக்கி தங்களின் பொற்பாதங்கள் பணிந்து வணங்குகின்றேன், அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) எனக்கு வாக்களித்த செய்யாறு சட்டமன்ற வாக்காளப் பெருமக்களுக்கும் பேரவை மூலமாக என் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன், அம்மா!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன், எங்கள் செய்யாறு தொகுதியில், கூட்டுறவு பகுதிநேரக் கடைகள் 11, நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் 4, போக்குவரத்து வழித்தடங்கள் 5 ஆகியவற்றைத் தொடங்க மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். திருவண்ணாமலை வடக்கு மாவட்டத்தில் செயல்பட்டு வரும் வெம்பாக்கம், செய்யாறு, அனக்காவூர், வந்தவாசி, தெள்ளார், பெரணமல்லூர், மேற்கு ஆரணி ஆகிய ஒன்றியங்களில் ஏழை விவசாய நிலங்களின் நீராதாரத்தைப் பெருக்கும் வகையில், ஏரிகளில், அணைக்கட்டுகளில் உள்ள மதகுகளைப் பழுது நீக்கம் செய்வதற்கு நிதி ஒதுக்கிய தாயே! வெம்பாக்கம் ஒன்றியம் புதுப்பாளையம் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திய தாயே!

பெண் சிசுக் கொலையைத் தடுக்க திருவண்ணாமலை மாவட்டத்தில் தொட்டில் குழந்தை வரவேற்பு மையங்கள் அமைத்த அன்னையே! எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும், அம்மாவின் ஆட்சியில் இல்லாமை என்கின்ற நிலை வேண்டும் அம்மா! மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு மீண்டும் அம்மா அவர்களுக்கு என் தொகுதி மக்களின் சார்பிலும், என் சார்பிலும் கோடானுகோடி நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன், அம்மா!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளின் நலன் கருதி, கிராம நிருவாக அலுவலகத்திலேயே பட்டா வழங்குவதற்கு ஆணையிட்டுள்ள அம்மாவை விவசாயிகள் வாழ்த்துகிறார்கள், தாயே!

செய்யாறு தொகுதியில் கல்வி மாவட்டம் அமைந்துள்ளதால் கடந்த 2001–2006–இல் அம்மா அவர்கள் ஆட்சியில் இருந்த காலத்தில் கொண்டு வந்த மினி ஸ்டேடியம், விளையாட்டு மைதானம் அமைக்கும் திட்டத்தை மைனாரிட்டி தி.மு.க. அரசு கைவிட்டு விட்டது. அரசு நிலம், தரிசு நிலம் என உள்ள 40 ஏக்கர் இடத்தைக் கையகப்படுத்தி, மாண்புமிகு அம்மா அவர்கள் அத்திட்டத்தைக் கொண்டு வருவதற்கு, அம்மா அவர்களின் இருபாதம் பணிந்து வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன் அம்மா!

தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளன்று, வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் மக்களுக்கு 2011–2012 ஆம்



ஆண்டிற்கு 159.04 இலட்சம் இலவச சேலைகளும், 158.19 இலட்சம் இலவச வேஷ்டிகளும் வழங்குவதற்கு அம்மா அவர்களுடைய அரசு மதிப்பீடு செய்து, 269 கோடி ரூபாய்க்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இதனால், கைத்தறி மற்றும் விசைத்தறித் தொழிலாளர்கள் பயன் பெற்றுள்ளார்கள் தாயே! வேளாண் தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகியோரின் வாழ்வில் வளம் பெற, 2005 ஆம் ஆண்டு உழவர் பாதுகாப்புத் திட்டம் தொடங்கப்பட்டு, தற்போது 1.09 இலட்சம் பயனாளிகள் பயன் பெறுவதற்கு 166 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளதை மக்கள் பாராட்டுகிறார்கள், அம்மா!

தமிழ்நாட்டில் அதிக நெல் சாகுபடி செய்யும் தஞ்சாவூருக்கு அடுத்து, திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு பகுதி விளங்கி வருவதால், விவசாயப் பயன்பாட்டிற்கு வேளாண்மைத் துறைமூலம் நெல் நடவு எந்திரம் கொண்டு வர மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயம் மற்றும் விவசாயிகள் மிகுந்த செய்யாறு பகுதியில் அரசு வேளாண்மைக் கல்லூரியை அமைக்க மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

செய்யாறு தொகுதியில் நான்கு நீதிமன்றங்களான சார்பு நீதிமன்றம், முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மற்றும் நீதித் துறை இரண்டு நீதிமன்றங்கள் ஆகியவை இயங்கி வருகின்றன. நான்கு நீதிமன்றங்களும் இயங்கி வரும் கட்டடங்கள் 90 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட பழைய கட்டடங்களாகும். மேலும், நான்கு நீதிமன்றங்களில் நான்கு நீதிபதிகளும், 75 வழக்கறிஞர்களும், சுமார் 55 நீதிமன்ற ஊழியர்களும் தற்போதுள்ள பழைய கட்டடங்களில் மிகுந்த நெருக்கடியில் பணியாற்றி வருகின்றார்கள், தாயே. எனவே, ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் மற்றும் நீதிபதிகள் குடியிருப்புகள் அமைக்க ஆவன செய்யுமாறு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–40

செய்யாறு நகரில் நெடுஞ்சாலைத் துறையின் நிருவாகப் பொறியாளர் கோட்டம் புதியதாக அமைக்க மாண்புமிகு புரட்சித்

தலைவி அம்மா அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அம்மா அவர்கள் செய்யாறு தொகுதியில் பிரச்சாரத்தின்போது குறிப்பிட்டபடி, செய்யாறு அரசு பொது மருத்துவமனையை மாவட்ட அரசு மருத்துவமனைக்கு இணையாகத் தரம் உயர்த்தி, சிறப்பு மருத்துவ சிகிச்சைப் பிரிவுகள், இதயம், சர்க்கரை நோய், பல், கண், காது, மூக்கு, தொண்டை பிரிவுகள் தொடங்க மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

செய்யாறு தொகுதியில் ஏழையெளிய விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் செய்யாறு அறிஞர் அண்ணா அரசினர் கலைக் கல்லூரியில் B.C.A., M.Sc., (I.T.) . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. சுப்பிரமணியன், தொகுதிப் பிரச்சினைகளை எழுதிக் கொடுத்து விடுங்கள். உரையை விரைவில் முடித்துவிடுங்கள்.

**திரு. ந. சுப்பிரமணியன்:** M.Sc. (Computer Science), M.A. (Tamil), Ph.D., பொறியியல், வரலாறு, வணிகவியல், ஆங்கிலம், கணிதம், தமிழ் பாடப் பிரிவுகள் தொடங்கிட வேண்டி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

திருஞானசம்பந்தரின் தேவாரப் பாடலால் ஆண்பனையை பெண்பனையாக மாற்றிய திருவத்திபுரம் அருள்மிகு வேதபுரீஸ்வரர் திருக்கோயிலை சுற்றுலாத் தலமாக அமைத்திடவும், மேலும், அத்திருத்தலத்திற்கு வெள்ளித்தேர் செய்து தர வேண்டியும் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

செய்யாறு கொடநகர் கிராமத்தில் 1000 ஆண்டுகளுக்குமேல் பழைமை வாய்ந்த ஸ்ரீகுழந்தை ஈஸ்வரர் கோயில் அமைந்துள்ளது. அப்படிப்பட்ட கோயிலைப் புனரமைத்து வழிவகை செய்ய வேண்டி அம்மாவின் பாதங்களைப் பணிந்து வணங்குகின்றேன்.

திருவண்ணாமலை மின் பகிர்மான வட்டத்தில் 8 இலட்சம் மின் இணைப்புகள் பயன்பாட்டில் உள்ளன. மேற்கண்ட எட்டு



இலட்சம் மின் இணைப்புகளின் நுகர்வோர்கள் தங்கள் குறைகளைத் தெரிவிக்கின்றபோது, அதனைச் சரிசெய்திட காலதாமதம் ஏற்படுகிறது. மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம் 100 கி.மீ. தொலைவில் திருவண்ணாமலையில் அமைந்துள்ளது. மேலும், செய்யாறு பகுதியில் சிப்காட் பகுதி அமைந்துள்ளது. இதனால் மின் வாரியத்திற்கு அதிக வருவாய் பெற்றுத்தரும் கோட்டமாக இருப்பதால், செய்யாறு பகுதியைத் தலைமையிடமாகக் கொண்டு (செய்யாறு, ஆரணி, வந்தவாசி, சேத்பட்) மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம் அமைக்க வேண்டியும் மற்றும் செய்யாறு தொகுதியில் வாழ்குடை மதுரையில் உள்ள 33/11 கே.வி.ஏ. துணை மின் நிலையத்தை 110 கே.வி.ஏ. துணை மின் நிலையமாக மாற்றிடவும், பல்லி கிராமத்தில் புதியதாக 33/11 கே.வி.ஏ. துணை மின் நிலையம் அமைக்கவும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

செய்யாறு தொகுதி, செய்யாறு நகரிலிருந்து தென் மாவட்டங்களுக்கு செய்யாறு–மதுரை (வந்தவாசி, திண்டிவனம், விழுப்புரம், மதுரை வழியாக), செய்யாறு–தஞ்சாவூர் (வந்தவாசி, திண்டிவனம், விழுப்புரம், கும்பகோணம், தஞ்சாவூர் வழியாக), செய்யாறு–சிதம்பரம் (வந்தவாசி, திண்டிவனம், பாண்டிச்சேரி, கடலூர், சிதம்பரம் வழியாக), செய்யாறு–பழனி (திருச்சி, திண்டுக்கல் வழியாக), செய்யாறு–ஒகேனக்கல் (வேலூர் வழியாக) செல்லவும் மற்றும் செய்யாறு–திருப்பதி, செய்யாறு–மகாபலிபுரம் (செங்கல்பட்டு வழியாக) வழித்தடங்களில் செல்லவும் மற்றும் கிராமப்புறத்திற்குச் செல்ல புதிய நகரப் பேருந்துகள் இயக்கிடவும் புதிய வழித்தடங்களில் பேருந்துகள் சென்று வர மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிந்து கேட்டுக்கொள்கிறேன். செய்யாறில் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகப் பிரிவு (MVI Unit) தொடங்க மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிந்து கேட்டுக்கொள்கிறேன். செய்யாறு தொகுதியிலுள்ள கிராமப்புறச் சாலைகளைச் சீரமைக்க மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிந்து கேட்டுக்கொள்கிறேன். செய்யாறு நகர புறவழிச் சாலையில் மின் கம்பம் அமைத்து மின்விளக்கு அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

வருவாய்க் கோட்டத் தலைநகரமான செய்யாறில் உள்ள நகராட்சி பேருந்து நிலையத்தில் நாளுக்கு நாள் நெரிசல் அதிகரித்து மக்கள்

சிரமத்திற்கு ஆளாகின்றனர். ஆகவே, மக்களின் நலன் கருதி அகன்ற பரப்பளவு கொண்ட பகுதியில் நவீன வசதியுடன் புதிய பேருந்து நிலையம் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

செய்யாறு தொகுதியில், செய்யாறு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பொறியாளர் அறை, சிமென்ட் குடோன், மாற்றுத் திறனாளிகள் பள்ளிக் கட்டடம், வருவாய்க் கோட்ட அலுவலகம், உதவி செயற்பொறியாளர் அலுவலகம், வேளாண்மைக் கிடங்கு, கீழ்புதுப்பாக்கம் ஊராட்சிக் கட்டடங்கள் ஆகியவற்றைப் புதுப்பித்துத் தரவும், மேலும் பல்லி—கொளவிமேடு, தண்டரை வடக்குமேடு காலனி, கீழ்புதுப்பாக்கம்—காஞ்சிபுரம் சாலை (புதுத்தெரு) ஆகிய கிராமங்களுக்குத் தார்ச் சாலை அமைக்கவும் மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

செய்யாறு சட்டமன்றத் தொகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய குடிநீர்த் திட்டப் பணிகளைப் பொறுத்த வரை ஆராத்திரிவேலூர் நெசவாளர் பகுதி, கொருக்கை & காலனி, பெருங்களத்தூர்—வளர்புரம் ஊராட்சிகளுக்குக் கூடுதல் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டுதல், முனுகப்பட்டு, திருமணி, பலாந்தாங்கல் ஊராட்சிகளுக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டம், ஏனாதவாடி, செங்கட்டான்குண்டில், அரும்பருத்தி ஊராட்சிகளுக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டம், சித்தாமூர் மற்றும் 27 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம், வடஆளப்பிறந்தான் புதூர் குடியிருப்புக்குப் புதிய நீராதாரம் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல், கோட்டகரம் நாவிதர் குடியிருப்பிற்குப் புதிய நீராதாரம் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல், வெள்ளகுளம், அரியரப்பாக்கம் ஊராட்சிகளுக்கு ஆற்றுக் குடிநீர்த் திட்டம், அழிஞ்சல்பட்டு, சோழவரம் ஊராட்சிகளுக்கு ஆற்றுக் குடிநீர்த் திட்டம், வடமணப்பாக்கம் குடியிருப்புகளுக்குக் கூடுதல் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல், பல்லாவரம் நத்தக்கொல்லை குடியிருப்புகளுக்குக் கூடுதல் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல், வடகல்பாக்கம் ஊராட்சி வாழவந்தல் குடியிருப்புக்கு புதிய நீராதாரம், சோழவரம் ஊராட்சி பெரும்புலிமேடு, நத்தக்கொல்லைக்குக் குடிநீர் வழங்குதல் மற்றும் புதிய குடியிருப்புகளைக் கண்டறிந்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி ஏற்படுத்துதல், ஆழ்துளைக் கிணற்றுடன்கூடிய சிறு மின்விசைத் திட்டம் மீண்டும் செயல்படுத்துதல், பழுதடைந்துள்ள மேல்நிலை



நீர்த்தேக்கத் தொட்டிக்குப் பதிலாக புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தருதல் போன்ற மேற்கண்ட பணிகளை நிறைவேற்றி பொது மக்களின் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்க வேண்டுமாய் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலை ஆசியாவில் இரண்டாவது மிகப் பெரிய ஆலையாக இயங்கி வருவதால், கரும்பு பயிரிடும் விவசாயம் செய்யாறு பகுதியில் அதிகமுள்ளதால் கூட்டுறவு சர்க்கரை ஆலையின்மூலம் கரும்பு வெட்டும் இயந்திரம் பயன்பாட்டிற்குக் கொண்டுவர மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் பணியாற்றிவரும் ஊழியர்களுக்கு அரசு ஊழியர்களுக்கு இணையாக ஊதியம் வழங்கிட மாண்புமிகு அம்மா அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

செய்யாறு தொகுதியில் குரும்பூர்—காட்டுக்குடிசை, வாச்சனூர்—தூக்குவாடி, தென்கல்பாக்கம்—பின்னத்தூர், குரங்களில்முட்டம், வேங்கடத்தான்குடிசை—தென்னம்பட்டு, வடமணப்பாக்கம் நியாய விலைக் கடைகளை இரண்டாகப் பிரிக்கவும், வினாயகபுரம்—தென்தண்டலம், அத்திகுளம்—அனக்காவூர், மலைவையாவூர்—வடநாங்கூர், சிறுங்கட்டூர்—சிறுங்கட்டூர் காலனி ஆகிய கிராமங்களுக்குப் பகுதி நேரக் கூட்டுறவுக் கடைகள் அமைக்கவும் மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

செய்யாறு தொகுதியில் பிரம்மதேசம் கிராமத்தில் 1982 முதல் இயங்கி வந்த சார்-பதிவாளர் அலுவலகம் 2003 ஆம் ஆண்டு வேலூர் மாவட்டம், காவேரிப்பாக்கத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதனால் 19 கிராம பொதுமக்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகி இருக்கின்றனர். எனவே, மீண்டும் பிரம்மதேசம் கிராமத்தில் சார்-பதிவாளர் அலுவலகம் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

வருவாய்த் துறை அலுவலகங்களில் அனைத்து நிலைகளிலும் (துணை வட்டாட்சியர்/வருவாய் ஆய்வாளர்கள்/இளநிலை உதவியாளர்கள்/கிராம நிருவாக அலுவலர்கள்) உள்ள காலிப்

பணியிடங்களை நிரப்ப வேண்டி மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

அலுவலக உதவியாளர்/பதிவறை எழுத்தர் மற்றும் இரவுக் காவலர் பணிக்குப் பணியாளர்களை நியமிக்க வேண்டி மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

வருவாய் ஆய்வாளர்/கிராம நிருவாக அலுவலர் குடியிருப்புகள் பெரும்பாலானவை பழுதடைந்துள்ளன. பழுதுபார்க்க/புதியதாகக் கட்டித் தரவும், மேலும் மண்டல துணை வட்டாட்சியர்களுக்கு குடியிருப்புகள் கட்டித் தரவும் மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

அலுவலகங்களில் பெரும்பாலான பணிகள் கணினிமூலம் நடைபெறுவதால் கணினி சம்பந்தப்பட்ட படிப்பு படித்தவர்களை (BCA/MCA/BE (ECE) / CS / IT) இப்பணிக்கென தனியாக நியமிக்கவும், கணினிகள் பராமரிப்பதற்காக தனியாக நிதி ஒதுக்கீடு செய்திடவும் மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

அரசு அலுவலகங்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, ஜெராக்ஸ் நகலெடுக்கும் கருவிகள் வழங்குதல் போன்ற வசதிகளைச் செய்து தர மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

வட்டாட்சியர் / கோட்டாட்சியர் ஆகியோர் அடிக்கடி முகாம் மற்றும் தணிக்கைப் பணிகளுக்காக தலைமையிடம் மற்றும் கிராமங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளதால் வாகனங்களுக்கு வழங்கப்படும் எரிபொருள் (டீசல்) அளவை உயர்த்தி வழங்க மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

குடிமைப்பொருள் பிரிவு (TSO section) சென்னை போன்ற நகரங்களில் ஒரு உதவி ஆணையர் தலைமையில் பல சார்நிலை அலுவலர்களைக் கொண்டு இயங்குகிறது. அதே பணி, வட்டங்களில் ஒரு துணை வட்டாட்சியர் தலைமையில் மிகக் குறைந்த பணியாளர்களுடன் இயங்குவதால் பொது மக்கள் தேவைகளை நிறைவேற்றுவதில் காலதாமதம் ஏற்படுகிறது. எனவே, இப்பணி வட்ட அளவில் நடைபெறுவதால் TSO (Taluk Supply Officer) பணியிடத்தை வட்டாட்சியர் நிலைக்கு உயர்த்தவும், இப்பிரிவிற்குத் தனியாக வாகனம் வழங்கவும், கூடுதலாக



பணியாளர்களை நியமனம் செய்து பொது விநியோகத் திட்டப் பணிகளைச் சிறப்பாகச் செயல்படுத்தவும், அரிசி மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் கடத்தலைத் தடுக்கவும் ஆவன செய்ய வேண்டுமாய் மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. ந. சுப்பிரமணியன்:** இந்த மாமன்றத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மூன்றாவது முறையாகப் பதவியேற்று 100–வது நாளில் அடியெடுத்து வைக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) திருநாளிலே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தச் சிறிய தொண்டனை செய்யாறு சட்டமன்றத் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக்கி இந்த மாமன்றத்தில் வருவாய்த் துறை மானியக் கோரிக்கையிலும், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை மானியக் கோரிக்கையிலும் பேச வாய்ப்பளித்த எங்கள் குல தெய்வம் அம்மா அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை பாதம் பணிந்து நன்றி, நன்றி, நன்றி என்று நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

***முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் செயல்பாட்டில் உள்ள இட ஒதுக்கீட்டு முறை நியாயமாக உள்ளது என்றும், இதில் creamy layer எனும் வளமான பிரிவினரை நீக்கும் அவசியம் இல்லை என்ற தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையத்தின் பரிந்துரையை ஏற்று தமிழகத்தில் வளமான பிரிவினரை நீக்காமல் 69 சதவிகித இட ஒதுக்கீட்டை உறுதி செய்த சமூக நீதி காத்த மாபெரும் வீராங்கனை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை (மேசையைத் தட்டும் ஒலி) மனித நேய மக்கள் கட்சியின் சார்பாக மனமாரப் பாராட்டுகிறேன்.

தமிழகத்திலே பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டில் முஸ்லிம்களுக்கு தனியாக 3.5 சதவிகித இட ஒதுக்கீடு அளிக்கப்பட்டு வருகிறது. இந்த இட ஒதுக்கீட்டின் அளவு அதிகரித்துத்

தரப்படுமென மாண்புமிகு முதலமைச்சர், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் அவர்கள், தேர்தல் பிரச்சாரத்தின்போது திருச்சியிலிருந்து தொடங்கி பல்வேறு இடங்களிலே வாக்குறுதி தந்தார்கள். இதனை உடனே நிறைவேற்றித் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது பிற்படுத்தப்பட்ட முஸ்லிம்களுக்கான இட ஒதுக்கீட்டைச் செயல்படுத்த நடைமுறையில் உள்ள இனச் சுழற்சி முறையில், roaster–ல் பல்வேறு குளறுபடிகள் உள்ளன. இதன்காரணமாக சில துறைகளில் குறிப்பாக மருத்துவ மேல் படிப்புகளிலும், பல்கலைக்கழகப் பேராசிரியர் நியமனங்களிலும் பிற்படுத்தப்பட்ட முஸ்லிம்களுக்கு வாய்ப்பு இல்லாத சூழல் உள்ளது. இதனைச் சீர் செய்ய இந்த அரசு நடவடிக்கை எடுப்பதுடன் முஸ்லிம்களுக்கான இட ஒதுக்கீடு எவ்வாறு செயல்படுத்தப்படுகின்றது என்பதைக் கண்காணிக்க சட்டமன்ற உறுப்பினர்களும் இடம் பெறும் குழு அமைக்கப்பட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–45

TAMCO என்னும் தமிழ்நாடு சிறுபான்மை பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்கு சென்னையில் மட்டுமே அலுவலகம் உள்ளது. மாவட்டங்களில் இந்நிறுவனத்திற்கு அலுவலகம் இல்லை. இந்தக் கழகம் தனது கடன் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு கூட்டுறவு வங்கிகளையே முற்றிலும் சார்ந்து நிற்கும் நிலை உள்ளது. பல்வேறு மாவட்டங்களிலுள்ள கூட்டுறவு வங்கிகள் சிறுபான்மை மக்களுக்குக் கடன் கொடுக்க மறுக்கின்றன. இதுதவிர, TAMCO-வின் பரிந்துரையில் உள்ள கடன் விண்ணப்பங்களைப் பரிசீலித்து, உரிய நடவடிக்கை எடுப்பதற்கும் கூட்டுறவு வங்கிகள் பெரிதும் காலதாமதம் செய்கின்றன. 2004–2005 முதல் 2009–2010 ஆம் ஆண்டுக்கான தலைமைக் கணக்காயரின் social audit என்னும் சமூக தணிக்கை அறிக்கையில் TAMCO கடன்களை அளிப்பதில் மிகுந்த காலதாமதம் ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இது மட்டுமின்றி, சிறுபான்மையினருக்கு வழங்கப்படும் TAMCO கடன் பல்வேறு மாவட்டங்களில் சரிவர அச்சமூக மக்களுக்குச் சென்றடையவில்லையென்றும் தலைமைக் கணக்காயரின் அறிக்கை குறிப்பிடுகின்றது. எனவே, TAMCO நிறுவனம் அனைத்து மாவட்டங்களிலும் அலுவலகங்களை . . . (குறுக்கீடு)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுபான்மையின மக்களுக்கு அளிக்கப்படும் இட ஒதுக்கீடு பற்றியும், அது ஒழுங்காகக் கடைப்பிடிக்கப்படுகிறதா என்பதைப் பற்றியும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சி அமைந்தவுடன் அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படும் என்று சொல்லி இருந்தார்கள். அது அம்மா அவர்களின் பரிசிலனையில் உள்ளது. அதைப்போலவே, கடந்த கால ஆட்சியில்தான் TAMCO-வில் அந்த அளவிற்கு குறைபாடுகளும், குளறுபடிகளும் நடந்து கொண்டிருந்தன. இம்முறை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அதை நிச்சயமாகச் சீரமைத்துத் தருவார்கள். அது அவர்களின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களின் அறிவிப்புக்கு நன்றி. கூட்டுறவு வங்கிகள்மூலம் வழங்கப்படும் பயிர்க்கடன் உரிய நேரத்தில் திரும்பச் செலுத்தப்பட்டால் அதற்கு வட்டியில்லையென்று இந்த அரசு அறிவித்ததைப்போல, TAMCO மூலம் அளிக்கப்படும் சிறுபான்மையின மக்களுக்கான கடன்களைக் காலவரம்பிற்குள் திருப்பிச் செலுத்தினால் அதற்கும் வட்டியில்லையென்று இந்த அரசு அறிவிக்க வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

TAMCO வழியாக அளிக்கப்படும் தனி நபர் கடனின் உச்சவரம்பு-உச்சபட்சத் தொகை தற்போது ஒரு இலட்சமாக உள்ளது. இதற்கு அதிகமாக கடன் அளிக்க வேண்டுமெனில் NMDFC–National Minorities Development & Finance Corporation–ன் ஒப்புதல் பெற வேண்டும். அதில் பல சிக்கல்கள் உள்ளன. மாநில அரசே தனி நபர் கடனை ரூபாய் ஐந்து இலட்சம் வரை தரும் அதிகாரத்தை TAMCO நிறுவனத்திற்குத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சொத்து இல்லாத தனி நபர்கள் ரூபாய் 25,000 வரை கடன் பெறும்போது இரண்டு அரசு ஊழியர்களின் ஊதியச் சான்றிதழ் அளிக்க வேண்டுமென்ற நிபந்தனை உள்ளது. 25,000 ரூபாய்

வரைக்கும் கடன் பெறக்கூடிய இந்த ஏழை மக்களுக்கு இந்தச் சான்றினைப் பெறுவது மிகச் சிரமமாக இருக்கின்றது. இதைக் கருத்தில் எடுத்துக் கொண்டு சிரமம் இல்லாமல் அவர்கள் கடனைப் பெறுவதற்கான வழிவகை காணப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாணவர்களுக்காக TAMCO அளிக்கக்கூடிய கல்விக் கடன், ஆண்டிற்கு ரூபாய் 50,000. ஆனால் கூட்டுறவு வங்கிகள் collateral security தராத மாணவர்களுக்கு ரூபாய் 25,000 மட்டுமே கடன் தருகின்றார்கள். இதைத் தளர்த்தி 50,000 ரூபாய் வரை ஆண்டுக்கு TAMCO கல்விக் கடனை கூட்டுறவு வங்கிகள் அளிப்பதற்கும் வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். இப்போது சிறுபான்மையின மாணவர்களுக்கான scholarship என்று சொல்லக்கூடிய கல்வி உதவித் தொகையைப் பெறக்கூடிய முறை இணையத்தின் வாயிலாக நடைபெற்று வருகிறது. ஆனால், கல்வித் துறை அதிகாரிகளும் சரி, மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலர்களும் சரி இதுகுறித்து சரியான தகவல்கள் தராததால் அதில் பல குளறுபடிகள் இருக்கின்றன. எனவே, ஆன்லைன் முறையிலே சிறுபான்மையின மாணவர்கள் scholarship பெறுவதற்காக உரிய உத்தரவுகள் அரசாங்கத்தினால் வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது மட்டுமல்ல, TAMCO நிறுவனத்தில் இருக்கக்கூடிய ஊழியர்களுடைய எண்ணிக்கை மிகவும் குறைவாக இருக்கிறது. ஓய்வு பெற்ற பிறகு அங்கே புதிய நியமனங்கள் செய்யப்படுவதில்லை. இதனாலும் அந்த நிறுவனத்தினுடைய பணிகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இதைச் சீர்செய்வதற்கும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–50

முஸ்லிம் மகளிர் சமூகப் பொருளாதார மேம்பாட்டுக்கு உதவுவதற்காக, அனைத்து மாவட்டங்களிலும் முஸ்லிம் மகளிர் உதவும் சங்கங்கள் (Muslim Women Aid Society) அமைக்கப்பட்டுள்ளன. இதில், இராமநாதபுரம், வேலூர், நெல்லை மற்றும் கடலூரிலுள்ள சங்கங்கள் மட்டுமே துடிப்பாகச் செயல்பட்டு வருகின்றன. இந்த மகளிர் சங்கங்கள் திரட்டும் தொகைக்கு நிகர் மானியமாக, அரசு ஆண்டுதோறும் ரூபாய் 10 இலட்சம் வரை அளித்து வருகிறது. அனைத்து மாவட்டங்களிலும் உள்ள சிறுபான்மையினர் மகளிர் பயனடையும் வகையில் அரசு ஒவ்வொரு மாவட்டச் சங்கங்களுக்கும்



ஆண்டுதோறும் ரூபாய் 10 இலட்சம் வழங்கி வந்தால் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள முஸ்லிம் மகளிர் முன்னேற்றம் அடைவதற்குப் பெரிதும் உதவிடும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த தி.மு.க. ஆட்சியில், பிரதமரின் புதிய 15 அம்சத் திட்டம், தமிழகத்தில் சரிவர செயல்படுத்தப்படவில்லை. இதுகுறித்து, இந்த அரசு ஒரு வெள்ளை அறிக்கை தரவேண்டும்.

காவல் துறைக்கு ஆட்களை எடுக்கும் வாரியத்தில் சிறுபான்மையினருக்குப் பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டுமென்று பிரதமரின் புதிய 15 அம்சத் திட்டத்தில் 10–வது அம்சமாகக் கூறப்பட்டுள்ளது. இதுதவிர, சிறுபான்மையினரை காவல் பணிக்குச் சேர்ப்பதில் தனிக் கவனம் செலுத்தப்படவேண்டுமென்றும் அந்த 15 அம்சத் திட்டம் சொல்கின்றது. இந்திரா ஆவாஸ் யோஜனா திட்டத்தின்கீழ் கிராமப்புறங்களில் வாழும் வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள சிறுபான்மையின மக்களுக்கு ஒரு குறிப்பிட்ட விழுக்காடு வழங்கப்பட வேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இவையெல்லாம் சரிவர நிறைவேற்றப்படுகின்றனவா என்பதை இந்த அரசு உறுதி செய்யவேண்டும்.

ஆந்திரம், கர்நாடகம் போன்ற மாநிலங்களிலும், மத்திய அரசிலும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கும், சிறுபான்மையினர் நலத் துறைக்கும் தனித்தனிச் செயலாளர்கள் உள்ளனர். இதே அடிப்படையில் சிறுபான்மையினர் நலத் துறைக்கு தமிழகத்திலும் தனிச் செயலாளர் நியமிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறுபான்மையினரால் நடத்தப்படும் அனாதை நிலையங்களில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.350/–உதவித் தொகையாக வழங்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேர்தல் பிரச்சாரத்தில், குறிப்பாக, கன்னியாகுமரியில் பேசும்போது, பட்டா நிலங்களிலே கட்டப்படுகின்ற பள்ளிவாசல்கள் மற்றும் சர்ச்சுகளுக்கு, அவற்றை அமைப்பதற்காக உள்ள தடைகள் நீக்கம் செய்வதற்கு ஆவன செய்யப்படும் என்று குறிப்பிட்டார்கள். இப்போதும்கூட, பட்டா நிலத்திலே பள்ளி வாசல்கள் கட்டுவதற்கும், சர்ச்சுகள் கட்டுவதற்கும் இடையூறுகள் இருக்கின்றன. அவற்றை நீக்குவதற்கு இந்த அரசு

உடனடியாக ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

சச்சார் குழுவினுடைய அறிக்கையிலே முஸ்லிம்கள் அதிகமாக வங்கிக் கடனைப் பெறுவதில்லை என்ற ஒரு குறிப்பு சொல்லப்பட்டிருக்கின்றது. காரணம், வட்டியினுடைய அடிப்படையிலே, கடன் கொடுக்கப்படுவதால் அந்த நிலை நிலவுகிறது. இதை மாற்றி அமைப்பதற்காக, ஒரு யோசனையை நான் இங்கே முன்வைக்க விரும்புகின்றேன். தமிழக அரசு, 'தமிழ்நாடு வட்டியில்லா நிதி அபிவிருத்திக் கழகம்' என்ற ஒரு கழகத்தை Non–Banking Financial Corporation–ஆக, வங்கி அல்லாத நிதி நிறுவனமாகத் தொடங்கி, அதன் மூலமாக வளைகுடாவிலே, வேறு வெளிநாடுகளிலே வேலை செய்யக்கூடிய முஸ்லிம்களினுடைய முதலீட்டை ஏராளமாகப் பெறலாம். அந்த முதலீட்டை அரசு பல்வேறு வகையான அபிவிருத்தித் திட்டங்களுக்குப் பயன்படுத்துவதோடு, சிறுபான்மையின மக்களுக்கு வட்டியில்லாத கடனையும் அளிக்கக்கூடிய வகையிலே ஒரு சிறந்த திட்டமாக இருக்கும். சிறப்பான ஆட்சியை நடத்தக்கூடிய முதலமைச்சர் அவர்கள் என்னுடைய இந்த ஆலோசனையையும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்பைத் தந்தமைக்காக நன்றி தெரிவித்து, விடைபெறுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நன்றி. மணி அடிப்பதற்கு முன்பாகவே முடித்ததற்காக, நன்றி சொல்கிறேன். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள். திரு. பி.வி. கதிரவன் இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திருமதி மனோரஞ்சிதம் அவர்கள்.

***திருமதி மனோரஞ்சிதம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரண ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த என்னை கிளைக் கழகச் செயலாளராக்கி, கிளைக் கழகப் பிரதிநிதியாக்கி, மாவட்ட மகளிர் அணி பொருளாளராக்கி, கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவராக்கி 12 ஆண்டுகளாகத் தொடர்ந்து மாவட்டக் கழக இணைச் செயலாளராகப் பணியாற்ற வாய்ப்பளித்து, ஊத்தங்கரை தொகுதி (தனித் தொகுதி) சட்டமன்ற உறுப்பினராக அறிவித்து, என்னை கிருஷ்ணகிரி மாவட்டத்திலே அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்த எங்கள் குல தெய்வமே, அனுதினமும் வணங்கும் என் இதய தெய்வமே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் கோடானுகோடி நன்றியினைத்



தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனக்கு வாக்களித்த ஊத்தங்கரை தொகுதி வாக்காளர் பெருமக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என் கன்னிப்பேச்சைத் தொடங்குகின்றேன்.

*முற்பகல் 11–55*

அன்புக்கு முதல்வர் எங்கள் அம்மா. அறிவுக்கு முதல்வர் எங்கள் அம்மா. அழகுக்கு முதல்வர் எங்கள் அம்மா. கனிவுக்கு முதல்வர் எங்கள் அம்மா. துணிவுக்கு முதல்வர் எங்கள் அம்மா. பண்புக்கு முதல்வர் எங்கள் அம்மா. பாசத்திற்கு முதல்வர் எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) நேசத்திற்கு முதல்வர் எங்கள் அம்மா. கடமையில் முதல்வர் எங்கள் அம்மா. கட்சியில் முதல்வர் எங்கள் அம்மா. தமிழ்நாட்டுக்கு முதல்வர் எங்கள் அம்மா. முதல்வர்க்கு எல்லாம் முதல்வர் எங்கள் அம்மாவே. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியோடு பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக 69 சதவிகித இட ஒதுக்கீடு தொடர்ந்து வழங்கிய சமூக நீதி காத்த வீராங்கனை, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை தமிழக மக்கள் மனதாரப் பாராட்டுகின்றனர்.

மேலும், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ மாணவியருக்காக இந்த நிதியாண்டிலே 148 விடுதிகளுக்கு சொந்தக் கட்டடம் கட்ட 36 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

விடுதியில் தங்கிப் பயிலும் பள்ளி மாணவ, மாணவியருக்கு தற்போது அளிக்கப்பட்டு வரும், மாத உணவுப் படியை 450 ரூபாயிலிருந்து 650 ரூபாயாகவும், விடுதியில் தங்கிப் பயிலும் கல்லூரி மாணவ, மாணவியருக்கு தற்போது அளிக்கப்பட்டு வரும் மாத

உணவுப் படியை 550 ரூபாயிலிருந்து 750 ரூபாயாகவும் உயர்த்திக் கொடுத்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிப் பிரச்சினையை அவைக்குறிப்பில் பதிவு செய்துகொள்ளும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை சட்டமன்றத் தொகுதிக்கு கீழ்க்கண்ட கோரிக்கைகளை நிறைவேற்றித் தரும்படி பணிவுடன் வேண்டுகிறேன்.

ஊத்தங்கரை தொகுதிக்குட்பட்ட பெருவாரியான ஊராட்சிகள் பயன்பெறும் வகையில், 33 ஏரிகளுக்கு இணைப்பை வழங்கும் பாரூர் கிழக்குப்புற பிரதானக் கால்வாய் இணைப்புத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுகிறேன். பர்கூர் ஒன்றியத்திற்குட்பட்ட விருப்பம்பட்டி ஏரியிலிருந்து, பாளே தோட்டம் ஏரி மற்றும் நான்கு ஏரிகள் பயன்பெறும் வகையில் புதிய இணைப்புக் கால்வாய் அமைக்க வேண்டுகிறேன். ஊத்தங்கரையில் அனைத்து மகளிர் காவல் நிலையம் அமைக்க வேண்டுகிறேன்.

ஊத்தங்கரை ஒன்றியத்திற்குட்பட்ட அனுமன் தீர்த்தத்தை சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டுகிறேன். மத்தூரில் செயல்பட்டு, தற்பொழுது நலிவடைந்த நிலையில் உள்ள தருமபுரி மாவட்ட பனைபொருள் உற்பத்தியாளர் சம்மேளனம் திறம்பட நடைபெற நிதியுதவியுடன் கூடிய நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன். ஊத்தங்கரை அல்லது மத்தூரில் அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி அமைக்க வேண்டுகிறேன்.

மத்தூர் ஒன்றியத்தில், பெங்களூர்–பாண்டி தேசிய நெடுஞ்சாலையின் அருகில், ஒட்டப்பட்டி ஊராட்சியில் உள்ள பெனுகொண்டாபுரம் ஏரியை, சுற்றுலாத் தலமாக மேம்பாடு செய்ய வேண்டுகிறேன். மத்தூர் ஒன்றியம், சாமல்பட்டியில் செயல்பட்டு வரும் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை, 30 படுக்கை வசதி கொண்ட நிலையமாகத் தரம் உயர்த்த வேண்டுகிறேன். ஊத்தங்கரையில் ஓர் அரசினர் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்க வேண்டுகிறேன். ஊத்தங்கரை ஒன்றியம், திருப்பத்தூர் மெயின் ரோட்டிலிருந்து கெங்கபிராம்பட்டி ஊராட்சி, பாண்டவர் நகர் வழியாக நாப்பிராம்பட்டி கிராமம் வரை 4.00 கி.மீ. தார்ச் சாலை மற்றும் 4 பாலங்கள் அமைக்க வேண்டுகிறேன்.



ஊத்தங்கரை ஒன்றியம், கதவணி ஊராட்சி, அருணபதி கிராமத்தின் அருகே, கொரட்டி ஆற்றின் குறுக்கே தரைப்பாலம் அமைக்க வேண்டுகிறேன். ஊத்தங்கரை ஒன்றியம், உப்பாரப்பட்டி ஊராட்சி, ஊமையனூர் கிராமத்திலிருந்து பேயனூர் கிராமம் வரை செல்லும் மண் சாலையை தார்ச் சாலையாக மாற்ற வேண்டுகிறேன். ஊத்தங்கரை ஒன்றியம், மூன்றாம்பட்டி ஊராட்சி, திருவண்ணாமலை மெயின் ரோட்டிலிருந்து வள்ளிநகர் வழியாக வினாயகர் கோயில் வரை செல்லும் மண் சாலையை தார்ச் சாலையாக ஆக்க வேண்டுகிறேன். ஊத்தங்கரை ஒன்றியம், நாய்க்கனூர் ஊராட்சி, நாய்க்கனூர் கிராமத்திலிருந்து நடுப்பட்டி ஊராட்சி, குப்பநத்தம் கிராமம் வரை செல்லும் மண் சாலையை தார்ச் சாலையாக மாற்றி, இடையில் செல்லும் நீர் ஓடைக்குக் குறுக்கே தரைப்பாலமும் அமைக்க வேண்டுகிறேன். ஊத்தங்கரை ஒன்றியம், கதவணி ஊராட்சி, சேலம்–திருப்பத்தூர் மெயின் ரோட்டிலிருந்து மண்குன்று மலை வழியாக திருவண்ணாமலை ரோடு வரை இணைப்புச் சாலை மற்றும் பாலம் அமைக்க வேண்டுகிறேன். ஊத்தங்கரை ஒன்றியம், சிங்காரப்பேட்டை ஊராட்சி, கடப்பாறை ஆற்றிற்கும், பெரிய ஏரிக்கும் இடையில் தடுப்பணை கட்டி, சென்னம்மா கோயில் புது ஏரிக்குக் கால்வாய் அமைக்க வேண்டுகிறேன்.

ஊத்தங்கரை ஒன்றியம், சிங்காரப்பேட்டையில் வனத் துறை அலுவலகம் நகரின் மையப் பகுதியிலும், மக்களுக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டிய காவல் நிலையம் வனப் பகுதியிலும் அமைந்துள்ளது. எனவே, மேற்படி அலுவலகங்களை மாற்றி அமைக்க வேண்டுகிறேன். ஊத்தங்கரை ஒன்றியம், கீழ்குப்பம் ஊராட்சி, கீழ்குப்பம் கிராமத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைக்க வேண்டுகிறேன். ஊத்தங்கரை ஒன்றியம், கோவிந்தாபுரம் ஊராட்சி, ஜவ்வாது மலை அடிவாரத்தில் அங்குத்தி நீர்வீழ்ச்சி அமைந்துள்ள இடத்தை சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டுகிறேன். ஊத்தங்கரையில் மாவட்ட சார்பு நீதிமன்றம் அமைக்க வேண்டுகிறேன். ஊத்தங்கரை தாலுகாவாக இருப்பதால், ஊத்தங்கரை நகரில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்க வேண்டுகிறேன். ஊத்தங்கரை ஒன்றியம், மாரம்பட்டி ஊராட்சி, கானம்பட்டி கிராமத்திலிருந்து நாப்பிராம்பட்டி வரை செல்லும் 5 கி.மீ. மண் சாலையை தார்ச் சாலையாக மாற்ற வேண்டுகிறேன்.

ஊத்தங்கரை ஒன்றியம், மாரம்பட்டி ஊராட்சி, கானம்பட்டி, வேடியப்பன் கோயில் அருகில் பாம்பாற்றின் குறுக்கே மேம்பாலம்

அமைக்க வேண்டுகிறேன். ஊத்தங்கரை ஒன்றியம், மிட்டப்பள்ளி, மூன்றாம்பட்டி, பாவக்கல் மற்றும் நடுப்பட்டி ஊராட்சிகளைச் சேர்ந்த மக்கள் பயன்பெறும் வகையில், திருவண்ணாமலை செல்லும் சாலையிலிருந்து 8 கி.மீ. சாலையில், பாவக்கல் அருகில் பாம்பாற்றின் குறுக்கே பாலம் அமைத்து தார்ச் சாலை அமைக்க வேண்டுகிறேன். மத்தூர் ஒன்றியம், கே. எட்டிப்பட்டி ஊராட்சியில், கே. எட்டிப்பட்டி நான்கு சாலை சந்திப்பில், சுமார் 4 ஊராட்சிகள் பயன்பெறும் வகையில் கால்நடை துணை மருத்துவமனை நிலையம் அமைக்க வேண்டுகிறேன். மத்தூர் ஒன்றியம், கே. எட்டிப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குச் (கே கே 216 வரை) சொந்தமான இடத்தில் புதிய சொந்தக் கட்டடம் கட்டித் தர வேண்டுகிறேன். மத்தூர் ஒன்றியம், வாலிப்பட்டி ஊராட்சியில், கண்ணுகானூரிலிருந்து கம்மாலனூர் வழியாக கருங்கன் குட்டம் செல்லும் சாலையில் ஆற்றின் குறுக்கே மேம்பாலம் கட்டித் தர வேண்டுகிறேன். மத்தூர் ஒன்றியம், பாப்பாரப்பட்டி ஊராட்சியில் உள்ள இரயில்வே ஆற்று மேம்பாலம் அருகில் ஒரு தடுப்பணை கட்டி, பாப்பாரப்பட்டி ஏரிக்கு இணைப்புக் கால்வாய் அமைப்பதன்மூலம் 6 ஊராட்சிகள் பயன்பெறும் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுகிறேன். மத்தூர் ஒன்றியம், இராமகிருஷ்ணம்பதி ஊராட்சியில், காமாட்சிபட்டி–ஆதாலியூர் செல்லும் சாலையில், பாம்பாற்றின் குறுக்கே, காமாட்சிபட்டிக்கு அருகில் மேம்பாலம் கட்ட வேண்டுகிறேன். ஊத்தங்கரை ஒன்றியம், பாவக்கல் ஊராட்சியில், பாவக்கல் கிராமத்தில், கால்நடை துணை சுகாதார நிலையம் அமைக்க வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக் கொண்டு மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றி கூறி விடை பெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள், உரையை உரிய நேரத்தில் முடியுங்கள்.

***திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திறமையால், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக, இக்கட்டான சூழ்நிலையில் 69 சதவிகித இட ஒதுக்கீட்டினை வாங்கிக் கொடுத்த புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன்.

நண்பகல் 12–00

சிறுபான்மையினர் நலத் துறையின்மூலம் நடைபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் பள்ளிப் படிப்புக்கு கல்வி உதவித்



தொகையாக ரூ.244.26 இலட்சம் ஒதுக்கியிருப்பதற்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். பட்டப் படிப்பு, பட்டயப் படிப்பு, ஐ.டி.ஐ. படிக்கின்ற மாணவர்களுக்காக 2,375.16 இலட்சம் ரூபாய் நிதியை ஒதுக்கி அவர்களுக்காக உதவி புரிந்தமைக்கும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்தக் கல்வி உதவித் தொகை அந்த மாணவர்களைச் சென்றடைகிறதா என்பதை இணையதளம்மூலம் தெரிந்துகொள்கின்ற வாய்ப்பை நல்கிய தமிழக அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். விடுதிக் கட்டடங்களில் பல கட்டடங்கள் வாடகைக் கட்டடங்களிலே இயங்கி வருகின்றன. அதற்கு, தமிழக அரசு ரூ.3,609.29 இலட்சம் ஒதுக்கியிருக்கிறது. அதில் குறிப்பாக, தேனி மாவட்டத்திலே இருக்கின்ற கூடலூர் பெண்கள் விடுதி, ராயப்பன்பட்டி ஆண்கள் விடுதி, கடமலைக்குண்டு பெண்கள் விடுதி, திண்டுக்கல் மாவட்டம் ஆண்கள், பெண்கள் விடுதிகளெல்லாம் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. அந்த விடுதிகளுக்கெல்லாம் இந்தத் திட்டத்திலே, இந்த நிதியாண்டிலே புதிய கட்டடங்கள் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாடகைக் கட்டடங்களில் இயங்கும் அனைத்து விடுதிகளுக்கும் சொந்தக் கட்டடங்கள் கட்டித்தரப்படும் என்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்துள்ளார்கள். அந்த வகையில், வாடகைக் கட்டடங்களில் இயங்கும் அனைத்து விடுதிகளும் சொந்தக் கட்டடங்களில் இயங்க புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய முயற்சியில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. தமிழக அரசுக்கும் நன்றி கூறி, கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் மதுரை, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் இயங்கி வருகின்றன. அதிலே 1 முதல் 5 வகுப்பு வரை படிக்கின்ற மாணவர்கள் 17,240 பேர். ஆறு முதல் பத்தாம் வகுப்பு வரை 18,585 பேர் படிக்கின்றார்கள். ஆனால், பதினொன்றாம் வகுப்பு, பன்னிரண்டாம் வகுப்புகளில் வெறும் 3,729 பேர்

மட்டும்தான் பயின்று வருகின்றார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களும், தமிழக அரசும் இதற்கு தனிக் கவனம் செலுத்தி— பத்தாவது வகுப்பு வரை 18,555 பேர் படிக்கிறார்கள். ஆனால், பதினொன்றாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்புகளில் 3,729 பேர் மட்டும்தான் படிக்கின்ற நிலை—படிப்பு சதவீதம் குறைந்திருக்கிறது அதற்கான காரணத்தைக் கண்டறிந்து அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வேலைவாய்ப்பு நோக்கில் அமைந்த பயிற்சிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதைப்போன்று இந்திய குடிமைப் பணிகளுக்கான சிறப்புப் பயிற்சி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த drop outs இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 10 ஆம் வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கு ரூ. 1,500, +1 படிக்கும் மாணவர்களுக்கு ரூ.1500 +2 படிக்கும் மாணவர்களுக்கு ரூ.2000 என்று வைப்பு நிதியில் வைத்து, அவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில், ஒரு திட்டத்தை அறிவித்துள்ளார்கள். இந்த இடைநிற்றல் ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தத் திட்டத்தை அறிவித்துள்ளார்கள். ஆகவே, இந்தத் திட்டத்தினால் drop outs இருக்காது என்று உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

**திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்தப் புதிய திட்டத்தை இந்த நிதியாண்டிலிருந்து கொண்டுவந்திருக்கிறார்கள். இனிவரும் ஆண்டுகளில் நிச்சயமாக படிப்பு சதவீதம் அதிகமாக வரும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களும் தெரிவித்திருக்கிறார்கள். நன்றி. அதேபோன்று, சிறப்புப் பயிற்சி அளிப்பதைப் பொறுத்தவரையில், ஒன்று அரசே சிறப்புப் பயிற்சிகளை அளித்து வருகிறது. இல்லாவிட்டால் யாராவது அந்தப் பகுதியில், பயிற்சி வகுப்பு நடத்துபவர்களோடு சேர்ந்து, அதற்கான கல்வித் தொகையை, அதற்குச் செலுத்த வேண்டிய



பணத்தை, அரசே செலுத்தி வருகிறது. அதைத் தொடர்ந்து செய்து வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–05

மகளிருக்கான புதிய பொற்காலத் திட்டம். அந்தத் திட்டத்தின் அடிப்படையிலே இதுவரை தனி நபர்களுக்கு, பெண்களுக்கு 50 ஆயிரம் ரூபாயாக இருந்த கடன் தொகையை இப்போது 75 ஆயிரம் ரூபாயாக உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். அது மட்டும் அல்ல, 50 ஆயிரம் ரூபாய்க்கு 4 விழுக்காடு வட்டி விகிதம் இருந்தது. இப்பொழுது 75 ஆயிரம் ரூபாய்க்கு 1 விழுக்காடு மட்டுமே வட்டி விகிதம் அறிவித்திருப்பதைப் பெருமையோடு வரவேற்கின்றோம். இங்கு சீர்மரபினர் நல வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. கடந்த தி.மு.க. ஆட்சியிலே இந்தச் சீர்மரபினர் நல வாரியம் அமைக்கப்பட்டது. அது எப்படி அமைக்கப்பட்டது என்றால், பிற்படுத்தப்பட்ட பிரமலைக் கள்ளர் சமுதாயத்தைச் சேர்ந்த சீர்மரபினர், கல்வி ரீதியாக, சமூக ரீதியாக, பொருளாதார ரீதியாகப் பின்தங்கி இருக்கிறார்கள் என்பதால், அன்றையதினம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், "அவர்களுக்கு ஒரு நல வாரியம் வைக்க வேண்டும், அதற்காக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் உண்ணாவிரதம் இருக்க வேண்டும்" என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்தவுடன், இதனைத் தெரிந்துகொண்ட தி.மு.க. ஆட்சி அன்றையதினம் சீர்மரபினர் நல வாரியம் என்ற ஒரு வாரியத்தை அமைத்தார்கள். அந்த நல வாரியம் பெயரளவிலே இயங்கி வந்தது. அதை நமது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பல புதிய திட்டங்களோடு இப்பொழுது கொண்டு வந்திருக்கிறார்கள். அதற்காக நான் பெருமையோடு அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தச் சீர்மரபினர் நல வாரியத்தின்கீழ் 285 பள்ளிகள் இயங்கி வருகின்றன. ஆனால் அந்த முறைப்படிப் பார்த்தால் இன்றையதினம் அந்தப் பள்ளிகளில் 501 ஆசிரியர் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. கள்ளர் சீரமைப்புத் துறையே இந்தப் பதிலைக் கொடுத்திருக்கிறது. தமிழில் 35 பேரும், ஆங்கிலத்தில் 22 பேரும், கணிதத்தில் 134 பேரும், இயற்பியலில் 102 பேரும், வேதியியலில் 81 பேரும், தாவரவியலில் 48 பேரும், விலங்கியலில் 25 பேரும், புவியியலில் 9 பேரும், வரலாறில் 45 பேரும் என கிட்டத்தட்ட 501 பணியிடங்கள் இன்னும் காலியாக இருக்கின்றன. அவற்றை நிரப்ப வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தச் சீர்மரபினர் பள்ளியிலே, குறிப்பாக பிரமலைக் கள்ளர் சமுதாயத்திற்காக வைக்கப்பட்டிருக்கும் பள்ளி, அவர்களைக் கல்வி ரீதியாக முன்னேற்றத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்ற திட்டத்தோடு, ஆங்கிலேயர்களால் அன்றையதினமே உருவாக்கப்பட்ட இந்தக் கள்ளர் சீரமைப்புத் துறை பள்ளியிலே, இடைநிலை ஆசிரியர்களைப் பொறுத்தவரை ஒன்றாவதிலிருந்து ஐந்தாவது வரை இருக்கின்ற பள்ளிகளில் பிரமலைக் கள்ளர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து அவர்கள் அங்கே பணியமர்த்தப்படுகின்றார்கள். அதேபோல . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதைப் போன்று கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 501 காலிப் பணியிடங்கள் கிடையாது. 233 ஆசிரியர்களுக்கான காலிப் பணியிடங்கள் உள்ளன. அவற்றில் சில பதவி உயர்வுமூலம் நிரப்பப்பட வேண்டும். சிலவற்றிற்கு நீதிமன்றத் தடையாணை உள்ளது. 48 பணியிடங்களை நிரப்ப தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியத்திலிருந்து பணி நாடுநர்கள் பட்டியல் எதிர்நோக்கப்படுகிறது. 19 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப மதுரை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து பணி நாடுநர் பட்டியல் கோரப்பட்டுள்ளது. ஆகவே, இந்தக் காலியிடங்களை நிரப்புவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு தகுந்த ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போன்று 501 காலியிடங்கள் கிடையாது. 233 இடங்கள்தான் காலியாக உள்ளன. அவற்றை நிரப்புவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

**திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள்



பதிலளித்திருக்கின்றார்கள். ஆனால், கள்ளர் சீரமைப்புத் துறை பள்ளியிலிருந்து கொடுத்த தகவலின்படி மாணவ, மாணவியரின் எண்ணிக்கைக்குத் தகுந்தபடி தேவைப்படும் ஆசிரியர்களின் எண்ணிக்கை இங்கே வாசிக்கப்பட்டிருக்கிறது. அதைக் கருணையோடு பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று, இடைநிலை ஆசிரியர் பணியிடங்களுக்கு ஒன்றிலிருந்து 5 ஆம் வகுப்பு வரை, பிரமலைக் கள்ளர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகிறது. அதேபோன்று 6 வது வகுப்பு முதல் 12 வது வகுப்பு வரை இருக்கின்ற பள்ளிகளிலும் மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரமலைக் கள்ளர் சமுதாயத்தைச் சேர்ந்த பட்டதாரி ஆசிரியர்களுக்கும், முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கும் முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12–10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதி குறித்த கீழ்க்கண்ட கோரிக்கைகளை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்:

எனது உசிலம்பட்டி தொகுதியில் இரண்டு கலைக் கல்லூரிகள் இருந்து வருகின்றன. அந்தப் பகுதியில் அரசு கள்ளர் சீரமைப்புத் துறையில் கல்லூரி விடுதிகள் முறையே ஆண்களுக்கும் பெண்களுக்கும் உசிலம்பட்டி நகரில் அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கள்ளர் சீரமைப்புத் துறையின்கீழ் இயங்கும் தொடக்க, நடுநிலைப் பள்ளிகளைச் சீரமைக்க, ஊதிய பட்டுவாடா செய்யும் நிலையில் 6 A.E.E.O.-க்கள் நியமனம் செய்தால் மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களிலுள்ள பள்ளிகளிலிருந்து சிறுசிறு விஷயத்திற்கு மதுரையிலுள்ள கள்ளர் சீரமைப்பு அலுவலகத்திற்கு வரவேண்டிய அவசியம் இல்லை; ஆங்காங்கே அலுவலகம் இருந்தால் பிரச்சினைகளை அங்கே தீர்வு செய்து கொள்ளலாம்; கால விரயம் தேவையில்லை; உளைச்சல் தேவையில்லை.

கள்ளர் சீரமைப்புத் துறையில் இயங்கிவரும் பள்ளிகளுக்கு அரசு செயலாளர்கள் உத்தரவு போடுகிறார்கள். ஒரு சில நடவடிக்கைகளுக்கு கள்ளர் சீரமைப்புத் துறையில் உத்தரவு இல்லாமல் இருந்து வருகிறது. பள்ளிக் கல்வித் துறையில் வழங்கப்படும் உத்தரவு இந்த கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கும் பொருந்தும்படி இருந்தால் நல்லது. அவ்வாறு சட்ட திட்டங்கள் இல்லாததால்தான் பலர் நீதிமன்றத்தை நாட வேண்டிய நிலை இருந்து வருகிறது. தமிழக அரசு, 6 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை பட்டதாரி ஆசிரியர்களை பணியில் அமர்த்த வேண்டும் என உத்தரவு போட்டது. அந்த உத்தரவு அரசுப் பள்ளிகளுக்கும், தனியார் மற்றும் சிறுபான்மையினர் நல பள்ளிகளுக்கும் பொருந்தும் என உத்தரவு உள்ளது என்றும், இடைநிலை ஆசிரியர்கள் பட்டதாரி ஆசிரியர் படிப்பு படித்திருந்தால் அவர்களுக்குப் பட்டதாரி ஆசிரியர்களாகப் பதவி உயர்வு கொடுத்து பணியில் அமர்த்தவும் உத்தரவு பிறப்பித்துள்ளது. ஆனால், இடைநிலை ஆசிரியர்கள் பட்டப் படிப்பு படித்தவர்களுக்கு அரசுப் பள்ளிகளில் கல்வித் துறையில் பதவி உயர்வு கொடுத்து பணியில் அமர்த்தியுள்ளனர். ஆனால் தனியார் மற்றும் சிறுபான்மையினர் பள்ளிகளில் இந்த உத்தரவுப்படி பட்டம் படித்த இடைநிலை ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வு வழங்கப்படாமல் இருந்து வருகிறது. இதனைத் தமிழக அரசு கருத்தில் கொண்டு தனியார் மற்றும் சிறுபான்மையினர் நல பள்ளிகளுக்கும் இந்த உத்தரவை அமல்படுத்த வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

உசிலம்பட்டி தொகுதியில், உசிலம்பட்டி நகரில் இடநெருக்கடியான இடத்தில் இருக்கும் வட்டாட்சியர் அலுவலகத்தை தொலைநோக்கோடு, வேறு புதிய இடத்தில் கட்ட வேண்டியது அவசியம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1985 ஆம் ஆண்டு அரசு ஆணையில் பட்டியல் வெளியிட்டிருக்கிறது. அதன்படி, சாது செட்டி, தெலுங்கு செட்டி, 24 மனை தெலுங்கு செட்டி உள்ளிட்ட இனத்தவர் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலிருந்து மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலுக்கு 28–3–1989 ஆம் தேதி மாற்றப்பட்டிருக்கிறார்கள். ஆனால், தனிப்பட்ட ஒவ்வொரு சாதியும் சரிவர அதில் குறிப்பிடப்படவில்லை. அதையும், தமிழக அரசு உற்று நோக்க வேண்டுமென்று கேட்டு, இந்த தமிழக அரசினுடைய பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை மானியத்தின்கீழ் எனக்குப் பேச



வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பார்த்தசாரதி அவர்கள்.

***திரு. ப. பார்த்தசாரதி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை, இயற்கை சீற்றங்கள் குறித்த துயர் தணிப்புத் துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் நலத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது பேச அனுமதித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி. உடையிலே கர்ம வீரர் காமராஜராகவும், உணர்விலே பேரறிஞர் அண்ணாவாகவும், கொடை வள்ளல் பாரியாகவும் திகழும் தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் நிறுவனத் தலைவர் கேப்டன் அவர்களை வணங்கி உரையைத் துவங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்கு அதிக வருமானம் வரும் துறைகளில் வருவாய்த் துறையும் ஒன்று. அதேபோல் இந்தத் துறையின் மூலமாக மக்களுக்கு நல்ல திட்டங்களை வழங்குவது, குறிப்பாக, முதியோர் பென்ஷன், விதவை உதவித் தொகை, இலவச வேட்டி–சேலைகள், ஜாதிச் சான்றிதழ், மனை அளவு செய்வது, வருமானச் சான்றிதழ் வழங்குவது போன்றவை இந்தத் துறையின் மூலமாகத்தான் வழங்கப்படுகின்றன. ஆனால் தமிழ்நாட்டில், எல்லா தாலுகா அலுவலகங்களிலும் போதுமான அளவில் அலுவலர்கள் இல்லை என்பது மக்களின் பொதுவான கருத்தாகும். விரைவில் இந்தக் காலிப் பணியிடங்களுக்கு அலுவலர்களை அமர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று தாலுகா அலுவலகங்களில் ஜாதிச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ், மனை அளவு ஆகியவற்றை மக்களுக்கு வழங்குவதற்காக அரசு வி.ஏ.ஓ–க்களுக்கு உத்தரவிட்டும், அவை செயல்படுத்தப்படாமல் பல இடங்களில் உள்ளன. இதைப் பயன்படுத்தி புரோக்கர்கள்மூலம் பணம் சம்பாதித்துக் கொள்கிறார்கள். இதைத் தடுக்க தாலுகா அலுவலகத்தில் காலியாக உள்ள பணியிடங்களில் அலுவலர்களை நியமித்தால் இதுபோன்ற தவறுகள் நடக்காமல் இருக்கும் என்று நம்புகிறேன். மேலும், சென்னையில் உள்ள ஆறு தாலுகா அலுவலகங்களிலும் கண்காணிப்புக் கேமிராக்களைப் பொருத்தி, தவறு செய்பவர்களைக் கண்டறிந்து அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அப்போதுதான் அரசின் நல்ல திட்டங்கள் மக்களுக்குப் போய்ச் சேரும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, பணியாளர்கள் பற்றாக்குறையின் காரணமாக, வட்டாட்சியர் அலுவலகத்திலே புரோக்கர் நடமாட்டம் அதிகமாக இருக்கிறதென்று சொன்னார்கள். அது கடந்த கால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் வேண்டுமானால் இருந்திருக்கலாம். மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னால், அத்தகைய தரகர்கள் ஒழிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை நான் ஏற்கெனவே இந்தச் சட்டமன்றத்தில் சொல்லி இருக்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, சென்னையிலே ஐந்து வட்டங்கள்தான் இருக்கின்றன. அந்த ஐந்து இடங்களிலும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணைக்கிணங்க, நேரடியாக ஆய்வு செய்தபோது, அது போன்று எந்தத் தரகரும் இல்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பார்த்தசாரதி அவர்கள்.*

**திரு. ப. பார்த்தசாரதி:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாட்டில் சேலம், மேட்டூர் பகுதி, ஈரோடு மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் வாழும் கொண்டாரெட்டி சமுதாய மக்கள் சாதிச் சான்றிதழைப் பெற முடியாத நிலை இருந்து வருகிறது. இதனால் கொண்டாரெட்டி சமுதாயப் பிள்ளைகள் படித்துவிட்டு வேலைக்குச் செல்ல முடியாத நிலையும் இருக்கிறது. அரசுப் பட்டியலில் 11–வது இடத்தில் கொண்டாரெட்டி சாதிப் பெயர் உள்ளது. எஸ்.டி. சமூகமாகயிருந்தும், இவர்களுக்கு ஜாதிச் சான்றிதழ் கிடைக்கவில்லை. எனவே, அரசு கொண்டாரெட்டி சமுதாய மக்களுக்கு எஸ்.டி. சாதிச் சான்றிதழ் உடனே கிடைக்க ஆவன செய்யுமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12–15*

வருவாய்த் துறையில் பணிபுரியும் கிராம உதவியாளர்களில் பத்தாம் வகுப்பு முதல் பட்டதாரி வரை படித்தவர்கள் 25 ஆண்டுகளாகப் பணிபுரிந்து வருகின்றனர். அவர்களுக்கு கிராம நிருவாக அலுவலர்களாகவோ, இளநிலை உதவியாளர்களாகவோ பதவி உயர்வு வழங்கவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.



தமிழகத்தின் அனைத்து மாநகரங்களில் நடுத்தர, ஏழை, எளியோர் வாழ்ந்த ஓலைக் குடிசைகளை போக்குவரத்து நெருக்கடி, புயல், மழை, காற்று, குறிப்பாக தீ விபத்து ஆகியவற்றிலிருந்து காப்பாற்ற அன்றைய தமிழக அரசு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தைத் 1970-ல் தோற்றுவித்து, அவ்வாரியத்தின் மூலமாக அடுக்குமாடி வீடுகளைக் கட்டி, ஏழை மக்களைக் குடியமர்த்தினர். போக்குவரத்து வசதிக்காக அமைந்திருந்த சில குடியிருப்பு இடங்களை, 'அவரவர் குடியிருப்பு மனை உள்ளது உள்ளபடி அவரவர்க்கே சொந்தம்' என்ற திட்டத்தில், அன்றைய மார்க்கெட் நிலவரப்படி மனைக் கிரயத்தை நிர்ணயித்து, அளந்து வரைபடம் கொடுத்து, அன்றிலிருந்து 10 வருட தவணை முறையில் பணம் செலுத்தியதும் கிரயப்பத்திரம் வழங்க அரசு–மனைதாரர் ஒப்பந்தப்படி பணம் செலுத்திவிட்டனர்.

குடியிருப்புப் பகுதிகளில் ஒரு சில அரசு நிலங்கள், வாரியத்திற்குப் பெயர் மாற்றம் பெறாத நிலையில், ஒருசில தவிர, 25 மற்றும் 30 ஆண்டுகளாகியும் கிரயப்பத்திரம் வழங்க அரசால் முடியவில்லை. இதற்கிடையே, ஒதுக்கீடு பெற்றவர்கள் பணியின் காரணமாய், வயதின் காரணமாய் வெளியேறுவதோ, இறப்பதோ, பெருகிய குடும்ப சூழ்நிலை தேவையாலோ கிரயம் செலுத்திய தன் அனுபவ ஒதுக்கீட்டு மனையை அடுத்தவருக்கு விற்று, அரசு நிர்ணயித்த ஒதுக்கீட்டை வாங்கியவரிடம் கொடுத்து, மனை, வீடு உரிமையை விடுதலை ஒப்பந்தம் செய்து, பணம் பெற்று வெளியேறுகிறார்கள். வாங்குபவரோ தன் மாதச் சம்பளம்–அளவான வருமான தொழில் செய்பவர்கள்–தன் பிள்ளைகளின் பள்ளிச் செலவுகள், இதர குடும்ப போக்குவரத்துச் செலவுகள், பிரயாண கால நேரம் ஆகியவற்றைக் கணக்கிட்டு, தன் பணிக்கு அருகிலுள்ள பகுதியில் விற்பனைக்குக் கிடைக்கும் வீடு, மனை வாங்கிக் குடியேறுகிறார்கள். விலைக்கு வாங்கிய மக்களின் நியாயமான வேண்டுகோளை ஏற்று முந்தைய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அரசாணை எண் 804, நாள் 23–9–1993 மூலம் உத்தரவிட்டிருந்தீர்கள். பெயர் மாற்றம் பெற்று ஏழை, எளியவர்கள் நிம்மதியடைந்தனர். என்ன காரணத்தினாலோ, நில அபகரிப்பு மன்னர்களான தி.மு.க. ஆட்சிக்கு வந்தபிறகு, சில காலத்திற்குப் பிறகு, பெயர் மாற்றம் நிறுத்தப்பட்டது.

ஆனால், அரசாணை இரத்தாகவில்லை. தக்க தருணத்தை உபயோகப்படுத்திக்கொள்ளாமல் பலர் ஏமாந்துவிட்டனர். தேவைகளால் விற்பனை, வாங்குதல் நடந்து, சுமார் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பெயர் மாற்றம் நிலுவையில் உள்ளது. இதைக் கவனத்தில்கொண்டு, சென்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அமல்படுத்தப்பட்ட அரசாணை எண் 804, நாள் 23–9–1993–ஐ ஏழை, எளியோருக்கு பாதிப்பில்லாமல் திருத்தி, பெயர் மாற்றக் கட்டணம் மட்டும் பெற்று, பெயர் மாற்றம் செய்ய வழிவகை செய்யவேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

என்னுடைய விருகம்பாக்கம் தொகுதியில் அதிகமான வீடுகளுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்படவில்லை. அவர்கள் காலங்காலமாக வாழ்ந்து கொண்டு, அரசாங்கத்திற்கு வீட்டு வரி, மின்சார வரி, தண்ணீர் வரி என செலுத்தி வருகின்றார்கள். பல காலமாக வீட்டுமனைப் பட்டா வேண்டும் என்று அரசிடம் கோரிக்கை வைத்தார்கள். அது இன்றுவரை நிறைவேற்றித் தரப்படவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருணைகூர்ந்து என் தொகுதிவாழ் மக்களுக்கு விரைவாக பட்டா வழங்குமாறு தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

எந்த வட்டார அலுவலகத்திலும் தானியங்கி தகவல் தெரிவிக்கும் இயந்திரங்கள் வேலை செய்வதில்லை. ஆகையால், மக்கள் அதிகம் பயன்படுத்தும் இந்த இயந்திரங்களைச் சீர்செய்தால் அதிகாரிகளுக்கும் வேலை குறையும், மக்களும் அதிகம் பயன்பெறுவார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இயற்கைச் சீற்றம் என்றால் நினைவுக்கு வருவது தமிழகத்தில் சுனாமியும், ஊட்டி நிலச்சரிவும்தான். வெளி மாநிலங்களில் குஜராத் பூகம்பம், மகாராஷ்டிரா மற்றும் ஆந்திராவில் வெள்ளம் ஆகியவைதான் நினைவுக்கு வரும். 2004 ஆம் ஆண்டில் தமிழகத்தில் சுனாமி பேரலைகள் தாக்கியபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவிகளைச் செய்து தந்தார்கள். இது அனைவராலும் பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

அதேபோல, எங்களுடைய தலைவர் புரட்சிக் கலைஞர் கேப்டன் அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களை மருத்துவமனைகளுக்கு–சென்னை இராயப்பேட்டை மருத்துவமனை, கடலூர் அரசு மருத்துவமனை,



நாகப்பட்டினம் அரசு மருத்துவமனை—நேரிலே சென்று பார்த்து ஆறுதல் கூறியதோடல்லாமல், தமிழகத்திற்கும், இலங்கைக்கும் சேர்த்து ரூ.19 இலட்சத்தை நிவாரண உதவியாக வழங்கிய வள்ளல் (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சிக் கலைஞர் கேப்டன் அவர்கள்.

கடந்த தி.மு.க. ஆட்சியில் நீலகிரி மாவட்டத்தில், மலைப் பிரதேசத்தில் நிலச்சரிவு ஏற்பட்டது. அதற்கு தி.மு.க. ஆட்சியில் நிவாரண நிதி ஒதுக்கப்பட்டது. அந்த நிதி முறையாக மக்களுக்கு நிவாரணப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படவில்லை என்று மக்கள் பேசுகிறார்கள். தாங்கள் இதிலே கவனம் செலுத்தி விசாரணை நடத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12–20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. பார்த்தசாரதி, உரையைச் சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. ப. பார்த்தசாரதி:** ஒரேயொரு நிமிடம். பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் ஆகியோருக்கு ஒதுக்கப்படுகின்ற அரசு மானியம் மற்றும் தொழில்புரிய வழங்கும் கடன் எல்லாம் இவர்களை வைத்து வேலை வாங்கும் முதலாளிகளுக்குத்தான் கிடைக்கின்றது என்று கூறுகின்றனர். அரசு இதைக் கவனத்தில்கொள்ள வேண்டும். அரசு ஒதுக்குகின்ற தொகையை முழுமையாகச் செலவு செய்வதில்லை. அரசு பணம் ஒதுக்கியும் அரசு அதிகாரிகள் அக்கறை காட்டுவது இல்லை. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு அரசு வழங்கும் தொகையை வேறு எந்தத் துறைக்கு வேண்டுமோ அந்தத் துறையினர் எடுத்துச் செலவு செய்துகொள்கிறார்கள். முந்தைய தி.மு.க. அரசு, செம்மொழி மாநாடு என்ற பெயரில் நடத்திய மாநாட்டிற்கு, இந்த பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் ஆகியோரின் நலனுக்கு ஒதுக்கிய பணத்தைச் செலவு செய்ததுதான் உண்மை எனப் பேசப்படுகிறது.

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் ஆகியோர் பயன்பெறும் வகையில் ஆடுகளும், மாடுகளும் வாங்கக் கடன் வழங்கும்போது அவர்களை அலைக்கழிக்கின்றனர். அவர்களுக்கு ஒதுக்கப்படுகின்ற பணத்தை, மாற்று இனத்தைச் சேர்ந்தவர்கள் பரிந்துரை செய்தால்தான் கொடுக்கின்றனர். இந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு பரிந்துரையின்பேரிலே வழங்கிட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

நம் தமிழகத்தில் பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் சுமார் 80 விழுக்காட்டினர் வசித்து வருகின்றனர். இவர்களில் சுமார் 60 விழுக்காட்டினர்தான் தற்போது கல்வி கற்க வேண்டும் என்ற விருப்பத்தில், தன் நில, புலன்களை விற்றுப் படிக்க வைக்கின்றனர். பெரும்பான்மையின மக்களாகிய இவர்கள், முன்னேற்றத்தைக் கண்டுவருவது மகிழ்ச்சி என்றாலும், வேலைவாய்ப்புகளில் முன்னேற்றம் எதிர்பார்த்த அளவுக்கு இல்லை என்பதே உண்மையாகும். இட ஒதுக்கீடு அளிக்கப்பட்டதால் படித்தும், வேலையில்லாத நிலையில் இவர்களுக்கு சிறு, குறு தொழில்கள் துவக்க நிதியுதவி செய்தால் முன்னேற்றம் வேகமாகும் வேலையில்லாத் திண்டாட்டமும் குறையும். மாவட்ட அளவில் தொழிற் கல்வியுடன் சேர்த்து பயிற்சிகளைக் கொடுத்தால் தங்கள் ஊர்களிலேயே தொழில் நடத்தி வாழ வசதியாக இருக்கும். இந்தப் பிரிவு மாணவ, மாணவியர் அரசு தரும் பயிற்சிகளையும், கடன் உதவிகளையும் அறிந்து, அவற்றைப் பெற்று வாழ்வில் உயர்ந்திட மாவட்ட, வட்ட அளவிலே விழிப்புணர்ச்சி ஏற்படுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. மணிவேல் அவர்கள்.

**திரு. ப. பார்த்தசாரதி:** ஒரேயொரு நிமிடம். ஒரு நிமிடம் சார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை நிறைவு செய்யுங்கள்.

**திரு. ப. பார்த்தசாரதி:** கடைசியாக ஒரேயொரு நிமிடம். ஆரணி தொகுதிக்குட்பட்ட தேவிகாபுரத்தில் உள்ள முஸ்லிம் குடும்பங்களுக்கு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினருக்கு ஏற்கெனவே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது; தொகுதி சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைச் சட்டமன்றப் பேரவைச் செயலகத்திலே எழுதிக் கொடுத்துவிடுங்கள் என்று. அவைக் குறிப்பிலே அவை பதிவு செய்யப்படும்.

**திரு. ப. பார்த்தசாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது என்னுடைய தொகுதி சம்பந்தப்பட்டது அல்ல. இது ஒரு பொதுக் காரியம்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அதை எழுதிக் கொடுத்துவிடுங்கள்.

**திரு. ப. பார்த்தசாரதி:** நீங்கள் ஒரேயொரு நிமிடம் அனுமதி கொடுத்தால் போதும்.

சிறுபான்மையினரைப் பொறுத்தமட்டில் இஸ்லாமியப் பெருமக்களில் பலர் வறுமையிலே உழன்றுகொண்டுள்ளார்கள் என்று புள்ளி விவரம் சொல்கிறது. விடுதலை அடைந்து 64 ஆண்டுகளாக வளர்ச்சியில் பின் தங்கியுள்ள அம்மக்களின் முன்னேற்றத்திற்கான வழிவகைகளைக் கண்டு ஆராய வேண்டும். அவர்களின் நியாயமான கோரிக்கைகளை உடன் நிறைவேற்றியாக வேண்டும். வக்ஃபு வாரியத்துக்குச் சொந்தமான சொத்துக்களை ஒரு சாரார் அனுபவித்து வருகிறார்கள். மேலும், வக்ஃபு வாரியச் சொத்துக்கள் வெளிநாடுகளில் அதிகமாக இருப்பதால், அதை மீட்டு சிறுபான்மையின மக்களுக்கு அவர்களுடைய வளர்ச்சிக்குப் பயன்படும் வகையில் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அவர்களின் கல்வியில், அரசு வேலைவாய்ப்பில் சலுகைகள் அளித்திட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆரணி தொகுதிக்குட்பட்ட தேவிகாபுரத்தில் உள்ள முஸ்லிம் குடும்பங்களில் இறப்பு நேரிட்டால் அவர்களின் புனித உடல்களை நல்லடக்கம் செய்வதற்கு (கபரஸ்தான்) அவர்கள் ஏறத்தாழ 20 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டியிருக்கிறது. எனவே, அவர்களின் பூத உடலை நல்லடக்கம் செய்வதற்கு அதே ஊரில் இடம் ஒதுக்கித் தர வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. மணிவேல் அவர்கள். (குறுக்கீடு)

**திரு. ப. பார்த்தசாரதி:** நன்றி சொல்லி உரையை முடித்துவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. மணிவேல் அவர்கள்.

***திரு. துரை. மணிவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க புனித ஜார்ஜ் கோட்டையில், புவியெல்லாம் புகழ் மணக்க, பொற்கால ஆட்சி தந்து மூன்றாவது

முறையாக மாண்புமிகு தமிழக முதல்வராக, நாளை நம் திருநாட்டின் நிரந்தர முதல்வராக, நாங்கள் போற்றி வணங்குகின்ற இதய தெய்வமாக, தாயுள்ளமும் பாசமும் கொண்டு, சிங்கத்தின் எழுச்சி கொண்டு, தங்கத்தின் சுடர் கொண்டு, தர்மத்தின் வாழ்வு கொண்டு, நீதி தேவதையாய் வீற்றிருக்கின்ற ஆயிரம் கோடி நிலவே எங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி)

தேர்தலுக்குப் பின் அண்ணா தி.மு.க. இருக்காது என ஆரூடம் கணித்தோரை திகாரைப் பார்வையிட வைத்திருக்கின்ற தைரிய லட்சுமியே எங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) மதுரையை மீட்டு மணக்கச் செய்திருக்கின்ற எங்கள் மீனாட்சி தாயே, ஒரு கூட்டத்தின் ஆட்டத்தை ஒழித்துவிட்ட சாதனைச் சரித்திரமே! (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்திற்கு விடுதலையைப் பெற்றுத் தந்திருக்கின்ற புதிய புறநானூறே! பொற்காலத்தின் எழுச்சி விடியலே எங்கள் அம்மா! தங்கள் ஆற்றலின் நிதிநிலை அறிக்கை எங்களுக்குப் பகவத்கீதை, ஏழைகள் வாழ்வை உயர்த்த வழிகாட்டும் ஒளிவிளக்கே, பாராளும், ஊராளும் ஒருவர் தவிர்த்து யாராலும் போற்றப்படும் புரட்சித் திட்டங்கள். கோடிகளைக் குவியல்களாய் அள்ளித் தரும் வள்ளல் மனம் தந்த தமிழகம் தழைத்தோங்கும் திட்டங்கள். மனம் இருப்போர், விழி இருப்போர் அம்மாவிற்கு நன்றி சொல்லும் முற்போக்குத் திட்டங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாநிலம் மகிழ்ந்துகொண்டிருக்கிறது, பாரதம் வியந்துகொண்டிருக்கிறது. உலக அரங்கமோ அம்மா கோட்டைக்கு வந்து அம்மா கொள்கையை ஏற்றுக்கொண்டிருக்கிறது.

தமிழினம் அழித்தோர் நாட்டிற்கு, அதிரடியாய்ப் பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. அம்மா ஆட்சி, இப்போது எங்கள் அம்மாவின் பொற்கால ஆட்சி என ஏழை மக்களால் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது, அம்மா!

பிற்பகல் 12–25

ஓமந்தூரார் வளாகக் கட்டடத்தில் உலகத் தரமிக்க பலதுறை உயர் சிறப்பு மருத்துவமனை மற்றும் அரசு மருத்துவக் கல்லூரி என அம்மா அவர்களின் அறிவிப்பால் அனைத்துக் கட்சிகளும் அம்மா கட்சி ஆனதம்மா. மக்கள் பிரளயம் மகிழ்ந்து போனதம்மா. ஏழைகளுக்கு நல்வாழ்வு தரும் எங்கள் அம்மா அவர்களை வான்



நிலவும் வையகம் வந்து பாராட்டும் அம்மா. மிளிராத ஒளி தருவதுதான் மின்சாரம் என்ற நிலைமையை மாற்றிவிட்டீர்கள் தாயே. என் தாயின் சுட்டு விரல் காட்டியவுடன் மின்னல் ஒளியாய் மிளிர்கின்றது மின்சாரம். வியப்பான மகிழ்ச்சி வெள்ளம் மக்களுக்கு. ஒரு வியாபாரிக்கு மட்டும் வருத்தம் தாயே. மெழுகுவர்த்திக்கு விற்பனை இல்லை என்று. மானாட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம், கரகாட்டம் மற்றும் தப்பாட்டம். அவர்கள் ஆடியது எல்லாமே தப்பு ஆட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் எட்டி உதைத்தார்கள், கால்பந்தாட்டம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ஆழ்கடல் ஆர்ப்பரித்திருந்த பகுதிகளைச் சார்ந்தது என் அரியலூர் தொகுதி. என் இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியைத் தந்த மக்களுக்கு மனமார்ந்த நன்றி சொல்லி, வாசம் உள்ள மலர்களை வணக்கமுடன் சமர்ப்பிக்கின்றேன்.

தெய்வீக மணம் கமழும் வைத்தியநாதபுரம் எனும் மிகச் சிறிய கிராமத்தில் பிறந்த என்னை, கிளைக் கழகச் செயலாளராக, ஒன்றியக் கழக துணைச் செயலாளராக ஆக்கியதோடு, 1998 ஆம் ஆண்டு முதல் 11 ஆண்டுகள் ஒன்றியக் கழகச் செயலாளராகப் பணியாற்றிய என்னை, 2000 ஆம் ஆண்டு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு எதிரான தீர்ப்பின் கொந்தளிப்பில் கைதாகி பாதுகாப்புச் சட்டத்தால் பாதிக்கப்பட்ட என்னை, மாவட்டக் கழக இணைச் செயலாளராக, அரியலூர், ஜெயங்கொண்டம் தொகுதிகளின் பொறுப்பாளராக, பின்னர் அரியலூர் தொகுதி வேட்பாளராக அறிவித்த இதய தெய்வம் அம்மா அவர்கள், பெரம்பலூருக்கு சுட்டெரிக்கும் கடும் வெயிலில் வாக்குகள் சேகரிக்க வருகை தந்து, எளிய தொண்டனான என் வெற்றிக்கும் அரும்பாடுபட்டு, 17,780 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி பெறச் செய்து, என்னைச் சட்டமன்ற உறுப்பினராக்கிய அம்மா அவர்கள் தமிழக முதல்வராக வீற்றிருக்கும் இம்மாமன்றத்தில், இத்திருக்கோயிலில் இன்று வருவாய்த் துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகின்ற வாய்ப்பை வழங்கியிருக்கின்ற எங்கள் திருவரங்கத் தெய்வமே, அம்மா, தங்களுக்கு கோடானுகோடி நன்றியினைத் தங்கள் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கின்றேன், அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, வரும் 2012 ஆம் ஆண்டு தமிழர் திருநாளில் கைத்தறி, விசைத்தறித் தொழிலாளர்களுக்கு வாழ்வளித்து, அதன்மூலம் ஏழைகளுக்கு இலவசமாக 158.59 இலட்சம் வேட்டிகளும், 159.4 இலட்சம் சேலைகளும் வழங்க ரூபாய் 269 கோடி ஒதுக்கீடு செய்துள்ள கருணை நிறைந்த இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு நன்றி. தமிழக முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம், புதுப் பொலிவு பெற, ரூபாய் 166 கோடியை ஒதுக்கீடு செய்து 1.9 இலட்சம் பயனாளிகள் பயன்பெற வேளாண்மைத் தொழிலாளர்கள், விவசாயிகள் நலம்பெற வாழ்வளித்த இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு நன்றி.

மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறைகளின்மூலம் இதய தெய்வம் அம்மா அவர்களின் பெரு முயற்சியால் தமிழகத்தில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலன் காத்திட மொத்த இட ஒதுக்கீடு 69 விழுக்காடு அளவு தொடர வழிவகை ஏற்பட்டது.

சமூக நீதி காக்கும் அம்மாவின் பெரு முயற்சியின் செயல்பாடு தமிழ் இருக்கும் வரை தமிழக மக்கள் இதயங்களில் எழுதப்பட்டிருக்கும், நன்றி எனும் நல் வாசகம். கல்வி வசதிக்கு 2011–2012 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 89.79 கோடி என நாடே போற்றும் நல்ல திட்டம். மாற்றாரும் போற்றிய வரலாற்றுச் சிறப்புமிக்க இலவச மிதிவண்டி வழங்கும் திட்டம். 2011–2012 ஆம் ஆண்டில் ரூபாய் 112.8 கோடி ஒதுக்கீட்டில் 6 இலட்சம் மாணவச் செல்வங்களுக்கு வழங்கவிருப்பது கல்வி வளர்ச்சிக்கு கண்ணான பொன் திட்டம். இது பொன் மனம் கொண்ட அம்மா தந்த திட்டம். அரியலூர் தொகுதி இளந்தைக்கூடம், கோவிந்தபுரம் உயர்நிலைப் பள்ளிகளை அரசு மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளதற்கு மனமார்ந்த நன்றி அம்மா.

விடுதிக் கட்டடங்களை அரசு சொந்தக் கட்டடங்களாகக் கட்டிட 36 கோடி ரூபாயும், பள்ளி மாணவச் செல்வங்களுக்கான உணவுப் படி 450 ரூபாயிலிருந்து 650 ரூபாயாகவும், கல்லூரி மாணவச் செல்வங்களுக்கான உணவுப் படி 550 ரூபாயிலிருந்து 750 ரூபாயாகவும் உயர்த்த 19 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, உலகளாவிய தகவல் தொழில்நுட்ப அறிவு வளர்ச்சி பெற்றிட +1, +2 மற்றும் அனைத்துக் கல்லூரி மாணவச் செல்வங்கள் 9.12 இலட்சம் மடிக் கணினிகளை இலவசமாகப் பெற்றிட 912 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து,





பாரினிலே தமிழகம் சிறந்து விளங்கிட ஆவன செய்த தெய்வமே, அம்மா; மக்கள் பூரித்து மகிழ்கின்றார்கள். அந்தியிலே பூக்கும் முல்லைப் பூ, அதிகாலையிலே பூத்ததுபோல், வரலாற்றைப் புரட்டிப்போட்டு, ஒரு திங்கள் முன்பே எங்கள் அம்மா ஆட்சியில் பொன்னி நதி பொங்கி வருகின்றது அம்மா. ஆந்திரக் குடிநீர் வருகையால் ஆனந்த வெள்ளம்.

பிற்பகல் 12–30

ஒரு கோடியே 83 இலட்சம் குடும்பங்களுக்கு அங்காடியிலே இலவச அரிசி தாயே, முந்தைய ஆட்சியில் தன் பெயர் பொறித்த வீடு கட்டும் திட்டம், ஏழைகளை வீதியில் நிற்க வைத்த வீணான திட்டத்தைத் தகர்த்தெறிந்து, 1.80 இலட்சம் மதிப்பீட்டில் 60 ஆயிரம் பசுமை வீடுகளுக்கு இந்த ஆண்டில் ரூபாய் 1,050 கோடி ஒதுக்கீடு செய்து, பாரதி கண்ட கனவை நனவாக்கி பசுமை வீடு கட்டும் திட்டம் நல்கும் பாரதத்திற்கு வழிகாட்டும் எங்கள் அம்மாவே! (மேசையைத் தட்டும் ஒலி) ஏழ்மையைத் தகர்த்திடும், இதயத்தை நெகிழ வைக்கும் அம்மாவின் திட்டம்.

விவசாயக் கூலித் தொழிலாளர் வாழ்வு வளம்பெற ரூபாய் 12,000 மதிப்பீட்டில் இந்த ஆண்டு மட்டும் 135 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் நான்கு வெள்ளாடுகள் வழங்கும் திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) ஏழைகள் வாழ்வு வளம்பெற, எங்கள் தாய் வீட்டுச் சீதனமோ என ஏழை மகளிர் மனம் குளிர ரூ.30,000 மதிப்பீட்டில் இந்த ஆண்டு மட்டும் 56 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் கறவை மாடுகள் வழங்கும் திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) கருணைத் தாயே அம்மா, வரலாற்றில் பொன் எழுத்துக்களாலே புரட்சித் திட்டம் பதிக்கப்படும், தாயே.

திருமாங்கல்யத்திற்கு நான்கு கிராம் தங்கம், உதவித் தொகை 25,000 ரூபாய், 50,000 ரூபாய், கல்யாணக் கனவுகள் நனவானதில் வியர்வை முத்துக்கள் விழுகின்றன, அம்மா. பொலிவான முகங்கள் பூத்துக் குலுங்குகின்றன. பெண்கள் உயர் கல்வி இலட்சியம் உயிர் பெற்றுவிட்டது, அம்மா.

பெண்கள் நாட்டின் கண்களெனும் பெருமைக்குப் பெயர் விளங்க, கலங்காத கண்களுக்கு மிக்ஸி, நலியாத கரங்களுக்குக் கிரைண்டர், களைப்பில்லா மகிழ்ச்சிக்கு ஃபேன் என இந்த ஆண்டில் மட்டும் இத்திட்டத்திற்கு 1,250 கோடி ரூபாய் அள்ளித் தரும் வள்ளல் மனமே, எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. துரை. மணிவேல்] [2011 ஆகஸ்ட் 23

எனது அரியலூர் தொகுதியில் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் Cement City என்று அழைக்கப்படும் அரியலூரில் அரசு சிமென்ட் நிருவாகத்தை நலிவடையச் செய்த தி.மு.க. ஆட்சியாளர்கள் திட்டத்தைத் தகர்த்தெறிந்து, அரியலூர் அரசு சிமென்ட் ஆலைக்கு 350 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, அந்த சிமென்ட் தொழிற்சாலையைக் காப்பாற்றிய அம்மா அவர்களுக்கு என்னுடைய சார்பாகவும், என் தொகுதி மக்களின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியின் முக்கிய கோரிக்கையான ஒரேயொரு கோரிக்கையை மட்டும் அம்மா அவர்களிடத்திலே சொல்லி விடைபெறுகிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள், 2004 ஆம் ஆண்டு புதிய வீராணம் விரிவாக்கத் திட்டம் என்ற ஒரு திட்டத்தின் மூலமாக திருமானூர், தா. பழூர் ஒன்றியத்திலிருந்து சென்னைக்குக் குடிநீர் வழங்கும் திட்டத்தை ஏற்படுத்தினார்கள். அந்தத் திட்டத்தின்பொழுது கொள்ளிடத்திலே 5 இடங்களிலே தடுப்பணைகள் கட்டி, அங்குள்ள 5,000 விவசாயிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் மின்னிணைப்புகள் கொடுத்திருந்தார்கள். வீணான தி.மு.க.—காரர்கள் வீண் வம்பு செய்து, மக்களைத் தூண்டிவிட்டு, மணல் கொள்ளையர்கள் அந்தத் திட்டத்தை நிறைவேற்றாமல் செய்துவிட்டார்கள். இன்றைக்குப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சி அமைந்தவுடன், மக்கள் எல்லாம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தருவார்கள் என்று ஆவலோடு காத்திருக்கின்றார்கள். இந்தத் திட்டத்தை கருணை உள்ளம் கொண்ட தாயே, நிறைவேற்றித் தாருங்கள் என்று இருகரம் கூப்பிக் கேட்டு, என்னுடைய மற்ற கோரிக்கைகளை எல்லாம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வாயிலாக இந்த மாமன்றத்தில் படித்ததாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டு பேரவைச் செயலாளரிடம் கொடுப்பேன் என்று சொல்லி, இறுதியாக நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, எனது அரியலூர் தொகுதியில் சிமென்ட் ஆலைகள் ஆறு உள்ளன. அதற்குத் தேவையான மூலப் பொருட்களைப் பெற்றிட 50—க்கும் மேற்பட்ட குவாரிகள் உள்ளன. கொள்ளிடம் ஆற்றில் மணல் அள்ளும் இடமும் உள்ளது. கனரக வாகனங்கள், அதிக எடை கொண்ட பாரங்கள், கல், சிமென்ட், மணல், போன்ற பொருட்களை



2011 ஆகஸ்ட் 23] [திரு. துரை. மணிவேல்]

எடுத்துச் செல்வதால் கிராமப்புறச் சாலைகளும், நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான சாலைகளும் மிகவும் மோசமாக மக்கள் பயன்படுத்த முடியாமல் உள்ளன. இந்தச் சாலைகளைத் தரமான சாலைகளாக அமைத்துத் தரக் கேட்டுக்கொள்கிறேன்.

அரியலூர் மாவட்டம், திருமானூர் ஊராட்சி ஒன்றியம், திருமானூரைத் தலைமையிடமாகக் கொண்டு 110 கிராமங்களைக் கொண்டது. வட்டமாகச் செயல்பட அனைத்து வசதி, வாய்ப்புகளையும் பெற்றுள்ளது. அரியலூர் மாவட்டம் தலைநகரமாகவும், வட்டத் தலைநகரமாகவும் உள்ளபடியால் அரியலூர் வட்டத்தைப் பிரித்து, திருமானூரைத் தலைமையிடமாகக் கொண்டு திருமானூரை வட்டமாக அறிவிப்பு செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன்.

கோக்குடி ஊராட்சி மிகப் பெரிய ஊராட்சியாக உள்ளது. பூண்டி, காணிக்கைபுரம் ஆகிய சிற்றூர்கள் இணைந்துள்ளதைப் பிரித்து, கோக்குடியை தனி ஊராட்சியாகவும், பூண்டி, காணிக்கைபுரத்தை இணைத்து ஓர் ஊராட்சியாகவும் அறிவிப்பு செய்ய அன்புடன் விழைகிறேன்.

திருமானூர் ஊராட்சி ஒன்றியம் தலைமையிடம். இது 110 குக்கிராமங்களைக் கொண்டிருக்கிறது. தீ விபத்து மற்றும் ஆபத்து நேரங்களில் சுமார் 20 கிலோ மீட்டருக்கு அப்பால் இருந்துதான் தீயணைப்பு வண்டிகள் வரவேண்டியுள்ளது. அருள் கூர்ந்து திருமானூரில் தீயணைப்பு நிலையம் அமைத்திடவும், திருமானூர் ஒன்றியப் பகுதியில் நிறைந்த நெல் சாகுபடி செய்வதால் நவீன அரிசி ஆலை அமைத்திடவும் ஆவன செய்ய பணிவுடன் விழைகிறேன், அம்மா.

அரியலூர், விளாங்குடி, கைகாட்டி பகுதிகளைச் சுற்றிலும் சுண்ணாம்புக்கல் சுரங்கங்கள், சிமென்ட் தொழிற்சாலைகள் அமைந்துள்ளன. அரியலூர், ஜெயங்கொண்டம் இரு நகரங்களும் கிராம இணைப்புகளுக்கு மிக முக்கிய சந்திப்புப் பகுதிகளாக உள்ளன. சட்டம்—ஒழுங்கு சீர்பெற, குவியலான போக்குவரத்து சீர்பெற மக்கள் சேவைக்கு அவசியம் விளாங்குடி, கைகாட்டியில் ஒரு காவல் நிலையம் அமைத்திட எங்கள் காவல் தெய்வமே, ஆணையிட்டு ஆவன செய்து தாருங்கள், அம்மா.

அரியலூர் தொகுதியில் சுண்டக்குடி, அம்பலவர் கட்டளை, சுமார் 23 கிராமங்களைச் சார்ந்த 45,000 விவசாயப் பெருமக்கள்

நிறைந்து வாழ்கின்ற பகுதியாகும். மழைக் காலங்களில் மருதையாற்றில் கரைபுரண்டு ஓடுகின்ற காட்டாற்று வெள்ளத்தால் போக்குவரத்தே தடைபட்டு, அப்பகுதிகள் துண்டிக்கப்பட்டு மக்கள் சொல்லொணாத் துயரப்படுகின்றனர். சுண்டக்குடி, அம்பலவர்கட்டளைப் பகுதி மக்களின் நீண்ட நெடுநாளைய கோரிக்கையான மருதையாற்றின் குறுக்கே பாலம் கட்டும் வேண்டுகோளை அம்மா, உங்களால் மட்டுமே நிறைவேற்றித் தர முடியும். இருகரம் கூப்பி விழைகிறேன், இத்திட்டத்தை நிறைவேற்றித் தாருங்கள், அம்மா.

இதய தெய்வம் அம்மா அவர்கள் 2004 ஆம் ஆண்டு ஆட்சியில் இருந்தபோது, அரியலூர் தொகுதியின் தென்திசையில் ஓடுகின்ற கொள்ளிடத்தில் தடுப்பணை கட்டி, நீர்வளத்தை நில வளத்தை, குடிநீர் ஆதாரத்தை, வேளாண்மை மேன்மையைச் செம்மைப்படுத்திட, செழிப்பை நல்கிட திருமானூர், தா.பழூர் டெல்டா பாசன விவசாயிகளுக்கு உடன் 5,000 இலவச மின் இணைப்பு வழங்கும் அபூர்வ திட்டம் தந்தீர்கள். தன்னலம் மிக்கோர், சுரண்டல்காரர்கள், சுயநலவாதிகள், மணல் கொள்ளையர்கள், மக்களைத் தூண்டி மகத்தான திட்டத்தை நிறைவேற்றாமல் செய்துவிட்டனர். மீண்டும் அம்மா ஆட்சி வந்துவிட்டதென மக்கள் பூரிப்படைந்து மகிழ்ந்திருக்கின்றார்கள். புதுமைகளை மட்டுமே படைத்திடும் புரட்சித் தலைவியே அம்மா, இத்தடுப்பணைத் திட்டத்தையும் டெல்டா பாசன விவசாயிகளுக்கு, இலவச மின்னிணைப்பு வழங்கும் திட்டத்தையும் நிறைவேற்றித் தாருங்கள், தாயே.

அரியலூர் மாவட்டத்திற்கு முந்தைய ஆட்சியால் வழங்கப்படாத கனிம வளம், சமூக நலம், விவசாயம், டாஸ்மாக், மருந்தகம், தீயணைப்பு, சிறுசேமிப்பு இத்துறைகளுக்குரிய மாவட்ட அலுவலகங்களை வழங்கி தமிழகத்தில் முதன்மை மாவட்டமாக அரியலூர் மாவட்டம் மிளிர்ந்திட உத்தரவு தாருங்கள், அம்மா.

எங்கள் அரியலூர் தொகுதிக்கு மிக அருகே அமைந்துள்ள பூவாளூர், லால்குடி பகுதியில் சிறிய நதியாய் ஓடி வந்து பல்லாயிரக்கணக்கான ஏக்கருக்குப் பாசன வசதி தருகின்ற பூவாளூர் அருகில் உள்ள பங்குனி வாய்க்காலை பாதியாய் தூர்த்து திருச்சிராப்பள்ளி, சிதம்பரம் சாலையின் பெரும்பகுதியை ஆக்கிரமிப்பு செய்து நவீன அரிசி ஆலை அலுவலகத்திற்கு மூன்று



அடுக்கு பளிங்கு மாளிகை கட்டப்பட்டுள்ளது. இதன் பாதுகாப்புக்கு ஆக்கிரமிப்பு இடத்தில் ஓர் ஆலயம் உள்ளது. யமுனை நதி சீர்குலையாமல் தாஜ்மஹாலைக் கட்டியுள்ளார் ஷாஜஹான். இவரோ பாசன வாய்க்காலை ஆக்கிரமிப்பு செய்து தன் தந்தையின் பெயரில் நவீன அரிசி ஆலைக்கு பளிங்கு அலுவலக மாளிகை கட்டியுள்ளார். அலஹாபாத் ஆனந்த பவனத்தை நாட்டிற்கு அர்ப்பணித்த தேசத் தலைவர் பெயரை வைத்துக்கொண்டு இவ்வளவு அக்கிரமம்; ஆவன செய்ய வேண்டுகிறேன், அம்மா.

அரியலூர் மாவட்டத்திற்கு மாவட்ட மருத்துவமனை முந்தைய ஆட்சியாளர்களால் புறக்கணிக்கப்பட்டிருந்தது. அரியலூர் மாவட்டம், மக்கள் நலனில் சிறப்பைப் பெற்றிட அருள்கூர்ந்து கருணைமிக்க மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் அரியலூரில் மாவட்ட மருத்துவமனை அமைத்திட உத்தரவு வழங்கி ஆவன செய்ய வேண்டுகிறேன்.

அரியலூர் தொகுதி, திருமானூர் ஒன்றியம், அழகியமணவாளம் ஊராட்சியில் கொள்ளிட நதியில் ராமநல்லூர் என்னும் பெரும் தீவு உள்ளது. சுமார் 2,500 மக்கள் கீழராமநல்லூர், மேல ராமநல்லூர் என்ற இரண்டு தீவு கிராமங்களில் வசித்து விவசாயம் செய்து வாழ்வு நடத்தி வருகிறார்கள். கொள்ளிட நதியில் வெள்ளப் பெருக்கு ஏற்படும் போதெல்லாம் இத்தீவு அனைத்துப் பகுதிகளிலிருந்தும் துண்டிக்கப்பட்டு விடுகிறது. தென்கரை தஞ்சை மாவட்டமாகவும், வடகரை அரியலூர் மாவட்டமாகவும் உள்ளது. இப்பகுதியில் கொள்ளிடம் ஆற்றில் பாலம் அமைத்து எனது தொகுதி மக்களின் நீண்ட நாள் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, அம்மா தந்த திட்டம் ஒன்றினை அரியலூரில் துவக்கி வைக்க வருகை தாருங்கள், தாயே. அம்மா அவர்களின் வருகையால் எம் அரியலூர் தொகுதி வளம் பெறும், வாழ்வு பெறும், வசதி பெறும், முதன்மை பெறும். தங்கத் தலைவியே, மாண்புமிகு தமிழக முதல்வரே, அம்மா, என் விழைவுகளை, வேண்டுகோளை ஏற்று செயலாக்க உத்தரவு வழங்குங்கள், தாயே. ஆயிரம், ஆயிரம் ஆண்டுகள் நின் புகழ் நீடூழி வாழ்க தாயே, நானும் என் குடும்பமும் காலம் உள்ளவரை, காரிருள் உள்ளவரை சந்ததியினரும் நின் புகழ் பாடுவோம் தாயே, நன்றி வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

## 5. அறிவிப்புகள்

### (அ) சட்டமன்றப் பத்திரிகையாளர்களுக்குப் பேனா, சுருக்கெழுத்துக் குறிப்பேடுகள் வழங்குதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மாட அனுமதிச் சீட்டு வழங்கப்பெற்றுள்ள செய்தியாளர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி, ஒவ்வோர் ஆண்டும் வழங்கப்படுவதுபோன்று இந்த ஆண்டும் பேனா மற்றும் குறிப்பேடுகளை சட்டமுன்வடிவு பிரிவு–2–லிருந்து இன்று முதல் பெற்றுக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*பிற்பகல் 12–35*

**4. மானியக் கோரிக்கைகள், 2011–2012, விவாதமும் வாக்கெடுப்பும்**–*தொடர்ச்சி*

**(அ) கோரிக்கை எண் 41 – வருவாய்த் துறை**

**(ஆ) கோரிக்கை எண் 51 – இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு தொடர்ச்சி**

**(இ) கோரிக்கை எண் 9 – பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** *அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.*

**திரு. ஏ. லாசர் :** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

*குடும்ப வருவாய் சரியாக இருந்தால் குடும்பமும் சிறப்பாக நடக்கும். அதுபோல, வருவாய்த் துறை என்பது சரியாக இருந்தால் தேசத்தின் வழி சரியானதாக இருக்கும், வழியும் திறக்கும். மனித*





*உடலை இயக்கும் நரம்பு மண்டலம்போல், மாநிலத்தையே இயக்கும் பிரதான மண்டலம் வருவாய்த் துறையே. இவ்வளவு பெரிய துறைக்கு, கடல் போன்ற இத்துறைக்கு தாங்கள் எனக்கு ஒதுக்கியிருக்கும் நேரமோ போதாது என்ற என்னுடைய கோரிக்கையை முதலில் வைத்து, மாமுனிவர் ஒருவர், தன் சீடனிடம், இந்துமாக் கடலை நோக்கி கையைக் காட்டி, 'க்ஷணப் பொழுதில் சமுத்திர நீரைக் குடித்து வா' என்று சொன்னாராம். நீரைப் பருகாமல் சீடன் கண்ணீர் வடித்து நின்ற நிலைக்கு என்னைத் தள்ளிவிடாமல், நம்முடைய மாமன்ற பேரவைத் தலைவர் அவர்கள் எனக்கு நேரத்தை சற்று உயர்த்தித் தரக் கோரிக்கை வைத்து, மாண்புமிகு முதல்வருக்கும் மற்றும் இங்குள்ள அனைவருக்கும் என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்து என் உரையைத் துவக்குகிறேன்.*

*நிலம் சார்ந்தே மனித வாழ்க்கை அனைத்தும் தீர்மானிக்கப்படுகிறது. குடிமனை, விவசாயம், தொழில், கல்வி, மருத்துவம், போக்குவரத்து, கனிமம், நீராதாரம், ஏன், கடைசியில் புதைக்கப்படும் அல்லது எரிக்கப்படும் சுடுகாடு வரை. எனவே, நிலமே மனித வாழ்க்கையின் ஆதாரம். அதனால்தான் நமது முன்னோர்கள், 'மண்ணில் போடு, இல்லையேல் மண்ணில் விளையும் பொன்னில் போடு' என்றனர். இன்று மண்ணும் பொன்னும் விண்ணை முட்டிப் போய்க்கொண்டிருக்கிறது, விலை உயர்வினால். குடிமனை நமது மாநிலத்தின் தீராத பிரச்சினையாக உள்ளது. இதுபோல் தேசம் முழுவதும் உள்ளது. இன்று தமிழ்நாட்டில் சுமார் 25 இலட்சம் குடும்பங்கள் குடிமனை இடம் சொந்தமாக இல்லாமல், மனு கொடுத்து பல காலமாகக் காத்து நிற்கின்றனர். எத்தனையோ அறிவிப்புகளுக்குப் பின்பும் அனுமார் வாலாக நீண்டுகொண்டே உள்ளது. கடந்த ஆட்சியில், தரிசு நிலம், புறம்போக்கு நிலம், நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் நீர் நிலையைப் பாதிக்காத மேடான பகுதிகளில் கட்டப்பட்டுள்ள வீடுகளுக்கு வகை மாற்றம் செய்து, நிலப் பட்டா வழங்கப்படும் என்று அறிவித்தனர். கலெக்டர்களின் தலைமையிலே குழுக்கள் கூடி அதைத் தீர்மானிக்கும் என்று அறிவித்தனர். 10 வருடம், 5 வருடம், கடைசியாக, 3 வருடம் குடியிருந்தாலும் குடிமனைப் பட்டா வழங்கப்படும் என்றார்கள். ஆனால், அத்தோடு நின்றுவிட்டது பட்டா பிரச்சினை. குடிமனை என்பது கடந்த காலங்களில் அப்படிப்பட்ட ஒரு நிலுவையில் நின்றுவிட்டது. இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற புதிய அரசு இந்த நிலைமைகளைக் கணக்கில் எடுத்துக்கொண்டு குடிமனை இல்லாத மக்களுக்கு குடிமனை கிடைத்திட நடவடிக்கை எடுக்கக் கோருகிறோம்.*

வெள்ளையன் காலத்தில் பிரிக்கப்பட்ட நிலவகைத் தலைப்புகள்தான் இன்றுவரை தமிழ்நாட்டில் நீடித்து வருகிறது. இதன் காரணமாக குடிமனைப் பட்டா கொடுப்பதற்கு பெரும் தடையாக அதுவே உள்ளது. வெள்ளையன் காலத்து தலையாரி முறையும், கிராம நிருவாக அதிகாரி, தாசில்தார் முறையும்தான் வருவாய்த் துறையின் புதிய முறையிலான சிந்தனைக்கும், செயலுக்கும், முன்னேற்றத்திற்கும் தடையாக உள்ளன எனக் கருதுகிறேன். எந்த ஒரு பிரச்சினைக்காக வருவாய்த் துறையை அணுகினாலும் மாதக் கணக்கில், வருடக் கணக்கில் இழுத்தடிக்கிறார்கள். மக்கள் நொந்து போகும் நிலை தொடருகிறது. புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை ஊராட்சி . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வருவாய்த் துறையைப் பற்றிச் சொல்லுகின்றபோது, 'இழுத்தடிக்கிறார்கள்' என்று சொல்லியிருக்கின்றார். அது கடந்த கால மைனாரிட்டி அரசில் ஆகியிருக்கலாம். இப்பொழுது பட்டா மாறுதலிலேயிருந்து மற்ற வேலைகள் எப்படி நடந்துகொண்டிருக்கின்றன என்பது, அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னால் என்ன என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். கடந்த காலத்தை நினைத்தே இப்பொழுதும் பேச வேண்டாம் என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர்.

**திரு. ஏ. லாசர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை ஊராட்சி, வடக்கு கிராமம், நரிமேடு பகுதியில் சுமார் 150 ஏக்கர் நத்தம் புறம்போக்கில் 669 பேருக்கு 1995–1996–இல் இருந்த அனைத்திந்திய அண்ணா தி.மு.க. ஆட்சிக் காலத்தில் பட்டா வழங்கப்பட்டது. 2008 ஆம் ஆண்டு காலத்தில் ஆட்சியிலிருந்த தி.மு.க.–வினர் அந்த நிலங்களை வேறு நபர்களுக்கு விற்க முயற்சித்தனர். இதை எதிர்த்து என் தலைமையில் 2008–இல் ஒரு மறியல் போராட்டம் நடத்தி, R.D.O.–விடம் ஒப்பந்தம் போடப்பட்டது. 3 மாதத்தில் நிலத்தை பட்டாதாரர்களிடம் ஒப்படைக்கிறோம் என்றார்கள். ஆனால், இதுவரை



சம்பந்தப்பட்டவர்களுக்கு அந்த நிலம் ஒப்படைக்கப்படவில்லை. இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற புதிய அரசு, கடந்தகால தங்களுடைய அந்த நடவடிக்கைகளின் அடிப்படையில் அந்த மக்களுக்கு அந்த நிலங்கள் கிடைத்திட, அவர்களிடம் நிலத்தை ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கக் கோருகிறேன்.

பிற்பகல் 12–40

அதுபோல, சமீபத்தில் ஈரோடு சென்றிருந்தேன். சத்தியமங்கலம், தோப்பூர் முனிசிபல் காலனியில் அருந்ததியின மக்கள் சுமார் 350 குடும்பங்கள் சுதந்திரத்திற்கு முன்பிருந்தே அங்கு குடியிருந்து வருகின்றனர். அந்த மக்களுக்கு பட்டாவைத் தவிர எல்லா ரெக்கார்டுகளும் உள்ளன. பஞ்சாயத்தாக இருந்து, நகராட்சியாக மாறிய காலம்வரை தீர்மானங்கள் போட்டு அனுப்பியும் இதுவரை அந்த மக்களுக்குப் பட்டா கிடைக்கவில்லை. இப்பிரச்சினையில் புதிய அரசு தலையிட்டு, அந்த மக்களுக்குப் பட்டா கிடைத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும். அதே இடத்திலே 50 சென்ட்டுக்கு மேல் வைத்துள்ள ஒரு மெட்ரிகுலேஷன் பள்ளிக்கு மட்டும் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்பதையும் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

அதேபோல, தலித் மக்களுக்கு சமீப காலங்களில் நில ஆர்ஜிதம் செய்து, குடிமனை வழங்கும் திட்டம் நடப்பில் இல்லை எனக் கருதுகிறேன். இதனால், தலித் மக்கள் பல்லாயிரக்கணக்கில் வீடு இல்லாமல் உள்ளனர். இந்த மக்களுக்கு அரசு ஒதுக்கியுள்ள 5,007 கோடி ரூபாய் சிறப்பு ஒதுக்கீடு திட்டம், வரவேற்கத்தகுந்த அந்தத் திட்டத்தின்கீழ் உள்ள பணத்திலிருந்து குடிமனை நிலங்களை வழங்கி, அவர்களுக்குப் பட்டா வழங்கலாம். அதுபோல, விவசாய நிலங்களைக்கூட இந்த மக்களுக்கு விலைக்கு வாங்கி வழங்கினால் அந்தத் திட்ட நிதியும் முறையாக தலித் மக்களுக்குப் போய்ச் சேரும்; அந்த மக்களுக்குப் பலனும் கிடைக்கும்.

நிலச் சீர்திருத்தச் சட்டத்தை முறையாக அமல்படுத்தி, மறைக்கப்பட்ட பினாமி நிலங்களை தமிழ்நாட்டில் மீட்டெடுத்திட அரசு ஒரு கமிஷனை நியமித்திட வேண்டும். அந்த நிலங்களை எடுத்து, நிலம் இல்லாத மக்களுக்கு வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமாய் புதிய அரசைப் பணிவோடு கோருகிறேன்.

அதுபோல, பஞ்சமி நிலங்கள் பல இலட்சம் ஏக்கர் உள்ளன.

இவற்றைக் கைப்பற்றி தலித் மக்களிடம் ஒப்படைக்க புதிய அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கோருகிறேன். நில உச்சவரம்புச் சட்டத்தில் எடுக்கப்பட்டு, வழங்காமல் நிலுவையில் உள்ள நிலங்களையும், வழக்கில் உள்ள நிலங்களையும், நிலம் இல்லாத ஏழைகளுக்குத் தந்திட அரசு நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு, கடந்தகாலத்தில் வழக்குகளில் தலையிடாமல் இருந்த தமிழக அரசினுடைய நடவடிக்கைகளைப்போல் இல்லாமல், நம்முடைய புதிய அரசு அந்த வழக்குகளை முடிவுக்குக் கொண்டுவர தலையிடக் கோருகிறேன்.

திண்டுக்கல் மாவட்டம், நெய்க்காரப்பட்டியில் உள்ள 5 ஆயிரம் ஏக்கர், தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி தாலுகா உள்காட்டுப் பகுதியிலுள்ள 2 ஆயிரம் ஏக்கர் இவை நில உச்சவரம்பின் அடிப்படையில் எடுக்கப்பட்ட நிலங்கள். ஆனால், இந்த மக்களுக்கு இன்னும் பட்டா வழங்கப்படாமல் உள்ளது. அதில் புதிய அரசு கவனம் செலுத்த வேண்டுமாய்க் கோருகிறேன். திருவள்ளூர் மாவட்டம் காவேரிராஜபுரம், பல்லவாடா தரிசு நிலம், கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரையில் உள்ள 180 ஏக்கர் தரிசு நிலம் இவை போன்ற தரிசு நிலங்களை எடுத்து, நிலம் இல்லாத மக்களுக்கு வழங்க நம்முடைய புதிய அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமாய்க் கோருகிறேன்.

நீலகிரி மாவட்டத்தில் 1989—இல் தி.மு.க. அரசு, அரசாணை எண் 1168—ன்கீழ் எந்த நிலத்திற்கும் பட்டா மாறுதல் செய்ய வேண்டாமென்று அறிவித்ததன் விளைவாக, அங்கே எந்த நிலத்தையும் வாங்கவும் முடியவில்லை, விற்கவும் முடியவில்லை. அந்த மக்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த மக்களுக்கு உதவிடும் விதத்தில் புதிய அரசு, பழைய அரசாணையை இரத்து செய்திட வேண்டுமாய்க் கோருகிறேன்.

நலத் திட்டங்களை வேகமாக அமல்படுத்திட, குறிப்பாக முதியோர், விதவை பென்ஷன் திட்டங்கள் உடனடியாக சம்பந்தப்பட்டவர்களுக்கு கிடைத்திட- வறுமைக்கோட்டிற்குக் கீழே, மேலே என்ற பிரச்சினையை வருவாய்த் துறை அதிகாரிகள் போட்டு குழப்புவதாகத் தகவல் உள்ளது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சட்டமன்றத்தில் அறிவித்தபடி வறுமைக்கோட்டுப் பிரச்சினைகளை அளவுகோலாகக் கொண்டு குழப்பும் போக்கை அதிகாரிகள் கைவிட வேண்டுமென்று அரசு உத்தரவுமூலம் . . .



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் சொன்ன பதிலுக்கு மாற்றுக் கருத்தாக திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். வறுமைக்கோடு என்பது தமிழக அரசால் நிர்ணயிக்கப்படுவதில்லை. அது மத்திய அரசால் நிர்ணயிக்கப்படுகிறது என்று. அதற்குப் பின்னால்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் உழவர் பாதுகாப்புத் திட்டம் என்ற அந்தத் திட்டத்தின் வாயிலாக பலன் பெறாதவர்களை இந்தத் திட்டத்தில் சேர்க்க வேண்டும் என்பதற்காக, அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அன்றையதினம்கூட, அந்தச் சட்டத்தை கொண்டு வருகின்றபோது நீங்கள் எதிர்த்தீர்கள். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் அன்றையதினம் சொன்னதைப்போல, உங்களைவிட அதிகமாக ஏழைகளுக்குப் பலன் சென்றடைகின்ற வகையிலே சிறப்பான திட்டங்களைச் செயலாற்றிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12—45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள். ஒரு நிமிடத்தில் உரையை நிறைவு செய்யுங்கள்.

**திரு. ஏ. லாசர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே பதில் சொல்லுகிற நேரத்தில், சமூகப் பாதுகாப்புத் திட்டத்தை நாங்கள் எதிர்த்ததாகச் சொன்னார்கள். அந்தத் திட்டத்தை நாங்கள் முழுமையாக எதிர்க்கவில்லை. அந்தத் திட்டம் சட்டமாக்கப்பட வேண்டுமென்பதற்காகத்தான் ஏற்கெனவேயிருந்த சட்டம் நடைமுறையில் இருக்கவேண்டுமென்று எங்களுடைய கருத்தைப் பதிவு செய்தோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் அன்றைய தினமே தெளிவாகச் சொன்னேன். ஒரு திட்டம் போடவேண்டுமென்றுசொன்னால், மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டு வந்தார் என்ற ஒரே காரணத்திற்காக சட்டம் போட்டு, அந்தத் திட்டத்தைத் திட்டம்போட்டு நிறுத்திவிட்டார்கள் என்று தெளிவாகச் சொல்லியிருந்தேன். (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் கேட்கின்றபோது, தெளிவாக அன்றையதினமே சொல்லியிருந்தேன். பட்ஜெட் கூட்டத்தொடர் முடிந்தவுடன், அடுத்த 4 அல்லது 5 மாதங்களுக்கு சட்டசபைக் கூட்டம் நடைபெறாது. மாண்புமிகு அம்மா அவர்கள் ஏதாவது உதவித் திட்டங்கள் அறிவித்தார்கள் என்று சொன்னால், ஒரு சட்டம் கொண்டு வந்து, அந்தச் சட்டம்* pass *செய்த பிறகு, ஏழைகளுக்கு உதவி பெறமுடியுமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். நீங்கள், எதற்கெடுத்தாலும் குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள்; சற்று யோசித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.*

**திரு. ஏ. லாசர்:** *மாண்புமிகு அம்மா அவர்களின் குரலுக்கு எதிராகச் சொல்லவில்லை. அதை அமல்படுத்திடத் தடையாக உள்ள அம்சங்களைக் களைந்திட வேண்டுமென்று சொல்கிறேன். அதுபோல, சிறுபான்மை முஸ்லிம் மக்களுக்கு சச்சார் குழுவினுடைய பரிந்துரையின் அடிப்படையில் தமிழகத்தில் அமல்படுத்த புதிய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். மேற்குவங்க இடதுசாரி அரசு 10 சதவிகிதம் இட ஒதுக்கீடு செய்தது. தமிழ்நாட்டில் 3 சதவிகிதமாக இருப்பதை ஜனத்தொகையின் அடிப்படையில் உயர்த்திட புதிய தமிழக அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. முத்துக்குமரன் அவர்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடம் என்று சொல்லி இரண்டு நிமிடங்கள் பேசிவிட்டீர்கள். (குறுக்கீடு) சரி, உரையைச் சீக்கிரம் முடியுங்கள்.*



**திரு. ஏ. லாசர்:** *பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை சம்பந்தப்பட்ட 2 விஷயங்கள். ஒன்று பிற்படுத்தப்பட்டோர் மாணவ, மாணவியர் தங்கிப் படிக்கக்கூடிய விடுதிகள் பழுதடைந்து கிடக்கின்றன, சீரழிந்து கிடக்கின்றன. அவற்றைப் புதுப்பித்து மாணவர்கள் நல்ல கல்வியை எய்திட வழிவகுக்கவேண்டும். அதுபோல. . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியருக்கான* hostel *வசதிகளை, ஒவ்வொரு முறை நாங்கள் ஆட்சிக்கு வரும்போதும், புதுப்பித்து நல்லமுறையில் அவற்றைப் புனரமைத்துக் கொடுக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) 2001–ல் மீண்டும் ஆட்சிப் பொறுப்பையேற்றபொழுது, நான் முதலமைச்சராக வந்தபோது பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் ஆய்வுக் கூட்டத்தை நடத்தினேன். அப்போது இந்த ஆண்டு நாம் என்ன செய்யப்போகிறோம் என்று கேட்டதற்கு, 9* hostel-*களை எடுத்துக்கொண்டு அவற்றைப் புதுப்பிக்கலாம் என்றார்கள். அப்பொழுது நான் கேட்டேன்; ஒட்டுமொத்தமாக எத்தனை* hostel-*கள் இருக்கின்றன என்று. அதற்கு 1000–க்கும் மேற்பட்ட, ஏறக்குறைய 1500* hostel-*இருப்பதாகச் சொன்னார்கள். "வெறும் 9* hostel-*களை எடுத்துக்கொண்டு, வாடகைக் கட்டடங்களில் இயங்கிக் கொண்டிருக்கின்ற இந்த 9* hostel-*களை நாம் எடுத்துக்கொண்டு, சொந்தக் கட்டடங்கள் கட்டிக் கொடுத்தால் மீதமுள்ள* hostel-*களுக்கெல்லாம் சொந்தக் கட்டடங்களைக் கட்டுவது எப்போது" என்று கேட்டேன். ஒவ்வோர் ஆண்டும் 9 அல்லது 10 என்று எடுத்துக்கொள்வோம் என்றார்கள். இந்த வேகத்தில் ஒவ்வோர் ஆண்டும் 9 அல்லது 10* hostel–*களை எடுத்துக்கொண்டால், பல ஆண்டுகள் ஆகிவிடும் என்று நான் சொன்னேன். 5 ஆண்டு காலத்தில்கூட முடிக்கமுடியாது. ஆகவே, இந்த ஆண்டே, அதாவது அப்பொழுது நான் சொன்னது, 2002 ஆம் ஆண்டில். "இந்த ஆண்டே அனைத்து* hostel-*களையும் எடுத்துக்கொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) பழுதடைந்த* hostel-*களையெல்லாம் புதுப்பித்து, புனரமைத்து வாடகைக் கட்டடங்களில் இயங்கிக் கொண்டிருக்கின்ற அத்தனை* hostel-*களுக்கும் சொந்தக் கட்டடம்*

கட்டிக் கொடுக்கவேண்டும்'' என்று ஆணையிட்டு அதை வெற்றிகரமாக நிறைவேற்றினோம். (மேசையைத் தட்டும் ஒலி) 2001–லிருந்து 2006–க்குள், அப்போது எங்கள் ஆட்சிக் காலம் முடிவடைவதற்குள் அனைத்து பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியருக்கான hostel-களுக்கு சொந்தக் கட்டடமும் கட்டிக் கொடுத்து, பழுதடைந்த hostel-களையெல்லாம் பழுதுபார்த்து, புனரமைத்து அந்தப் பணியை முடித்துவிட்டோம். ஆனால், நாங்கள் எதைச் செய்தாலும் அதைச் சீரழிப்பதும், கெடுப்பதும்தான் தி.மு.க.–விற்கு வேலையாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும் 2006–இல் ஆட்சிப் பொறுப்பேற்ற மைனாரிட்டி தி.மு.க. அரசு, சரியான பராமரிப்பின்றி மீண்டும் பிற்படுத்தப்பட்ட மாணவ மாணவியருக்கான hostel-களை பழுதடைய விட்டுவிட்டார்கள்; சீரழிய விட்டுவிட்டார்கள். ஆகவே, இது பரமபத விளையாட்டுபோல் மீண்டும், மீண்டும் நாங்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வருகின்றபோதெல்லாம், அதே பணியைத் திரும்பத் திரும்ப மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. நல்ல முறையில் சொந்தக் கட்டடங்கள் கட்டிக் கொடுத்து. பழுதுபார்த்து, எல்லாவற்றையும் நல்ல முறையில் இயங்க வைத்து நாங்கள் 2006–ல் ஆட்சிப் பொறுப்பை விட்டுச் சென்றோம். மீண்டும் 2011 இல், ஆட்சிப் பொறுப்பையேற்றுப் பார்க்கின்றபோது, அதே பழுதடைந்த நிலையில் அந்த hostels இருக்கின்றன. மீண்டும் அந்தப் பணிகளை மேற்கொண்டுள்ளோம். இன்னும் ஒன்றரை ஆண்டுக்காலத்திற்குள் அனைத்து பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியருக்கான hostels புனரமைக்கப்பட்டு, பழுது பார்க்கப்பட்டு, சொந்தக் கட்டடங்கள் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–50

**திரு. ஏ. லாசர்:** மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மிக்க, மிக்க நன்றி. ஒரே ஒரு விஷயம், பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில், 24 மனை தெலுங்கு செட்டியார்கள் நான்கு பிரிவுகளாக இருக்கின்றார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர், நன்றி கூறி, உரையை முடியுங்கள். தொகுதி குறித்த கோரிக்கைகளைத் தனியாக எழுதிக் கொடுத்துவிடுங்கள்.



**திரு. ஏ. லாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதி குறித்த கோரிக்கைகளைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

தேனி நகர் மாவட்டத் தலைநகரமாக மாறியபின், போக்குவரத்தும், மக்கள் வருகையும் அதிகரித்து உள்ளது. பெரியகுளம் செல்லும் சாலையிலும், மதுரை செல்லும் சாலையிலும் வாகனப் போக்குவரத்து பன்மடங்கு அதிகரித்து, மிகவும் பயண நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதுபோன்று நெரிசலைத் தவிர்க்க தேனி நகர் பள்ளிவாசல் தெரு, உழவர் சந்தை வழியாகச் செல்லும் திட்டச் சாலையையும், மதுரை சாலை நெருக்கடியைப் போக்க தேனி ஸ்ரீராம் தியேட்டர் வழியாகச் செல்லும் திட்டச் சாலையையும் உடனடியாக அமைத்துத் தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், நகரப் பகுதிகளுக்குள் போடப்பட்ட சாலைகள் அனைத்தும் மிகவும் பழுதடைந்துள்ள நிலையில் இருப்பதால், அவற்றை மராமத்து செய்து புதுப்பிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

தேனி நகராட்சிக்குச் சொந்தமான மருத்துவமனை, தேனி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் அருகில் உள்ளது. இது தற்போது மகப்பேறுக்கு மட்டுமே பயன்பட்டு வருகின்றது. இம்மருத்துவமனையை மேம்படுத்தி கூடுதல் மருத்துவர்கள் நியமனம் செய்து நகராட்சிப் பகுதி மக்களுக்கு அனைத்து வசதிகளும் கொண்ட ஒரு பொது மருத்துவமனையாக மாற்றி செயல்பாட்டிற்குக் கொண்டு வர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

தேனி நகராட்சி பகுதியில் ஏற்கெனவே இயங்கி வந்த என்.ஆர்.டி. நினைவு அரசு மருத்துவமனை வளாகத்தை மன நல மருத்துவம்–காப்பகம் மற்றும் நரம்பியல் மருத்துவம் ஆகிய இரண்டு தனித் துறைகள் கொண்ட மருத்துவமனையாக மாற்றிச் செயல்படுத்த திட்ட அறிக்கை தயார் செய்து துவக்க நிலையில் இருந்தது. சட்டமன்றத்திற்குத் தேர்தல் அறிவிக்கப்பட்டதால் அத்திட்டம் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. தற்போது இந்தத் திட்டத்தினை உடனடியாகத் துவக்க ஆவன செய்யவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

தேனி நகராட்சியில் துப்புரவு செய்யும் பணி தனியாருக்கு விடப்பட்டுள்ளது. இதில் பல்வேறு முறைகேடுகள் நடைபெறுகின்றன. மேலும் துப்புரவுப் பணியாளர்கள் வேறு பணிகளுக்கு அனுமதியின்றிப் பயன்படுத்தப்படுகின்றனர். இதனை நகராட்சி

நிருவாகம் கவனத்தில் கொள்வதில்லை. எனவே, துப்புரவுப் பணிகளை மேற்கொள்ள தனியாருக்குக் கொடுக்கப்பட்ட ஒப்பந்தத்தை இரத்து செய்து நகராட்சி நிருவாகமே நேரடியாக மேற்கொள்ள நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

தேனி ஒன்றியம், ஊஞ்சாம்பட்டி ஊராட்சிக்குட்பட்ட அன்னஞ்சி கிராம மக்கள் 50 பேர் தாங்கள் குடியிருக்கும் வீட்டுமனைகளுக்குப் பட்டா வழங்கக் கோரி கடந்த 3 ஆண்டுகளுக்கும் மேலாக பலமுறை தேனி வட்டாட்சியர் அவர்களிடம் மனுக்கள் அளித்து வந்துள்ளார்கள். நான் சட்டமன்ற உறுப்பினர் ஆனபின் இரண்டுமுறை வட்டாட்சியரைச் சந்தித்து அவர்களுக்குப் பட்டா கொடுக்க நடவடிக்கை எடுக்கக் கோரி மனுக்கள் கொடுத்தேன். தேனி மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கும் நினைவூட்டல் கடிதம் அனுப்பியுள்ளேன். இதுவரை நடவடிக்கை இல்லை. எனவே, அப்பகுதி மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கிட நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பெரியகுளத்திலிருந்து கும்பக்கரை-அடுக்கம் வழியாக கொடைக்கானல் செல்லும் சாலைத் திட்டம் துவக்கப்பட்டு தற்போது கொடைக்கானல் வனத் துறைக்குட்பட்ட 4 கிலோ மீட்டரும், பெரியகுளம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட 4 கிலோ மீட்டரும், கொடைக்கானல் ஊராட்சி ஒன்றித்திற்குட்பட்ட 19 கிலோ மீட்டரும், ஆக மொத்தம் 27 கிலோ மீட்டர் சாலை, வன பொறியியல் துறை, திருச்சி—தேனி மாவட்ட வளர்ச்சி முகமை, திண்டுக்கல் மாவட்ட வளர்ச்சி முகமை ஒப்புதலின்றி மேம்படுத்த இயலாது என்று தேனி மாவட்ட நெடுஞ்சாலைத் துறை கோட்டப் பொறியாளர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். மேலும், அவர்களின் ஒப்புதல் முறைப்படிக் கிடைத்தாலும் மீதமுள்ள 27 கிலோ மீட்டர் சாலை, தேவைப்படும் இடங்களில் தடுப்புச் சுவர் போன்றவை அமைத்து பணிகளை முடிக்க தோரயமாக ரூபாய் 550.00 இலட்சங்கள் தேவைப்படும் என்றும் தெரிவித்துள்ளார்கள். இத்திட்டம் நிறைவேற்றப்பட்டால் வர்த்தகம் மற்றும் போக்குவரத்து மிகவும் மேம்படும் என்பதால், செப்பனிடப்படாமல் இருக்கும் மீதமுள்ள 27 கிலோ மீட்டர் சாலையை உடனடியாக நெடுஞ்சாலைத் துறை செப்பனிடுவதற்கு வன பொறியியல் துறைக்கு திருச்சி—தேனி மாவட்ட வளர்ச்சி முகமை, திண்டுக்கல் மாவட்ட வளர்ச்சி முகமை ஆகிய துறைகள் ஒப்புதல் வழங்கவும், இத்திட்டத்தை நிறைவேற்றத் தேவையான ரூபாய் 550.00 இலட்சம் நிதியை ஒதுக்கீடு செய்தும் ஆணை பிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.



பெரியகுளம் பகுதியில் இருக்கும் வெளவாத்துறை நீர்த் தேக்கத்தினை விரிவுபடுத்தி அணை ஒன்று கட்டி அதிகமான நீரைத் தேக்க நடவடிக்கை எடுக்கும்பட்சத்தில் பெரியகுளம் நகராட்சி மற்றும் பெரியகுளம் ஒன்றியப் பகுதிகள் முழுவதுமுள்ள குடிநீர் பற்றாக்குறையைப் போக்க பெருமளவு உதவும். எனவே, அந்தப் பகுதியில் ஓர் அணை கட்ட நிதி ஒதுக்கீடு செய்து, பெரியகுளம் நகர் ஒன்றியப் பகுதிகளில் குடிநீர்ப் பற்றாக்குறையை நிரந்தரமாகப் போக்கும் விதமாக அமைய ஆவன செய்யவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

பெரியகுளம் நகராட்சிக்குட்பட்ட வராக நதியில் சாக்கடைக் கழிவுநீர் கலக்கிறது. இதனால் கொசுக்கள் போன்றவை உற்பத்தியாகி பல்வேறு நோய்த் தொற்றுகள் ஏற்பட்டு வருகின்றன. எனவே, இந்த நதியில் சாக்கடை நீர் கலக்காதவாறு தனி பைப் லைன் அமைத்துக் கடத்த, பாதாளச் சாக்கடைத் திட்டத்தை விரிவுபடுத்த மற்றும் மராமத்து செய்ய நிதி ஒதுக்கீடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பெரியகுளம் நகராட்சியில் கடந்த காலங்களில் 116 துப்புரவுப் பணியாளர்கள் பணியாற்றி வந்தார்கள். தற்போது வெறும் 36 நிரந்தரப் பணியாளர்கள் மட்டுமே பணியாற்றி வருகின்றார்கள். இவர்களுடன் 43 பணியாளர்கள் சுய உதவிக் குழுக்கள்மூலம் தினக்கூலியாகப் பணியாற்றி வருகின்றார்கள். தற்போது உள்ள மக்கள் நெருக்கடிக்கு இப்பணியாளர்கள் போதுமானதாக இல்லை. எனவே, இன்னும் கூடுதல் துப்புரவுப் பணியாளர்களை நியமிக்கவும், தினக் கூலியாகப் பணியாற்றிவரும் 43 பணியாளர்களை நிரந்தரப்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பெரியகுளம் நகராட்சிப் பகுதியில் கல்லூரி மாணவியருக்கான அரசு விடுதிக்குப் புதிய கட்டடம் கட்ட நகராட்சிப் பகுதியில் இடம் தேர்வுசெய்து அந்த இடத்தினை ஒதுக்கித் தருவதற்கான தீர்மானம் கேட்டு தேனி மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறைமூலம் பெரியகுளம் நகராட்சிக்குக் கோரிக்கை வைக்கப்பட்டது. பெரியகுளம் நகராட்சி ஆணையாளர், குறிப்பிட்ட அந்த இடம் கடந்த 2009 ஆம் ஆண்டு நூலகம் கட்ட ஒதுக்குவதாக நகராட்சியில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருப்பதால், தற்போது மாணவியர் விடுதிக்கு அந்த இடத்தை ஒதுக்க முடியாது எனத் தெரிவித்துள்ளார். ஆனால் அந்த இடத்தில் இதுவரை நூலகம் கட்டுவதற்கான ஏற்பாடுகள் இல்லை. குறிப்பிடப்பட்ட அந்த இடமானது நகரின் மையப் பகுதியாக உள்ளதால் மாணவியருக்கு

மிகவும் பாதுகாப்பாக இருக்கும் என்பதையும், நகராட்சிக்குச் சொந்தமான கட்டடத்தில் நூலகம் ஏற்கெனவே இயங்கி வருகின்றது என்பதையும் கருத்திற்கொண்டு, தேனி மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை கேட்ட அந்த இடத்தினை ஒதுக்கித்தர நகராட்சியில் தீர்மானம் போடுவதற்கான நடவடிக்கை மேற்கொண்டு, அரசு மாணவியர் விடுதி கட்ட ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

பெரியகுளம் நகராட்சியின் இடநெருக்கடி, மக்கள் தொகைப் பெருக்கம், சுற்றுச்சூழல் மேம்பாடு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, பெரியகுளம் நகராட்சிக்கு ஒரு மின் மயானம் அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

பெரியகுளம் நகராட்சியில் அமைந்துள்ள தென்கரையையும், வடகரையையும் இணைக்கும் தற்போதுள்ள ஆடுபாலம் சேதமடைந்துள்ளது. மற்றும் இது குறுகலானதும்கூட. இதில் பாதசாரிகள் மட்டுமே செல்ல முடியும். இப்பாலத்தில் வாகனங்களும் செல்லும் அளவிற்கு விரிவான திட்டம் தயார் செய்து புதிதாக அகலமான பாலம் ஒன்றை அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

முதலக்கம்பட்டி ஊராட்சியில் முதலக்கம்பட்டியிலிருந்து ஆண்டிபட்டிக்குச் செல்ல வைகை ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் அமைக்க வேண்டியுள்ளது. அந்தப் பகுதி மக்கள் விவசாயத்திற்கும் போக்குவரத்திற்கும் மிகுந்த பயனளிக்கும் இந்தப் பாலத்தினை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

கீழவடகரை ஊராட்சியில் அழகர்சாமிபுரத்திலிருந்து பெரியகுளம் நகராட்சி தென்கரைக்குச் செல்ல வராக நதியின் குறுக்கே ஒரு பாலம் அமைக்கவேண்டியுள்ளது. மேற்குறிப்பிட்ட அழகர்சாமிபுரத்தில் சுமார் 5,000—த்திற்கும் மேல் மக்கள் வசிக்கின்றார்கள். அவர்கள் பெரியகுளம் நகராட்சி தென்கரையில் அமைந்துள்ள அரசு மருத்துவமனை, வட்டாட்சியர் அலுவலகம், நீதிமன்றம் போன்ற பல்வேறு அலுவலகங்களுக்குச் செல்ல ஏதுவாக இப்பாலம் அமையும். எனவே, இந்தப் பாலத்தினைக் கட்டுவதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

பெரியகுளம் ஒன்றிய பகுதிகளுக்குட்பட்ட வடபுதுப்பட்டி, என்டப்புளி, சில்வார்பட்டி, முதலக்கம்பட்டி, மேல்மங்கலம்,



ஆ.வாடிப்பட்டி, ஜி.கல்லுப்பட்டி, குள்ளப்புரம் ஆகிய ஊராட்சிகளுக்குத் தேவையான இடங்களில் கிராம இணைப்புச் சாலைகள் புதிதாக அமைக்கவும், ஏற்கெனவே போடப்பட்டு பழுதடைந்த சாலைகளை மராமத்து செய்யவும் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

தேவதானப்பட்டி பேரூராட்சியில் தலித் மக்களுக்கு—அவர்கள் பலமுறை மனுக்கள் அளித்தும் அவர்கள் குடியிருக்கும் வீட்டுமனைகளுக்குப் பட்டா வழங்கப்படவில்லை. எனவே, இதுகுறித்து வருவாய்த் துறை உடனடியாக ஆய்வுசெய்து அவர்களுக்கு—பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

பெரியகுளம் தொகுதிக்குட்பட்ட தென்கரை, தாமரைக்குளம், வடுகப்பட்டி, தேவதானப்பட்டி, கெங்குவார்பட்டி ஆகிய ஐந்து பேரூராட்சிகளுக்கும் தேவையான கழிப்பிட வசதிகள், குறிப்பாக குறைந்தபட்சம் பேரூராட்சிகளுக்கு தலா நான்கு பெண்கள் கழிப்பறைகளை புதிதாக அமைத்துக்கொடுக்கவும் ஏற்கெனவே உள்ள கழிப்பறைகளை மராமத்து செய்யவும் உரிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொண்டு, பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. முத்துக்குமரன் அவர்கள்.

**திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புனித ஜார்ஜ் கோட்டையிலிருந்து புதுக்கோட்டைக்கு நீண்டதொரு வெற்றிப் பாதையை அமைத்துக் கொடுத்திருக்கக்கூடிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு மீண்டும் நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

இருதயம் நம் உடல் பகுதியில் எவ்வளவு முக்கியமான பகுதியோ அதைப்போன்று வருவாய்த் துறை நிருவாகம் என்பது மாநிலத்தின் ஒட்டுமொத்த நிருவாகத்தில் மிக முக்கியமான துறை. இத்துறையில் கிட்டத்தட்ட 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட காலிப் பணியிடங்கள் இருக்கின்றன. இவற்றை உடனடியாக நிரப்புவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். அதோடு, வருவாய்த் துறையில் இருக்கக்கூடிய

கிராம நிருவாக அலுவலர்களுக்கு பதவி உயர்வு வழங்குகிற வகையில், கிட்டத்தட்ட 3 ஆண்டுகள் மட்டுமே கிராம நிருவாக அலுவலர்கள் அந்தப் பணியிலே இருப்பதற்குக் கட்டாயப்படுத்தி, மீண்டும் வருவாய்த் துறையின் நிருவாகத்தின் பல்வேறு பொறுப்புகளுக்கு அவர்களைத் தரம் உயர்த்துகிறபோது, அந்த நிருவாகத்தினுடைய நிலம் சார்ந்த பல்வேறு தீர்வுகளை எட்டுவதற்கு வாய்ப்பாக இருக்குமென்பதனை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கிராமங்களை நோக்கி வருவாய்த் துறையினருடைய நிருவாகம் செல்வதற்கு ஏதுவாக பிர்கா அளவில் இருக்கக்கூடிய வருவாய் ஆய்வாளர்களை பள்ளி மாணவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்குவது, பல்வேறு பட்டாக்கள் வழங்குவது போன்ற பணிகளுக்குப் பயன்படுத்தலாம். இப்போது, நம்முடைய அரசு அறிவித்திருக்கக்கூடிய "சிறப்புப் பட்டா" வழங்குகிற திட்டம் நல்லமுறையில் சிறப்பான முறையிலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதேபோன்று, இதையும் எளிமைப்படுத்தி ஆய்வாளர் பணியிடங்களையெல்லாம் தரம் உயர்த்தி மண்டலத் துணை வட்டாட்சியர் அளவுக்குத் தரம் உயர்த்தி உடனுக்குடன் சான்றிதழ்கள் வழங்க வருவாய் ஆய்வாளர் இருக்கின்ற இடத்திலேயே பெற்றுக்கொள்வதற்கு ஏதுவான நடைமுறைகளையும் ஏற்படுத்திக்கொடுத்தால் பொதுமக்களுக்கு ஏற்படக்கூடிய சிரமமானது வெகுவாகக் குறைந்துவிடும் என்பதனை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்ற ஆட்சியில் இரண்டு ஏக்கர் நிலம் வழங்குகிறோம், மனைப் பட்டா வழங்குகிறோம் என்று கூறி, தமிழகத்தின் பல பகுதிகளில் இன்றைக்குப் போலியான பட்டாக்களைக் கடந்த திராவிட முன்னேற்ற கழக அரசு ஒவ்வொரு மாவட்டத்திலும், அமைச்சர் பெருமக்களை வைத்து, விழாக்கள் நடத்தி, ஒரு துண்டுச் சீட்டில் ஏதோ அச்சடித்துக் கொடுத்து விட்டுச் சென்றுவிட்டார்கள். எங்கு பார்த்தாலும் மக்கள் அந்த வெள்ளைப் பேப்பரை வைத்துக் கொண்டு, எங்களுக்குப் பட்டா கொடுத்திருக்கிறார்கள் என்று இடங்களைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள். இடங்களைக் காண்பிக்காமல் தவறான முறையில் பல்வேறு போலியான இடங்களை அதிலே பதித்து, அப்படிப் பட்டா கொடுத்திருப்பதெல்லாம் இன்றைக்கு நடந்திருக்கிறது. அவற்றையெல்லாம் உடனடியாக மாற்றியமைத்து நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், உண்மையாக குடியிருந்து



வருகின்றவர்களுக்கு குடிமனைப் பட்டா வழங்குகிற ஒரு சிறப்புத் திட்டத்தை நம்முடைய மாநிலத்தில் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். புதுக்கோட்டை உள்ளிட்ட சுற்றுவட்டாரப் பகுதிகளிலே பட்டா வழங்குகிற பிரச்சினை அதிகமாக இருக்கிறது என்பதனை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, கடந்த காலத்தில், போலியான பட்டா கொடுத்தார்கள் என்றார்கள். மறுபடியும் பேசுகின்றபோது, இன்றைக்கு என்று சொல்லியிருக்கிறார். அப்படிப் போலியான பட்டாக்கள் இன்றைக்கு ஏதாவது கொடுத்திருக்கிறார்களா? உங்களிடம் ஏதாவது ஆதாரம் இருக்கிறதா? அப்படி ஆதாரம் இருந்து, அதை என்னிடம் கொடுத்தால் மாண்புமிகு அம்மா அவர்களின் அறிவுரைகளின்பேரில், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டுகிறேன். நான், சென்ற ஆட்சியில் கொடுத்த பட்டாவை வைத்துக்கொண்டு மக்கள் இன்று அலைந்து கொண்டிருக்கிறார்கள்; அந்தத் தவறுகளை நீங்கள் நீக்கவேண்டும் என்பதற்காகத்தான் கூறினேன் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று, முதியோர் உதவித் தொகை, நலிந்தோர் நலத் திட்ட உதவித் தொகைகள் சிறப்பாக உயர்த்தி அறிவிக்கப்பட்டிருக்கிறது. முதியோர்கள் மற்றும் அன்புமிக்கத் தாய்மார்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெற்று, அவர்கள் வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். முதியோர் உதவித் தொகை வழங்குவதில் ஆதரவற்ற விதவைகளுக்கு இருக்கக்கூடிய ஆண் மகனுக்கு 18 வயது நிரம்பினால் உதவித் தொகை நிறுத்தப்படுமென்கிற உத்தரவு இருக்கிறது. 18 வயதைக் கடந்து பள்ளி மற்றும் கல்லூரிப் படிப்பிலே இருக்கிறபொழுது, அந்தக் காலத்தைத் தளர்த்திக் கொடுக்க வேண்டுமென இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12–55*

அதேபோன்று, வறுமைக்கோட்டைப் பற்றிய பிரச்சினையே இல்லையென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருப்பது சிறப்பானது; வரவேற்புக்குரியது. தமிழகத்திலுள்ள உண்மையான ஏழைகளைக் கண்டறிந்து அவர்களுக்குரிய சிறப்புத் திட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்ற கோரிக்கையை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

நில அளவைத் துறையில் கிட்டத்தட்ட 1984–1985–க்கு முன்புதான் துறைப் பணியாளர்களெல்லாம் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள். இன்னும் தொடர்ந்து அந்தத் துறையில் பணியிடங்களெல்லாம் காலியாக இருக்கின்றன. அந்தக் காலிப் பணியிடங்களெல்லாம் நிரப்பப்பட வேண்டும்.

கச்சத் தீவை மீட்கிற வழக்கில் வருவாய்த் துறையை இணைத்திருப்பது ஒரு மாபெரும் சிறப்பு அம்சமாகும். அதையும் இந்த நேரத்திலே நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த ஆட்சி, பேரிடர் மேலாண்மைத் துறையில் இன்றைக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய இழப்புகளுக்கு நிவாரணம் வழங்குகிற முறையில், புதுக்கோட்டை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலுள்ள விவசாயப் பெருமக்களை ஏமாற்றி, அவர்கள்மீது வழக்குகளைப் பதிவு செய்திருக்கிறார்கள். அவற்றையெல்லாம் திரும்பப் பெற வேண்டுமென இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழகத்தில் இருக்கக்கூடிய பிற்படுத்தப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக 69 சதவிகித இட ஒதுக்கீட்டிற்காக, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலமாக எடுத்திருக்கக்கூடிய முயற்சி என்பது, இன்றைக்கு ஒட்டுமொத்தத் தமிழகத்திற்கு ஒரு நல்ல முன்னுதாரணமாக அமைந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

சென்ற ஆட்சியில், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள், சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கான ஒதுக்கீடுகளையெல்லாம் குறைத்து, அவர்களுடைய வாரிசுகளுக்குக் கிடைக்கக்கூடிய பணிகளையெல்லாம் நிறுத்தி வைத்திருக்கிறார்கள். அவையெல்லாம் மீண்டும் அவர்களுக்குக் கிடைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோன்று, புதுக்கோட்டைக்கு அருகிலே, காவேரி மில் என்ற இடத்தில், 167 ஏக்கர் இடமிருக்கிறது. இந்த இடத்தை திராவிட



முன்னேற்றக் கழகத்தினுடைய ஒரு முக்கிய பிரமுகர் அபகரித்து வைத்துக்கொண்டிருக்கிறார். தொழிற்சாலைக்குரிய அந்த இடம், இன்றைக்கு அவர்களுடைய கையிலே இருக்கிறது. அந்த இடத்தை உடனடியாக மீட்டெடுத்து அரசினுடைய கையிருப்பிற்குக் கொண்டுவர வேண்டுமென இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், குறிப்பிட்டு அந்தப் பெயரை எங்களிடத்திலே சொல்வாரேயானால், அவர்கள்மீது, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. 24 மனை தெலுங்குச் செட்டியார் சமூக உட்பிரிவுகளில் இருக்கக்கூடிய அனைவரையும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலே இணைத்துக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு மாணவர் விடுதிகளில், விடுதிக் காப்பாளர் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. அவற்றையெல்லாம் உடனடியாக நிரப்ப வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் மிகப் பெரிய வருவாய்க் கோட்டமாக புதுக்கோட்டை வருவாய்க் கோட்டம் இருக்கிறது. பொது மக்களுடைய நலன் கருதி, அந்த வருவாய்க் கோட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். புதுக்கோட்டை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலே இருக்கக்கூடிய 25,000–க்கும் மேற்பட்ட மக்களுக்கு இன்னும் பட்டா வழங்காத நிலை இருந்துகொண்டிருக்கிறது. அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு ஒரு சிறப்புத் திட்டத்தை உருவாக்கித் தர வேண்டுமென இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலமாக புதிய விடுதிகள் ஏற்படுத்துகிறபொழுது, சென்ற ஆட்சியில், ஒரு விடுதிக்கு ஒரு சமையலர் பணியிடம்தான் என்று அரசு அறிவித்திருக்கிறது. ஒரு விடுதியில் 2 சமையலர்கள் இருந்தால்தான், மாணவர்களுக்கு

[திரு. எஸ்.பி. முத்துக்குமரன்] [2011 ஆகஸ்ட் 23

திருப்திகரமாக உணவினைச் சமைத்து வழங்க முடியும். எனவே, அந்த முறையை இரத்து செய்து, இரண்டு சமையலர் பணியிடங்களாக உயர்த்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை விடுதிகளை தூய்மையாகவும், துப்புரவாகவும் வைத்துக்கொள்வதற்கு துப்புரவுப் பணியாளர் இடத்தையும் உருவாக்கித் தர வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. முத்துக்குமரன், ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:** உரையை முடித்துவிடுகிறேன். அந்தப் பணியிடத்தையும் உருவாக்கிக் கொடுத்து, விடுதிகளைத் தூய்மையாக வைத்துக்கொள்வதற்கு ஏதுவாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வருவாய்த் துறையில், வட்டாட்சியர் அவர்களிடத்தில் கணினி சிட்டாவைப் பெறுவதிலே சில தவறுகள் இருக்கின்றன. விவசாயிகளுடைய பட்டாவில் இருக்கக்கூடிய பெயருக்கும், கணினியில் பதிவு செய்யப்பட்டிருக்கக்கூடிய பெயருக்கும் வித்தியாசம் இருக்கிறபட்சத்தில் அதைத் திருத்துகிற உரிமையை வட்டாட்சியருக்கே வழங்கினால், விவசாயிகளுக்கு இலகுவான முறையிலே திருத்திக்கொள்வதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1–00*

என்னுடைய தொகுதிக் கோரிக்கைகள் எழுதிக் கொடுத்துள்ளேன். அவற்றைப் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாணவர் விடுதிகளில் உள்ள காலியிடங்களை நிரப்பி, விடுதிக் காப்பாளர்களுக்குப் பதவி உயர்வு வழங்குவது குறித்து அரசு பரிசீலிக்க வேண்டும்.

மாநிலத்தின் மிகப் பெரிய வருவாய்க் கோட்டமாக உள்ள புதுக்கோட்டையை இரண்டாகப் பிரித்து, ஆலங்குடியைத் தலைமையிடமாகக் கொண்டு தனி வருவாய்க் கோட்டம் உருவாக்கிட வேண்டும்.



2011 ஆகஸ்ட் 23] [திரு. எஸ்.பி. முத்துக்குமரன்]

புதுக்கோட்டை நகர், காமராஜர்புரம், கோவில்பட்டி, விவேகானந்தர்புரம், என்.கே. நகர், அடப்பன்வயல், ராஜகோலபுரம், மச்சுவாடி, நரிமேடு, மாப்பிள்ளையார்குளம் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் குடியிருந்து வருகிற சுமார் முப்பதாயிரத்திற்கும் மேற்பட்டவர்களுக்குக் குடிமனைப் பட்டா வழங்க வேண்டியுள்ளது. இதற்குத் தனியாக ஒரு வட்டாட்சியர் அலுவலகம் செயல்பட்டு வருகிறது. இதிலுள்ள சர்வேயர் உள்ளிட்ட பணியிடங்களைக் கூடுதலாக்கி விரைந்து பட்டா வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

புதுக்கோட்டை நகரத்தில் கொரடு என்கிற ஒரு நிலப்பகுதி உள்ளது. இதனை அந்தந்தப் பகுதியில் அனுபவம் செய்து வருபவர்களுக்குப் பட்டா வழங்கிட வேண்டும்.

புதுக்கோட்டை தொகுதியில், புதுக்கோட்டை கோட்டாட்சியர் அலுவலகம், வட்டாட்சியர் அலுவலகம், வட்ட வழங்கல் அலுவலகம், தனி வட்டாட்சியர் அலுவலகம் போன்றவை பழைமை வாய்ந்த கட்டடங்களில் இயங்கி வருகின்றன. அவற்றிற்குப் புதிய கட்டடங்கள் கட்டித் தர ஆவன செய்ய வேண்டுகிறேன். கறம்பக்குடி தாலுகா அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டப்பட வேண்டும்.

சென்ற ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட கறம்பக்குடி தாலுகாவின் எல்லையிலுள்ள துவார் ஊராட்சியை கந்தர்வக்கோட்டையிலிருந்து பிரித்து கறம்பக்குடியுடன் இணைக்க வேண்டும். அதேபோன்று, கந்தர்வக்கோட்டை தாலுகாவைச் சேர்ந்த வெட்டன்விடுதிக்கு அருகிலுள்ள மற்றொரு பகுதியையும் கறம்பக்குடி தாலுகாவுடன் இணைக்கவேண்டும். மாங்கோட்டை, களபம் உள்ளிட்ட ஊராட்சிகளை ஆலங்குடி தாலுகாவுடன் இணைக்க வேண்டும். மேற்கண்ட பகுதியைச் சேர்ந்த மக்கள் வட்டாட்சியர் அலுவலகம் செல்ல வேண்டுமென்றால், தொலைதூரம் சென்று வர வேண்டியிருப்பதால் இந்தத் திருத்தத்தைச் செய்து தர வேண்டுகிறேன்.

புதுக்கோட்டை தொகுதியில் பெருங்களூர், வெட்டன்விடுதி ஆகிய பள்ளிகளுக்கு மாணவ, மாணவியர் தங்கும் விடுதிகள் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டு வாய்ப்பிற்கு நன்றிகூறி முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை. .*

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சி அமைத்து நூறாவது நாள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) 100 நாட்களிலேயே நூறு ஆண்டுச் சாதனைகளை நிகழ்த்தி, தமிழகத்தை முதன்மை மாநிலம் ஆக்கிடத் திட்டங்கள் வகுத்துச் செம்மைப்படுத்தும் எங்கள் அன்பிற்குரிய தலைவி; நூறாவது நாளில் பிற்படுத்தப்பட்டோர் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறைக்கான மானியக் கோரிக்கையின்மீது எனக்குப் பேச வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கும், எங்கள் ஈடு இணையற்ற முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, அம்மாவின் ஆட்சி இன்னும் 100 ஆண்டுகள் வெற்றிநடை போடவேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*உலகத் தமிழர்களின் ஒட்டுமொத்தக் காவலன் என்று சுய தம்பட்டம் அடித்து, உலகத் தமிழர்களை ஏமாற்றிய அரசியல் வேடதாரிகளை அவனிக்கு அடையாளம் காட்டிய எங்கள் பாசத்திற்குரிய அன்னையே! புவனம் முழுவதும் வாழும் தமிழர்களுக்காக போர்க்குரல் கொடுக்கும் புறநானூற்றுத் தலைவியே! தலைமை ஏற்பவர்களெல்லாம் தலைவர்களில்லை, தமிழர்களின் நல்வாழ்விற்காகத் தன்னையே உருக்கிக்கொள்ளும் தகைசான்றோரே தலைவர்கள் என வாழ்ந்துவரும் சந்தனத் தலைவியே! தலைவர்களுக்கெல்லாம் தலைவியாக வாழ்ந்துவரும் எங்கள் உன்னதத் தலைவியே! அன்னையின் அன்னையாகிய சந்தியா தாய் ஈன்றெடுத்த தவப் புதல்வியே! எங்கள் அன்புத் தலைவியே! ஸ்ரீரங்க நாயகியே! சத்துணவு தந்த சரித்திர நாயகனின் உண்மையான வாரிசே! ஆயிரத்தில் ஒருவன் கண்டெடுத்த அன்னமிட்ட கையே! ஒன்றரைக் கோடி தொண்டர்களில் ஒருவனாகிய எனக்கு கட்சியில் பல்வேறு பொறுப்புகளை அளித்து, மக்களிடையே முகவரி கொடுத்து, இன்று சட்டமன்ற உறுப்பினராகவும் ஆக்கி, பொற்கால ஆட்சி நடத்தும் புனிதத் தலைவியின் தலைமையில் அமைந்துள்ள அமைச்சரவையில் அமைச்சராக்கி அழகுபார்க்கும் எங்கள் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது பணிவான நன்றி கலந்த வணக்கத்தைக் காணிக்கையாக்குகின்றேன்.*



*இராணிப்பேட்டை தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அம்மா! நீங்கள் நீடூழி வாழவேண்டும். எல்லாம் வல்ல இறைவனே, எங்கள் அம்மா அவர்களுக்கு நல்ல நலமுடன் நீண்ட ஆயுளைக் கொடு இறைவா! அவர் நீண்ட ஆயுளுடன் இருக்க வேண்டும் இறைவா! அவருடைய ஆயுள் முழுவதும் உன் திருவருளால் முதல்வராகவும், இந்தப் பாரத தேசத்தின் பிரதமராகவும் வரவேண்டும், இறைவா! (மேசையைத் தட்டும் ஒலி) எத்தகைய துன்பமோ, துயரமோ இல்லாமல், எப்பொழுதும் எங்கள் அம்மா மகிழ்ச்சிக் கடலில் நீந்திக் கொண்டிருக்க வேண்டும், இறைவா! எங்களுடைய பிரார்த்தனையை ஏற்றுக்கொண்டு, மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நல்ல உடல் நலத்துடன் நீண்ட ஆயுளைக் கொடு இறைவா என்று கேட்டுக்கொள்கிறேன்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் வரிப் பணத்தில் கட்டிய கட்டடத்தை, நம்முடைய ஒப்பற்ற முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழக மக்களின் நலனில் அக்கறை கொண்டு, வரலாற்றுச் சிறப்பு மிக்க ஓர் அறிவிப்பாக அந்தக் கட்டடத்தின்* ‘A’ Block *என்னும் பிரிவை பலதுறை உயர் சிறப்பு மருத்துவமனைக்காகவும்,* ‘B’ Block *என்னும் பிரிவை அரசு மருத்துவக் கல்லூரிக்காகவும் ஒதுக்கி, மாபெரும் உதவி செய்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றி செலுத்தும் வகையில், அந்த மருத்துவமனைக்கும், மருத்துவக் கல்லூரிக்கும் எங்கள் உயிரினும் மேலான, தமிழகத்தின் ஈடு இணையற்ற முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பெயர் சூட்டியே ஆகவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். டாக்டர் புரட்சித் தலைவி அம்மா மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை என்று அந்தக் கட்டடத்திற்குப் பெயர் சூட்ட வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொண்டு, மானியக் கோரிக்கைக்குச்*

செல்கின்றேன்.

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை. தமிழ்நாட்டிற்கு வளமையும், செழுமையும் சேர்த்து தமிழக மக்கள் நலனுக்காக சிறப்பான பல்வேறு திட்டங்களைத் தீட்டி, அவற்றைச் சீரிய முறையில் செயல்படுத்திவரும் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களது ஆசியுடன் எனது பதிலுரையைத் தொடங்குகின்றேன்.

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் காத்திட மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினரைப் பொறுத்தவரையில், இட ஒதுக்கீடு என்பது உணர்வுபூர்வமானது ஆகும். சமுதாயத்தில் அழுத்தப்பட்ட பகுதியைச் சார்ந்த மக்களுக்கு, கல்வி மற்றும் அரசு வேலைவாய்ப்பில் ஓரளவு இடங்களை ஒதுக்கி, அதன்மூலம் சமுதாய சமத்துவத்தை ஏற்படுத்தும் திட்டமாகும். சமூகப் பின்னணியின் போதாமைகள் காரணமாக, பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு அளிக்கப்படும் வாய்ப்பு என்பதோடுகூட, அடுத்த தலைமுறைக்கான முதலீடு என்றும் இதனைக் கொள்ளவேண்டும். அப்படிப்பட்ட அந்த ஆணை செல்லாது என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தபோது, பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்கள் தலைமையில் எழுந்த கிளர்ச்சி, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் முதல் திருத்தம் கொண்டு வருவதற்குக் காரணமாக அமைந்தது. அதற்குப் பிறகும், நீதிமன்ற வழக்குகள்மூலம் தமிழகத்தினுடைய இட ஒதுக்கீட்டு அளவைக் குறைத்திட முயன்றபோது, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழ்நாடு சட்டம் 45/1994–ஐ இயற்றி, அரசமைப்புச் சட்டத்தின் ஒன்பதாம் அட்டவணையில் வைத்து சமூக நீதி காத்தார். மீண்டும் நீதிமன்றத்தின் வழக்குகளில் இட ஒதுக்கீடு இடம்பெற்றது.

பிற்பகல் 1–05

13–7–2010 அன்று உச்ச நீதிமன்றம், தமிழ்நாட்டில் உள்ள இட ஒதுக்கீடு பற்றிய வழக்கில் ஓர் உத்தரவு பிறப்பித்தது. அந்த வழக்கு, மாண்புமிகு அம்மா அவர்கள் இயற்றிய சட்டம் 45/1994–ஐ எதிர்த்து, இட ஒதுக்கீட்டுக்கு எதிரானவர்கள் தொடுத்த வழக்கு. அன்றைய தினம் தமிழக அரசின் பொறுப்பில்



இருந்தவர்கள் உச்ச நீதிமன்றத்திடம் சென்று, பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையத்திடம் ஆவணங்கள் அனைத்தும் ஒப்படைக்கப்பட்டு விட்டன என்றும், அதனால் பரிசீலனையிலுள்ள இந்த இட ஒதுக்கீடு பற்றிய உத்தரவை வழங்க கால அவகாசம் வேண்டுமென்று கேட்டனர். அதை ஏற்று உச்ச நீதிமன்றம் ஒரு வருட காலம் அவகாசம் கொடுத்தது. ஆனால், அன்றைய நாள் முதல் ஆட்சி மாற்றம் ஏற்படும் நாள் வரை, அதற்கான பரிந்துரையை ஆணையத்திடம் இருந்து பெறவில்லை. மாறாக, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு மேற்கொள்ளப்பட்ட விரைவான நடவடிக்கைகள், இன்றையதினம் இட ஒதுக்கீட்டுச் சட்டத்திற்கு எழுந்த அபாயத்தை நீக்கியுள்ளன.

பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் தலைவராக இருந்த நீதியரசர் திரு. ஜனார்த்தனன் அவர்களை அன்றைய தினம் ஆட்சியிலிருந்த மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழக அரசு நியமித்த தலைவர் என்று அம்மா அவர்கள் பார்க்கவில்லை. அதனால்தான், அவர் அளித்த பதவி விலகல் கடிதத்தை ஏற்க மறுத்து, அவரையே தலைவராக நீடிக்குமாறு 16–06–2011 ஆம் தேதி ஆணையிட்டார்கள். இதர பெரும்பாலான உறுப்பினர்கள் பதவி விலகிய காரணத்தினால் மறுபடியும் 8 புதிய உறுப்பினர்களோடு மீண்டும் பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் உருவாக்கப்பட்டது.

ஆணையம், அதனிடம் அளிக்கப்பட்டிருந்த ஆவணங்களைத் தீர்க்கமாகப் பரிசீலித்து 8–7–2011 அன்று மாண்புமிகு அம்மா அவர்களைச் சந்தித்து பரிந்துரையை அளித்தது. 11–7–2011 அன்று மாண்புமிகு அம்மா அவர்கள் அமைச்சரவையைக் கூட்டி, ஆணையத்தினுடைய அறிக்கையை விரிவாக விவாதித்து, 69 சதவிகித இட ஒதுக்கீட்டை நிலைநிறுத்தும்படியான அரசாணையை அன்றே வெளியிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரில் வளமான பிரிவினர் இட ஒதுக்கீட்டிலிருந்து நீக்கப்பட்டுவிடுவார்களோ என்று நிலவிய அச்சம் அறவே நீக்கப்பட்டது.

கடந்த ஐந்து ஆண்டுக் காலம் ஆண்டவர்கள், ஐந்தாவது முறையாகவும் ஆண்டவர்கள் இதற்கொரு தீர்வைக் காணவில்லை. ஆனால், பதவியேற்று இரண்டே மாதத்திற்குள், உச்ச நீதிமன்றம் விதித்த காலக்கெடுவைக் கடைப்பிடித்து, 69 சதவிகித இட ஒதுக்கீட்டை, தமிழக வரலாற்றில் பொன்னேட்டில் பொறிக்கப்பட்ட எழுத்துக்களாக நிலைத்து நீட்டிக்கச் செய்தவர்

நமது மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள். 1951 ஆம் ஆண்டு தொடங்கி, கடந்த 60 ஆண்டு காலமாக நடந்து வரும் இடஒதுக்கீட்டுப் போராட்டத்தில் நிகழ்ந்த மாபெரும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி, பதவியேற்ற 60 நாட்களுக்குள் நமது அம்மா அவர்கள் பிறப்பித்த ஆணை.

**பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறை:**

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர், சிறுபான்மையினர் ஆகியோருக்கான மூன்று தனித் தனித் துறைகளையும், இரண்டு பொருளாதார மேம்பாட்டுக் கழகங்களையும், ஐந்து வாரியங்களையும், இரண்டு ஆணையங்களையும் தன்னகத்தே கொண்டு, 285 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளையும், 1,238 பள்ளி, கல்லூரி, மாணவ, மாணவியர் தங்கிப் படிக்கும் விடுதிகளையும் இத்துறை நிர்வகித்து வருகிறது.

உச்ச நீதிமன்றம் மண்டல் குழு வழக்கு என்றழைக்கப்பட்ட இந்திரா சஹானி எதிர் மைய அரசு வழக்கில் பிறப்பித்த கட்டளைக்கிணங்க, வகுப்புகளைப் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்ப்பது அல்லது நீக்குவது தொடர்பாகப் பெறப்படும் கோரிக்கைகளை ஆய்வு செய்து அரசுக்குப் பரிந்துரை வழங்குவதற்காக, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் 15–03–1993 இல் ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் தலைமையில் அரசியல் அமைப்புச் சட்டப் பிரிவு 16(4) மற்றும் 340–இன்கீழ் நிரந்தர அமைப்பாக ஏற்படுத்தப்பட்டது. குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு முறை பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலைச் சீராய்வு செய்வதும் இவ்வாணையத்தின் பணியாகும். நீதியரசர் திரு. ஜனார்த்தனன் அவர்களைத் தலைவராகக் கொண்டு, 8 புதிய உறுப்பினர்களைக் கொண்ட ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்**

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர், சிறுபான்மையினர் வகுப்பினைச் சார்ந்த தனி நபர்கள், குழுக்கள் மற்றும் சங்கங்கள் தங்களது பொருளாதார முன்னேற்றத்திற்காக சிறு தொழில்கள், வணிகம் ஆகியவற்றைச் செய்ய குறைந்த வட்டி விகிதத்தில் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மேம்பாட்டுக் கழகம் கடனுதவி வழங்கி வருகிறது. இக்கழகத்தால்



வழங்கப்படும் கடனுதவி, புதிய தொழில் தொடங்கி, அதன்மூலம் வருவாயை ஈட்டி பொருளாதார நிலையில் முன்னேற்றம் அடைய உதவுகிறது.

**பொருளாதார மேம்பாடு**

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினரின் பொருளாதார மேம்பாட்டிற்காக, தையல் இயந்திரம், சலவைப் பெட்டிகள் மற்றும் வேலைவாய்ப்பு நோக்கில் அமைந்த பயிற்சி இலவசமாக வழங்கப்படுகிறது.

**சீர்மரபினர் நல வாரியம்**

சீர்மரபினர் வகுப்பினரின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்காக அரசு செயல்படுத்தும் பல்வேறு நலத் திட்டங்களின் பயன்கள் அவர்களுக்குச் சென்று சேர்வதை உறுதி செய்யும் பொருட்டு "சீர்மரபினர் நல வாரியம்" அமைக்கப்பட்டுள்ளது. சீர்மரபினர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு விபத்து நிவாரணம், கல்வி ஊக்கத் தொகை, திருமண உதவித் தொகை, மகப்பேறு உதவித் தொகை மற்றும் முதியோர் ஓய்வூதியம் ஆகிய நலத் திட்டங்களின்கீழ் உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன.

*பிற்பகல் 1–10*

**கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள்**

மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் அதிகமாக வசிக்கும் பிரமலைக் கள்ளர் வகுப்பினரின் கல்வி நிலையை மேம்படுத்துவதற்காக, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறையின்கீழ், 285 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. இப்பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு இலவச எழுதுபலகைகள், நோட்டுப் புத்தகங்கள், பாடப் புத்தகங்கள் மற்றும் சீருடைகள் வழங்கப்படுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

**கல்வி உதவித் தொகைத் திட்டங்கள்**

பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சேர்ந்த மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில், பள்ளிப் படிப்பு கல்வி உதவித் தொகை, பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகை மற்றும் இலவசக் கல்வி ஆகியன அரசால் வழங்கப்படுகின்றன.

**பரிசுத் திட்டங்கள்**

10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சேர்ந்த மாணவ, மாணவியர் அதிக மதிப்பெண்கள் பெறுவதை ஊக்குவிக்க, மாநில மற்றும் மாவட்ட அளவில் அதிக மதிப்பெண் பெறும் மாணவ, மாணவியருக்குப் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

**இலவச மிதிவண்டி வழங்கும் திட்டம்**

அரசு, அரசு உதவிபெறும் மற்றும் பகுதியாக நிதியுதவி பெறும் பள்ளிகளில், 11 ஆம் வகுப்பு பயிலும் அனைத்துச் சமுதாய மாணவ, மாணவியருக்கும் இலவச மிதிவண்டிகள் வழங்கும் திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 2001–2002 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டம் சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**விடுதிகள்**

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ், மொத்தம் 1,238 பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர், சிறுபான்மையினர் நல விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில், 937 விடுதிகள் அரசுக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. மேலும் 149 விடுதிகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டு, அவற்றின் கட்டுமானப் பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன. இதனைத் தவிர, வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் 148 விடுதிகளுக்கும் படிப்படியாகச் சொந்தக் கட்டடம் கட்ட மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக 2011–2012 ஆம் ஆண்டு 36 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது செயல்பட்டு வரும் விடுதிகளில், கழிப்பறைகள், குளியலறைகள் போன்றவற்றைப் பராமரிப்பதற்காக 4.725 கோடி ரூபாய் இவ்வாண்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பணிகள் பொதுப் பணித் துறையின்மூலம் நிறைவேற்றப்படும். விடுதிகள் தொடங்குவதற்கான வரன்முறைகளின் அடிப்படையில், தேவைக்கேற்ப புதிய விடுதிகள் தொடங்குவது குறித்துப் பரிசீலிக்கப்படும்.



விடுதிகளில் தங்கிப் பயிலும் பள்ளி மாணவ, மாணவியரின் உணவுக் கட்டணத்தை மாதமொன்றுக்கு 450 ரூபாயிலிருந்து 650 ரூபாயாகவும், கல்லூரி விடுதி மாணவ, மாணவியரின் உணவுக் கட்டணத்தை மாதமொன்றுக்கு 550 ரூபாயிலிருந்து 750 ரூபாயாகவும் உயர்த்த மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் அரசுக்கு ஆண்டுதோறும் 15.32 கோடி ரூபாய் கூடுதல் செலவாகும்.

**நரிக்குறவர் நல வாரியம்**

நரிக்குறவர்களுக்குக் கல்வி, மாற்றுத் தொழில் புரிவதற்கான உதவி மற்றும் அவர்களுக்குப் பல்வேறு நல உதவிகள் வழங்குவதற்காகவும், இத்திட்டங்களின் செயலாக்கத்தைக் கண்காணித்து நரிக்குறவர்களின் மேம்பாட்டினை உறுதி செய்யவும், "தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம்" இயங்கி வருகிறது. நரிக்குறவர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு, விபத்து நிவாரணம், கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை, மகப்பேறு உதவித் தொகை மற்றும் முதியோர் ஓய்வூதியம் ஆகிய நலத் திட்டங்களின்கீழ் உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன.

**சிறுபான்மையினர் நலன்**

சிறுபான்மையினரின் கல்வி, சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கான பல்வேறு நலத் திட்டங்களைத் தீட்டுவதிலும், செயல்படுத்துவதிலும் தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. ஒன்றாம் வகுப்பு முதல், தொழிற்கல்வி, ஆராய்ச்சிப் படிப்பு வரை தடையின்றி தொடர்ந்து பயிலும் வகையில், சிறுபான்மையின மாணவ, மாணவியருக்குக் கல்வி உதவித் தொகைத் திட்டங்கள் சென்றடையும் விதத்தில், இவ்வரசு தொடர்ந்து செவ்வனே செயல்படுத்தி வருகிறது. சிறுபான்மையின மாணவ, மாணவியர் கல்வி கற்கும் ஆர்வத்தை ஊக்குவிக்கும் வகையில், 10 மற்றும் 12 ஆம் வகுப்புக்கான அரசுப் பொதுத் தேர்வுகளில், முதல், இரண்டு மற்றும் மூன்றாம் நிலைகளில் உயர் மதிப்பெண்கள் பெறுபவர்களுக்கு மாநில மற்றும் மாவட்ட அளவில் பரிசுத் தொகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், சிறுபான்மையினரின் பொருளாதார மேம்பாட்டிற்காகப் பல கடன் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது.

தமிழ்நாட்டிலுள்ள வக்ஃபு சொத்துகளைப் பராமரிக்க, தமிழ்நாடு வக்ஃபு வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. வக்ஃபு வாரியத்தின் நிருவாகச் செலவுகள் அதிகரித்து, ஓய்வுபெற்ற ஊழியர்களுக்குச் சேரவேண்டிய நிலுவைத் தொகைகூட வழங்க இயலாத நிலையில் உள்ளது என்பதைத் துறையின் ஆய்வுக் கூட்டத்தின்போது அறிந்தவுடன், மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு, வக்ஃபு வாரியத்தின் ஒய்வு பெற்ற ஊழியர்களுக்கு நிலுவைத் தொகை வழங்கிட பெருந்தொகையாக 3 கோடி ரூபாய் வழங்கியும், நிருவாக மானியத்தை 45 இலட்சம் ரூபாயிலிருந்து, 1 கோடி ரூபாயாக உயர்த்தி வழங்கியும் ஆணையிட்டுள்ளார்கள் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டிலிருந்து செல்லும் புனித ஹஜ் பயணிகளுக்குத் தேவையான உதவிகள் செய்திட, தமிழ்நாடு மாநில ஹஜ் குழு அமைக்கப்பட்டுள்ளது. உலமாக்களுக்கான ஓய்வூதியத்தினை ரூபாய் 750/-லிருந்து ரூபாய் 1,000/- ஆக உயர்த்தியும், பயனாளிகளின் எண்ணிக்கையினை 2,400 லிருந்து 2,600 ஆக உயர்த்தியும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கல்வி உதவித் தொகை மற்றும் இலவசக் கல்வி அரசால் வழங்கப்படுகின்றன. மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியோடு 2011–2012 ஆம் நிதியாண்டிற்கான புதிய அறிவிப்புகளைப் பேரவைக்கு அறிவிக்கின்றேன்.

பிற்பகல் 1–15

**புதிய விடுதிகள் திறப்பு**

பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பினருக்கு 25 கல்லூரி விடுதிகளும், இஸ்லாமிய சிறுபான்மையின மாணவியருக்கு 3 பள்ளி விடுதிகளும், ஆக மொத்தம் 28 புதிய விடுதிகள் ரூ.4.28 கோடி செலவில் இந்த ஆண்டில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**விடுதிகளில் கூடுதல் இடங்கள் ஏற்படுத்துதல்**

பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளில் ஒப்பளிக்கப்பட்ட மாணவ, மாணவியர்



எண்ணிக்கைக்குக் கூடுதலாக 10 விழுக்காடு மாணவர்களைச் சேர்க்க மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் ஆணை வெளியிடப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இதனால் அரசுக்கு ரூ.5.11 கோடி கூடுதல் செலவினம் ஏற்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**விடுதிகளுக்கு புதிய சமையல் பாத்திரங்கள் வழங்குதல்**

2005–2006 ஆம் ஆண்டிற்குமுன் தொடங்கப்பட்ட 500 பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளுக்கு பழுதடைந்துள்ள சமையல் பாத்திரங்களுக்குப் பதிலாக ரூ.50 இலட்சம் செலவில் புதிய சமையல் பாத்திரங்கள் வழங்க மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு திட்டமிட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**விடுதிகளுக்கு அரைவை இயந்திரங்கள் வழங்குதல்**

ரூபாய் 6.25 இலட்சம் செலவில் 50 பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளுக்கு புதிய அரைவை இயந்திரங்கள் வழங்க மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு முடிவு செய்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் நல விடுதி மாணவ, மாணவியருக்கு பரிசுத் தொகை உயர்வு:**

மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளில் தங்கி 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பயின்று அரசு பொதுத் தேர்வில் மாநில அளவில் முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது மதிப்பெண்கள் பெறும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு தற்போது வழங்கப்படும் பரிசுத் தொகையான ரூ.3,000/–, ரூ.2,000/–மற்றும் ரூ.1,000/–என்பது முறையே ரூ.10,000/–, ரூ.7,000/–மற்றும் ரூ.5,000/–என்று உயர்த்தி வழங்க மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு முடிவு செய்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி மாணவ, மாணவியருக்குப் பரிசு வழங்குதல்**

*பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளில் தங்கி 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பயின்று அரசு பொதுத் தேர்வில் மாநில அளவில் முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது மதிப்பெண்கள் பெறும் மாணவ, மாணவியருக்குப் பரிசு வழங்கும் திட்டம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி இந்த ஆண்டு புதிதாகத் தொடங்கப்படும். இவ்விடுதி மாணவ, மாணவியருக்கு மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல விடுதி மாணவ மாணவியருக்கு உயர்த்தி வழங்கப்படுவதைப்போன்று முறையே ரூ.10,000/– ரூ.7,000/– மற்றும் ரூ.5,000/– என்று வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)*

**அதிகத் தேர்ச்சிக்கு ஊக்கப் பரிசு**

*கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 10 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவ, மாணவியரை அரசுப் பொதுத் தேர்வில் 95 விழுக்காட்டிற்கு அதிகமாகத் தேர்ச்சிப் பெறச் செய்யும் உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தலா ரூ. 10,000/– பரிசுத் தொகை வழங்குவதுடன் நற்சான்றிதழும் வழங்க மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு திட்டமிட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**கள்ளர் சீரமைப்புப் பள்ளி மாணவ, மாணவியருக்குப் பரிசுத் தொகை உயர்வு**

*கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர் அதிக மதிப்பெண்கள் பெறுவதை ஊக்குவிக்கும் வகையில், இப்பள்ளிகளில் பயின்று 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது மதிப்பெண்கள் பெறும் மாணவ, மாணவியருக்கு தற்போது வழங்கப்படும் பரிசுத் தொகை ரூ.3,000/-, ரூ.2,000/- மற்றும் ரூ.1,000- (மூன்று மாணவர்களுக்கு) என்பது முறையே ரூ.10,000/- ரூ.7,000/- மற்றும் ரு.5,000/- என்று உயர்த்தி வழங்க மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*



**புதிய தமிழாசிரியர் பணியிடங்ள் தோற்றுவிப்பு**

*கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கு ஏற்கெனவே ஒப்பளிக்கப்பட்ட 51 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களைச் சரண் செய்து அதற்குப் பதிலாக 51 தமிழாசிரியர் பணியிடங்களுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் ஒப்பளிப்பு செய்யப்படும். இதனால் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் தமிழாசிரியர்களின் பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 1-20*

**தனியார் விடுதிகளுக்கான உணவு மானியம் அதிகரிப்பு**

*அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் விடுதிகளில் தங்கிப் பயிலும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பு மாணவ, மாணவியருக்கு வழங்கப்படும் உணவு மானியம் ரூ.450/- இலிருந்து ரூ.650/- ஆக மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் உயர்த்தி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்காக ரூ.38.96 இலட்சம் கூடுதல் செலவாகும். (மேசையைத் தட்டும் ஒலி)*

**விடுதி மாணவ, மாணவியருக்கான பல்வகை செலவினத் தொகை உயர்வு**

*பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலப் பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில் தங்கியுள்ள மாணவ, மாணவியருக்கு பல்வகைச் செலவினமாக மாதம் ஒன்றுக்கு வழங்கப்படும் ரூ.25/– மற்றும் ரூ.35/– என்பதை உயர்த்தி முறையே ரூ.50/– மற்றும் ரூ.75/– (மேசையைத் தட்டும் ஒலி) என்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால் உயர்த்தி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இதனால், அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.2.011 கோடி கூடுதல் செலவினம் ஏற்படும்.*

**மாவட்ட அளவிலான பரிசுத் தொகை உயர்வு**

*பொதுப் பரிசுகள் வழங்கும் திட்டத்தின்கீழ் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் ஒவ்வொரு மாவட்டத்திலும் முதலாவது, இரண்டாவது, மூன்றாவது மதிப்பெண்கள் பெறும்*

பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின வகுப்பு மாணவ, மாணவியருக்கு வழங்கப்படும் பரிசுத் தொகை இரண்டு மடங்காக உயர்த்தி முறையே ரூ.3,000/–, ரூ.2,000/– மற்றும் ரூ.1,000/– என்றும், ரூ.6,000/–, ரூ.4,000/– மற்றும் ரூ.2,000/– என்றும் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.17.28 இலட்சம் கூடுதல் செலவினம் ஏற்படும்.

**ஹஜ் குழுவின் நிருவாக மானியம் உயர்வு**

தமிழ்நாடு மாநில ஹஜ் குழு நிருவாகச் செலவிற்காக அரசு வழங்குகின்ற மானியத் தொகையை ரூ.10 இலட்சத்திலிருந்து ரூ.20 இலட்சமாக உயர்த்தி வழங்க மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு முடிவு செய்திருக்கிறது என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் சான்றிதழ் தொடர்பாக புதிய மென்பொருள் உருவாக்கம்**

மைய அரசுப் பணிகளில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள 27 விழுக்காடு இட ஒதுக்கீட்டின் பயனைப் பெறுவதற்கான இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் சான்றிதழ் O.B.C. Certificate பெறுவதில் சிரமங்கள் உள்ளதாக அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. இதனைக் களையும் பொருட்டு இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் சான்றிதழ் பெறுவது தொடர்பாக ஏற்படும் சந்தேகங்கள்/எதிர்கொள்ளும் இன்னல்கள் குறித்து இணையதளம்மூலம் தெரிவித்து, உடனடியாக நிவாரணம் பெற ஏதுவாக மென்பொருள் உருவாக்க மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு முடிவு செய்துள்ளது என்பதைப் பெருமகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகம் முழுவதும் உள்ள அனைத்துத் தமிழர்களின் நலனுக்காக, அல்லும், பகலும் தாயாக இருந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பாடுபட்டு வருகின்றார்கள். எங்களுக்கெல்லாம் தாயாக விளங்கி, தமிழகத்தை ஆளும் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என் பணிவான வணக்கங்களைச் சமர்ப்பித்து என் உரையை நிறைவு செய்கிறேன்.



## 5. அறிவிப்புகள்–தொடர்ச்சி

### (ஆ) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்று நூறு நாட்கள் நிறைவடைந்ததை 24–8–2011 அன்று பேரவையில் கொண்டாடுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மகத்தான வெற்றி பெற்று, மூன்றாவது முறையாக முதல்வராகப் பொறுப்பேற்று, (மேசையைத் தட்டும் ஒலி) மிகச் சிறந்த முறையில் நல்லாட்சி செய்து வரும் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சி, இன்றைக்கு நூறு நாட்களை நிறைவு செய்கிறது (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) என்பதைப் பேரவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மகத்தான வரலாற்றுச் சிறப்புமிக்க ஆட்சியின் 100–வது நாளைச் சிறப்பிக்கும் வகையில், நாளை பேரவையில் சிறப்பாகக் கொண்டாடப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

## 4. மானியக் கோரிக்கைகள், 2011–2012, விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 41 – வருவாய்த் துறை**

**(ஆ) கோரிக்கை எண் 51 – இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு–தொடர்ச்சி**

**(இ) கோரிக்கை எண் 9 – பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை**

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய மானியக் கோரிக்கையின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்து, தங்களின் மேலான கருத்துகளையும், ஆலோசனைகளையும் வழங்கியுள்ளார்கள். அந்த வெட்டுத் தீர்மானங்களை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான கவனத்திற்குக் கொண்டு சென்று நடவடிக்கைகள் எடுக்கப்படும். மேலும், தேவையான விளக்கங்களை எனது பதிலுரையில் அளித்துள்ளேன். ஆகவே,

மாண்புமிகு உறுப்பினர்கள் தாங்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறைக்கான மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தர வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்பங்களை அள்ளித் தரும் மலையும், கடலும், யாழும் பிறரை மகிழ்விக்கிறதே தவிர, அது அச்சுகங்களை அனுபவிப்பது இல்லை. அது போலவே, இயற்கை தந்த அருட்கொடையாம் நம் அம்மாவும், இரவு பகல் பாராது விழித்திருந்து, கண்துஞ்சாது கடமை செய்து, இம்மண்ணை வளர்த்து, வார்த்து இந்தியாவில் தலை சிறந்த மாநிலமாய் தமிழகத்தை உருவாக்கிட ஓயாது உழைத்து (மேசையைத் தட்டும் ஒலி), அதிகாலை தொடங்கி பின்னிரவு கடந்தும் கண்ணுறங்கா உழைப்பால் மக்களுக்கு நலத்தைத் தருகிறார்களே தவிர, எப்பயனையும் அவர் அனுபவிப்பதில்லை. தன் சுகத்தை, தன் நலத்தைத் துறந்த தாயுருவில் புனிதராகவே உழைக்கின்றார்கள். அதனால் அந்த மலையும், அந்தக் கடலும், அந்த யாழ் தரும் இசையும் இவ்வுலகில் உள்ளவரை தாயே, தங்களின் திருநாமத்தைத் திருமந்திரமாகவே, தமிழக மக்களோடு சேர்ந்து இந்த எளியவனான நானும் ஒலித்துக்கொண்டே இருப்பேன் என்பதை நன்றியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1–25*

"அரியதாய், பெரியதாய் வணக்கத்திற்குரிய தாய்
எளியதாய் வலியதாய் என்றுமே இனிய தாய்
மலர்ந்ததாய் கனிந்ததாய் மனதிலே நிறைந்த தாய்
வளர்ந்ததாய் வாழ்வதாய் வந்ததாய் எங்கள் தாய், எங்கள் தாய்

தொட்ட இடம் துலங்கவரும் தாய்க்குலமே
(மேசையைத் தட்டும் ஒலி)
கண்பட்ட இடம் பூ மலரும் பொன்மகளே
தமிழக மக்களைக் காப்பாற்ற வந்த தெய்வத் தாயே"

தாங்கள் தமிழக மக்களுக்காக நூறு ஆண்டு காலம் வாழ வேண்டும், வாழ வேண்டும் என்று வணங்கி, மாண்புமிகு அம்மா



அவர்களின் பாதம் பணிந்து எனது நன்றியினைக் காணிக்கையாக்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை கிளைக் கழகப் பிரதிநிதியாகவும், கிளைக் கழகச் செயலாளராகவும், பள்ளிபாளையம் ஒன்றிய அம்மா பெயரைத் தாங்கிய பேரவைச் செயலாளராகவும் ஆக்கி, ஒன்றியக் கழகச் செயலாளராகவும், ஒன்றியக் குழுத் தலைவராகவும், 2006 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் திருச்செங்கோடு தொகுதி சட்டமன்ற உறுப்பினராகவும், அதற்குப் பின்னர் நாமக்கல் மாவட்டக் கழகச் செயலாளராகவும் ஆக்கி, 2008 ஆம் ஆண்டு ராசிபுரத்தில் புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். அவர்களுடைய சிலையைத் திறந்து வைத்து, பெரிய பொதுக் கூட்டம் நடத்த அனுமதியும் வழங்கி, அதில் மாண்புமிகு அம்மா அவர்கள் கலந்துகொண்டு பேருரையும் நிகழ்த்த வாய்ப்பு தந்ததற்கும், நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட குமாரபாளையம் தொகுதியில் முதல் சட்டமன்ற வேட்பாளராகவும் என்னை நிறுத்தி, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், வெயிலைக்கூடப் பொருட்படுத்தாமல், நாமக்கல் மாவட்டத்திற்கு வருகை புரிந்து வாக்குகளைச் சேகரித்து வெற்றி பெறச் செய்து என்னை சட்டமன்ற உறுப்பினர் ஆக்கியதோடு, வருவாய்த் துறை அமைச்சராகவும் நியமனம் செய்ததற்கும் நன்றி பாராட்டி எங்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உண்மையான தொண்டனாக (மேசையைத் தட்டும் ஒலி) என் உயிர் உள்ளவரைக்கும் நான் மட்டுமல்ல, எனது குடும்பமே நன்றியுடன் இருப்போம் அம்மா என்று இந்த நேரத்திலே வணங்குகின்றேன், தாயே.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிகரற்ற சிந்தனையும், நேர்மைமிக்க செயல்திறனும் ஒருங்கே அமையப்பெற்ற மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின்கீழ் செயல்படும் மக்கள் நலம் பேணும் அரசில், பல்வேறு பணிகளைச் செம்மையாகச் செயல்படுத்தும் துறைகள் அனைத்திற்கும் முன்னோடியான துறையாகவும், நிருவாகத்தின் முதுகெலும்பாகவும், கட்டுக்கோப்பான சமுதாய மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்குப் பெருந்துணையாகவும் இருப்பது வருவாய்த் துறையே ஆகும்.

வருவாய் நிருவாகம். சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பது, மாவட்ட நிருவாகத்தை நடத்திச் செல்வது ஆகிய முக்கிய பணிகளுடன், நில வரி வசூல் செய்தல், பொது நிருவாகம், நில மேலாண்மை, பொது மக்களுக்குத் தேவையான சான்றிதழ்களை வழங்குதல் உள்ளிட்ட பணிகளுடன் பொதுத் தேர்தல்களை நடத்துதல், உள்ளாட்சித் தேர்தல்களை நடத்துதல், 2006 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சித் தேர்தலைப்போல் அல்லாமல் நியாயமான தேர்தல் நடத்துகின்ற துறையாகவும், (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் தொகைக் கணக்கெடுப்பு, இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்படுகின்றவர்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வு அளித்தல், பேரிடர் மேலாண்மை, நிவாரணம், சமூக நலப் பாதுகாப்புத் திட்டங்களைச் செயல்படுத்துதல் ஆகிய பணிகளை வருவாய்த் துறை செயல்படுத்தி வருகிறது. ஆனால், கடந்த ஆட்சியில் இந்தத் துறையினுடைய அதிகாரிகள் அரசு விழாவில் எவ்வளவு கேவலமாகத் தாக்கப்பட்டார்கள் என்பது இந்த மாமன்றம் நன்கு அறிந்ததே. அதிலும் குறிப்பாக, தாழ்த்தப்பட்ட வகுப்பினைச் சேர்ந்த ஒரு துணை ஆட்சியர் தாக்கப்பட்டது குறித்து நீங்கள் எல்லோரும் நன்கு அறிவீர்கள். அந்தளவிற்கு வருவாய்த் துறை சீர்கெட்டுப் போயிருந்தது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மீண்டும் மக்களின் பேராதரவுடன் மகத்தான வெற்றியைப் பெற்று மூன்றாவது முறையாக தமிழகத்தின் முதல்வராகப் பதவியேற்றவுடன், புரையோடியுள்ள வருவாய்த் துறையின் செயல்பாட்டினை ஆய்வு செய்து, தக்க அறிவுரைகள் வழங்கி பணிகளை முடுக்கிவிட்டுள்ளார்கள்.

பொதுமக்கள் குறை தீர்க்கும் திட்டத்தைக் கணினிமயமாக்குதல். 1967 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணாவால் காஞ்சிபுரத்தில் தொடங்கி வைக்கப்பட்ட பொது மக்கள் குறை தீர்க்கும் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு திங்கட்கிழமைதோறும் மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் பொதுமக்கள் நேரிடையாகக் கொடுத்த மனுக்களையே மீண்டும் மீண்டும் கொடுப்பதற்காக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அலையக்கூடாது என்பதற்காக, மாண்புமிகு அம்மா அவர்கள் அனைத்து மாவட்டங்களிலும் ஒரு பொதுவான மென்பொருளை ஏற்படுத்தி, மனுக்களை முடிவு செய்யும் தன்மையின் தரத்தை உயர்த்தும்பொருட்டு, தனித் துணை ஆட்சியர் மூலமாக ஆய்வு மேற்கொண்டு மனுதாரர்கள் கொடுக்கும் மனுக்களின்மீது உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஆணையிட்டுள்ளார்கள். அப்படி முடியாத மனுக்களுக்கு



மாற்றுவழியாக, அதற்கு வேறு என்ன வழி இருக்கிறது என்பதைக் கண்டுபிடித்து தீர்வு செய்ய வேண்டுமென்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிவுரை வழங்கியுள்ளார்கள். அதைப்போல, கணிணி வழியாகவே துறைத் தலைவர்கள் நேரடித் தொடர்பு கொண்டு வாரந்தோறும் அந்தப் பணிகளைக் கண்காணிக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதனால் பொதுமக்கள் வாரந்தோறும் அவர்களது குறைகளைப் போக்கிக்கொள்வதற்கு எளிதான வழிவகையை மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்படுத்தியிருக்கின்றார்கள். ஆனால், மைனாரிட்டி தி.மு.க. அரசு மக்களை அலைய வைத்து, இடைத்தரகர்கள் மூலமாகப் பயன் அடைவதையே குறிக்கோளாகக் கொண்டு செயலாற்றி வந்தது என்பதை அனைவரும் நன்றாக அறிவீர்கள்.

பிற்பகல் 1–30

மக்கள் தொடர்புத் திட்டம். மக்கள் தொடர்பு முகாம் திட்டம் மாவட்டத்தின் ஒரு குறிப்பிட்ட கிராமத்தில் இரண்டாம் புதன்கிழமை நடைபெறுகிறது என்பது அனைவருக்கும் நன்றாகத் தெரியும். அப்படி மாவட்ட ஆட்சியர் அங்கே சென்று அந்த மனுக்களுக்கு உடனடித் தீர்வு காண வேண்டுமென்பது இந்தத் திட்டத்தினுடைய நோக்கம். ஆனால், மாவட்ட ஆட்சித் தலைவர் அங்கே செல்கின்றபோது அந்த மனுக்களை முன்கூட்டியே தரவேண்டும் என்று மக்களுக்குத் தெரியாத காரணத்தினால் முறையாக ஆட்சித் தலைவரிடத்திலே அன்றையதினம்தான் கொடுக்கின்ற நிலைமை இருக்கிறது என்பதை மாண்புமிகு அம்மா அவர்கள் அறிந்தவுடன், அதற்கு ஒரு தீர்வு ஏற்படுகின்ற வகையிலே, அதற்கு ஒரு நல்ல பயனுள்ள திட்டமாக ஆக்க வேண்டுமென்ற வகையிலே தனித் துணை ஆட்சியர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்), வருவாய்க் கோட்டாட்சியர், மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் ஆகிய அலுவலர்கள் அடங்கிய குழு ஒன்றினை அமைத்து, ஒவ்வொரு மாதத்தின் மூன்றாவது புதன்கிழமையன்று தேர்வு செய்யப்பட்ட கிராமத்திற்குச் சென்று மனுக்களைப் பெற்று, அந்த மனுக்களை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின்மூலம் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அனுப்பி, பதில் பெற்று, அடுத்த மாதம் இரண்டாம் புதன்கிழமை அன்று மாவட்ட ஆட்சியர் அந்தக் கிராமத்திற்குச் செல்லும்போது மனுதாரர்களுக்கு முடிவான பதில் தரப்பட வேண்டுமென்று ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. பி. தங்கமணி] [2011 ஆகஸ்ட் 23

விரைவு வழி பட்டா மாறுதல். தமிழகத்தில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் இது ஒரு மைல் கல் என்று சொன்னால் அது மிகையாகாது என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒவ்வொரு கிராமத்திலும் நில உரிமையாளர்களைக் காட்டும் பதிவேடுகள் சரியானதாகவும், தற்போதுள்ள நிலையைக் குறிப்பிடுவதாகவும் இருக்க வேண்டிய அவசியத்தையும், உண்மையான உரிமையாளர்கள் மற்றும் அனுபோகதாரர்களின் பெயர்கள் நில உரிமைப் பதிவேட்டில் பதியப் பெற்றிருந்தால்தான், நில உரிமையாளர்கள் தங்கள் உரிமையை நிலைநாட்ட இயலும் என்பதால் விரைவு வழி பட்டா மாறுதல் திட்டம் ஒன்றை ஆளுநர் உரையிலே அறிவித்து அந்த ஆணை வெளியிடப்பட்டு, அதன்வாயிலாக 18–7–2011 அன்று மாண்புமிகு அம்மா அவர்களின் தொகுதியில் அந்தத் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டு இன்று பீடுநடை போட்டு வந்து கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் பெருமையோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதன்படி பார்த்தீர்களேயானால், அந்தக் கிராமத்தில் இருக்கின்ற பொதுமக்கள் யாராவது பட்டா மாறுதல் பெற வேண்டுமென்று சொன்னால், அங்கே இருக்கின்ற கிராம நிருவாக அலுவலர்கள் அந்த மனுக்களைப் பெறுவர். அன்றைய தினம் முழுவதும் கிராம நிருவாக அலுவலர் அங்கேயே இருப்பார். அந்த மனுக்களைக் கொடுக்கும்போது, அதற்கான போட்டோ காப்பியுடன் அவர்கள் மனுவைக் கொடுக்க வேண்டும். மனுவைக் கொடுக்கின்றபோது, அந்தக் கிராமத்தினுடைய பெயரிட்டு, மனுவைப் பெற்றுக் கொண்டதற்கான acknowledgement கொடுக்கின்றார்கள். உட்பிரிவுக்கு உட்படாமல் இருந்தால் இரண்டாவது வெள்ளிக்கிழமை வட்டாட்சியர் அலுவலகத்திற்குச் சென்று மூல ஆவணங்களை, ஒரிஜினலைக் காட்டி பட்டாவை வாங்கிக் கொண்டு வந்து விடலாம் என்ற திட்டம். அதேபோல, உட்பிரிவுக்கு உட்பட்டதாக இருந்தால் நான்காவது திங்கட்கிழமை கொடுக்கின்றீர்களென்று சொன்னால், நான்காவது வெள்ளிக்கிழமை அங்கே சென்று, உங்களுடைய மூல ஆவணங்களைக் காட்டி, பட்டாக்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்ற திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்த அந்தத் திட்டத்தின்படி நிருவாகக் காரணங்களுக்காக கூடுதலாக கிராமங்களைப் பார்க்கின்ற



2011 ஆகஸ்ட் 23] [திரு. பி. தங்கமணி]

கிராம நிருவாக அலுவலர்கள் செவ்வாய்க்கிழமைதோறும் அந்த மனுக்களைப் பெற்றுக்கொள்வார்கள். செவ்வாய்க்கிழமை பெற்றாலும் உட்பிரிவுக்கு உட்படாத மனுவாக இருந்தால் இரண்டாவது வெள்ளிக்கிழமை அன்று அந்தப் பட்டா மாறுதல் நடைபெறும். அதேபோல, செவ்வாய்க்கிழமை பெறுகின்ற மனு உட்பிரிவுக்கு உட்பட்டதாக இருந்தாலும் நான்காவது வெள்ளிக்கிழமை அந்தப் பட்டா மாறுதல் நிகழ்ச்சி நடைபெறும். அப்படிப் பார்க்கின்றபோது, வாராவாரம் வெள்ளிக்கிழமை என்பது பட்டா மாறுதல் தினமாக மாண்புமிகு அம்மா அவர்கள் இன்றைய தினம் அறிவித்திருக்கின்றார்கள் என்பதை இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். அந்த மனுக்களைப் பெறுகின்றபோது மக்களுடைய குறைகளையும், அந்தக் கிராமத்தில் இருக்கின்ற நிருவாக அலுவலர் பட்டா மாறுதல் மனுவைமட்டும் பெறாமல், முதியோர் உதவித் தொகை பெறுவதற்கு யார் யாரெல்லாம் தகுதியாக இருக்கின்றார்களோ அவர்களின் மனுக்களையும், அதேபோல குடும்ப அடையாள அட்டை பெறுவதற்கு யாரெல்லாம் தகுதியாக இருக்கின்றார்களோ அவர்களின் மனுக்களையும் வாங்கிக்கொள்கின்றார்கள். அந்த மனுக்களையும் வாங்கி, வட்டாட்சியர் அலுவலகத்திலே கொடுத்து அதற்கும் ஒரு தீர்வுகாண வேண்டுமென்று அறிவுரை கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 1–35

இந்தத் திட்டத்தினால் ஒன்றரை மாத காலத்தில்—மாண்புமிகு பேரவை உறுப்பினர்களே, நன்றாக நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்—ஒன்றரை மாத காலத்தில் 2,45,475 பட்டா மாறுதல் மனுக்கள் பெறப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) அதில் மாற்றம் பெற்றவை 2,22,811 பட்டாக்கள். 45 நாட்களில் 2,22,811 பட்டா மாறுதல்கள் நடைபெற்றிருக்கின்றன என்று சொன்னால், இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மக்கள் நன்றாகப் புரிந்து கொண்டிருக்கின்றார்கள். அதுமட்டுமல்லாமல், இந்தத் திட்டத்தைப் பற்றி இன்னும் மக்களுக்கு விளக்க வேண்டுமென்பதற்காக, இன்னும் கிராமங்களிலே புரியாமல் இருந்தால், அவர்களுக்குத் தெரிய வேண்டும் என்பதற்காக, மக்கள் கூடுகின்ற இடங்களிலெல்லாம் இந்தத் திட்டத்தினுடைய நோக்கத்தைப் பற்றி அங்கே ஒரு தட்டி

விளம்பரம் வைத்து விளம்பரப்படுத்தச் சொல்லியிருக்கின்றோம். அதன் வாயிலாக இப்பொழுது இன்னும் மனுக்கள் அதிகமாக வந்து கொண்டிருக்கின்றன. அதைப்போல, இந்தக் காலக்கட்டத்தில், கடந்த ஆண்டுக்காலத்தில் பார்ப்பீர்களேயானால், வாங்கிய மனுக்கள் ஒரு இலட்சம். அதாவது, 99,900 மனுக்கள் வாங்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அதற்குத் தீர்வு என்று பார்க்கின்றபோது, 50 சதவீத மனுக்கள் மட்டும்தான் பட்டா மாறுதல் பெற்றிருக்கின்றன. கடந்த காலங்களில், இதே காலக்கட்டத்தில் பார்க்கின்றபோது, வாங்கிய மனுக்கள் ஒரு இலட்சம். தீர்வு கண்டவை வெறும் 50,000 மனுக்களுக்கு மட்டும்தான். ஆனால், இப்பொழுது வாங்குகின்ற மனுக்களுக்கு சதவீத அடிப்படையிலே பார்ப்பீர்களேயானால் 95 சதவீதத்திலிருந்து 100 சதவீதம் வரை பட்டா மாறுதல் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வெள்ளிக்கிழமைதோறும் எல்லாக் கோயில்களிலும் விசேஷம் என்பார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய திட்டத்தின் அடிப்படையிலே, வட்டாட்சியர் அலுவலகம் இன்றையதினம் ஏழையெளிய மக்களுக்கு, கிராம மக்களுக்கு ஒரு கோயிலாக இருக்கின்ற மாதிரி, மாண்புமிகு அம்மா அவர்களைப் பாராட்டி, மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றி தெரிவித்துச் செல்கின்ற தினமாக வெள்ளிக்கிழமை தினம் மாறி இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள். இங்கே பேசிய பல சட்டமன்ற உறுப்பினர்கள், ஒவ்வொரு நாளும் பேசுகின்றபோது, முதியோர் உதவித் தொகைக்கு மனுக்களைக் கொடுக்கின்றோம்; அங்கே தரகர்கள் வந்து விடுகின்றார்கள்; உரிய நபர்களுக்குக் கிடைக்கவில்லை என்பதை எல்லாம் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். அதெல்லாம் கடந்த காலத்திலே நடைபெற்றது.

மாண்புமிகு அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக பொறுப்பேற்றதற்குப் பின்னால், இதுபோன்ற தரகர்கள் அங்கே வரக்கூடாது என்று ஆணையிட்டது மட்டுமல்லாமல், கடுமையான நடவடிக்கை எடுத்து, இதற்கு நல்ல பலனும் கிடைத்திருக்கின்றது. இதற்கு முந்தைய காலத்தில் பார்ப்பீர்களேயானால், அங்கே அதிகாரிகள் வருகிறார்களோ, இல்லையோ அங்கே தி.மு.க.–காரர்கள்



அந்த அதிகாரிகள் இடத்திலே வந்து அமர்ந்து விடுவார்கள். அங்கே மனுக் கொடுக்க வருகின்றவர்களிடம் "ரூ.2,000/– கொடு, ரூ.3,000/– கொடு உங்களுக்கு நான் உடனே வாங்கித் தருகிறேன்" என்று சொல்லி, அப்படி ஐந்தாண்டுக் காலம் அந்த மைனாரிட்டி தி.மு.க. அரசிலே நடைபெற்றது என்பது உங்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். அப்படி வாங்கியவர்களையெல்லாம், தகுதியில்லாத நபர்களையெல்லாம் இன்றையதினம் நாங்கள் விசாரித்துக் கொண்டிருக்கின்றோம் என்பதை இந்த நேரத்திலே சொல்லி, உண்மையான பயனாளிகளுக்கு முதியோர் ஓய்வுதியம் கிடைக்க வேண்டுமென்று அம்மா அவர்கள் ஆணையிட்டதன் வாயிலாக, இன்றையதினம் பார்ப்பீர்களேயானால், மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு, 500 ரூபாயை 1,000 ரூபாயாக உயர்த்தியதன் வாயிலாக (மேசையைத் தட்டும் ஒலி) ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் தொகுதிக்குச் செல்கின்றபோது நிறைய மனுக்கள் வருவதாக ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினர்களும் கூறுகின்றார்கள். அது உண்மையும்கூட. ஏனென்று சொன்னால், எவ்வளவோ பெரிய மாநிலங்கள் இருக்கின்றன. இங்கே மைனாரிட்டி தி.மு.க. அரசு இவ்வளவு கடன் சுமையை விட்டுச் சென்றதற்குப் பின்னாலுங்கூட, மாண்புமிகு அம்மா அவர்கள் அந்த ஏழை மக்கள், அந்த முதியோர்கள், அந்த உதவித் தொகை வாங்குகிறவர்களுக்கு, இன்றைய நிலைமையில் இந்த 500 ரூபாய் போதாது என்று தாயுள்ளத்தோடு நினைத்த காரணத்தினால், அதை 1,000 ரூபாயாக உயர்த்தி, இன்றையதினம் அவர்கள் வாழ்விலே விளக்கேற்றி வைத்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலேயே பார்ப்பீர்களேயானால், சிறிய மாநிலமான கோவா மற்றும் டெல்லியில் மட்டும்தான் 1,000 ரூபாய் கொடுக்கின்றார்கள். மற்ற எந்த மாநிலத்திலும் இது கிடையாது என்பதை இந்த நேரத்திலே சொல்லி, இந்தியாவுக்கே ஒரு முன்னுதாரணமாக மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தது மட்டுமல்லாமல், (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டத்தின்மூலம் 23,95,000 மக்கள் பயன்பெற்றுக்கொண்டிருக்கின்றார்கள். இதிலே வறுமைக்கோட்டிற்குக்கீழே இல்லை, அதனால் இங்கே முதியோர் உதவித் தொகைக் கிடைக்கவில்லை என்று பேசிய உறுப்பினர்களெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கின்றீர்கள். மரியாதைக்குரிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அன்றையதினம் பேசுகின்றபோதுகூட, இதற்குத் தேவையான நிதி ஒதுக்கவில்லையே என்று ஒரு சந்தேகத்தைக் கிளப்பி இருந்தார்கள். அதற்கு நான் இந்த நேரத்திலே பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 1–40

மத்திய அரசு ஒவ்வொரு மாநிலத்திற்கும் எவ்வளவு பயனாளிகள் என்று நிர்ணயித்து இருக்கின்றார்கள். இப்போது 10,15,000 பேர்தான் தமிழ்நாட்டிற்கு என்று, இந்த 65 வயது வரம்பு இருக்கின்ற வரை மத்திய அரசு நமக்கு கொடுத்திருக்கின்றது 10,15,000 நபர்களுக்குத்தான். இப்போது 65 வயதிலிருந்து 60 வயதாகக் குறைக்கப்பட்டதற்குப் பின்னால் 5,36,000 பேர் புதிதாக பயனாளிகளைத் தேர்வு செய்கின்ற நிலைமை இப்போது உருவாகியிருக்கிறது.

மத்திய அரசு 10,15,000 பேர் என்று நிர்ணயித்திருந்தாலும்கூட, மாண்புமிகு அம்மா அவர்கள் இங்கிருக்கின்ற ஏழை மக்கள், இங்கிருக்கின்ற விவசாயக் கூலித் தொழிலாளர்கள், உண்மையிலேயே முடியாதிருக்கின்றவர்கள் அத்தனை பேருக்கும் அந்த உதவித் தொகை கிடைக்க வேண்டுவேண்டுமென்பதற்காக, 2005 ஆம் ஆண்டு முதலமைச்சர் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் வாயிலாக—இங்கே பேசிய அருமை நண்பர் முத்துக்குமார் பேசியதில், மகன் இருக்கின்றார் என்ற காரணத்திற்காக அந்த மனுவைத் தள்ளுபடி செய்கின்றார்கள் என்று சொன்னார்கள். விதவையாக இருந்தால், மகன் இருந்தாலும் அந்தத் திட்டத்திலே பயன்பெறலாம் என்ற ஓர் அற்புதமான திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டு வந்து அதற்கான நிதியை அளித்துக்கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், அவர்கள் கொடுப்பது வெறும் 200 ரூபாய். இன்றையதினம் மாண்புமிகு அம்மா அவர்கள் அதற்காக 800 ரூபாய் கூடுதலாகப் போட்டு, ஆயிரம் ரூபாயாகக் கொடுக்கிறார்கள். அதற்கு மட்டும் செலவு எவ்வளவு வருகிறது என்று சொன்னால், கிட்டத்தட்ட 2,680 கோடி ரூபாய் தமிழகத்தினுடைய நிதி, மாண்புமிகு அம்மா அவர்கள் கொடுக்கின்ற நிதி. வெறும் 336.99 கோடி ரூபாய் மட்டும்தான் மத்திய அரசு தந்துகொண்டிருக்கிறது. மீதித் தொகையை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு தந்துகொண்டிருக்கிறது என்பதை உறுப்பினர்கள் நன்றாகப் புரிந்துகொள்ளவேண்டும்.

அதுமட்டுமல்லாமல், இப்போது 65 வயதிலிருந்து 60 வயதாகக் குறைத்ததற்குப் பின்னால், கிட்டத்தட்ட 541 கோடி ரூபாய் அதற்குக் கூடுதலாக நிதியொதுக்க வேண்டிய நிலைமை இப்போது இருக்கின்றது என்பதை உறுப்பினர்கள் நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும்.



கடந்த ஐந்தாண்டுக்காலத்தில், முதியோர் ஒய்வூதியத் திட்டத்தின்கீழ் ஓய்வூதியம் பெறும் பயனாளிகள் விவரத்தைப் பார்க்கின்றபோது, கடந்த ஐந்தாண்டுக் காலம் இந்தத் துறை எப்படி சூறையாடப்பட்டிருக்கிறது, அவர்கள் நினைத்தவர்களுக்கெல்லாம் அந்த ஓ.ஏ.பி—முதியோர் ஒய்வூதியத் தொகையைக் கொடுத்திருக்கிறார்கள் என்பதற்கு ஒருசில உதாரணங்களை மட்டும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு குறிப்பிட்ட மாவட்டத்திற்கு மட்டும், உதாரணமாக, வேலூர், சேலம், திருவண்ணாமலை, விழுப்புரம், மதுரை, திண்டுக்கல் மற்றும் சென்னை ஆகிய மாவட்டங்களுக்கு, ஒரு இலட்சத்திலிருந்து இரண்டு இலட்சம் வரை முதியோர் உதவித் தொகை அந்த ஐந்தாண்டுக் காலத்தில் கொடுத்திருக்கின்றார்கள். ஆனால், அவற்றையெல்லாம் விசாரித்துப் பார்க்கின்றபோது, முழுக்க முழுக்க புரோக்கர்களால், தி.மு.க. காரர்களால் கொடுக்கப்பட்ட உதவித் தொகை என்பதை நாங்கள் இந்த மூன்று மாதங்களிலே கண்டுபிடித்திருக்கிறோம். அதற்கெல்லாம் உரிய விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், ஏதோ அதோடு நின்றுவிட்டது என்று நினைத்துவிடாதீர்கள். தேர்தல் வருகிறது என்பதற்காக அவர்கள் புதிய உத்தி ஒன்றைக் கையாண்டார்கள். “உங்கள் எல்லோருக்கும் ஆணை” என்று போனவருடம் பத்தாவது மாதத்திலிருந்து, பதினொன்றாவது மாதத்திலிருந்து பார்க்கின்றவர்களுக்கெல்லாம் “உங்களுக்கு O.A.P. தொகை, இந்தாங்க ஆர்டர்” என்று சொல்லி கொடுத்துவிட்டார்கள். இதுவரை எட்டு மாதகாலமாகிவிட்டது. அவர்களுக்குப் பணம் வரவில்லை. அது எல்லாம் எப்படி என்று சொன்னால் தேர்தல் வருவதை, சட்டமன்றத் தேர்தல் வருவதை மனதிலே வைத்து, இப்படி போலியான ஆர்டரை அவர்களுக்கெல்லாம் கொடுத்து, “உங்களுக்கு நாங்கள் பணம் தருகிறோம் எங்களுக்கு ஓட்டுப் போடுங்கள்” என்று சொன்னார்கள். ஆனால், மக்கள் தெளிவான முடிவை எடுத்து, “நீங்கள் போலியான உத்தரவைக் கொடுத்திருக்கிறீர்கள்; இந்தப் போலியான ஆட்சி தமிழகத்திற்குத் தேவையில்லை; உண்மையான ஆட்சி மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிதான்” என்று இன்றையதினம் அம்மா அவர்களை ஆட்சிக் கட்டிலிலே அமர்த்தியிருக்கின்றார்கள்.

அதுமட்டுமல்லாமல், இங்கே ஒன்றை மட்டும் நான் தெளிவாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். முதியோர் உதவித்

தொகையைப் பொறுத்தவரை, தகுதியான நபர்கள் யாரெல்லாம் விடுபட்டு இருக்கிறார்களோ அவர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அதற்காக தகுதியுள்ள நபர்களுக்கெல்லாம் இன்றைக்கு ஆயிரம் ரூபாய் என்று வந்ததற்குப் பின்னால் நிறைய பயனாளிகள் தேர்வுசெய்யப்பட வேண்டுமென்று சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் ஒவ்வொரு நேரத்திலும் சட்டமன்றத்திலே பேசுகின்றீர்கள். கிட்டத்தட்ட 3,000 கோடி ரூபாய், வேறு எந்த நலத் திட்டத்திற்கும் இல்லாத அளவிற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள் என்று சொன்னால், (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத திட்டம் என்பதை நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

அதுமட்டுமல்ல, தமிழக மக்களுக்கு மட்டும்தான் அம்மா அவர்கள் தலைவர் என்பதில்லை. உலகத்திலே எங்கெல்லாம் தமிழர்கள் இருக்கின்றார்களோ அவர்களுக்கெல்லாம் தலைவராக விளங்குகின்ற மாண்புமிகு அம்மா அவர்கள், இங்குள்ள இலங்கைத் தமிழர்களுக்கு, இப்போது ஆயிரம் ரூபாய் உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கே பேசியவர்கள் எல்லாம் சான்றிதழ்கள் வழங்குவதிலே பல குறைபாடுகள் இருக்கின்றன; அவற்றைப் போக்கவேண்டுமென்று சொன்னீர்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் பள்ளியிலே படிக்கின்ற குழந்தைகளெல்லாம், அந்தச் சான்றிதழுக்காக, அங்கே கிராம நிருவாக அலுவலர், வட்டாட்சியர் அலுவலகத்திற்குச் செல்லக்கூடாது என்பதற்காக ஆய்வின்போது ஓர் அறிவுரையை வழங்கி, ஓர் அற்புதமான திட்டத்தை வழங்கியிருக்கிறார்கள்.

பிற்பகல் 1–45

அந்தத் திட்டத்தின்படி பார்த்தீர்களேயானால், செப்டம்பர் மாதம், அதாவது காலாண்டுத் தேர்வுக்கு முன்பாக, செப்டம்பர் 30 ஆம் தேதிக்குள் பத்தாம் வகுப்பிலே இருக்கின்ற மாணவர்கள், 12 ஆம் வகுப்பு வரை படிக்கின்ற அத்தனை மாணவ, மாணவியரிடத்திலேயும் அந்தப் பள்ளியினுடைய தலைமை ஆசிரியர்கள் மனுக்களைப் பெற்றுவிடவேண்டும். செப்டம்பர் ஒன்றாம் தேதியிலிருந்து முப்பதாம் தேதிக்குள் அந்தந்தப் பள்ளிகளுடைய தலைமையாசிரியர்கள் மாணவர்களிடத்திலே



மனுக்களைப் பெற்றுவிடவேண்டும். அக்டோபர் 15 ஆம் தேதிக்குள் அந்த மனுக்களை வட்டாட்சியர் இடத்திலே தலைமையாசிரியர்கள் ஒப்படைத்துவிடவேண்டும். அப்படி ஒப்படைத்ததற்குப் பின்னால், வட்டாட்சியர் அதைச் சரிபார்த்து டிசம்பர் 31–ஆம் தேதிக்குள் அந்தந்தப் பள்ளிகளுக்கு அந்தச் சான்றிதழ்களை வழங்கவேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஜனவரி மாதம் முதல் தேதியன்று அனைத்து மாணவர்களுக்கும் சான்றிதழ் வழங்குகின்ற வகையிலே ஆணையிட்டு, வருகின்ற செப்டம்பர் 1-ஆம் தேதி முதல் அந்தத் திட்டம் தொடங்க இருக்கின்றது. கிட்டத்தட்ட 10 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு படிக்கின்ற மாணவ, மாணவியர் 10 இலட்சம் பேர் அளவுக்குப் படித்துக்கொண்டிருக்கின்றார்கள். ஆனால், அவர்கள் வாங்குகின்ற சான்றிதழ்கள் என்று பார்த்தீர்களேயானால், கடந்த காலங்களிலே 4 இலட்சம் பேர்தான் வாங்கிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்குப் போதிய விழிப்புணர்வு இல்லாத காரணத்தினாலும், அவர்களுக்கு வழிமுறை தெரியாத காரணத்தினாலும் இந்த கஷ்டமான நிலைமையை எல்லாம் தாய் உள்ளத்தோடு அம்மா அவர்கள் எப்படிப் புரிந்துகொண்டார்களோ தெரியவில்லை; இதையெல்லாம், தெரிந்த காரணத்தினால் உடனடியாக பள்ளிகளிலேயே வழங்கவேண்டுமென்று ஆணையிட்டு, வருகின்ற காலங்களில் எந்த மாணவ, மாணவியும் இனிமேல் வட்டாட்சியர் அலுவலகத்திற்கும், கிராம நிருவாக அலுவலகத்திற்கும் செல்லக்கூடாது என்று உத்தரவிட்டிருக்கின்றார்கள்.

மேலும், இந்தத் திட்டத்தைச் செம்மையாகச் செயல்படுத்த வேண்டும் என்பதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர், அங்கு இருக்கின்ற அதிகாரிகளையெல்லாம் அழைத்து, அங்கே இருக்கின்ற கல்வித் துறை அதிகாரிகளை, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர், மாவட்டக் கல்வி அலுவலர், மெட்ரிகுலேஷன் பள்ளிகளினுடைய ஆய்வாளர் மற்றும் வட்டாட்சியர் உட்பட அனைவரையும் அழைத்து, ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்து, அனைத்துத் தனியார் பள்ளிகள் உட்பட, அரசு நிதியுதவி பெறுகின்ற பள்ளிகள் உட்பட, அனைத்துப் பள்ளி மாணவர்களுக்கும் இதை வாங்கித்தர வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

சுனாமி நிவாரணம் மற்றும் மறுவாழ்வு. சுனாமிப் பேரலைகள்

தமிழகக் கடற்கரை ஓரங்களில் இருந்தவர்களைச் சுருட்டி எடுத்துச் சென்றபோது, சுனாமியைவிட வேகமாக நடவடிக்கை எடுத்து, மீட்புப் பணிகளை மாண்புமிகு அம்மா அவர்கள் மேற்கொண்டதை உலகமே பாராட்டியது. இந்த மின்னல் வேக நடவடிக்கையைப் பாராட்டாத இதயங்களே இல்லை என்று சொல்லலாம். சுனாமியால் பாதிக்கப்பட்டவர்கள் மாண்புமிகு அம்மா அவர்கள் அரசால் பாதுகாக்கப்பட்டார்கள். அவர்களுக்குத் தேவையான வீடுகளை அரசு கட்டிக்கொடுத்து, அவர்களுக்கு மறுவாழ்வு அளித்தது. ஆனால், இப்பொழுது நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் மக்கள் என்ற பேரலையால் அடித்துச் செல்லப்பட்டு, தமிழகத்தின் எல்லைகளில் கரை ஒதுங்கிய திராவிட முன்னேற்ற கழகத்தை இனி யாராலும் காப்பாற்ற முடியாது. சுனாமி வந்தபோது கண்ட கோரக்காட்சி எப்படி மனதைவிட்டு அகலவில்லையோ, அதைப்போல தேர்தலின்போது தி.மு.க. மக்களால் துரத்தி அடிக்கப்பட்டதும் மக்கள் மனதை விட்டு அகலாது. இனி எந்தத் தேர்தலிலும் தி.மு.க. தமிழகத்தில் வெற்றிபெறாது என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

26–12–2004-ல் தமிழகத்திற்கு ஒரு பெரிய சோதனை. ஒரு சோதனையான காலம் என்றே சொல்லலாம். அன்றைய தினம்தான் அந்த சுனாமியினால் ஆயிரக்கணக்கானோர் இறந்தார்கள். அன்றைய தினம் மாண்புமிகு அம்மா அவர்கள், சுனாமி வந்த வேகத்தைவிட வேகமாகச் செயல்பட்டதைப் பார்த்து, வியந்து அன்றைய தினம் உலகமே தமிழகத்தை எதிர்நோக்கி இருந்த காலத்தில், அமெரிக்காவினுடைய முன்னாள் அதிபர் பில் கிளிண்டன் இங்கே வந்து, இந்த வேகத்தைப் பார்த்து, இந்த நிவாரணப் பணிகளைப் பார்த்து உலகத்திலேயே வேறு எங்கேயும் இப்படி நடைபெறவில்லை என்று மாண்புமிகு அம்மா அவர்களை அன்றையதினம் பாராட்டிச் சென்றார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு அம்மா அவர்களை இலங்கை அரசு ஏதேதோ சொல்லிக்கொண்டிருக்கின்றது. ஆனால், அன்றையதினம் சுனாமியால் பாதிக்கப்பட்டபோது, நிவாரணப் பணிகளை மேற்கொள்ள இலங்கை அரசினால் முடியவில்லை. பலருடைய உதவியையும் எதிர்பார்த்தார்கள். இன்றையதினம் அவர்களுடன் கூட்டணி நாடாக இருக்கின்ற சைனாவைப் பார்த்தார்கள், பாகிஸ்தானைப் பார்த்தார்கள், வெளிநாட்டைப் பார்த்தார்கள், ஏன்



டெல்லியைக்கூடப் பார்த்தார்கள், அவர்கள் கை உதவி செய்யவில்லை. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களிடத்திலே கேட்டார்கள். மனிதாபிமானம் மிக்க தலைவர் மாண்புமிகு அம்மா அவர்கள் என்ற காரணத்தினால், உடனடியாக இங்கிருந்து அதிகாரிகளை அனுப்பி அந்த நிவாரணப் பணிகளை மேற்கொண்டார்கள் என்று சொன்னால் இன்றையதினம் அந்தத் தமிழக மக்கள், அங்கிருக்கின்ற இலங்கைத் தமிழர்கள் மட்டுமல்ல, சிங்கள மக்கள்கூட மாண்புமிகு அம்மா அவர்களை நினைத்துப் பார்க்கின்றார்கள் என்பதை நீங்கள் நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும். அந்தளவுக்கு வேகத்தோடு, விவேகத்தோடு செயல்பட்டு நிவாரணப் பணிகளை வேறு எந்த நாட்டிலும் இல்லாத அளவிற்கு மேற்கொண்டார்கள். எத்தனையோ நாடுகளிலே சுனாமி வந்தது. ஆனால் வேகமாகச் செயல்பட்ட காரணத்தினால் தமிழகத்தை உலகமே உற்றுநோக்குகின்ற அளவிற்கு இன்றையதினம் விளங்கிக் கொண்டிருக்கின்றது. அதற்கு எடுத்துக்காட்டாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால் கடந்த மாதத்திலே முன்னாள் அதிபர் பில் கிளிண்டனுடைய மனைவியாகவும், இன்றையதினம் அமெரிக்காவினுடைய வெளியுறவுத் துறை அமைச்சராகவும் இருக்கின்ற ஹிலாரி கிளிண்டன் அவர்கள் இங்கே வந்து மாண்புமிகு அம்மா அவர்களைச் சந்தித்துச் சென்றார்கள். அதற்குப் பின்னால் பார்ப்பீர்களானால், உலக மக்கள் எல்லோரும் இந்தியாவினுடைய இரண்டாவது தலைநகரம் சென்னையோ என்று பாராட்டுகின்ற அளவுக்கு இன்றைய நிலைமை இருக்கிறது என்பதை நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும். நான் இந்த நேரத்திலே ஒன்றை மட்டும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். உலக நாடுகள் எப்படி சென்னையை நோக்கி இருக்கின்றதோ அதுபோல, இந்தியாவில் இருக்கின்ற அத்துணை மாநிலங்களும் இன்று மாண்புமிகு அம்மா அவர்களை தலைமை தாங்க எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றன. இதுதான் எதிர்காலத்திலே நடக்கப்போகிற நிலைமை என்பதை இந்த நேரத்திலே சொல்லி, அம்மா விளங்குவார்கள். டெல்லியினுடைய தலையெழுத்தை நிர்ணயிக்கின்ற தலைவராக அம்மா விளங்குவார்கள், காலம் மாறத்தான் போகின்றது, காட்சிகளும் மாறத்தான் போகின்றன. நாமும் பார்க்கத்தான் போகிறோம் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் *1–50*

சுனாமி வந்த ஓராண்டு காலத்திற்குள் அம்மாவின் அரசு முழு வேகத்தில் செயல்பட்டு நிவாரணப் பணிகளை முடுக்கிவிட்டு

வேகமாகச் செயல்படுத்தியது. ஆனால் மைனாரிட்டி தி.மு.க. அரசு—மாண்புமிகு அம்மாவினுடைய அரசு அன்றையதினம் மத்திய அரசுடன் போராடி பணம் கிடைக்காமல், மாநிலத்தினுடைய நிதி 905 கோடி ரூபாயை உடனடியாக அம்மா அவர்கள் அந்த நிவாரணப் பணிகளுக்காகக் கொடுத்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் பல போராட்டங்களுக்கிடையில் பல நிதியை அன்றையதினம் வாங்கிவிட்டுச் சென்றார்கள். 2006—லே மைனாரிட்டி தி.மு.க. அரசு ஆட்சிக்கு வந்தது. ஆனால் 5 ஆண்டு காலம் ஆகியும்கூட இன்னும் 1,359.81 கோடி ரூபாய் அளவுக்கு வேலைகள் நடைபெறாமல் இருக்கின்றன என்று சொன்னால் நீங்கள் நினைத்துப் பார்க்க வேண்டும். ஒன்று பேரம் படியவில்லையா? இல்லை, இவர்களுக்கு வர வேண்டிய தொகை வரவில்லை என்ற காரணத்தினால் அந்தப் பணிகள் நடைபெறவில்லையா என்பதை நீங்கள்தான் புரிந்துகொள்ள வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

சுனாமிப் பேரலை தாக்கிய அன்று காலையில் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று மாண்புமிகு அம்மா அவர்கள்தான் மீட்புப் பணிகளை முடுக்கிவிட்டார்கள். ஆனால் கருணாநிதியோ அப்பலோ மருத்துவமனையில் தன் உயிர்தான் பெரியது என்று முதல் மாடியிலிருந்து எட்டாவது மாடிக்குப் போய்விட்டார். இதுதான் யதார்த்தமான உண்மை என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

அதேபோல, மகளிருக்கு மின் விசிறி, மிக்ஸி மற்றும் கிரைண்டர் வழங்கும் திட்டம். தேர்தல் வாக்குறுதிகளை ஒன்றரை ஆண்டுக் காலத்தில் நிறைவேற்றிக் கொடுப்போம் என்பது மாண்புமிகு அம்மா அவர்களின் செயல் திட்டம். ஆனால் கடந்த 5 ஆண்டுக்காலம் அவர்கள் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல், கேட்டால் எங்கள் இதயத்திலே இடம் இருக்கிறது என்று சொன்னார்கள். அந்த இதயத்திலே இடமிருக்கின்ற தலைவர்களை எல்லாம் மக்கள் இன்றையதினம், உங்களுடைய இதயத்தை உங்களோடு வைத்துக்கொள்ளுங்கள்; எங்களுக்கு இதயமிருந்து வேலை செய்கிறவர்கள் இருந்தால் போதும் என்றுதான் மாண்புமிகு அம்மா அவர்களை இன்றையதினம் முதல்வராக ஆக்கி, இனிமேல் உங்களுக்கு இந்த நாட்டில் வேலை இல்லை என்று ஒதுக்கிவிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த கால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் ஒரு திட்டம் கொண்டு வந்தால் அதில் தனக்கு என்ன இலாபம் என்று கணக்குப் போட்டுத்தான் ஒரு திட்டத்தைக் கொண்டு வருவார்கள். அதற்கு



ஓர் உதாரணத்தைச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், ஒரு சிறிய கதையைச் சொல்லி நான் சொல்கிறேன். ஒரு திருடன் இருக்கிறான் என்று சொன்னால், வங்கியிலிருந்து ஒருவர் பணம் எடுத்து வருகிறார், நிதி நிறுவனங்களிலிருந்து ஒருவர் பணம் எடுத்து வருகிறார் என்று சொன்னால், அவர்கள் bag—இலே பணம் கொண்டு வருவார்கள். அந்தத் திருடன் பார்ப்பான். அந்தப் பணத்தைத் திருடுவதற்கு ஒரு வழியைப் பார்ப்பான். ஒரு 10 ரூபாயைக் கீழே போட்டுவிட்டு "இது உங்களுடைய பணமா என்று பாருங்கள்" என்று சொல்வான். மனிதனுடைய இயல்பு, திடீரென்று பாக்கெட்டிலிருந்து பணம் விழுந்து விட்டதோ என்று குனிந்து அந்தப் பணத்தை எடுக்கிறபோது அந்த bag—ஐ திருடிக் கொண்டு போய்விடுவான். 10 ரூபாய்க்கு ஆசைப்பட்டு பல இலட்சம் ரூபாயை ஏமாந்து விடுவார்கள். அதைப் போல கருணாநிதி, மக்கள் வரிப் பணத்திலிருந்து டி.வி.யைக் கொடுத்துவிட்டு மக்களிடமிருந்து மாதம் 150 ரூபாய், 200 ரூபாய் என்று கேபிள் கட்டணமாக வருடத்திற்கு 2 ஆயிரம் கோடி ரூபாய் கொள்ளையடித்திருக்கிறார்கள் என்று சொன்னால் (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டம் எப்படிப்பட்ட திட்டம் என்பதை நீங்கள் நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

அதேபோல, அவர்கள் கொண்டு வந்த திட்டங்களையெல்லாம் பார்த்தீர்களேயானால், ஒரே வரியில் சொல்ல வேண்டும் என்று சொன்னால், வேகாத அரிசி, விளையாத நிலம், இயங்காத டி.வி., எரியாத அடுப்பு என்று தான் சொல்ல வேண்டும். ஏனென்று சொன்னால், அடுப்பே கொடுக்கவில்லை; அடுப்பு கொடுத்ததாக அங்கே ரேஷன் கடையிலே முத்திரை குத்தியதால், இன்றையதினம் எங்களுடைய மாவட்டத்திலேகூட கிராமத்து மக்கள் தினந்தோறும் ரோட்டிலே மறியல் செய்து "நாங்கள் சீமை எண்ணெய்யும் வாங்க முடியவில்லை, எங்களுக்கு gas அடுப்பும் இல்லை. நாங்கள் நடுரோட்டிலே நிற்கிறோம்" என்று சொல்கிற நிலைமையை அந்த மைனாரிட்டி தி.மு.க. அரசு உருவாக்கிவிட்டுச் சென்றது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன். ஆனால் அம்மா அவர்கள் கொண்டு வந்திருக்கிற திட்டம் நன்றாகச் சிந்திக்க வேண்டும்; மிக்ஸி, கிரைண்டர், ஃபேன் என்று சொன்னேனே- அம்மா அவர்கள் கொண்டு வந்திருக்கிற திட்டம். இயங்கிற மிக்ஸியாக, அரைக்கின்ற கிரைண்டராக, காற்று தருகிற மின் விசிறியாகத்தான் இருக்கும் என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கு பேசிய சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் சொன்னார்கள், நிறைய பணியிடங்கள் காலியாக இருக்கின்றன என்று. கடந்த கால மைனாரிட்டி தி.மு.க. அரசில் அவர்கள் தம்பட்டம் அடித்துக் கொண்டார்கள், நாங்கள் 5 இலட்சம் பேரை பணியில் நியமித்து இருக்கிறோம், மாண்புமிகு அம்மாவின் அரசு நியமிக்கவில்லை என்று சொன்னார்கள். இந்த ஒரு துறையில் மட்டும் கிட்டத்தட்ட 10 ஆயிரம் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. கடந்த 5 ஆண்டுக்காலத்திலே அவர்கள் நிரப்பாமல் விட்டுவிட்டுச் சென்றிருக்கிறார்கள்.

இந்த 3 மாத காலத்திலே அவ்வளவு காலிப் பணியிடங்கள் இருந்தாலும்கூட, மாண்புமிகு அம்மாவினுடைய அரசு வேகமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிற காரணத்தினாலே, 100 ஆண்டுகளில் செய்ய வேண்டியதை எல்லாம் இந்த 100 நாட்களிலே மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு செய்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு கூடிய விரைவிலே அந்தக் காலிப் பணியிடங்களில் பணியாளர்களை நியமிக்கப் போகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொங்கல் பண்டிகைக்கு இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானாட மயிலாட என்ற நிகழ்ச்சியை ஒளிபரப்பி தமிழ்நாட்டினுடைய கலாச்சாரத்தைக் கெடுத்தது மைனாரிட்டி தி.மு.க. அரசு. ஆனால் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆறாம் வகுப்பிலேயிருந்து அனைவருக்கும் சல்வார் கம்மீஸ் கொடுத்து தமிழ்நாட்டினுடைய கலாச்சாரத்தைக் காப்பாற்றி இருக்கிறது என்று சொன்னால், அது இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களால் மட்டும்தான் சாத்தியமானது என்பதை இந்த நேரத்தில் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 1–55*

அதுமட்டுமல்லாமல், நான் சார்ந்திருக்கின்ற குமாரபாளையம் தொகுதியைப் பார்த்தீர்களானால், அது முழுக்க முழுக்க விசைத் தறிகள் நிறைந்த தொகுதி. அந்தத் தொகுதியிலே, 2004 ஆம் ஆண்டு மத்திய அரசின் ஜவுளிக் கொள்கையின் காரணமாக, அங்கே இருக்கின்ற விசைத்தறிகளை எல்லாம் காய்லான்கடைக்கு, அதாவது பழைய இரும்புக் கடைக்கு எடைக்கு விலைக்குப் போடுகின்ற நிலைமை. இதை, மாண்புமிகு அம்மா அவர்கள் அன்றையதினம் முதல்வராக இருந்த காரணத்தினால், உடனடியாக மாண்புமிகு அம்மா அவர்களின் பார்வைக்கு எடுத்துச் சென்றதற்குப் பின்னால், இலவச வேட்டி சேலையை விசைத்தறியில் உற்பத்தி செய்து கொள்ளலாம் என்று சொல்லி, அன்றையதினம் ஆணையிட்டதன் வாயிலாக, விசைத்தறி காப்பாற்றப்பட்டது என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிக் கொண்டுவந்து, இன்றையதினம் மாண்புமிகு அம்மா அவர்கள் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு 169 கோடி ரூபாய் செலவில் 159.04 இலட்சம் சேலைகளும், 158.19 இலட்சம் வேட்டிகளும் தரவிருக்கின்றார்கள் என்பதை இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



அடுத்தது, தீ விபத்து. கடந்த ஆளுநர் உரையின்மீது நமது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியினுடைய சட்டமன்றத் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது, தீ விபத்தினால் பாதிக்கப்படுகின்ற குடிசைகளுக்கு வழங்கப்படுகின்ற நிவாரணம் 2 ஆயிரம் ரூபாய் என்பது போதாது; அதேபோல பகுதி சேதம் அடைந்த குடிசைகளுக்கு வழங்கப்படுகின்ற ஆயிரம் ரூபாய் போதாதென்று மாண்புமிகு அம்மா அவர்களிடத்திலே ஒரு கோரிக்கையை வைத்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள், எந்தக் கோரிக்கையாக இருந்தாலும், தாய் உள்ளத்தோடு ஏற்றுக்கொள்கிறவர் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் சொன்னவுடன், முழு குடிசை எரிந்தவர்களுக்கெல்லாம் நிவாரணமாக 2 ஆயிரம் ரூபாயிலிருந்து 5 ஆயிரம் ரூபாயாகவும், பகுதியாகச் சேதம் அடைந்தவர்களுக்கு 2 ஆயிரத்து ஐநூறு என்றும் அன்றையதினமே உயர்த்தி ஆணையிட்டது மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, நிலக்குத்தகை–அரசு புறம்போக்கு நிலங்கள், விவசாயமற்ற நிலங்கள், நிறுவனங்களின் வளர்ச்சிக்காக தற்காலிகமாகப் பயன்படுத்திக்கொள்ள குறைந்தபட்சம் 3 ஆண்டுகள் முதல் அதிகபட்சமாக 20 ஆண்டுகள் வரை குத்தகைக்கு வழங்கப்படுகின்றன. ஆண்டுக் குத்தகைத் தொகைக் கட்டணம், 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை மறுநிர்ணயம் செய்யப்படுகிறது. இத்தகைய குத்தகைத் தொகை வசூலிப்பதில் ஏற்படும் காலதாமதத்தைத்

தவிர்க்க, குத்தகைக் காலத்திற்குள் தொகை முழுவதையும் ஒரே தவணையில் வசூலிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும். குத்தகை காலம் முடிவடைந்து, குத்தகை நீட்டிப்பு செய்ய விண்ணப்பிக்கத் தவறிய குத்தகைதாரர்களை, நில அபகரிப்பு செய்ததாகக் கருதி அரசு நிலங்களை மீளப்பெற உரிய நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால், கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில், ஒரு இடத்தை 30 ஆண்டுகள் முதல் 99 ஆண்டுகள் வரை நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களைத் தாரைவார்த்துவிட்டார்கள். அதேபோல, குத்தகை காலம் முடிந்ததற்குப் பின்னால், நிலத்தையும் எடுக்கவில்லை, குத்தகைத்தொகையையும் வசூல் செய்யவில்லை. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அப்படிப்பட்ட நிலங்களை மீண்டும் குத்தகைக்குக் கொடுக்கவேண்டுமென்று சொன்னால், எத்தனை ஆண்டுகள் குத்தகைக்கு விடப்படுகிறதோ அதற்குரிய முழுத் தொகையையும் ஒரே தவணையில் வசூலிக்க வேண்டுமென்று உத்தரவிட்டுள்ளார்கள்.

வீட்டுமனைப் பட்டா– O.A.P. க்கு அடுத்தபடியாக, சட்டமன்ற உறுப்பினர்களுடைய முக்கிய கோரிக்கையாக இருப்பது வீட்டுமனைப் பட்டாதான். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் எப்பொழுது பேசினாலும், வாக்குரிமை உள்ளது, குடும்ப அட்டை உள்ளது, ஆனால், நிரந்தரமாகக் குடியிருப்பதற்கு பட்டா இல்லை என்று ஒவ்வொருமுறையும் கூறி வருகின்றார்கள். இதிலே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒன்றை மட்டும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம், ஏழைகளுக்குப் பட்டா கொடுக்க வேண்டுமென்று எவ்வளவு கவலைப்படுகின்றீர்களோ, அதற்குமேல் ஒரு மடங்கு, அந்த ஏழைகளுடைய உணர்வைப் புரிந்துகொண்டு, அந்த வகையிலே அவர்களுக்குப் பட்டா கொடுக்க வேண்டுமென்று, நம்முடைய கவலையைவிட மாண்புமிகு அம்மா அவர்கள், அவர்களுக்கு எந்த வழியிலாவது பட்டா கொடுக்க வேண்டும் என்று நினைத்து, (மேசையைத் தட்டும் ஒலி) இன்றையதினம், எங்கெல்லாம் இருக்கின்றார்களோ, எங்கெல்லாம் பட்டா கொடுக்க முடியுமோ அங்கெல்லாம் உடனடியாகக் கொடுக்க வேண்டுமென்று ஆணையிட்டிருக்கின்றார்கள்.

இங்கே பேசிய பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர், இன்றையதினம் பேசினார், ஏற்கெனவே நிதிநிலை அறிக்கையில் பேசுகின்றபோதுகூட ஓர் உதாரணத்தைச் சொன்னார்கள்.



இன்றையதினம் திரு. முத்துக்குமரன் அவர்கள் பேசுகின்றபோதுகூட ஓர் உதாரணத்தைச் சொன்னார்கள். ஏற்கெனவே கொடுத்த பட்டாவை, கொடுத்து, கொடுத்து, அவர்கள் கணக்கைக் காட்டிவிட்டார்கள் என்று சொன்னார்கள். அது நூற்றுக்கு நூறு உண்மை என்பதை நான் ஆதாரத்தோடு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடத்தில்கூட கொடுத்திருக்கின்றேன். மாண்புமிகு அம்மா அவர்கள் 1994 ஆம் ஆண்டு முதல்வராக இருந்தபோது, என்னுடைய தொகுதியிலேயே, பட்டா கொடுத்திருக்கின்றார்கள். அதே பெயருக்கு, அதே நபருக்கு 2008 ஆம் ஆண்டு பட்டா கொடுத்து அவர்கள் கணக்கிலே ஏற்றியிருக்கின்றார்கள் என்று சொன்னால், மக்களை எப்படி ஏமாற்றியிருக்கிறார்கள் என்பதை நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும். மாண்புமிகு அம்மா அவர்கள் 1994 ஆம் ஆண்டு கொடுத்த பட்டாவை, 14 ஆண்டுகள் கழித்து 2008 ஆம் ஆண்டு அதே நபருக்கு, அதே பெயருக்கு பட்டா கொடுத்து, நாங்கள் இவ்வளவு பேருக்கு பட்டா கொடுத்தோம் என்று தம்பட்டம் அடித்துக்கொண்டார்களே–மக்கள் அதையெல்லாம் புரிந்துதான், இன்றையதினம் நல்ல தீர்ப்பை வழங்கியிருக்கின்றார்கள் என்று சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) போலியாக பட்டா கொடுத்ததைத் தம்பட்டம் அடித்துக்கொண்டார்கள். போலி ஆட்சியை மக்கள் வெளியேற்றியிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, உண்மையான பயனாளிகளுக்கு, உண்மையான இடத்தை அளந்து உண்மையான பட்டா கொடுக்கப்போகின்றார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மட்டும் 1991–1996 ஆண்டுகளில் 13,38,928 பட்டாக்களைக் கொடுத்து, இதுவரை எந்த அரசும் செய்யாத சாதனையை ஏழை மக்களுக்குச் செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, 2001–2006 ஆண்டுகளில் 4,60,625 பட்டாக்களைக் கொடுத்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மைனாரிட்டி தி.மு.க. அரசு கடந்த 5 ஆண்டுகளில் 2,50,178 பட்டாக்களை மட்டுமே கொடுத்துவிட்டு,

அதுகூட இப்படி கொடுத்தவர்களுக்கெல்லாம் கொடுத்துவிட்டு, மீதியை ஏற்கெனவே கொடுத்தவர்களுக்கு மட்டுமல்லாமல், யார், யாரெல்லாம் இருக்கின்றார்களோ அவர்களுக்கெல்லாம் கொடுக்கலாம் என்று சொல்லி, போலியாக 5 இலட்சம் பட்டாக்கள் என்று காட்டியிருக்கிறார்கள். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் 1991 ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டுவரையும், 2001 முதல் 2006 ஆம் ஆண்டுவரையும் உண்மையான பயனாளிகளுக்கு, உண்மையான பட்டா கொடுத்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன். வருகின்ற நிதியாண்டில் புதியதாக ஏழை, எளிய மற்றும் சமுதாயத்தில் நலிவுற்ற மக்களுக்கு ஒரு இலட்சத்திற்கும் குறையாமல் வீட்டு மனைப் பட்டாக்களை வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு நடவடிக்கை எடுத்துவருகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த கால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் நடந்த உண்மையை இந்த அவைக்கு எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். நிலம் இல்லாத ஏழைகளுக்கு 2 ஏக்கர் நிலம் வழங்குவதாகக் கடந்த ஆட்சியில் அறிவிப்பு வெளியானது. "ஏழைகெல்லாம் வீடு என்று திட்டம் தீட்டினார், தாங்கள் வாழ்வதற்கு ஊர்ப் பணத்தில் வீடு கட்டினார்" என்ற புரட்சித் தலைவரின் பாடல் வரிகளை இந்தத் திட்டத்தின்மூலம் கடந்த ஆட்சியாளர்கள் உறுதிப்படுத்தியுள்ளார்கள்.

இந்தத் திட்டத்தில் நடந்த முறைகேடுகள் தொடர்பாக எழுந்த பல்வேறு புகார்களுக்கு சில உதாரணங்களை இந்தச் சபையின்முன் வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். 2 ஏக்கர் நிலம் என்று சொல்லி, இரண்டு இலட்சம் ஏக்கர் நிலம் இலவசமாகக் கொடுக்கப்பட்டதாகத் தம்பட்டம் அடித்துக்கொண்டார்கள். ஆனால், உண்மையில் அவர்கள் கொடுத்தது வெறும் 30,477 ஏக்கர் நிலம் மட்டும்தான்; பயனாளிகள் 33,558 பேர்தான். ஏற்கெனவே இருந்தவர்களுக்கும், ஏற்கெனவே பட்டா நிலமாக இருந்து தரிசாகப் போட்டிருந்தவர்களுக்கும், அதிலே ஒரு கணக்கு. விவசாயத் துறையின் வாயிலாக நாங்கள் மேம்படுத்தித் தருகிறோம் என்று சொல்லி ஒரு எக்டேருக்கு ரூ.2,000/–, ரூ.3,000/–என்று சொல்லி, அவர்களுக்கு மேம்படுத்தியும் கொடுக்கவில்லை; ஆனால், பணமெல்லாம் அவர்கள் பாக்கெட்டுக்குள் போய்விட்டது. அப்படிக் கொடுத்த கணக்கைக் காட்டித்தான் 2 இலட்சம் என்று சொல்லியிருக்கிறார்கள். பட்டா நிலம்–அவர்களுடைய நிலம்– அவர்கள் வைத்திருக்கிறார்கள், இதை எப்படி இவர்கள் கொடுத்ததாகக் கணக்குக் காட்ட முடியும்?



இதையெல்லாம் நாங்கள் கேட்கின்றபொழுது, கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலே பார்த்தீர்களென்றால், தி.மு.க. அமைச்சர்களெல்லாம் எழுந்து நின்று, நீங்கள் திருவள்ளூருக்கு வாருங்கள், நாங்கள் காட்டுகிறோம் என்று சொல்வார்கள். இப்போது நாங்களும் சொல்கின்றோம். இப்போது அவர்கள் இங்கே இல்லை. நீங்களும் திருவள்ளூருக்கு வாருங்கள், நாங்களும் உங்களை அழைத்துச் சென்று எப்படியெல்லாம் தி.மு.க.காரர்கள் பினாமி பெயரிலே கொள்ளையடித்திருக்கிறார்கள் என்று காட்டுகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) எப்படியெல்லாம் மக்களை ஏமாற்றியிருக்கிறார்கள் என்பதை, அவர்கள் இங்கே இல்லை என்றாலும் இந்த நேரத்திலே சட்டசபையின் வாயிலாக நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அப்படி மக்களை ஏமாற்றி, பினாமி பெயரில் நிலத்தை வாங்கியிருக்கிறார்கள் என்பதையும், பயனாளிகள் யார், யார் என்பதையெல்லாம் நாங்கள் விசாரித்து நடவடிக்கை எடுக்கின்றபொழுது, திருவள்ளூர் மாவட்டத்தில் மட்டும் நிறைய பயனாளிகள் போலியான பெயரிலே தி.மு.க.காரர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். இதிலே சில சட்டச் சிக்கல்கள் போக, இப்பொழுது ஒவ்வொன்றாக நாங்கள் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையை ஏற்று, அந்த விசாரணையை முடுக்கிவிட்டு, இப்பொழுது கண்டுபிடிக்கப்பட்டவரையில் பார்த்தீர்களானால், ஒரு தி.மு.க.காரரிடமிருந்து 10 ஏக்கர் நிலத்தை அரசு கையகப்படுத்தியுள்ளது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், வைகை அணையைச் சுற்றியுள்ள நிலங்கள்–தி.மு.க. ஒன்றியச் செயலாளர் திரு. வைகை சேகர் மற்றும் அவருடைய பினாமி திரு. கிரி என்பவர்கள் பெயரில் ஆக்கிரமிப்பு செய்து–ஆக்கிரமிப்பு என்றால் இந்த 2 ஏக்கர் நிலத்தை வேறொருவர் பெயரில் வாங்கி, அவருடைய பெயரில் ஆக்கிரமிப்பு செய்திருந்தார்கள். அதைக் கண்டுபிடித்து, இப்போது 17 ஏக்கர் நிலத்தை அரசு கையகப்படுத்தியுள்ளது என்பதையும் சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

போடிநாயக்கனூர் தாலுகாவில், ராசிங்கபுரத்தில் கண்மணி, காமராஜ் ஆகிய இருவர் 2 ஏக்கர் நிலம் பெற்றிருக்கின்றார்கள். அதில் காமராஜ் யார் என்றால், ஒரு பள்ளியினுடைய தலைமையாசிரியர். அவருடைய மனைவி ஏற்கெனவே

நிலச்சுவான்தாரர், அவருக்கு நிலம் இருக்கின்றது, அவருக்கு 2 ஏக்கர் நிலம் கொடுத்திருக்கிறார்கள். இதையெல்லாம் இப்போதுதான் நாங்கள் ஒவ்வொன்றாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவுக்கிணங்க கண்டுபிடித்து, அதை அரசு எடுப்பதற்கான நடவடிக்கையை எடுத்துக் கொண்டிருக்கின்றோம்.

அதேபோல, ஈரோடு மாவட்டம், பவானியில் பார்த்தீர்களென்றால், டாக்டர் கண்ணன் என்பவருக்கு நிலம் வழங்கப்பட்டிருக்கின்றது. அவர் ஒரு மருத்துவர். மருத்துவத் தொழில் செய்துகொண்டிருக்கின்றார். அவர் வீடு இல்லாத ஏழை. அவருக்கு கடந்த ஆட்சியிலே நிலம் கொடுத்திருக்கின்றார்கள். நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள்.

உத்தமபாளையம் தாலுகா, பொட்டிபுரம் கிராமத்தில் 2 ஏக்கர் நிலம் வழங்கும் திட்டத்தில் நிலம் பெற்ற மல்லிகா மற்றும் கிருஷ்ணம்மாள் உள்ளிட்டோர் தங்களுக்கு வழங்கப்பட்ட நிலம் எது என்று தெரியாமல் இன்றுவரை தேடி வருகின்றார்கள். இதுதான் நிலைமை. இதேபோல, பெரியகுளம் தாலுகா, குள்ளபுரம் கிராமத்தைச் சேர்ந்த புஷ்பம், போதுமணி, சரஸ்வதி உள்ளிட்டோர் தங்களது நிலத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லையென்று இப்போது காவல் துறையிடம் செல்வதற்காகத் தயாராகியிருக்கின்றார்கள் என்பதையும் சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2—05

சேலம் மாவட்டம், சங்ககிரி தாலுகாவில், அரசிரமணி கிராமம் அங்கே இரண்டு ஏக்கர் நிலம் கொடுத்திருக்கின்றார்கள். அவர்கள் நிலம் எங்கே என்று கேட்டால், நிலத்திலிருந்து 50 அடி உயரத்தில் இருக்கிற ஒரு கரடைக் காட்டி, இதுதான் உங்களுக்குக் கொடுத்த இரண்டு ஏக்கர் நிலம் என்று காட்டியிருக்கின்றார்கள். இதுதான் அவர்கள் கொடுத்த 2 ஏக்கர் நிலம் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

பெரியகுளம் தாலுகாவில் மட்டும் 50—க்கும் மேற்பட்ட ஏழைகளின் பெயரில் இந்தத் திட்டத்தில் நிலம் வாங்கிய அப்போதைய ஆளுங்கட்சி ஆதரவுபெற்ற கும்பல் 150 ஏக்கரை வளைத்துள்ளது. ஒரு தனியார் அமைப்பினர் இந்தத் திட்டம் குறித்து ஆய்வு செய்தனர். அந்த ஆய்வை நடத்தியபோதுதான், தங்கள் பெயரில் நிலம் வந்திருக்கின்றது, அதை அபகரித்துவிட்டார்கள் என்பது அந்த ஏழைகளுக்குத்



தெரியவந்திருக்கின்றது. இப்படித்தான் அந்த இரண்டு ஏக்கர் நிலம் கொடுத்தனர் என்பதை நீங்கள் புரிந்துகொண்டு, தங்கள் பெயரில் நிலத்தைப் பெற்று மோசடி செய்தவர்களிடம் நியாயம் கேட்ட அப்பாவிப் பொதுமக்கள் மிரட்டப்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோல, அரியலூர், பெரம்பலூர், கோவை, ஈரோடு, காஞ்சிபுரம், மதுரை மற்றும் சேலம் ஆகிய பகுதிகளில் முன்னாள் அமைச்சர்கள், தி.மு.க. பிரமுகர்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளதை மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதையும் சொல்லிக்கொள்கின்றேன்.

மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு 2001—லிருந்து 2006 வரை 23,414 ஏக்கர் நிலத்தை ஏழைகளுக்குக் கொடுத்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து நில அபகரிப்பு. இது இன்றையதினம் ஒரு முக்கியமான பிரச்சினை. மாண்புமிகு அம்மா அவர்கள் தேர்தல் நேரத்தில் கொடுத்த வாக்குறுதியின்படி, கடந்தகால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் யாருடைய இடமெல்லாம் அபகரிக்கப்பட்டதோ, அந்த நிலங்களை மீட்டு உரியவர்களுக்கு ஒப்படைக்கப்படும் என்று அறிவித்தார்கள். ஆனால், கருணாநிதி உண்மைக்குப் புறம்பான வழக்குகளைப் போட்டு வருவதாகச் சொல்கின்றார். எனவே, இதில் 2, 3 உதாரணங்களை மட்டும் சொல்லிவிடுகின்றேன். சேலத்தில் ஓய்வுபெற்ற ஒரு போலீஸ் அதிகாரி குடும்பத்தோடு, 6 பேரோடு கொலை செய்யப்பட்டார். எதற்காகக் கொலை செய்யப்பட்டார்? நிலத்திற்காகத்தானே? அவருடைய நிலம் 4 ஏக்கர் இருந்தது. வீரபாண்டி ஆறுமுகத்தினுடைய அண்ணன் மகன் சுரேஷ் நிலத்தைக் கேட்கின்றான், விலைக்குத் தர மறுத்துவிடுகின்றார். அதுமட்டுமல்லாமல், அந்த ஓய்வுபெற்ற காவல் துறை அதிகாரி வாரந்தோறும் மாவட்ட ஆட்சித் தலைவரைச் சந்தித்து என்னுடைய உடைமைக்கும், உடலுக்கும், உயிருக்கும் பாதுகாப்புத் தரவேண்டுமென்று மனுக்கள் கொடுக்கின்றார். தொடந்து 10 வாரங்கள் மனுக்கள் கொடுக்கின்றார். அவருடைய லேப்—டாப்பிலே பதிவு செய்து வைத்திருக்கின்றார். ஆனால், 10 வாரங்களுக்குப் பின்னால் அவர் என்ன நினைத்தாரோ அதுதானே நடந்தது? அந்த 6 பேரை, குழந்தையிலேயிருந்து பெரியவர்கள் வரை, அந்த 6 பேரைக் கொலை செய்தார்களே? எதற்காகச்

செய்தார்கள்? நிலத்திற்காகத்தானே? யார் அப்பன் வீட்டுச் சொத்தைக் கொள்ளையடிப்பது? இதெல்லாம் நாட்டு மக்கள் அறிந்த காரணத்தினாலேதான், கடந்த தேர்தலிலே அவர்களை ஓட ஓட விரட்டியிருக்கின்றார்கள் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கின்றேன்.

சேலம் புதிய பேருந்து நிலையம் அருகில், அதேபோல அங்கம்மாள் காலனி, இப்படி நிறைய இடங்கள் இருக்கின்றன. காலத்தின் அருமை கருதி, சுருக்கமாக இதேபோன்ற ஒரேயொரு உதாரணத்தை மட்டும் சொல்கின்றேன். யாரெல்லாம் கடந்த 5 ஆண்டுக்காலத்தில் நிலத்தைப் பறிகொடுத்தார்களோ, அவர்கள் காவல் நிலையத்திற்குச் சென்று புகார் கொடுத்து வருகின்றார்கள். அதன்பேரில் காவல் துறை நடவடிக்கை எடுத்து வருகின்றது.

அதற்கு ஓர் உதாரணம், இங்கேயிருக்கின்ற தோழமைக் கட்சியான மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியினர் ஒரு புகார் மனுவைக் கொடுத்து, பழனியிலே ஓர் ஊராட்சி மன்றத் தலைவர், தி.மு.க.–வினுடைய ஊராட்சி மன்றத் தலைவரையும் அவருடைய கணவரையும் கைது செய்திருக்கின்றார்கள் என்றால் இதெல்லாம் பொய் வழக்கா? நீங்கள் நன்றாக யோசித்துப் பார்க்க வேண்டும். இப்படித்தான் தமிழ்நாடு முழுவதும் நிலம் அபகரித்தவர்களைக் காவல் துறை சுற்றி வளைத்துக்கொண்டிருக்கின்றது. உப்பைத் தின்றவன் தண்ணீர் குடிக்க வேண்டும். வினை விதைத்தவன் வினை அறுப்பான், தினை விதைத்தவன் தினை அறுப்பான். அவர்கள் என்ன விதைத்தார்களோ, அதை அறுப்பதற்காக இப்போது சிறைச்சாலையை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றார்கள் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, நில எடுப்புப் பணிகள். இங்கே பேசிய உறுப்பினர்களெல்லாம் நில எடுப்பிற்காக அவர்களுக்கு உரிய தொகையை வழங்குவதில்லை என்றெல்லாம் பேசினார்கள். அதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள், ஆய்வின்போது எங்களுக்கெல்லாம் ஓர் அறிவுரை வழங்கியிருக்கின்றார்கள். இனிமேல் நிலம் எடுக்கின்றபோது, அந்த நிலம் கொடுப்பவர்களினுடைய எதிர்கால வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையில் நிவாரணம் மற்றும் மறுவாழ்வுக் கொள்கை ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு உத்தரவிட்டிருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)



அரசு நிலங்களில் உள்ள ஆக்கிரமணங்களை அகற்றுதல். அனைத்து மாவட்டங்களிலும் அரசு நிலங்களில் உள்ள ஆக்கிரமணங்களை அகற்றி, அதைப் பாதுகாக்கும் பொருட்டு, அரசு நிலங்களைச் சுற்றி வேலி அமைத்துப் பாதுகாக்க மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு உத்தரவிட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து முக்கியப் பிரச்சினை ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்கின்றேன். கச்சத் தீவுப் பிரச்சினை. தமிழக மீனவர்களின் மீன்பிடி உரிமையை நிலைநாட்டுவதற்காக கச்சத் தீவை மீட்க வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் தனது சொந்தச் செலவிலேயே உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார்கள். அந்த வழக்கிற்கு மேலும் வலுசேர்க்கும் வகையில் வருவாய்த் துறையையும் இந்த வழக்கில் சேர்த்து மீனவர்களுக்காகப் போராடிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், மீனவர்களைப் பற்றியோ, தமிழ் மக்களைப் பற்றியோ கவலைப்படாமல், செம்மொழி மாநாடு என்ற பெயரில் சுய தம்பட்டம் அடிக்கின்ற ஒரு மாநாட்டை நடத்தினார்கள். உலகத் தமிழ் மாநாடு நடந்திருக்கிறது. தமிழ் மாநாடு என்றால் தமிழ் மாநாடு என்று சொல்கின்றோம். ஆனால், செம்மொழி மாநாடு என்றால் என்ன என்பதற்கு ஒரு விளக்கத்தை இந்த நேரத்தில் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். செம்மொழி மாநாடு என்றால் மகன்களுக்குப் பயிலரங்கம், மகளுக்குக் கவியரங்கம், பேரனுக்குப் பேச்சரங்கம், பேத்திக்கு வீணையரங்கம், தன்னைத் துதிபாட, கவி பாட ஒரு கூட்டம், (மேசையைத் தட்டும் ஒலி) அதைக் கைத்தட்டி ரசிக்க தன் குடும்பக் கூட்டம், முன் வரிசையில் மனைவி, பின் வரிசையில் துணைவி, இருக்கின்ற கூட்டம் கலையாமல் இருக்க குஷ்பு. இதுதான் செம்மொழி மாநாடு. (மேசையைத் தட்டும் ஒலி) கருணாநிதி தமிழ் மக்களுக்கு ஆற்றிய பணியும் இதுதான் என்பதையும் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–10

அலுவலகக் கட்டடங்கள் – ஒரு கட்டடம் வலுவானதாக இருக்க வேண்டுமானால் அடித்தளம் வலுவாக இருக்க வேண்டும். அந்த அடிப்படையில் வருவாய்த் துறைப் பணிகள் தொய்வு இல்லாமல் நடக்க வேண்டுமென்றால் முதலில் கிராம நிருவாக அலுவலர்களுக்கான அலுவலகத்தைக் குடியிருப்புகளுடன் கட்டித் தர வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நினைத்தது. 1991–1996 ஆம் ஆண்டு அப்போது 60

கட்டடங்கள்தான் இருந்தன. 2001–2006–ல் மட்டும் இந்தியாவிலே மட்டுமல்ல எந்த நாட்டிலுமே இல்லாத அளவில், அந்த 5 ஆண்டு காலத்தில் கிராம நிருவாக அலுவலர்களுக்கு 11,683 கட்டடங்கள் கட்டிக் கொடுத்திருக்கின்றது மாண்புமிகு அம்மாவின் அரசு என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், கடந்த 5 ஆண்டுக்காலத்தில் ஒரு கட்டடத்தைக்கூட மைனாரிட்டி தி.மு.க. அரசு கட்டித்தரவில்லை.

முன்பு, வருவாய்த் துறை செயலிழந்துவிட்டது என்று சொன்னால் மாண்புமிகு அம்மா அவர்கள் வந்ததற்குப் பின்னால்தான் இந்த வருவாய்த் துறை இருப்பதையே, அதாவது இன்றையதினம் இருப்பதாகக் காட்டிக் கொண்டிருக்கின்ற அளவுக்கு ஒவ்வொரு முறையும் அம்மா அவர்கள் வருகின்றபோதுதான் இந்தத் துறைக்காக ஏதாவது செய்து இந்தத் துறையை எழுச்சி பெறச் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த வகையிலே தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தாம்பரம், உடுமலைப்பேட்டை ஆகிய இடங்களில் உருவாக்கப்பட்ட வருவாய்க் கோட்ட அலுவலகங்கள் மற்றும் 34 வருவாய் ஆய்வாளர்களுக்கு வீடு இல்லாமல் இருக்கின்றது, அதற்கும்; 12 வட்டாட்சியர் அலுவலகங்கள், இருக்கின்ற 12,507–ல் 207 கிராம நிருவாக அலுவலர்களுக்கு மட்டுந்தான் அலுவலகமும், வீடும் இல்லை; அதுவும் வருகின்ற காலங்களில் படிப்படியாகக் கட்டித் தரப்படுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

நிலச் சீர்திருத்தம் சம்பந்தமாக ஒரே ஒரு கருத்தைச் சொல்லி விடைபெறுகின்றேன். ‘எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும், இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்’ என்ற கவிஞர் கண்ணதாசன் அவர்களின் வரிகளுக்கு ஏற்ப, வேளாண்மை நிலங்கள் சிலரது வசம் குவிந்துள்ளது. அவற்றை ஏழைகளுக்குப் பிரித்துக் கொடுக்க வேண்டுமென்பதற்காக ஒரு சட்டத்தை இயற்றினார்கள். அந்த வகையிலே பார்த்தீர்களேயானால் மாண்புமிகு அம்மாவினுடைய அரசு 2001–2006 ஆம் ஆண்டு-இங்கே பேசிய நண்பர்கள் சொன்னார்களே, அதற்காகத்தான் ஒரேயொரு கருத்தைச் சொல்லி முடித்துவிடுகிறேன்-திண்டுக்கல் மாவட்டத்தில் பெரியம்மாப்பட்டியில் உபரியாக உள்ள நிலங்கள் கண்டறியப்பட்டு, 313 ஏழைகளுக்கு 476 ஏக்கர் நிலங்களைக் கொடுக்க மாண்புமிகு அம்மா அவர்கள் 11–5–2005–லே ஆணை பிறப்பித்தார்கள். அதற்குப் பின்னர் மைனாரிட்டி தி.மு.க. அரசு வந்தது. 5 ஆண்டுக்காலம்



அவர்களுடைய அரசு இருந்தது. அவர்களுடைய வருவாய்த் துறை அமைச்சர் அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்ற காரணத்தினால், அங்கேயிருக்கின்ற நிலச்சுவான்தாரர்களுக்கு ஆதரவாக இருந்த காரணத்தினால் அந்த நிலத்தை எடுக்க முடியவில்லை. இப்போது மாண்புமிகு அம்மா அவர்கள் அதற்கு ஆணையிட்டிருக்கின்றார்கள். அதை அளந்து, விரைவில் அவர்களுக்கு அந்த நிலத்தைக் கொடுப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

புதுப்பொலிவுடன் ‘தமிழக முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்’. 2005 ஆம் ஆண்டு உயர்ந்த கோட்டைக் கொத்தளத்தில் உள்ள கொடிக்கம்பத்தின் உச்சியில் பட்டொளி வீசிப் பறக்கும் பாரத மணிக்கொடியை ஏற்றுவித்து, தன் சுதந்திர தின உரையில் மக்களுக்காக மாண்புமிகு அம்மா அவர்கள் ஆற்றிய உரை, “மக்களுக்காக ஒரு வளர்ச்சிப் புரட்சியை நாம் ஏற்று நடத்த வேண்டும்; இது ஆக்கபூர்வமான கடமை. இந்தக் கடமையை நாம் உடனே செய்தாக வேண்டும். என்னைப் பொறுத்தவரை, வளர்ச்சி என்பது மக்களுக்குப் புதிய சந்தர்ப்பங்களை உருவாக்குதல் மற்றும் வாய்ப்புகளை விரிவுபடுத்துவதாகும்” என்று சூளுரைத்தார்கள். அந்தவகையிலே, அந்தத் திட்டம் மீண்டும் புதுப்பொலிவுடன் வரவிருக்கின்றது. அதற்கு இந்த ஆண்டு 166 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கின்றார்கள். அந்தத் திட்டத்தை நான் அன்றையதினமே, அதுகுறித்துப் பேசுகின்றபோது விளக்கமாகச் சொல்லிவிட்ட காரணத்தினால், மேலும் விளக்க விரும்பவில்லை.

இங்கு நில அளவைத் துறையைப் பற்றிப் பேசியவர்கள் எல்லாம் சொன்னார்கள், நில அளவைத் துறை வேகமாகச் செயல்பட வேண்டும்; அதில் பணி இடங்கள் காலியாக இருக்கின்றன என்று. அந்தப் பணியிடங்களை மாண்புமிகு அம்மா அவர்கள் கூடிய விரைவிலே பூர்த்தி செய்வார்கள் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அறிவிப்புகள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆலோசனையின்பேரில், அறிவுரையின்பேரில் அவர்களின் உத்தரவிற்கிணங்க அறிவிப்புகளை வெளியிடுகின்றேன்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் பட்டா மாற்றம் பெற பொதுமக்கள் படும் இன்னல்களைக் குறைப்பதற்காக பட்டா மாற்றம் தொடர்பான நடைமுறைகள் எளிதாக்கப்படும் எனவும், வருவாய் நிலை ஆணைகளில் மாற்றங்கள்

கொண்டு வரப்படும் எனவும், இதனால் பொதுமக்களின் அலைச்சல் தவிர்க்கப்படும் எனவும் சட்டமன்றப் பேரவையில் அறிவித்தார். அதன்படி அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன. மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள இந்த விரைவு பட்டா மாறுதல் திட்டத்தை அரசாணையில் நிர்ணயித்த கால வரையறைக்குள் செம்மையாகச் செயல்படுத்திட ஒவ்வொரு வட்டாட்சியர் அலுவலகத்திற்கும் ஒரு கணினி மற்றும் ஒரு அச்சுப்பொறி ரூ.1.25 கோடி செலவில் வழங்கப்படும்.

பொதுமக்களின் குறை தீர்ப்பதில் வட்டாட்சியர் அலுவலகங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. ஆகவே, இந்த அலுவலகங்கள் சீராக இயங்கச் செய்வதில் இந்த அரசு தனிக் கவனம் செலுத்தும். வட்டாட்சியர் அலுவலகங்களில் சுமார் 10 ஆண்டுகளுக்கும் மேலாகப் பயன்படுத்தப்பட்டு பழுதடைந்துள்ள ஈப்புகளுக்குப் பதிலாக 124 புதிய ஈப்புகள் ரூபாய் 7 கோடி செலவில் வழங்கப்படும்.

பிற்பகல் 2—15

வட்டாட்சியர் அலுவலகங்களில் உள்ள புலப்படங்களை நகலெடுத்து குறு வட்ட நில அளவருக்கு வழங்குவதனால் நில அளவைத் துறைப் பணிகளை விரைவுபடுத்த முடியும். இதற்காக அனைத்து வட்டாட்சியர் அலுவலக நில அளவைப் பிரிவுகளுக்கும் ஒரு ஒளி நகலி இயந்திரம் (Photo Copying Machine) ரூபாய் 22 இலட்சம் செலவில் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒரத்தநாட்டில் அமைந்துள்ள நில அளவைப் பயிற்சி மையம் ரூபாய் 196.07 இலட்சம் செலவில் விரிவுபடுத்தப்படும். இதனால் நில அளவைத் துறை மட்டுமல்லாமல் வருவாய்த் துறை நடைமுறைகளிலும் அதிகாரிகள் பயிற்சி பெறும் வண்ணம் இந்த மையம் வருவாய்த் துறைக்கான ஒரு தனிச் சிறப்பு வாய்ந்த பயிற்சி மையமாக உருவெடுத்து பொலிவுபெறும். (மேசையைத் தட்டும் ஒலி)

வீடுகள் இல்லாத ஏழை மக்களுக்கு வீட்டு மனைகள் வழங்க சிறப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படும். இந்த நிதியாண்டில் ஒரு இலட்சம் வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்குவதை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு இலக்காக நிர்ணயித்து இத்திட்டம் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

நிலச் சீர்திருத்தச் சட்டங்களைச் செயல்படுத்துவதில் இந்த அரசு தனிக் கவனம் செலுத்தும். பெரியம்மாப்பட்டி பகுதியில்



தகுதியுள்ளவர்களுக்கு நில உச்ச வரம்புச் சட்டத்தின்கீழ் கையகப்படுத்தப்பட்டுள்ள மிகையான நிலங்கள் சீராக வழங்கப்படுவதுடன், இதே போன்ற இனங்கள் வேறு எங்கு இருப்பினும் அவற்றிலும் விரைவு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

பல ஆண்டுக்காலம் தகுதியிருந்தும் வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்படாமல் இருந்த அவல நிலையை மாண்புமிகு அம்மாவினுடைய அரசு போக்கும். ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்படாமல் உள்ள ஸ்ரீரங்கம் வட்டத்தில் 1,800 வீட்டு மனைப் பட்டாக்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையோடு வழங்கப்பட உள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) மாநிலத்தின் இத்தகைய இனங்கள் வேறு எங்கிருந்தாலும் அதற்கு சிறப்புக் கவனம் செலுத்த மாவட்ட வருவாய் அதிகாரிகள் அறிவுறுத்தப்படுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

திருநெல்வேலி மாவட்டத்தில் நாங்குநேரி வட்டாட்சியர் அலுவலகத்திற்கும் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தில் கந்தர்வக்கோட்டை வட்டாட்சியர் அலுவலகத்திற்கும் புதிய கட்டடங்கள் ரூபாய் 448.60 இலட்சம் செலவில் கட்டித் தரப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் மற்றும் இதர வருவாய்த் துறை அலுவலகங்களில் பழுதடைந்துள்ள தளவாடச் சாமான்களைப் பழுதுபார்க்கவும், புதிய தளவாடச் சாமான்கள் வாங்கவும் ரூபாய் 63 இலட்சம் செலவில் அனுமதி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

திருப்பூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் மற்றும் பிற துறை அலுவலகங்கள் அடங்கிய பெருந்திட்ட வளாகங்களுக்கான கட்டுமானப் பணிகள் இந்த நிதியாண்டில் ரூபாய் 50 கோடி செலவில் தொடங்கப்படும்.

தாம்பரம் மற்றும் உடுமலைப்பேட்டை அலுவலகங்களுக்கான கட்டுமானப் பணிகளும் ரூபாய் 2.53 கோடி செலவில் தொடங்கப்படும். வருவாய் ஆய்வாளர்களுக்கு அலவலகத்துடன் கூடிய 34 குடியிருப்புகளும் மற்றும் கிராம நிருவாக அலுவலர்களுக்கான 207 அலுவலகக் கட்டடங்களும் படிப்படியாகக் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

வருவாய்த் துறையில் உள்ள ஆயிரக்கணக்கான காலிப் பணியிடங்களை நிரப்ப உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்படும். தகுதியின் அடிப்படையிலும், துறையில் பணியாற்றியுள்ள அனுபவத்தின் அடிப்படையிலும் பதவி உயர்வுகளை விரைவில் வழங்க நடவடிக்கை எடுப்பதன் மூலமாகவும், அடிமட்டப் பணியிடங்களை நிரப்ப தேர்வுகளைத் தாமதமின்றி நடத்துவதன் மூலமாகவும் இந்தக் காலிப் பணியிடங்கள் நிரப்பப்படும்.

காஞ்சிபுரம் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ள அனைத்து வட்டங்களிலும் மனுதாரர்களுக்கான வரவேற்பு அறைகள் மற்றும் நில ஆவணங்களை நிருவகிக்கும் மையங்கள் ரூபாய் 525 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்படும். பொதுமக்கள் இம்மையங்களை அணுகி நில ஆவண நகல்கள், பிறப்பு, இறப்புச் சான்றுகள், வருமானச் சான்றுகள், சாதிச் சான்றுகள், வாரிசுரிமைச் சான்றுகள் போன்றவற்றை எளிதாகப் பெற வழிவகை செய்யப்படும். இத்திட்டம் படிப்படியாக இதர மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

நில அளவைத் துறையில் நில அளவர், வரைவாளர் இனங்களில் இன்றைய நிலையில் 1,090 காலியிடங்கள் உள்ளன. இவ்விரண்டு பணியிடங்களும் இத்துறையின் அடிப்படையான சார்நிலைப் பதவிகளாகும். காலியிடங்கள் மிக அதிகமாக உள்ளதால் அவற்றை உடனடியாகப் பூர்த்தி செய்தால்தான் பட்டா மாற்றம் மற்றும் இதர நில அளவை நடவடிக்கைகளைத் தொய்வின்றி மேற்கொள்ள இயலும். எனவே, நில அளவர், வரைவாளர் பணியிடங்களை நிரப்ப, சிறப்புத் தேர்வுக்கான வழிமுறைகளை வகுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

வருவாய் நீதிமன்றங்களில் கோயில் நிலங்கள் மற்றும் இதர நிலங்கள் தொடர்பாக உள்ள குத்தகை வழக்குகளை முடிப்பதற்கு விரைவு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

பிரத்யேக அடையாள எண் வழங்கும் திட்டச் செயலாக்கத்தை வருவாய்த் துறை முன்நின்று நடத்தி, கடந்த 21/2 ஆண்டுக்காலமாக காணப்பட்ட தொய்வு நிலை களையப்பட்டு, அடையாள எண் வழங்கும் பணிகள் மாநில அளவில் விரைவில் தொடங்கி முடிக்கப்படும்.

சென்னை போன்ற மாநகரப் பகுதிகளில் உள்ள விலையுயர்ந்த அரசு நிலங்களைப் பாதுகாக்க சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்படும்.



இதற்கென ரூபாய் 90 இலட்சம் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வேலிகள், மதில் சுவர்கள் மற்றும் அறிவிப்புப் பலகைகள் முதலியனமூலம் அரசு நிலங்களைப் பாதுகாக்க மேற்கொள்ளப்படும் இந்த முயற்சியானது இதுவே முதல் முறையாகச் செய்யப்படுகின்றது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முடிவுரையாக,

மண்ணுக்குப் பெருமை எதனாலே?
அதன் வண்ண நிறத்தாலே,
விண்ணுக்குப் பெருமை எதனாலே?
வண்ண நிலவாலே,
நீருக்குப் பெருமை எதனாலே?
அதன் இன்சுவையாலே,
மலருக்குப் பெருமை எதனாலே?
அதன் இனிய வாசனையாலே,
யாழுக்குப் பெருமை எதனாலே?
அதன் இனிய நாதத்தாலே,
கோவில் மணிக்குப் பெருமை எதனாலே?
அதன் இனிய ஓசையாலே,
தமிழகத்திற்கும் இந்தியாவுக்கும் பெருமை எதனாலே?
அது மாண்புமிகு அம்மா அவர்களாலே

என்பதைச் சொல்லி (மேசையைத் தட்டும் ஒலி) தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும், மீண்டும் தர்மம் வெல்லும். இனிமேல் தர்மத்தின் வாழ்வுதனை சூதும் கவ்வாது, தர்மத் தாய்க்கு இனிமேல் தோல்வியும் கிடையாது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2—20

என்னை ஈன்றெடுத்த தந்தையையும் தாயையும் விட நான் போற்றும் தமிழ்நாட்டின் நலன் காக்கும் அம்மாவின் நல்லாட்சிக்கு என்னால் தினை அளவு நலம் ஏதும் கிடைக்குமேயானால், அந்நாளே எனக்குத் திருநாள் என்று சொல்லி, மாண்புமிகு உறுப்பினர்கள் பல அரிய கருத்துகளையும், பலவிதமான நியாயமான கோரிக்கைகளையும் தந்துள்ளீர்கள். வெட்டுத் தீர்மானங்களையெல்லாம் படித்துப் பார்த்தேன். அதில் முக்கியமாக, தே.மு.தி.க.வினுடைய விருத்தாசலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் ஒரு வெட்டுத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கின்றார். 'வருடா வருடம் சுனாமி வருகிறது' என்று சொல்லியிருக்கின்றார்.

ஒரே ஒரு வருடம்தான் சுனாமி வந்தது. புயல்தான் வந்துகொண்டிருக்கின்றது; மழைதான் வந்துகொண்டிருக்கின்றது. இருந்தாலும், மாண்புமிகு அம்மாவின் அரசு கனிவோடு அதைப் பரிசீலிக்கும் என்று சொல்லி, முக்கிய பிரச்சினைகளையும் சொல்லி, மாண்புமிகு அம்மா அவர்கள், தமிழகத்திலே ஒட்டுமொத்த சமுதாய, பொருளாதார வளர்ச்சிக்கு மிகுந்த அக்கறையோடு செயல் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றார்கள். அந்த அடிப்படையில் உங்களது சீரிய கருத்துகளெல்லாம் கனிவுடன் பரிசீலிக்கப்படும் என்ற உறுதியை பேரவையின் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அளிக்கின்றேன். ஆகவே, வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு பணிவோடு கேட்டு, எங்கள் தாய்க்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

## (அ) கோரிக்கை எண் 41–வருவாய்த் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 41–வருவாய்த் துறை. மாண்புமிகு உறுப்பினர்களால் முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

“வருவாய்த் துறை பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 4,115,58,42,000/–, மூலதனக் கணக்கில் ரூ.382,61,04,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்” என்னும் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.



## (ஆ) கோரிக்கை எண் 51–இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 51–இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு மாண்புமிகு உறுப்பினர்களால் முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

“இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 51 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.704,78,48,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்” என்னும் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெறுகின்றது.

## (இ) கோரிக்கை எண் 9–பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 9–பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை. மாண்புமிகு உறுப்பினர்களால் முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

*[பேரவைத் தலைவர்]* [2011 ஆகஸ்ட் 23

*“பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.499,89,62,000/–, மூலதனக் கணக்கில் ரூ.36,09,32,000/–மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்” என்னும் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)*

*மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

*அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)*

## 6. அரசினர் தீர்மானங்கள்

### (அ) பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தக் கோரும் அரசினர் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி, பேரவையில் இன்று அறிமுகம் செய்யப்பட்ட 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ்ப் புத்தாண்டு (விளம்புகை) நீக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/2011) இன்றே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்”

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



2011 ஆகஸ்ட் 23] *[பேரவைத் தலைவர்]*

*ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)*

*மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)*

*திரு. சு. குணசேகரன், அவசரப்படாதீர்கள். நான் இப்போதுதான் சட்டமுன்வடிவை ஆய்வுக்கு எடுக்கிறேன்.*

## 7. அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)

### தமிழ்நாடு தமிழ்ப் புத்தாண்டு (விளம்புகை) நீக்கச் சட்டமுன்வடிவு, 2011

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்), 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ்ப் புத்தாண்டு (விளம்புகை) நீக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/2011), மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ்ப் புத்தாண்டு (விளம்புகை) நீக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/2011)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.”

எனக் கோருகிறேன்.

*பிற்பகல் 2–25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *தற்போது நேரம் 2–25. இச்சட்டமுன்வடிவின்மீது கருத்துக்கூற விரும்பும் மாண்புமிகு உறுப்பினர்கள் காலத்தின் அருமை கருதி, தங்களது கருத்துகளை சுருக்கமாக, ஒரு நிமிடத்தில் கூறும்படி கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.*

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்ப் புத்தாண்டு தினத்தை பல நூறு ஆண்டுகாலமாக தமிழகத்திலே பின்பற்றி வந்த, சித்திரை முதல் நாளிலேயே மீண்டும் நடைமுறைப்படுத்தலாம் என்கிற வகையிலே இந்து சமய மற்றும்

---

@ 23-8-2011 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[முனைவர் செ.கு. தமிழரசன்] [2011 ஆகஸ்ட் 23

அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் இன்றைக்குக் கொண்டு வந்திருக்கிற இந்தச் சட்டமுன்வடிவை நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒருவர்மீது நமக்கு ஏற்படுகிற நம்பிக்கை என்பது மற்றவர்களுடைய நம்பிக்கையை அவர்கள் எந்த அளவிற்கு மதிக்கிறார்கள் என்பதைப் பொறுத்துதான் அமைகிறது என்று ஒரு தத்துவ மேதை சொன்னார். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த சித்திரை முதல் நாளில் தமிழ்ப் புத்தாண்டைக் கொண்டாடுவது என்கிற வழக்கம் இன்றைக்கு நேற்றைக்கு ஏற்பட்டதல்ல. தமிழகத்திலே கிருஷ்ணதேவராயர் ஆட்சிபுரிந்த காலத்திலே அது நடைமுறைக்கு வந்திருக்கிறது.

கிருஷ்ணகிரியைத் தலைநகராகக் கொண்டு இந்த சென்னையையும் ஒருங்கிணைத்து ஆட்சி புரிந்து கொண்டிருந்த அந்தக் காலத்திலேயிருந்து சித்திரை முதல் நாள்தான் இந்துக்களின், தமிழ் பெருமக்களின், தமிழக வெகு மக்களின் புத்தாண்டாக இருந்திருக்கிறது; அவ்வளவு காலமாகப் பின்பற்றி வந்திருக்கிறார்கள்.

2008–லே கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி திடீரென்று ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து, சித்திரை என்பதை தை மாதமாக வைத்துக் கொள்ளலாம். தை முதல் நாளைஅறுவடைத் திருநாளை, தமிழர்களுடைய, தமிழ் ஆண்டினுடைய முதல் நாளாக, தமிழ்ப் புத்தாண்டாக வைத்துக்கொள்ளலாம் என்கிற ஒரு சட்டத்தை நடைமுறைப் படுத்தியிருக்கிறார்கள். அதற்கு அவர்கள் சொல்கிற காரணம் மறைமலையடிகள், திருவள்ளுவருடைய பிறந்த நாளாக இந்த தை மாதம் முதல் நாளை சொல்லியிருக்கிறார். அந்த அடிப்படையிலே இதை நாங்கள் நடைமுறைப்படுத்துகிறோம் என்றெல்லாம் அன்றைக்குச் சொல்லியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** முடித்துவிடுகிறேன். ஒவ்வொரு மனிதனின் உரிமைகளையும், சுதந்திரத்தையும் பற்றி பிளாட்டோ சொல்கிறபோது சொன்னார், "ஒவ்வொருவருக்கும் உரிமை இருக்கிறது; அந்த உரிமை எப்படி இருக்கிறது என்றால், நீ கை வீசலாம். கை வீசுவதற்கு உனக்கு உரிமையிருக்கிறது. ஆனால், நீ வீசுகிற கை அடுத்தவன்மேலே படக்கூடாது. அதுவரையிலே உரிமை இருக்கிறது" என்று பிளாட்டோ சொன்னார். அதைப்போலதான், நான் இந்தச் சட்டமுன்வடிவைப் பார்க்கிறேன்.



2011 ஆகஸ்ட் 23] [முனைவர் செ.கு. தமிழரசன்]

பகுத்தறிவாளர்களுக்கென்று ஒரு கருத்து இருக்கலாம். ஆனால், அந்த பகுத்தறிவாளனுடைய கருத்து என்பது நம்புகிற, மதிக்கிற, பின்பற்றுகிற, வழிபடுகிற வகையிலே இருக்க வேண்டுமேயன்றி, மற்றவர்களுடைய உணர்வுகளைப் புண்படுத்துகிற வகையிலே அந்த உரிமை இருந்துவிடக்கூடாது (மேசையைத் தட்டும் ஒலி) என்கிற அந்த உணர்வோடுதான்; தமிழர் திருநாளாக திருவள்ளுவர் நாளைக் கொண்டாடலாம். உழவர் திருநாள் என்று அடுத்த நாளாக நாம் திருவள்ளுவர் நாளை வைத்திருக்கிறோம். அந்தத் திருவள்ளுவர் நாளுக்கு விடுமுறை விடலாம், மிகப் பெரிய விழாவாகக் கொண்டாடலாம். ஆனால், அதற்காக — 12 மாதங்கள் என்பதே கார்த்திகை சகோதரிகள் என்றுகூட ஒரு மரபு இருக்கிறது. இன்னமும் ஆங்கிலத்திலேகூட ஜனவரி 1 ஆம் தேதி என்பதுதான் முதல் நாளா அல்லது அக்டோபர் 1 ஆம் தேதிதான் ஆங்கிலப் புத்தாண்டின் தொடக்கமா என்கிற சர்ச்சை இதுநாள் வரையிலே ஆங்கிலேய விற்பன்னர்களிடமே இருந்து கொண்டிருக்கிறது. ஆக, அப்படிப்பட்ட சர்ச்சைகளுக்குள்ளே போகாமல், வழக்கமாகப் பின்பற்றி வந்த, வெகு மக்கள் பின்பற்றி வந்த, அந்த உணர்வுகளை, நம்பிக்கைகளைக் கொச்சைப்படுத்தாமல் சித்திரை முதல் நாளே தமிழர்களுடைய புத்தாண்டு நாளாக இருந்து வருகிறது என்கிற அந்தச் சட்டமுன்வடிவை நான் வாழ்த்தி, வரவேற்று அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

***திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இதுகுறித்து நம்முடைய அவையிலே ஒரு சட்டம் இயற்றப்பட்டிருக்கிற நிலையிலே, விரிவாக இதை விவாதிக்க வேண்டும். ஆகவே, இதனை நிலைக் குழுவிற்கு அனுப்ப வேண்டுமென்று நான் வலியுறுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் மொழி மீதும், தமிழர்கள் மீதும் தனக்கு மட்டுமே அக்கறை இருப்பது போன்ற ஒரு மாயத் தோற்றத்தை பொதுமக்கள் மத்தியில் உருவாக்குவதற்காக முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதியால் தமிழ்நாடு தமிழ்ப் புத்தாண்டு

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2011 ஆகஸ்ட் 23

(விளம்புகை) சட்டம், 2008 ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. இந்தச் சட்டம், ஒரு சுயவிளம்பரத்திற்காக இயற்றப்பட்டதே தவிர, இந்தச் சட்டத்தினால் மக்களுக்கு எந்தவித நன்மையும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) மாறாக, ஆண்டாண்டு காலமாக சித்திரை மாதப் பிறப்பை தமிழ்ப் புத்தாண்டாகக் கொண்டாடிக் கொண்டிருக்கும் தமிழக மக்களின் உணர்வுகளைப் புண்படுத்தும் விதமாக இந்தச் சட்டம் அமைந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–30

ஒரு நாட்டிலே, ஒரு சட்டம் இயற்றப்படுகிறதென்றால், அந்தச் சட்டம், அந்த நாட்டு மக்களுக்குப் பயன்படவேண்டும். அல்லது, இது போன்ற சட்டம் தேவை என்று மக்கள் கோரிக்கை விடுத்திருக்கவேண்டும். இதுமட்டுமல்லாமல், அந்தச் சட்டம் இயற்றப்படுவதற்கான காரணங்கள் தெளிவாகத் தெரிவிக்கப்படவேண்டும். இவை எதுவுமே இல்லாமல், யாருக்கும் பயனளிக்காத ஒரு சட்டத்தை முந்தைய தி.மு.க. அரசு ஏற்படுத்தியுள்ளது. இந்தச் சட்டம் இயற்றப்பட்டதையடுத்து, உடனடியாக சென்னையில், திரு. கருணாநிதிக்குப் பாராட்டு விழா நடத்தப்பட்டது. திரு. கருணாநிதியின் துதிபாடிகள் அனைவரும் அவரைப் போற்றினர். இதைத் தவிர, வேறு யாருக்கும் எந்தவித நன்மையும் இந்தச் சட்டத்தினால் ஏற்படவில்லை. தமிழக மக்கள் மத்தியில் தன்னை விளம்பரப்படுத்திக் கொள்வதற்காக, தமிழுக்கு மிகப் பெரிய சிறப்பினைச் செய்தது போன்ற ஒரு மாயத் தோற்றத்தை உருவாக்குவதற்காக, இது போன்ற சட்டத்தினை திரு. கருணாநிதி இயற்றியுள்ளார் என்பதுதான் உண்மை.

தமிழர் காலக் கணிப்பு முறையின்படி, ஒரு ஆண்டுக்குரிய 12 மாதங்களில், சித்திரை முதலாவது மாதமாகும். இது சூரியனின் நகர்வை அடிப்படையாகக்கொண்டு கணிக்கப்படுகிறது. சூரியன், மேஷ ராசிக்குள் நுழைவதிலிருந்து, அந்த ராசியைவிட்டு வெளியேறும்வரையில் உள்ள காலம் சித்திரை மாதம் ஆகும். ஆண்டின் தொடக்கம் வசந்தமாக இருக்க வேண்டுமென்ற அடிப்படையில், சித்திரை மாதத்தை ஆண்டுத் தொடக்கமாக நம் மூதாதையர்கள் கணக்கிட்டுள்ளார்கள் என்று கூறப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) பல்லாண்டுகாலமாக, சித்திரை முதலாம் நாளையே புத்தாண்டாகத் தமிழர்கள் கொண்டாடி வருகின்றனர்.

சித்திரை மாதத்தில் புத்தாண்டு தொடங்குவது என்பது, வான நூலையும் (வான சாஸ்திரம்–Astronomy), பருவங்களின் சுழற்சியையும்



2011 ஆகஸ்ட் 23] [செல்வி ஜெ ஜெயலலிதா]

அடிப்படையாகக் கொண்டது. எனவே, பருவங்களின் சுழற்சியை அடிப்படையாகக் கொண்டு, இயற்கையையொட்டி, சித்திரை மாதத்தைத் தொடக்க மாதமாகக் கொண்டமைந்த ஆண்டு கணக்கீடுதான் பூர்வீகத் தமிழ் மரபாக இருக்க முடியும். கோடைக் காலமே முதலாவது பருவம் என சீவகசிந்தாமணியில் வருணிக்கப்பட்டுள்ளது.

‘சித்திரையே வா, நம் வாழ்வில் நல் முத்திரை பதிக்க வா’ என்று சொல்லும் மரபு இருக்கும் காரணத்தால், (மேசையைத் தட்டும் ஒலி) சித்திரை மாதமே தமிழ்ப் புத்தாண்டுக்குரிய, பொருத்தமான நாள் ஆகும் என தெய்வத்திரு மதுரை ஆதீனம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். சித்திரைத் திங்கள் முதல் நாளை ஆண்டின் துவக்க நாளாகக் கொண்டாடலாமென பல அறிஞர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். பண்டைத் தமிழர் வானவியல் ஆதாரப்படி, தமிழ்ப் புத்தாண்டுத் தொடக்கம் சித்திரை மாதம்தான்.

சங்க இலக்கியத்தின் மிகப் பழைய இலக்கியமான, பத்துப்பாட்டு இலக்கியத்தின் நெடுநல்வாடையில், சூரியன் மேஷத்தில் சஞ்சாரம் செய்து சுழற்சியைத் தொடங்கும் உண்மையை நக்கீரனார் தெளிவுபடுத்தியிருக்கிறார். சென்னைப் பல்கலைக்கழகத்தால் 1912 ஆம் ஆண்டில் பதிப்பிக்கப்பட்ட தமிழ் பேரகராதியிலும் சித்திரை முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அரசவைக் கவிஞராக இருந்த நாமக்கல் திரு. வி. ராமலிங்கம் பிள்ளை அவர்களும், “சித்திரை மாதத்தில் புத்தாண்டு தெய்வம் திகழும் திருநாட்டில்” என்ற தனது வாழ்த்துப் பாடலின்மூலம் தமிழ்ப் புத்தாண்டின் தொடக்கம் சித்திரை மாதம் என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளார். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், பல்வேறு கல்வெட்டுகளும், எண்ணற்ற இலக்கியங்களும், சித்திரை மாதம் முதல் நாளன்று தமிழ்ப் புத்தாண்டு தொடங்குவதை உறுதிப்படுத்துகின்றன.

இந்தச் சட்டமுன்வடிவு, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்டபோது, இதை வரவேற்றுப் பேசிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர், திரு. என். நன்மாறன் அவர்கள், தமிழ்ப் புத்தாண்டை மாற்றி அமைத்ததற்கான காரணங்கள் இருந்தால் அதைத் தெளிவுபடுத்தவேண்டுமென்று கூறியிருக்கிறார். ஆனால், கடைசிவரையில் அதற்கான காரணங்கள் தெளிவுபடுத்தப்படவில்லை.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2011 ஆகஸ்ட் 23

மேற்படிச் சட்டம் இயற்றப்படும்போது, அதற்கான நோக்கக் காரண விளக்க உரையில், தைத் திங்கள் முதல் நாள்தான் தமிழ்ப் புத்தாண்டுத் தொடக்கம் என்பது ஒட்டுமொத்தமாக எல்லாத் தமிழ் அறிஞர்களும் ஒப்புக்கொண்டுள்ள உண்மை என்பதால், தைத் திங்கள் முதல் நாளையே தமிழ்ப் புத்தாண்டுத் தொடக்கம் என அறிவித்து, நடைமுறைப்படுத்திட அரசு முடிவு செய்துள்ளதாகவும், அதற்குச் செயல் வடிவம் கொடுக்கும்பொருட்டு சட்டம் இயற்றப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*பிற்பகல் 2–35*

இந்தச் சட்டம் இயற்றப்பட்டு மூன்று ஆண்டுகளாகியும், சித்திரைத் திங்கள் முதல் நாளையே கோடானுகோடி தமிழ் மக்கள் தமிழ்ப் புத்தாண்டு தினமாகக் கொண்டாடி வருகின்றனர். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சட்டத்தை இரத்து செய்ய வேண்டுமென்று தமிழக மக்களிடமிருந்து அரசுக்குக் கோரிக்கைகள் வந்துள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் நம்பிக்கையை சட்டம்மூலம் மாற்றுவது சரியல்ல.

எனவே, தமிழக மக்களின் உணர்வுகளுக்கும், கருத்துகளுக்கும் மதிப்பளிக்கும் வகையில், யாருக்கும் பயனளிக்காத, காலங்காலமாகப் போற்றிப் பாதுகாத்து வந்த மரபுகளை மீறுகின்ற, தமிழக மக்களின் உணர்வுகளைப் புண்படுத்துகின்ற இந்தச் சட்டத்தினை இரத்து செய்வதுதான் பொருத்தமாக இருக்குமென்ற எனது கருத்தினை இங்கே பதிவு செய்ய விழைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.



2011 ஆகஸ்ட் 23] [பேரவைத் தலைவர்]

பிரிவு 2 திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“தமிழ்நாடு தமிழ்ப் புத்தாண்டு (விளம்புகை) நீக்கச் சட்டமுன்வடிவு, 2011 (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/2011) நிறைவேற்றப்பெற வேண்டும்”

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

[2011 ஆகஸ்ட் 23

## 6. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

### (ஆ) விதி 32–ஐத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நாளை, 24–8–2011 அன்று வினாக்கள்—விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*“சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்—விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32–ஐ நாளை (24–8–2011) புதன்கிழமையன்று தளர்த்தி அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்”*

*என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)*

*மறுப்போர் ‘இல்லை’ என்க.*

*மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.*

*மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.*

*24–8–2011 அன்று வினாக்கள்—விடைகள் நேரம் இல்லை.*

*பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (24–8–2011) புதன்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.*

*பின்னர், பேரவை பிற்பகல் 2–38 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*35. 2009–2010 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் முப்பத்தாறாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)*



2011 ஆகஸ்ட் 23]

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*43. பள்ளிக் கல்வித் துறை பற்றிய செயல்முறைத் திட்டம் மற்றும் புள்ளிவிவரம், 2011–2012 என்கிற சிறு நூல். (தமிழ்)*

*44. மானியக் கோரிக்கை எண் 41–வருவாய்த் துறை மற்றும் மானியக் கோரிக்கை எண் 51–இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2011–2012. (தமிழ், ஆங்கிலம்)*

*45. மானியக் கோரிக்கை எண் 9–பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2011–2012. (தமிழ், ஆங்கிலம்)*

*46. உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2011–2012. (தமிழ்)*

*47. கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2011–2012. (தமிழ்)*

*48. பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2011–2012. (தமிழ்)*

*49. உயர் கல்வித் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2011–2012. (தமிழ்)*

— — —